மாலினிழலார் மவுலுங்ஹதிதினில் வந்ததுவே. ௱௨௪

கடனும்பருலை யெடாமலேவி[illegible]க்களை
இடனுகவென்னும்மத் தல்லவென்றேநபி செப்பினர்காண்
இடம்விட்டோனைக் கபுரிற்புகுந்து எரிவரென்றே
மடமயிலென்னு மாயிஷாவும்மா வழுத்தினரோ. ௱௨௫

அல்லாபகையன் சொன்னனபிமுன் னவனியிலே
வல்லோன்றொழுகையை விட்டோனாகித்த மனமகிழ்ந்து
நல்லாயவரொடு தோஸ்தாகக்கூடி நடப்பனென்றே
பொல்லானிபுலீசு புல்லனுமுன்னால் புகன்றனனே. ௱௨௬

பழுதாகவெந்தன் சொல்லைமறந்துமே பாரதிலே
தொழுகையைவிட்டோர் கழுதையின்கின்சீர் சுணங்கதிலும்
கழிவானஜிசிற் பிறந்திடுங்கள்ளக் கயவரென்றே
மொழிந்தார்நபிகளி னுயகமான முஹம்மதரோ. ௱௨௭

துனியாவையென்றுஞ் சதமென்றிருந்திடுந் தோழர்களே
அனியாயமான நரகிற்கிடந்து அழுதிடுவீர்
ஹனியாகவென்று மிருப்பவன்சொல்லைக் கடந்துவிட்டால்
சனியனைப்போல்வந்து விடுவானிபுலீசு சக்ருத்ததிலே. ௱௨௮

தீனிற்பிறந்து தொழுகையைவிட்டிடுந் தீங்கருக்குக்
காணுஞ்சலாஞ்சொல்லக் கூடாதுசொல்லிற் ஜவாபுமில்லை
மானமில்லாருடன் தோஸ்தியும்விட்டு மறக்கும்படி
வான்வெளியு மமைத்தவன்றூதர் வழுத்தினரோ. ௱௨௯

நபிதானிருந்திடும் நாளிலொருவ னடந்துவந்தே
ஹபிபேயெனதுட தந்தையிறந்தானென் றுன்கரைந்தான்
ஷபியின்முருசலி னுமரபூபக்கரைத் தானனுப்ப
அபிமானமுள்ளவ ரேகியேபார்த்து மகன்றுவந்தே. ௱௩௰

சென்றங்கேநோக்கிய காரணந்தன்னைத் திருநபிமுன்
னின்றனர்கிஞ்சிர் சுருபமதான விதந்தனையே
மன்றல்கமழ்நபி கேட்டவன்வாழு மனையில்வந்தே
நின்றுமேநோக்கி யவன்மகன்றன்னை நினைவுடனே. ௱௩௧

என்னவிதமதோ வொங்கைச்சியலே யிசையெனவே
யின்னமதாக தொழுகையையொருநாளும் விட்டதென்றான்
முன்னோன்றொழுகையை விட்டவர்க்கிந்த முனிவுருமென்
றன்னவனுன நபிதானெவர்க்குமே சாற்றினரே. ௱௩௨

இப்பாரதினிற் றொழுகைவிட்...கான்கிடைக்கும்
தப்பாமலிந்த ரூரதததாக தரணிவிட்டே
ஜப்பாறிடத்தினில் வருவாரெனநபி சாற்றினராம்
துப்பரவாகவே தொழுதுகொள்வீர் சொன்னேன்றோழர்களே ௱௩௩

மண்வீட்டில்யாருந் துணையுண்டோசொல்லுவீர் மானிடரே
நண்ணும்பொருளைச் சதமென்றுநித்தமும் நாடுகுறீர்
எண்ணுங்ஹயாத்தா யிருப்போன்றொழுகை யெடாதிருந்தால்
கண்ணுக்கெதிரவே காண்பீர்நரகதின் காரணமே. ௱௩௪

சாஞ்சத்துமில்லையோ வுங்களுடலிற் சகோதரரே
பரந்தானுரைத்த பருவலதைவிட்டால் பஸிஹத்துண்டாங்
கரந்தான்பொருந்த ஷாமதிற்சென்றோர் ஹதீதின்படி
அறந்தானிழந்து கொடியவதாபி லகப்படுவீர். ௱௩௫

பொய்யென்றுயெண்ணித் தொழுகையைவிட்டால் பூவதிலே
மையத்தாய்ப்போனு லுணர்ந்துகொள்வீர்கள் மானிடரே
மெய்யாகவென்று மிருப்போன்மொழியதை மேதினியிற்
ஐயமென்றெண்ணி யிருந்தாலெரியி லகப்படுவீர். ௱௩௬

வருத்த...யதீனை விளைத்தமுகம்மதர் வாய்மொழியை
கருத்திலநி..த்தியே கொள்ளாமற்பேசுங் கசடர்களே
வெ..த்துவுலகில் தொழுகையைவிட்டால் விசனமுடன்
பருத்தவுடலது வெரியும்நரகதின் பள்ளத்திலே. ௱௩௭

வரத்திலுயர்ந்து இன்பயிரோத்தியே வையகத்தில்
காத்தைப்பொருத்தினோர் சொன்னத்தொழுகை கவனத்திலே
வெருக்துவிட்டோர்க்கு நரகத்ததாபுகள் மேலுமுறும்
ஒருத்தனைநித்தமு மோயாமற்போற்று முதவியுண்டே. ௱௩௮

மட்டிகள்போல திரிந்துத்தொழுகை தனைமறந்தால்
வெட்டிப்பிடு[illegible]துயிர் வாக்கிடுவார்னெடி யேமன்வந்தே
பொட்டியில்வைத்த பணம்வருகாது புவியனையில்
கட்டிச்சுருட்டியே வைப்பாரொருனாள் கபுறதிலே. ௱௩௯

தொழுகையைவிட்டால் துரவுகோலில்லை சொர்க்கத்துக்கே
வழிபான ரத்ன விலாசத்திற்பார்த்திடு மானிடரோ
அழியாமலென்று மிருப்போன்சமுகத்தி லானவுடன்
பழிவந்துசூழ்ந்திடு மென்றுமேயிக்கவி பாடினனே. ௱௪௰

தொழுகையைவிட்டால் துணையில்லை யுன்னுக்குள் தோழர்களே
அழுதரனித்து யிருப்பீர்களென்று ஹதீதிருக்க
பழுதாகவிட்டுத் திரிந்தோரானைப் படைத்தவன்றான்
கழிவானகாபர்கள் கூட்டத்திற்சேர்த்துக் கனலிடுவான். ௱௪௧

நாற்றிப்பதினாலு சூரத்திலுள்ள றாணுக்கமதை
பார்த்துத்தெளிந்த வுலமாககளசொல்லை பழுதெனவே
காற்றைபெரிதாக வெண்ணிநமாசின் கடனைவிட்டால்
நாற்றமதான நரகுக்கிறையாக நலிந்திடுவீர். ௱௪௨

ஒளிவாயிருக்குந் தொழுகையைவிட்டு வுலகதிலே
களிப்பாகயென்று மிருப்போமென் றெண்ணிக்கருத்தழிந்து
வெளியாகசொல்லி யிருக்குங்ஹதீதை வெறுத்துவிட்டால்
சுளியரம்நரகதில் வேதனைசெய்வார் துயருடனே. ௱௪௩

அடினாளிலேயுமக் காசையிருந்தா லவன்மொழியின்
படியின்றொழாம விருப்பீரோசொல்வீர் பாலகரே
திடனாகப்பூவினில் திரியுகுதீர்களே தீனவரே
சடுதியில்வந்துயிர் பிடித்திடுவானொனுஞ் சாற்றினனே. ௱௪௪

தொழுகையிழந்தவர் சூரத்தைபார்த்துமே தூதர்சொன்னார்
பழுதாகநாளை யெழும்புவாரென்ற பயத்தையெண்ணி
அழுதுவழுது வுரைத்தாரசுஹாபி யானவர்க்கே
[illegible]ழுவான்கடந்து கபுசோடாரசினி லேறினவர். ௱௪௫

வணக்கமதான நிமாசதைநீங்கள் மனமுரண்டாய்
சுணக்கமாய்விட்டு விடவேண்டாமென்றுமே தூதர்நபி
மணக்குங்கஸ்தூரியின் வாயால்மொழிந்தனர் மானிடரே
கணக்காகவைந்து வொகத்துந்தொழுதிடுங் கலாவன்றியே. ௱௪௬

தொழுகையைவிட்டோர் தவ்பாகபூலில்லை தோழர்களே
பழுதாகப்பூவிற் றிரிந்தாற்கபூரில் பலிகத்துண்டாம்
பொழுதுவிடிந்துங் கிடக்குறீர்பாயில் பிணங்களைப்போல்
அழுதுவழுது தவிப்பீர்கள்றுன்னை யனலதிலே. ௱௪௭

மூச்சுள்ளமட்டுந்தொழுகையைவிட்டால்முனிவிரங்கும்
பேச்சிறைலென்ன புரோசனங்கிட்டிடும் பேயர்களே
ரூக்ஷகயரத்துப் போனால்நொடியினிற் றுன்பமுண்டாங்
காக்ஷிகளன்றி திரிவீரொடுக்கங் கியாமத்திலே. ௱௪௮

மூன்றுநாள்வாழ்வைச் சதமென்றுபூவில் முழுதும்நம்பி
தாண்டும்பரியின்மே லேறியேநித்தமுஞ் சவாரிசெய்வீர்
ஆண்டுநூர்மட்டு மிருந்தவராரோ அவனியிலே
மாண்டுக்குழியினில் நாளைப்புகுந்திடு மானிடரே. ௱௪௯

ஒறாறாத்துமா றாத்தெஞ் றேருதுமமரர்கள் காசினியில்
மாறுனகள்ளுங் குடித்துசனுவும் வதைசெய்ததால்
பேருமிழந்து கியாமநாள்மட்டும் பெரியவன்தான்
தூரப்படுத்தி யதாபுகள்செய்குருன் றேழர்களே. ௱௫௰

தறையதிலெண்ணை மீட்டியேபெண்ணுக்குத் தானளித்தோர்
வறையாங்கனசப் புயத்துமரீண்ட மகன்றனக்கு
குனையாயெகூதி வெரிகள்கொடுத்துக் கொடுமைசெய்தான்
மறையின்படிக்கி யடித்தார்மகன்மவுத் தாகுமட்டே. ௱௫௧

கட்டிலும்மெத்தையுந் தலகாணிவைத்துமே கண்துயில்வீர்
வெட்டுங்குழியதிற் புகுந்தால்விரிப்பதற் கென்செய்குவீர்
துட்டுப்பொருமலே போகுமுடலது சொக்கிவிட்டால்
திட்டமதாக தெளிந்துகொள்வீர் சொன்னேன்றீனவரே. ௱௫௨

கோடானகோடி நம்மைப்போலிருந்தோர் குழியிற்சென்று
வாடாமல்வா[illegible]க கறைந்துமேமண்ணில் மயங்குகிறுர்
ஓடாமலோடி[illegible] திரிந்தாலுமுன்னை விடுவதில்லை
பாடாகவந்து மு[illegible]யுமெனக்கவிப் பாடினனே. ௱௫௩

மவுத்தைமறந்து இரிந்துவாய்பேசிடு மானிடரே
கவுத்துகமாக ஞொடியிலழிந்திடுங் காயங்கண்டீர்
சவுத்துங்கூறலு மொடுங்கிடுநாளை சக்ருத்தனிலே
பவுத்தாயிருக்கையில் கல்பதைப்பேணி பயந்திடுவீர். ௱௫௪

ஆதந்தனக்குப் பகையாகவந்த அசாஜிலென்போன்
சேதப்படுத்தியே வைத்ததைநீங்கள் தெரிந்திலையோ
காதங்கமழ் முஹம்மதர்சொன்ன ஹதீதின்படி
நீதமதான ஷரகதைப்பேணிடும் நேசர்களே. ௱௫௫

நல்லாதனங்களுஞ் செய்துமேகல்பி லிடர்நினைந்தால்
பொல்லாவிபுலீசு பிரியமாய்வந்து புகுந்திடுவான்
சொல்லாமற்சொல்லு மிகமதைத்தேடுஞ் சுருக்கதிலே
வல்லவன்றூதர் மொழிந்ததைநீங்கள் மனதில்வைப்பீர். ௱௫௬

பொய்யானவாழ்வதை மெய்யென்றுநம்பிடும் புல்லர்களே
கைசேதமாகி யழுவீர்கபூறிற் கியாமமட்டும்
துய்யோனுரைத்த தொழுகையைவிட்டிடிற் றுன்பமுண்டாம்
வையகமென்றும் நிஜமில்லைகாணு மானிடரே. ௱௫௭

நீதியதான ஷறவின்படிக்கிநீர் நேசம்வைத்து
ஆதியையென்றுந் தொழுதுவந்தோர்க்கொரு ஆபத்தில்லை
ஜாதிஜனமொன்றுங் கூடவராது கபுறினுள்ளே
வீதிகடோறு மலைந்துதிரிகின்ற வீணர்களே. ௱௫௮

தொழுகை வுபதேசித்தபடலம்-முற்றிற்று.

ஆகபடலம் ௨-க்கு கூடிய பாடல்-௱௭௪.

பிஸ்மில்லா ஹிற்றஹுமா னிற்றஹீம்.

இஃது,

மாதர்களுக் குபதேசித்த படலம்.

மூசாநபியை வளர்த்திடு மாசியாமுத்துமெங்கே
கூசாமலீசுபு நபியைப்பிடித்த குயிலுமெங்கே
யீசாநபியினை யீன்றமரியமு மெங்கெயோசொல்
வாசங்கமழு முகம்மதரெங்கேசொல் மாதர்களே. ௧

அபூபக்கரான வுமருதுமானு மலியுமெங்கே
சபுரிலதிக முடையவசனுசைன் றுனுமெங்கே
சபூர்தவுறேத்து யிஞ்சிலிருந்த ஜனங்களெங்கே
கபூருளவிட்டினிற் போனதை நீங்களுங் கண்டிலையோ. ௨

தன்னையதாகிய ஹவ்வாவும்மாவுஞ் ஜனமுமெங்கே
தெள்ளமுர்தாகிய ஆயிஷாபீவி ஜெயினபெங்கே
வள்ளல்முக[illegible]தர் கண்மணியான மகளுமெங்கே
உள்ளவிசளத்தை சொன்னேனெனது வுடப்பிறப்பே. ௩

பூவதில்நீங்கள் புருஷனைப்பேணிப் புகழ்ந்திருந்தால்
ஆவியழிந்தங்கே சென்றாலும் நாளை யாஹிரத்திற்
சாவொன் றுமில்லா னிடத்தினில்போனால் சந்தோஷமுண்டாம்
கோவிறசூல்மகள் கூட்டத்திற்சேர்ந்துக் குடியிருப்பீர். ௪

புருஷருடையசொற் போலேநடந்துமே பூவைவிட்டால்
அரஷினிழலிலே சேர்ந்திடுவீர்சொன்னே னன்னையரே
துரிதமதாகவே தய்யோனைப்போற்றி துவாவிரந்தால்
முருசல்நபிமகள் ஷபாயத்துண்டாகிடு முற்றியதே. ௫

பொல்லானிபுலீசு மாயத்தில்நீங்கள் புகுந்துகொண்டே
வல்லநன் மைபேசி பூவில்திரிகின்ற மாதர்களே
எல்லாமழிந்து பனுவாகப்போமென்று யெண்ணம்வைத்து
அல்லாவுக்கஞ்சித் தொழுதுகொள்வீர்சொன்னே னன்னையரே. ௬

நகையுந்துகிலும் பெட்டியில்வைத்திடும் நாணயமும்
துகையாயெடுத்துக் கொடுபோகமாட்டீர் துனியாவைவிட்டே

பகையாயிருக்கும் மவுத்தின் புலிவந்து பாய்ந்துவிட்டால்
குகைபோலிருண்டக் குழியிற்புகுதவீர் கோதையரே. ௭

தடிமையைச்சதமெனு மெண்ணிப்பணிகள் சமைக்குகிறீர்
கொடியமவுத்துமே வந்துபிடிக்குங் குபாடமதாய்
முடிவுவருகுமுன் றொழுகையைவிட்டிடில் முன்கூறுடைய
அடியாலடிபடுஞ் சத்தியஞ்சத்தியந் தையலரே. ௮

தாய்மாரே யான்சொன்ன சொல்லதைக்கல்லில் தரிபடுத்துங்
காயஞ்சதமென வெண்ணிடிலுனைக் கலக்கமுண்டாம்
மாயமாய்வந்து பிடிப்பார்மலக்கல் மவுத்தென்பவர்
நாயமாபூவில் தொழுதுகொளவீர்சொன்னே னரியரே. ௯

வருத்தமென்றெண்ணித் தொழுகையைநீங்கள் மறந்துவிட்டால்
கருத்தநிறமுள்ள கிஞ்சினைப்போல கபூறைவிட்டுப்
பொருந்தமில்லாமலே யெழும்புவீர்னுளைப் பூவையரே
நிருத்திவெயிலி லதாபுகட்செய்வா னெடியவனே. ௰

மன்னுராவைப் பெரிதென்றுயெண்ணி வணக்கம்விட்டு
யென்னாளும்பூவில் சதமிந்தவாழ்வி லிருப்போமென
பொன்னைவிட்டுநீங்கள் திரிந்தாலுனைப் புவியிலுள்ளே
வின்னம்வருமெனச் சொன்னேனுணர்ந்திடும் பீவிகளே. ௰௧

முன்னாலேஆதம் ஹவ்வாமொழிந்திடு மோசத்தினால்
பின்னாலனேகர் வருந்தினர்பெண்சொல்லைப் பேணியேதான்
இன்னாளில்நீங்கள் பிறந்தீர்களாடவர்க் கிடராதுவாய்
சொன்னாலுமுங்கட்கு வெட்கமும்ரோஷமுஞ் சுணையில்லையே. ௰௨

பெண்ணொன்றுவுங்களை யேன்தான்படைத்தான் புவியதிலே
மண்ணாகநீங்களும் போனாலதிலோர் வருத்தமில்லை
எண்ணியான்சொல்லியுஞ்செவிகேழ்க்கவில்லையே யென்னசெய்வேன்
கண்ணாலேகண்டுமே கொள்வீர்கபூரில் கலக்கமுடன். ௰௩

* தள்ளைமுன்சொன்ன பொய்போலநீங்கள் தரணியிலே
எள்ளளவேனும் விடாமலேநாவி லெடுத்துக்கொண்டீர்
உள்ளங்கபடமும் வாயதிலுண்மை யுரைத்திருந்தால்
சள்ளைவருமென வெண்ணுங்கள்நாளை சக்ருத்ததிலே. ௰௪

---

*தள்ளையென்பது தாயென்றுணர்க.

துனியாசதமென வெண்ணியிருக்கின்ற தோகையரே
அனியாயமாக நாளையதாயி லகப்படுவீர்
பனிபோலகன்றிடும் பணிகளுந்தாசையும் பாரில்விட்டே
தனியேகிடந்து அழுவீர்கபூரினில் சத்தியமே. ௰௫

உங்கள்கண்காண போனாரனேக ருலகைவிட்டே
அங்கேயவர்கள் படும்பாடு நீங்களறிந்திருந்தால்
பங்கம்வருமென்று யெண்ணுமற்பூவினிற் பாசம்வைத்தே
எங்குமநிறைந்தவன் சொன்னான்மறையினி லேன்மறந்தீர். ௰௬

மாய்கையிற்சிக்கி யிருக்கிறீர் மன்னர்மயக்கத்தினால்
சாகையைவிட்டு நடப்பீர்நொடியினிற் றுனிறந்தால்
வேகையிலல்லவோ வுணர்வீர்தொழுகையை விட்டதெல்லாம்
போகையிலொன்றுங் கொடுபோவதில்லையே பூவையரே. ௰௭

மார்பிலணிந்த மணியும்பிடவையு மக்களையு
மூரதில்விட்டுநடப்பீ ரமன்வந் துயிர்பிடித்தால்
நாரும்நரகதில் போடுமுன் னுக்குன்னான்சொன்னதை
நேராய்பிடித்து தொழுதுவந்தாலொரு நோவில்லையே. ௰௮

நாளைகபுறினி லாருந்துணையுண்டோ நங்கையரே
வேளைநொடியினில் வந்திடுமேயிந்த மேதினியில்
ஆளுமின்றயவ னேவலைவிட்டா லனுதினமுஞ்
சாளையப்பட்டு அழுவீர்கபூரில் தனித்திடவே. ௰௯

காலஞ்சுபெண்டுகள் கூடியேவூரி னடப்பையெல்லாங்
காலுந்தலையன்றி பேசுவீர்கண்ணினிற் கண்டதுபோல்
மாலும்பணியும் வகைவகையாகிய வஸ்திரமும்
மேலுமணிந்து கொடுபோவதுண்டோயிம் மேதினியில். ௨௰

ஒப்புமுகமையு மில்லான்மறையினி லோதியதை
தப்பெனவெண்ணியே தொழுகையைவிட்டிடுந் தையலரே
அற்பசுகத்தைப் பெரிதெனவெண்ணினு லாகிறத்தில்
றெப்பன்சமுகத்தில் போனால்தெரிந்திடும் நேரிழையே. ௨௧

மக்கள்வருத்தங்க ளெண்ணியேநீங்கள் வல்லோனுடைய
சொர்க்கத்திற்சேர்க்குந் தொழுகையைவிட்டிடுந் தோகையரே
துக்கத்தில்நாளை யகப்படுவீருடல் சொக்கிவிட்டால்
பக்கத்துணையாய் வருவாரோஉம்முடன் பாலகரே. ௨௨

புவியில்நபிமகள் பாத்திமா செய்தப் பொறுமையெல்லாம்
செவியதிற்கேட்டு மறந்துமேநீங்கள் திரியுகிறீர்
தவியாதவர்களு மேகினர்ஜென்னத்திற் சார்வதற்கே
கவியாலேவுங்கட்கு சொன்னாலும்வெழ்க்கங் கதிகில்லையே. உக

தொழுகையைவிட்டு மனம்போல்நடந்திடுந் தோகையரே
கழுதைகள்போல பிறந்தீர்கலியுகக் காலத்திலே
பழுதுவருமென்று யெண்ணுமல்நீங்கள் பயந்தெளிந்தால்
அழுதுகுழியில் கிடப்பீர்களங்கு அமலதிலே. உச

புருஷருற்றவைப் பெரிதாகவெண்ணியே பூவதிலே
வரிசையதான தொழுகையைவிட்டிடு மங்கையரே
துரிதமாநாளை மவுத்துபிடித்துடல் துஞ்சிவிட்டால்
அறைஷைப்படைத்தவன் ஜகன்னத்திலிட்டு அதாபுசெய்வான். உரு

வாணாலழிந்திடும் நாளைகியிஷத்தில் மவுத்துவந்தால்
காணுங்கபுறில் யானிங்குசொன்ன கலக்கமெல்லாம்
ஆணைப்பிறந்தவ ராசைச்சிறிதென அஞ்சொகுத்தும்
வீணாய்விடாமலே தொழுதிடுவீர்சொன்னேன் பீவிகளே, உசு

விலக்குஞ்செயல்களை செய்குறீர் பூவில் வெழ்க்கமன்றி
மலக்கல்மவுத்துமே வந்துபிடித்திடில் மறித்திடுவீர்
கலக்கம்வருமென்று யெண்ணுமற்பூவில் களித்திருந்தால்
உலக்கைபோல்தண்டத் தடிவிழுமொங்க ளுடலதிலே. உஎ

மானுங்கலையும் பிரியாதிருந்திடும் வாறதுபோல்
தானுங்கணவனுங் கூடியிருந்த சந்தோஷத்திஞல்
வானும்புவியும் படைத்தோன்றொழுகை மறந்துவிட்டால்
தீனையிழந்து வருமாறிநாளைத் திரிந்திடுவீர். உஅ

இணைவிஃடுநீங்கள் பிரியாதிருக்கிறீ ரிரவுபகல்
க்ஷணம்விட்டுபோமுயி ரென்றுணராதிருந் தாரணியிற்
சுணைகெட்டுநாளைத் தொழுகையைவிட்டிடுந் தோகையரே
துணைவிட்டுமண்ணிற் புகுந்தாற்றெரியுஞ் சுகதுக்கமே. உகூ

வாசமணிந்து மணவாளரோடு மகிழ்ந்திருந்தால்
மோசமாய்வந்து பிடிப்பார்மலக்குகள் மூச்சதுவை
நாசமாய்நீங்கள் போய்விடுமுன்னமே ஞான்சொன்னதை
நேசமதாக தொழுவீரனுதினம் நிச்சயமே ௩௰

புருஷருறவைச் சதமென்றுயெண்ணிப் புகழ்ந்திருந்தால்
வரிசைகளொன்றுங் கிடையாதுனாளை மகுஷரிலே
துரிதமாயைந்து வொகுத்தும்விடாமற் றொழுதுவந்தால்
முருசல்நபிமகள் பாத்திமாகூட்டத்தில் முன்னடப்பீர். ௫௧

மாத்திலுயர்ந்திடும் பொன்பணியிட்டு மகிழ்ந்திருந்தால்
காத்தோடிப்போனா லொருநொடிப்போதிற் கபூர்புகுதும்
சாத்துக்கெடுத்திட மாட்டார்களிந்தச் சடலமதை
கூத்தனைவிட்டுத் தொழுதநிலத்தில் குடியிருப்பீர். ௫௨

பெண்ணானபேர்க டெனைபெற்றதாயென்றும் பூவதிலே
எண்ணங்கள்வைத்து வியம்பினேனிக்கவி யினிதுறவே
மண்ணறைதன்னிற் புகுந்துகிடந்து வருந்துமுன்னே
விண்ணோனுரைத்தப் படிதொழுவீர்சொன்னேன் பீவிகளே. ௫௩

துனியாவதனிலே புருஷர்க்குநீங்கள் துரோகஞ்செய்தால்
அனியாயமாக நரகிற்கிடந்து அழுதிடுவீர்
ஹலியானவன்ற னிடந்தனிற்சென்றால் கியாமத்திலே
தனியேகிடந்துடல் வெந்திடுவீர்கள் ஜகன்னத்திலே. ௫௪

நித்தமுமுங்களின் கணவருறவினை நெஞ்சில்வைத்து
சுத்தமாநீங்கள் தொழுகாதிருந்திடில் தோகையரே
எத்தனைநாளைக் கிருந்தாலுமேம னுயிர்பிடித்து
செத்தாலும்நாளைப் படுவீர்கபூரில் செருப்படியே. ௫௫

அத்தர்புனுகு சவாதுகள்பூசி யவனியிலே
பத்தாமயலினைப் பெரிதெனவெண்ணிய பாவையரே
ஹத்தாவுரைத்த படிதொழுகாமற் கடைசியிலே
செத்திடில்நாளைப் படுவீர்கபூரிற் செருப்படியே. ௫௬

உத்தமியாகிய தாய்மாரேயான்சொன்னே னுங்களுக்காய்
சுத்தமாநீங்கள் தெரியாதிருந்திடில் தெளிவதற்கே
முத்தன்மொழிந்த தொழுகையைநீங்கள் முழுதும்விட்டு
செத்திடில்நாளைப் படுவீர்கபூரில்செருப்படியே. ௫௭

எத்தனைகோடியோ பெண்களுலகினை யிழந்துவிட்டு
சுத்தமகான கபூருக்குள்போனதுந் தோணலையோ
பித்துப்பிடித்துத் திரியுகிறீராசைப் பெரிதெனவே
செத்தபின்னாளைப் படுவீர்கபூரிற் செருப்படியே. ௫௮

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இஃது,

ஹக்குபேரில் துதி.

காப்பு-விருத்தம்.

ஆதியுமனாதியுமா யகண்டபரி பூரணமாய்
சோதியுஞ் சுடரொளிவாய் துய்யப் பெரும்பொருளாய்
நீதியாய் நிறைந்தானாய் நித்தியானந்த னேயா
ளோதிப்புகழ்ந் தேற்றிடவே யுதவியருளேகாப்பு. ௧

எட்டுமில்லா னிரண்டுமில்லா னெழுத்தி லடக்கமில்லான்
மட்டுமில்லா னுகமையில்லான் மானிடர் வடிவுமில்லான்
ஒட்டுமில்ல்லா னுறவுமில்லா னூனுறக்க மொன்றுமில்லான்
விட்டுவிலகா திருக்கு மெய்ப்பொருளே நீகாப்பு. ௨

கண்ணுமில்லான் காதுமில்லான் கலிவாயும் பேச்சுமில்லான்
விண்ணுமில்லான் மண்ணுமில்லான் வேதாந்த நாவிலில்லான்
அண்ணுமுள்ளா னின்னுமுள்ளா னனேக விதங்களுள்ளான்
எண்ணுமெய் யாயிருக்கு மிறையவனே நீகாப்பு. ௩

வேறு.

குத்துனீ நுகத்துனீ குண்டுனீ வட்டம்னீ ஹூம்மெனுங் கோலம்னீயே, முத்துனீ பச்சைனீ பவளம்னீ முதலுநீ முச்சுட ராவனீயே, வித்துனீ சித்துனீ யெட்டுனீ யிரண்டுனீ விரிகதிர்ச் சுடரும்னீயே, கத்துனீ ஹர்புனீ கலமுனீ பலகைனீ கண்மணிக் கடவுள்னீயே. ௪

ஆவும்னீ அலிபும்னீ அஹதும்னீ உஹதும்னீ யண்டமும் பிண்டம்னீயே, ஹவும்னீ மீமும்னீ குணமுனீ மணமுனீ குறைவிலா தீபம்னீயே, மாவும்னீ மறையும்னீ மண்ணும்னீ விண்ணும்னீ மாதவப் பொருளும்னீயே, காபும்னீ லாமும்னீ தாலும்னீ ஹேயும்னீ கண்மணிக் கடவுள்னீயே. ௫

சோதினீ சுடரும்னீ சொல்லும்னீ சியலும்னீ துரியாதி துரிதம்னீயே, ஆதினீ அரனும்னீ அன்றும்னீ யின்றும்னீ அகாரமும் உகாரனீயே, பாதனீ பன்றுனீ பறையும்னீ பரமும்னீ பலபலக் கோலம்னீயே, ஹாதினீ கதியும்னீ சர்ப்பும்னீ கருணைநீ கண்மணிக் கடவுள்னீயே. ௬

*

உ

அடியும்நீ முடியும்நீ அகமும்நீ புறமும்நீ ஆனந்தவெளியும்நீயே, குடியும்நீ குலமும்நீ குருவும்நீ தருவும்நீ கோலங்கட் பலதும்நீயே, பிடியும்நீ பிலனும்நீ பேரும்நீ வுருவும்நீ பிரகாச வொளிவும்நீயே, கடியும்நீ கமழும்நீ காலும்நீ சரமும்நீ கதிதருங் கடவுள்நீயே. ௭

திருவும்நீ சியலும்நீ தேகம்நீ வாசிநீ சிகாரமதானநீயே
அருவுநீ வுருவுநீ அஞ்சும்நீ நெஞ்சும்நீ ஆதியு மனாதிநீயே
மருவும்நீ மலரும்நீ வடிவுநீ வஸ்துநீ வல்லவ னென்[illegible]வம்நீயே
கருவுநீ வுருவுநீ ஹையுநீ கர்ப்புநீ கண்மணிக் கடவுள்நீயே. ௮

றவியுநீ மதியுநீ நாலுநீ யெட்டுநீ நற்குணங் குடியுநீயே
செவியுநீ தேகநீ சிரசுநீ சித்துநீ தேடொணாப் பொருளுநீயே
புவியுநீ பொருளுநீ பின்னுநீ முன்னுநீ பேரின்பக்கடலுநீயே
கவியுநீ சொல்லுநீ காதுநீ யாதுநீ கண்மணிக் கடவுள்நீயே. ௯

ஒழிவுநீ வுறமுநீ வுள்ளுநீ புறமுநீ யொப்பிலா வடிவும்நீயே
வழியும்நீ வரமும்நீ வாசநீ போஜநீ வாக்குடன் மனமுநீயே
தெளிவுநீ நிறமுநீ சீருநீ சிறப்புநீ [illegible]யென்ற பொருளும்நீயே
களிப்புநீவெறுப்புநீ கறையுநீ துறையுநீகண்மணிக்கடவுள்நீயே

விண்டுநீ குண்டுநீ வெளிச்சநீ யிருளுநீ வேதாந்த வீடுநீயே
பண்டுநீ பரமுநீ பகலுநீ யிரவுநீ பாலதருந் கருவுநீயே
குண்டுநீ வட்டநீ ஊடவுநீ பாவுநீ கோலங்கள் பலதுநீயே
கன்றுநீ பசுவுநீ காளைநீ கருவுநீ கண்மணிக் கடவுள்நீயே. ௰௧

சரிதைநீ கிரிகைநீ யோகநீ ஞானம்நீ சதாகோடி சங்கம்நீயே
பருதிநீ மதியுநீ பாலுநீ வெண்ணைநீ பார்க்கின்ற நெய்யுநீயே
சுருதிநீ வுருதிநீ சுகமுநீ அகமுநீ சொல்லொணாச் சுடரும்நீயே
கருவுநீ ஹயாத்துநீ கர்ப்புநீ காட்சிநீ கண்மணிக் கடவுள்நீயே

அத்திநீ நெத்திநீ மத்திநீ புத்திநீ ஆலமறுவாஹுநீயே
முத்திநீ முகமுநீ முடியுநீ நடுவுநீ மூச்சதி னுறைந்தநீயே
சத்திநீ தவமுநீ தந்தைநீ தாயுநீ சகலசர்க் குருவுநீயே
கத்திநீ கருமைநீ கடலும்நீ பாலம்நீ கண்மணிக் கடவுள்நீயே. ()

ஹக்குபேரில்துதி-முற்றிற்று.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது,

நஸீஹத்துல் மூமினீன் மாலை,

கடவுள் வாழ்த்துப் படலம்.

காப்பு - வெண்பா.

தீனவர்க்கு திருவருளென் றுளமுறத்
தானைநசீஹத்தைச் சாற்றவே-ஹானம்
ஞானதவராமலரு ளுளமெனக்குதவிக்
காவிறையோனேநீ காப்பு.

கலித்துறை.

ஆணெனும் பெண்ணெனு மலியெனுமில்லா தரும்பொருளை
பேணியேயுள்ளத்தின் பெட்பொடுவாழ்த்திய புண்ணியர்க்கு
வாணலத்திங்கிடும் போதேகலிமா வழுத்துவர்காண்
ஆணிப்பொன்னூரி னலங்கார வாழ்வு மமர்ந்திடுமே. ௧

வல்லான்றனைநிதம் வாழ்த்தாமலுற்றிடும் வம்பர்களே
பொல்லாங்குட னுயிர் போக்கிடுவோர்விட்டுப் போம்பொழுது
கல்லாகுமுள்ளங் கருதாக்களோகலி மாவதனை
பல்லாண்டுமொழியாய் பாடார்நரகப் பலனுறுமே. ௨

உன்னியிலேறியே மிகுமுஜில்சென்று வொருவனிடம்
வன்னிப்பதான வரிசைகள்பெற்ற மஹமூதென்னுஞ்
சென்னியிலேவுடு சேர்ந்தநந்நபியின் றிருவடியை
நன்னயத்தூடுயென் றுவினிளுளும் நவிலுவதே. ௩

இங்ஙனுந்திகழ் மானுடன்சிறிய ஞகமுன்ஜின்
தனகுலத்தோருடன் றயவாயருளிய சர்க்குணரின்
பங்கயமா துல ராமபுபக்கரின் பதமலரை
பொங்கிவாஞ்சையி னூடுவென்னுவிற் புகழ்வதுவே. ௪

மூத்தாயமைந்திரு முன்னொளிவாகியே மூவுலக
வித்தாயுதித்து விளக்கியவேத விளக்கொளிவாய்
வத்தாதருள்நபி மாதுலராக வருமுமரு
ஹத்தாபிணையடி காலமும்போற்றிக் கழறுவதே. ௫

சதுமாமறையருள் தரணியுள்ளோர்க்குமே தந்துதவும்
பதுமாமலரடிப் பங்கயராம்நபி பயந்தருளும்
விதுமாமுகத்திரு பீவியைநன்மணம் வியந்துபுரி
யுதுமானின்பாத முள்ளத்தினூடு வுகப்புறவே. ௬

புலிமாவொருதுறை நீருண்ணவந்தப் புதுமைநபி
கலியாகயீன்றிடுங் கற்புரும்பாத்திமா காதலியை
சலிமாமலைமணந் தாவியேவெற்றி தகமையுறும்
அலியாரின்பாத மலரிணையேற்றி யருள்வதுவே. ௭

தசையாயுதித்துத் திரண்டவோர்கட்டியைத் தாரணியிற்
றிசையோர்கள்போற்றிடப் பெண்ணுயமைத்த திருநபியி
னிசைவானபேர ருத்தமராமசனுடன்றிகழ்சேர்
உசைனாரின்றாளிணை யுள்ளன்புமேவி யுகப்பதுவே. ௮

ஆலநபியி னருங்கிளையானா யனுதினமும்
பாலினுருமசு காபிகடம்மை பயகாம்பர்களின்
சீலமுறும்பத மென்னுளுமெந்தன் சிரத்தினுறக்
கூலமுடனுளங் கொண்டேயின்னூலைக் குறித்ததுவே. ௯

எண்ணுமுள்ளோனிறை யிடத்தினிருந்துமே யிவ்வுலகி
றண்ணல்முஹம்மதர் பேர்குலத்தினிலவதரித்து
விண்ணிலொளிவாக வருமப்துல்காதர் பதியடியை
கண்ணிலொளிவெனக் கருதியின்னூலைக் காலுவதே. ௰

ஈராறுகால்கொண் டிரங்கியவாசியி லேறிதங்
கூராகனேக்கியே கும்பித்தபோதந்தக் கோணமதி
னூரானவெள்ளக் கரையோரம்நின்றங்கு நோக்கிடவே
வேராருமில்லை முகியித்தீனுமம் விளங்கிடுமே. ௰௧

காரானதோங்கி நிழற்றியக்காரண சபீபிறசூல்
சீரானகோத்திர ரென்னுமுகியித்தீன் றிகழ்வங்கிடத்
தாரானபார்த்திடர் அப்துல்காதரொலி ஷாஹுல்ஹமீத்
நேரானகண்மணி யானவரேயெங்கள் நித்திலமே. ௰௨

மாலானதுண்டுவர் வாரியினீலாயிம் மானிலசதின்
மேலாகவோங்கிப் பொழிவதுபோன்றருண் வேதவிதி
ஞாலானநுட்பந் துலக்கியேதீனை நுகர்ந்திடுனன்
நாலுயிமாமினி னளினபொற்பாதத்தை நாட்டுவதே. ௰௩

இத்தாவினுள்ளே யிருந்திடும்போது யிறைசொற்படி
சுத்தமாய்நீங்கள் தொழுது துவாவைத் தொடர்மினென
முத்தாயிருந்த முகம்மதர்சொன்ன மொழியைவிட்டு
செத்திடில்நாளைப் படுவீர்கபூரில் செருப்படியே. ௫௯

புத்தைவணங்குங் குபிருனபெண்போல் பூவதிலே
சத்தும்பயங்க ளில்லாமலிருந்திடுந் தையலரே
கொத்துசாமுள்ள மாலைகளெல்லாங் குவலில்விட்டு
செத்திடில்நாளைப் படுவீர்கபூரிற் செருப்படியே. ௬௰

சொத்துஞ்சுகமும் பெரிதென்றுவுன்னியே தொல்லுலகிற்
பத்தாமருட்டி லகப்பட்டிருக்கின்ற பாவையரே
வித்தாயிருப்பவன் சொன்னத்தொழுகையை விட்டுவிட்டு
செத்திடில்நாளைப் படுவீர்கபூரிற் செருப்படியே. ௬௧

விஸ்தாரமாக வுலகத்திற்பேசிடும் பீவிகளே
உத்தமன்சொன்ன தொழுகையைநீங்க ளொடுக்கமட்டும்
சுத்தமதாக மறந்திடிலுங்களை துய்யவன்தான்
செத்திடில்நாளை தெரியுங்கபூரிற செருப்படியே. ௬௨

நத்தாசையாலே கணவருறவினை நம்பிமண்ணிற்
ஹுத்தாமொழிந்த பருலதைவிட்டால் கலக்கம்வருங்
குத்தாக்கள்போலே திரியுகிறீரிந்தக் குவலயத்தில்
செத்திடில்நாளை யடிப்பார்நெருப்பின் செருப்படியே. ௬௩

நெத்தியிற்சுட்டி யாசிலைவாளி நெளிமுதலாய்
குத்திதனிலே யணிந்துகுலாவிடுங் கோதையரே
புத்தியதாக சொன்னதொழுகையை பூவிற்விட்டு
செத்திடில்நாளை யடிப்பான்நெருப்பின் செருப்படியே. ௬௪

மூக்குத்து தூக்கு மூக்குத்தியுமுடி மாட்டியிட்டு
பத்துப்பதினைந்து மோதிரஞ்செய்து பதத்திலிட்டு
சுத்திபாயென்று மிருப்பவன்சொன்னத் தொழுகைவிட்டு
செத்திடில்நாளை யடிப்பான்நெருப்பின் செருப்பதனல். ௬௫

ஹுத்தாக்கள்போலே-காலிற்சதங்கையுங் கலிலெனவே
குத்தாக்கள்போலே யிருந்துவாய்பேசிடுங் கோதையரே
பத்தாபெரிதென வெண்ணிருமாசைப் பழுதுசெய்து
செத்தபின்னாளைப் படுவீர்கபூரிற் செருப்படியே. ௬௬

நத்துபுலாக்கு பொகுஞ்சானகுதா வளையலுடன்
பத்தரைமாத்தினின் தங்கத்தால்செய்தப் பணிகளுடன்
ஹக்தாவுரைத்த பறுலதைவிட்டுக் கடைசியிலே
செத்தபின்னாளைப் படுவீர்கபூரிற் செருப்படியே- ௪௭

கொத்துகொத்தாகவே மாலாவுஞ்சங்கிலிக கோர்வையுடன்
கத்திரியாவுலிக் காதிலணிந்திடுங் கன்னியரே
சுத்தமாயென்று மிருப்பவன்சொன்னத் தொழுகைவிட்டு
செத்தபின்னாளைப் படுவீர்கபூரிற் செருப்படியே, ௪௮

பத்துப்பதினைந்துப் பொறும்படியாகிய பட்டதர்க்கு
சுத்திலுஞ்சாச்சா நக்கியைதைத்துமே தோளிலிட்டு
நித்தமும்பூவி லிருப்போமென்றெண்ணி நிமாசைவிட்டால்
செத்தபின்னாளைப் படுவீர்நரகிற் செருப்படியே. ௪௯

புவியில்நபிமகட் பாத்திமாசெய்தப் பொருமையெல்லாம்
செவியதிற்கேட்டு மறந்துமேநீங்கள் திரியுகிறீர்
தவியாதவர்களு மேகினர்ஜென்னத்திற் சார்வதர்க்கே
கவியாலேவுங்கட்க்கு சொன்னாலும் [illegible] கடுகில்லையே ௫௰

தொழுகையைவிட்டிடுந் தோகையர்தங்களை துனியாவதிலே
பழுதாகப்பேசி விடாமலேநித்தமும் பார்த்திருந்தால்
யெழுதும்பட்டோலையிற் லானத்துப்பெத்தோ ரிவரெனவே
முழுதும்வரைந்து விடுமென்றுசொல்வான் முதலவனே. ௫௧

குத்தினியால்மிகு லங்காக்கள்தைத்துக் குவலதிலே
சுத்தியிடுப்பினிற் கட்டிக்குலாவிய தோகையரே
அத்தியெரும்பைப் படைத்தவன்சொல்லை யகலவிட்டு
செத்தாலும்நாளைப் படுவீர்நரகிற் செருப்படியே. ௫௨

துத்திப்பூவர்ணம தாகியதாவணித் துகிலதுவை
சுத்தியேமெய்யிலணிந்துவுலாவிய தோகையரே
யெத்திசையேர்க்குடை யாள்வோன்றொழுகை யிழந்துவிட்டு
செத்தாலும்நாளைப் படுவீர்நரகிற் செருப்படியே. ௫௩

முத்திதரும்வழி தேடாமற்நீங்கள் முரண்டதுவாய்
குத்திச்சதமென வெண்ணிமகிழ்ந்துக் குலாவுகிறீர்
சத்தியமாகவே சொன்னத்தொழுகையைத் தள்ளிவிட்டு
செத்தாலும்நாளைப் படுவீர்நரகிற் செருப்படியே. ௫௪

பெற்றமகளு மருமக்கள்மார்களும் பேத்திகளுஞ்
ற்றம்பெரிதென வெண்ணியிருக்கின்ற தோகையரே
த்தழும்நீங்கள் மறையிலுரைத்த நிமாசைவிட்டு
செத்தாலும்நாளைப் படுவீர்நரகிற் செருப்படியே. ௫௫

வத்தியாய்பூவிற் பேசித்திரிகின்ற பிவிகளே
த்தியமாக வருவார்மலக்கு கணமதிலே
த்தியாயைந்து வொருத்துந்தொழாமலே தூரவிட்டு
செத்தாலும்நாளைப் படுவீர்நரகிற் செருப்படியே. ௫௬

த்தலைபேர்களைக் காழவிகபனிட்டோ மெள்ளளவும்
த்தும் பயங்களை நீக்கியிருக்கின்ற தாயகளோநீர்
த்தமாயென்று மிருப்போனுரைத்த தொழுகைவிட்டு
செத்தாலும்நாளைப் படுவீர்நரகிற் செருப்படியே. ௫௭

த்தம்பிடித்து அலையுகிறீர்பூவிற் பெண்ணாய்ப்பிறந்தும்
த்தந்தொளியு மில்லாதவன்சொல்லை தள்ளிவிட்டு
த்தனொளிவிற் பிரிந்தோருரைத்த றதிகைவிட்டீர்
செத்தாலும்நாளைத் தெரியும்நரகிற் செருப்படியே. ௫௮

த்திமிலாது மலறதைத்தேட மதிமறந்து
க்திகளசற்று மில்லாதிருக்கின்ற பூவையரோ
வத்திபுடையவன் சொன்னத்தொழுகையை விட்டுவிட்டுச்
செத்தாலும்நாளைத் தெரியும்நரகிற் செருப்படியே. ௫௯

ன்னொன்னுமுள்ளவ னிடத்திலிருந்துமே யிவ்வுலகில்
ண்ணல்முஹம்மதர் பேர்குலத்தி லவதரித்து
ண்ணிறெனிவெனு வந்தமுகிய்யதீன் மிதிபடியை
ண்ணுமேலேனேக்கிடுங் காதர்முகிய்யதீன் கவியிதுவே. ௬௰

அடிதப்பிப்போகுமென் றெண்ணியிருந்திடு மன்னையரோ
படியிலிறையவன் சொன்னத்தொழுகையின் பறலைவிட்டால்
தடியாயிருக்குங் கபூரிற்புகுந்தால் கொடுமையதாய்
கடியாலடிபடு முன்கர்னக்கீரினின் தன்கரத்தால். ௬௧

முடியினுஜுமை தரித்தவர்சொன்ன மொழியைவிட்டு
படியிற்றொழாம லிருந்துமடிந்திடும் பாவையரோ
தடியாயிருக்குங் கபூரதில்மிச்சங் கொடுமையதாய்
கடியாலடிபடு முன்கிர்னக்கீரினின் தன்கரத்தால். ௬௨

கடிகமழுவாசர் முகம்மதர்சொன்ன ஹதிதின்படி
குடியாயிருக்குங் குழியதிற்மிச்சங் கொடூரமதாய்
படியீதில்நீங்களுங்தொகுத்தான பறுலைவிட்டால்
தடியாலடிபடு முன்கர்னகீரினின் தன்கரத்தால். ௬௩

முடிவொன் றுமில்லான் மொழிவதைக்கேளு § மூவந்தர்களே
விடியும்ப்ஜிரை யெழுந்துதொழாமலே விட்டுவிட்டால்
குடியாயிருக்குங் கபூரினிறுளைக் கொடுமையதாய்
தடியாலடிபடு முன்கர்னக்கீரினின் தன்கரத்தால். ௬௪

பட்டிரவுக்கையுந் தாவணிலங்கா பவுசுடனே
விட்டுக்குலாவி யிருக்கிறீரொண்டு மிருப்பதென்றே
மட்டுப்படுத்திடக் கூடாதிருக்கு மவுத்துவந்தால்
துட்டுப்பொராமலே போகுமுடலல்லோ தோகையரே. ௬௫

தங்கத்தால்செய்த சரப்பளிமார்பிற் றளதளென
அங்கமுழுதிலும் பூட்டி நடக்கின்ற வஞ்சையரே
சிங்கமதான மவுத்தாதுவந்துயிர் சிந்திவிட்டால்
பங்கமதாக அழுவீர்கபூரிற் படுத்துக்கொண்டே. ௬௬

ஆசைக்கணவ ரிடஞ்சொல்லிநீங்க ளவணியிலே
காசதைவாங்கி யுருக்கிக்கொடுத்து கம்மாளனிடங்
தோசையைப்போல்மிச்சங் களமாநகைசெய்யச் சொல்லுகிறீர்
வாசல்கடந்தங்கே போனால்கபூரில் வருந்துவீரே. ௬௭

கல்லாலிழைத்தப் பணிகளுங்காலிற் சதங்கைகளு
மெல்லாங்கழட்டி யெடுப்பார்கள்நீங்க ளிறந்துவிட்டால்
சொல்லாமலோடிடு மூச்சதைநம்பிடுந் தோகையரே
வல்லானிடத்தினி லேகிடிலங்கே வதைப்படுவீர். ௬௮

மண்ணதிலுங்கள் மணவாளரோடு மகிழுகிறீர்
விண்ணதிலுள்ள புலிவந்துபாய்ந்தால் விடுவதுண்டோ
எண்ணங்களோடிப் பறந்திடும்நீங்க ளிறந்துவிட்டால்
கண்ணுணமக்களும் வாரார்களுங்கள் கபூரதிலே. ௬௯

புத்தியைநீங்கள் கடக்கவேவிட்டால் புவிதனிலே
சத்தியமாகவுஞ்சொன்னேனெனைப்பெற்ற தாயர்களே

§ மூவந்தர்களென்பது மாதரெனவறிக.

அத்தியெரும்பு படைத்தோன்சமுகத்தி லாகுமுன்னே
முத்திபெறும்படி தேடினலுங்கட்கு மோக்ஷமென்றே. ௭௰

மூசாநபியினி லும்மத்திலேசில மூவந்தர்களும்
கூசாமற்பூவிற் சனுவதைச்செய்தக் கொடுமையினல்
பாசமிலாமலே நாற்பத்திராயிரம் பட்டணத்தை
பேசாதிருப்போ னெறித்தானெனநபி பேசினரே. ௭௧

வெட்கமும்ரோஷ மிருந்தால்சனுவதை விட்டுநீங்கும
பக்கமெழுபது வீடுபாழாமெனப் பாரதிலே
மக்கமுகம்மத றுரைத்தார்ஹதீதினில் மங்கையரே
ஷக்கன்றியெண்ணங்க ளுண்டாய்ஜகன்னத்திற் தாழ்ந்திடுவீர். ௭௨

நான்சொன்னசொல்லை யெடுக்காமற்பூவில் நடந்துவந்தால்
மானங்குலைந்து விடுவீர்கள்நாளை மகுஷரிலே
வானமும்பூமி படைத்தவனேவற்கு மாறுசெய்தால்
தான்படும்பாடு பின்னல்தெரிந்திடுந் தையலரே. ௭௩

கூச்சங்களன்றி சனுவினைச்செய்திடுங் கோதையரே.
மூச்சதுபோயிட லென்னசொல்வீர்கள் முன்கீரிடத்திற்
காச்சுமுச்சென்னவே கத்துங்கிஞ்சீரதாய் கபூருக்குள்ளே
பேச்சேதுநாளை யெரிவீர்கள்யான்சொன்னேன் பெண்டுகளே. ௭௪

சூரத்தைமாத்தி யதாபுசெய்வாரெனச் சொல்லிவைத்த
சாரத்தைநீங்க ளுணர்ந்திலையோசொல்லுந் தையலரே
வேரத்துநாளைக் கபூரிற்புகுந்து விடுமுனமே
[illegible]வகத்தி விடுவீர்சனுவின் றொழிலினையே. ௭௫

சனுவிலனேக வும்மத்தோர்வெந்துமே சாம்பலதாய்
பனுவாகப்போன் ஹதீதனைக்கேட்டும் பயமில்லையோ
மனுக்கண்டெழுந்திடும் போலேயிருக்கின்ற வையகத்தைக்
கனமென்றுவெண்ணி சனுச்செய்யவெண்ணிடுங் காரிகையே. ௭௬

இன்னமனேகமு முண்டுசனுவி னிடஞ்சல்களும்
அன்னமுகம்மதர் தீனிற்பிறந்திடு மன்னையரே
வின்னம்வருமென்று சொன்னமொழியை வெறுத்துவிட்டால்
சுன்னமதுபோ லாகிடுவீர்சொன்னேன் றோகையரே. ௭௭

ஹலாலாங்கணவனை யன்பாயணைந்தி காலையிலே
ஜலுதியெழுந்து முழுகியேநீக்க டனியவனை

ஒலுவுடன்போற்றிற் றொழுவீர்களாகி லுங்களுக்கு
நபீயினுரைப்படி துள்ளிக்கொருநன்மை தான்பெறுவீர். ௭௮

இந்தவரிசை கிடைத்திடுமென்று மிறையவன்றான்
நந்தனபிபால் நவின்றானமக்குமே நாரியரே
சொந்தக்கணவனை வஞ்சித்துநீங்கள் சோரஞ்செதால்
வெந்துவெதும்பி விழுவீர்நரகினில் பீவிகளே. ௭௯

அரியாதநாளிற் செய்தபிழைக்கி அல்லாவிடத்திற்
பெரிதாயழுது தவ்பாவைச்செய்துமே பேணிக்கொண்டால்
மரியாதிகிட்டும் நபியார்மகளு மண்டாடிடுவார்
குரியாயுணர்ந்து கொள்ளும்படிசொன்னேன் கோதையரே. ௮௰

புத்தியுள்ளோர்களுக் கிதுபோதும்பூவதிற் பேணிக்கொள்ள
சத்தியமாகவே சொன்னேனென்னுடை தாயார்களே
* குத்திதனைவிட்டுப் போய்விடுமுன்னே குதாயிடத்திற்
பத்தியாய்வைத்து துவாச்செய்குவீர்பாவி பயல்தனக்கே. ௮௧

அன்னைமாரென்று கிருபையாயிந்த ஹதீதுகளை
பன்னவிதத்திலு மோதினேனுங்கட்குப் பார்தனிலே
என்னையும்நீங்க ளேஷணிக்காம லிறைதனக்காய்
தன்னையும்பேணி நடந்திடுவீர்சொன்னேன் தையலரே. ௮௨

பாறுங்களெந்தன் சொல்லதைநீங்கட் பகலிரவு
மூறுடன்பேருஞ் சதமில்லையென்று முங்களுக்கே
வீறுந்தகுதியு முடையவன்சொல்லை வெறுத்துவிட்டால்
யாருந்துணையன்றி போவீர்கபூரி லழுவதற்கே. ௮௩

பண்டுசபூறைச் சதமென்றுவெண்ணுங்கள் பார்தனிலே
விண்டிடுமண்ணின் வாழ்வுஞ்சதமல்லோ பீவிகளே
உண்டுபடுத்து முடையவன்சொல்லை யுதாசனித்தால்
கண்டுகொள்வீர்களே நாளைக்கபூரினில் கண்ணெதிரே. ௮௪

மவுத்தானவர்களை கழுகிககபனிட்டு வைக்குகிறீர்
கவுத்துகமாகிடு மிவ்வாழ்வதுவெனக் கண்டிலரோ
சவுத்துக்குரலு மொலிக்கிடும்நாளை சக்ருத்ததிலே
தவழ்த்திடிலீமான்[illegible]டுமாறுஞ்சொன்னேன் தையலரே. ௮௫

---

* குத்தியென்பது-பூலோகமென்றுணர்க.

அந்ததருணம் வருந்துவீர்நீங்க டறியாமல்தான்
சிந்தைமகிழ்ந்து திரியுகிறீர்பூவில் தினந்தினமும்
கந்தக்கமழும் நபிமகளாகிய கண்மணியும்
சந்தூக்கிலேறி நடந்ததறியீரோ தையலரே. ௮௬

பேயன்யான்சொன்ன சொல்லதைப்பேணுங்கள் பூவையரே
மாயன்வந்தாலுடற் போய்புகுமேனே மண்ணுக்குள்ளே
ஞாயமாநீங்கள் நடந்துமேவந்திடில் நரகைவிட்டுக்
காயம்சலாமத்தாய் சொர்க்கும்புகுதுங் ஹக்காணைசொன்னேன். ௮௭

எல்லாருமேகிப் படுக்குரார்மண்ணணி யிருளறைக்குள்
வல்லாண்மையேன்மிச்சம பேசுதீர்பூவதில் மங்கையரே
அல்லாவுரைத்த படிதொழுகாம லகலவிட்டால்
பொல்லாநரகத்திற் புகுதுவீர்சத்தியம் பொய்யில்லையே ௮௮

பொய்யென்றுயெண்ணி நிமாசதைவிட்டிடில் பூவையரே
வையகமென்றுஞ் சதமில்லைநாளை மவுத்துவரு
மெய்யாகயென்று மிருப்பவன்சொல்லை வெறுத்துவிட்டால்
கைசேதப்பட்டு அழுவீர்கபூரிற் கியாமமட்டும். ௮௯

கள்ளைக்குடித்திடுங் கணவனாநீங்கள் கடுஞ்சினமாய்
எள்ளலாய்பேசி விலக்காமல்பூவி லிணக்கமதாய்
புள்ளும்புறுவது போலேயிருந்துயிர் போய்விடிலோ
தள்ளிவிடுமென்று சொல்வானிறையவன் ஜகன்னத்திலே ௯௦

சூகையமுதுண்டோர் சொன்னத்தொழுகையை தூரவிட்டு
மாய்கையிற்சிக்கி யிருக்கிறீர்மன்னர் மயக்கத்தினால்
ஜாகையைவிட்டுப் போனால்கபூரில் சலித்திடுவீர்
போகயிலொன்றுங் கொடுபோவதில்லையே பூவையரே. ௯௧

௦ செல்லுக்குடையிடும் வள்ளல்நபியினின் றேவியர்கள்
எல்லையைவிட்டு மறைந்திடுஞ்செய்திக ளத்திலையோ
தொல்லையென்றெண்ணியே பூவதில்நீங்கள் தொழுகைவிட்டால்
வில்லினுயரப் பொழுததின்சூடால் வெந்திடுவீர். ௯௨

தலகாணிமந்திர மோதுகிறீருங்கள் தலைவருக்கு
விலகாமலென்று மிருப்பதுண்டோசொல்லும் பீவிகளே

---

௦ செல்லென்பது மேகமென்றுணர்க

உலையின்மெழுகது போலேவுருகி யொடுக்கத்திலே
அலைவீரழுது நரகிற்புகுந்து அனலதிலே. ௯௩

உலகைச்சதமென்று யெண்ணிடில்நாளை யொடுக்கத்திலே
அலகைகள்போலே கிடந்தழுகுவீ ரன்னையரோ
கல்பிலுணர்ந்து தொழுதிடில்னாளை கியாமத்திலே
சலாமத்துபெற்றுக் கொள்வீர்கள்யான் சொன்னேன்சத்தியமே. ௯௪

தலையைத்திறந்து திரிவீர்களாகில் ஷைத்தானுடைய
கலைவிலகப்பட்டுக் கொள்வீர்களென்று ஹதீதிருக்க
பலாய்வந்துநாளைப் பிடித்துயிர்மீண்டு பறிந்துவிட்டால்
சலாக்கினிற்குத்தி யெரிப்பார்மலக்கு ஜகன்னத்திலெ. ௯௫

தீனிற்பிறந்து சிரசைத்திறந்து தெருதனிலே
மானமுமைய்யும் வெழ்க்கமும்நீங்கள் மறந்துவிட்டு
ஹானங்கள்கெட்டுத் திரிகுதீர்நாளைக் கனலதிலே
ஈனமதாகவே வேந்திடுவீர்க ளியம்பினனே. ௯௬

தானவன்றூதர் மகவினடத்தையைத் தான்மறந்து
தீனானபெண்டீக ளாகப்பிறந்துமே தீனிழந்து
ஆனாலுமுங்கள் மனம்போலலைந்துயி ரகன்றுவிட்டுப்
போனால்கபூரில் தெரிந்திடுமென்மொழி பொய்நிஜமே. ௯௭

வசையாஞ்ஜனாவை செய்துவயத்தில் மூதலைவந்தால்
தசையைக்கறைத்திட மருந்துகள்தின்றிடுந் தையலரோ
பிசகானதின்மையை செய்குதீரும்மைப் பிடித்திழுத்து
விசையாய்நரகத்திற் கிடந்திடச்செய்குவர் விண்ணவரோ. ௯௮

ஹராமானவேலையை செய்வீர்களாகிற் கியாமத்திலே
திரமாபலிஹத்தி லாகிடுவீர்கள் திடனுடனே
பரமானவன்சொற் படிநடகாதுறும் பாவையரே
மரம்போல்கிடந்து யெரிந்திடுவீர்கள் மகுஷரிலே. ௯௯

அற்பசுகத்தைப் பெரிதென்றுவெண்ணியே ஆசைவைத்தால்
கற்புமழிந்து வடுவாகுமுங்கள் கணவருக்கு
தப்பாஞ்ஜனாவை செய்திடில்நாளை ஜகன்னத்திலே
வைப்பானிறையவன்பொய்யல்லயான்சொன்னேன் மங்கையரே. ௱

காசியில்லாவிடில் பீயையுண்டாமென நானிலத்திற்
பேசியிருக்கும் பழமொழிதன்னிற் பிசகுமுண்டோ

கூசாமற்பூவிற் ஜனுச்செய்துநாளைக் குழிபுகுந்தால்
ஆசாரமன்றி பலிஹறத்திற்சிக்கி யழுதிடுவீர். ௱௧

சின்னம்வருமென்று மெண்ணுமல்தீங்கள் திரிந்தலைந்து
வின்னமதான ஜனுச்செய்தாலாதி விடுவதில்லை
இன்னவிஜனங்க ளில்லாமற்பூவி லிடர்கள்செய்தால்
சுன்னம்போல்நீத்து விடுவார்மலக்குகள் தோகையரே. ௱௨

சத்தும்பயமன்றி செய்கிறீர்பூவில் ஜனுவதனை
வத்தாசமுத்திர நீரெல்லாஞ்சென்னியில் வார்த்திடினும்
சுத்தமாயுங்கள் முழுக்கிரங்காதிந்த தொல்லுலகிற்
செத்திடிற்நாளைப் படுவீர்கபுரதிற் செருப்படியே. ௱௩

மாதர்களுக் குபதேசித்த படலம்.

முற்றிற்று.

ஆகபடலம் ௩-க்கு கூடிய பாடல்-௱௭௯.

பிஸ்மில்லா ஹிற்றஹுமா னிற்றஹீம்.

இஃது,

நோன்பின் படலம்.

ஆறுநன்மாதம் நோம்பெனவேயிறை யருளினதை
ஓராகநன்னபித் திருந்தமண்டாடியே திண்ணமதாய்
நேராயோர்மாதம் நிச்சயமென்றே நிகழ்த்தினதால்
பாரினின்றீனவர் யாவர்க்குநோம்பு பருலதுவே. ௧

சீலமதாகிய நோம்பினுக்குள்ளத் திகழ்ப...
பால...கடக்கயிற் பாழ்நரகக்கனல் பட...
...லமதாக நமக்கிருபக்கங் கொழுகுமெ...
...ஆளநபி திரு வாயாலருளின தாயிதுவே. ௨

எல்லாசியலுக்கு மிமையவர்கூலி யிடுவரொனும்
நல்லாகநோம்பினின் கூலியைநாயக னல்கிடுவான்
அல்லல்மிகுந்திடு மனுஷர்தவனத்தை யகற்றிவிடும்
வல்லான்கிருபை வளர்ந்திடும்நோம்பினை வைத்திடுவீர். ௩

பொருளுக்குயீய்ந்திடுஞ் ஜக்காத்துமந்தப் பொருளதுவே
உருவாமுடலுக்கு ஜக்காத்துநோம்பென் றுணர்ந்துகொள்ளும்
வறழ்சக்கராத்தின் றவனத்தைநீக்கும் வளமிகுந்த
குருவாமுகம்மதர் சொற்போலேநோம்பைக் கொழுகிடுவீர். ௪

பேச்சுடன்மூச்சு பலகேழ்விபார்வைப் பெருநினைவின்
மாச்சரியமுறு மானகர்மத்தை மாற்றிவிட்டு
வாச்சிடுமிந்த வாகானநோம்பினை வைத்திடுமின்
மோக்ஷமுமாதியின் றீதாறும்நாளை முடிகிடுமே ௫

வேம்பைவிரும்பக் கரும்பாகுமென்னும் விதமெனவே
நோம்பைவிரும்பியே வைத்தோர்க்குநாளை நோயில்லையே
வீம்பாகநீங்கள் வயதுள்ளமட்டும் வெறுத்துவிட்டால்
பாம்புடன்றேளும் பரவுங்குழியினிற் பதைத்திடுவீர். ௬

பாவமழிந்திடும் நோம்பதினுள்ளப் பலனதினால்
பாவமகன்றிடச் செய்யுமேநோம்பின் பலன்மிகுதி
பாவங்கட்செய்யப் பலன்றருகாதுயிப் பாழுடலம்
பாவந்தனக்கொரு நன்மருந்தாகிடும் பார்தனிலே. ௭

அந்தமுருங்கிபு லாவுக்குமேன்மை யரஷதுவாம்
முந்திவரும்நபி மார்கட்குமேன்மை முகம்மதராம்
வந்திடுமாதத்தி றெம்லானதுமிக்க வரிசையதாம்
சொந்தமுமக்கென நோம்பைப்பிடித்திடுந் தோழர்களே. ௮

உத்தச்சியலதை யும்பருமிம்பரு முணர்ந்திடுவார்
வைத்திடும்நோம்பை யுணர்பவன்மிக்குயர் வல்லவனே
மெத்தப்புகழ்நபி யேவலோளு மெடுத்தவர்க்கு
சித்தமுந்தேறிடும் சீமாந்தனமும் சிறப்புறுமே. ௯

[illegible]நோம்[illegible]னை [illegible]கலினிற் பசியகல
சிருகடுகானதி னளவாக[illegible]த் தீதெனவே
மருமையினாளை மவுத்திற்கடினமாய் மாண்டிடுவார்
பெருமையாநோம்பை வைத்திடில்நாளைப் பெறும்பலனே. ௰

ெரிசைநோம்புள்ளவர் வாய்நாற்றமெல்லாம் வல்லோனிடத்திற்
பிரிசமதாகிய வாசனையாகவே பேணிடுவான்
பரிசனமேவிய சொர்க்கத்தின் வாழ்வின் பலன்கிடைக்கும்
அறஷினிழலுட னுதிதீகாறு மமைந்திடுமே. ௰௧

நொம்பலமென்ன பலசாக்குச்சொல்லியே நோம்பைவிட்டால்
அம்பலக்காரர்க ளானமலக்குக ளாகிறத்தில்
வம்புகளாகவும் வந்துபிடித்துமே வன்னியிட்டு
தும்பப்படுத்துவ ரச்செயதிசொல்லத் துலைந்திடுமோ, ௰௨

இஸ்டமதான றெம்லானின்மாத மினிதுறவே
துஸ்டந்தனமுள்ள ஷையித்தான்கடன்னைத் தூரிதமுடன்
கஸ்டமதாகவே காலில்விலங்கிடக் கட்டளையாம்
நஸ்டமுறுயலே நோம்பைப்பிடிக்க நயந்தருமே. ௰௩

எட்டுச்சுவனமு மலங்கிர்தம்செய்துமே யெழிலுடனே
பொட்டணிமாதர்கள் நோம்புரும்பேர்களைப் பூறிப்புடன்
கட்டாதமாலையை யிட்டுஅணைந்துக் களித்திடவே
இஸ்டத்துடனெட்டி நோக்கியேயிருப்பா ரினிதுறவே. ௰௪

வாயுடன்கையும் வாகானகாலும் வளங்களுறும்
மேமாயுள்ளமும் நேராம்விழியும் நினைவுகளு
மோயாமலுக்களினூடே நோம்பாக வருமெனவே
ஆயுமறையரு ளாகம்மதர்வயா லருளினரே. ௰௫

தஞ்சமதான றெமுலானினோம்பைச் சதமெனவே
அஞ்சிபயந்து பிடித்தோர்க்குஆதி யருள்பெருகும்
வஞ்சமதாகவே விட்டிடிநாளை மகுஷரிலே
மிஞ்சுந்தவனங்க ளாகவேநீங்கள் விழையுறவீர். ௰௬

அங்கமிலங்கிய வானவர்கூறுல் நபேகைஷயுடன்
எங்கஞ்சிறப்புறும் றெம்லானின்மாத மெப்போவருமென்
றங்கீகரித்தவ ராகவிருப்பதா லவனியிலே
துங்கமுருமந்த நோம்பைப்பிடித்திடுந் தூயவரே ௰௭

மறைமீதிலுறைத்தப் படியாகநீங்களிம் மானிலத்தில்
விலை[illegible]மைப் பிடித்திடநன்மை மிகுதியுண்டாம
குறைவாகநீங்கள் விட்டிடநாளைக் கொடுநரகில்
[illegible]றையாக்கிவெந்திடச் செய்வானிறையவன் றீனவரே. ௰௮

நேரந்தராவியா தொழுதுமுடித்துமே நேசமுடன்
சீரானதிக்கிர்கட் செய்துசஹறிலே தினமுழித்து
கூராயெளியவக் கேதும்ஸஹறாவத்துக் குடுத்துநல
வீரானநோம்பினை வைத்திடி நன்மை மிகுதியுண்டே. ௰௯

நோம்பதைநீங்கள் சோம்பலாய்விட்டால் நுகத்துங்களை
பாம்பதுதேளுங் குடியாயிருத்திடும் பாழ்நரகிற்
சாம்பலாய்ப்போகும் படியாகவெந்திட தாக்கல்செய்வான்
வீம்பாகப்பேசி பருலதைவிட்டால் வினைவருமே. ௨௰

பருலைந்தும்நீங்கள் விடவேண்டாமென்று படைத்தவன்றன்
குர்ஆனிற்சொன்ன தறிந்திலையோயென் கூட்டாளிகளே
அர்வாகுஆலத்தி லெழுதிகுடுத்தசொல் லல்லவென்னுங்
கெர்வமாய்பேசி நோம்பதைவிட்டிடுங் கேடர்களே. ௨௧

ஞாளைமலக்கமல் நாமாதைவயீவார் நாயனிடம்
வேளையிலென்ன விதஞ்சொல்வீர்நோம்பதை விட்டதர்க்கே
காளைகள்போலே திரிந்துவொடுக்கங் கியாமத்திலே
மூளையுருகிடும் போதுதெரியுங்காண் மூடர்களே. ௨௨

காபத்துல்லாவி லிருக்குமலக்கொன்று கல்லதுபோல்
ஆபத்தில்நீங்க ளகப்படுவீ ரைந்திலொன்றைவிட்டால்
பாபத்தைபோக்கும் படியாகநோம்பை பழகிவிறைக்
கோபத்தைநீங்கிடச் செய்யுமென்றேநபிக் கூறினரே. ௨௩

மக்கத்துக்கேகியே பாருங்கள்கல்லின் மகிமைதனை
பக்கத்திலுள்ளவர் சொல்வாரறியும் படியுமக்கே
துக்கத்தில்நீங்க ளகப்படுமுன்னஞ் சுருக்கதுவாய்
சொர்க்கத்திற்சேர்க்கும் படியாகநோம்பைத் துடர்ந்துகொள்வீர்-௨௪

சற்றும்பயங்களு மில்லையோ யெந்தன்சகோதரரே
அற்றிடுமூச்சை பெரிதாகவெண்ணி யலையுகிறீர்
செத்திடுவோரை யெடுத்துமெயேகியே ஜெகந்தனிலே
வைத்திடுஞ்செய்கையை யேன்மறந்தீர்சொல்லு மானிடரே, ௨௫

[illegible] பிடிக்க அவஸ்தையென்ன
பாருந்தவுறேத்திற் முன்னுலுரைத்த பருலதுவை
ஊருமெறும்பு மத்திபடைத்த வுருவமில்லான்
கூறும்நபிக்கி மிஃறாஜுநாளிற் குறைத்தனன்காண். ௨[illegible]

தப்பாமற்பிடிக்க மூசாநபிக்கிறை சாற்றினனும்
ஐப்யாமிரங்கி நம்மள்நபிக்கி சகாயஞ்செய்தான்
துப்பரவான நோம்பைவிடாமற் றுடர்ந்துகொள்வீர்
இப்பாரைவிட்டு போனைக்காற் ஜென்னத்திலேகிடுவீர். ௨௭

மூசாநபிதான் வழியிலிருந்து முஹம்மதர்க்கு
லேசாககேட்டுக் கொள்ளுமென்றே நபிவகினராம்
மாசத்தசோதி யிடந்தனிலேகி மன்றாட்டத்துக்காய்
கூசாமலெட்டொன்று தரம்போனதாலே குறைத்தனங்காண். ௨௮

அந்தறம்லானி நாளிலிரவொன்று ஆதிசொன்னான்
சொந்தமாய்நீங்கள் தொழுதிடலாயிரந் திங்களென்றே
இந்தைப்பிரித்த நபிக்குரைத்தானின்றும் ஸல்லுவதிலே
வந்திடுங்குறத்தின் பொருளதைப்பாரு மனமகிழ்ந்தே. ௨௯

அந்தறம்லான் மாதத்தி னென்பதா நாளதிலே
சிந்தைமகிழ்ந்து நபியுமறுசதிற் சென்றனரும்
பிந்தாமல்நீங்கள் றமுலான்பெருமையைபேணிக்கொண்டால்
சொந்தமதாகிடும் பிருதவுசெனச்சொலுஞ் சொர்க்கமுமே. ௩௰

வருசைகள்பெற்ற றமுலான்வருமுன் மனையிற்சென்று
துருசமாய்போகி யருலானநோம்பைத் றுடருமென்றே
முருஸற்கரசற் சொன்னஹதீதை முழுதுநம்பி
பிருசமாய்பூவி லெடுத்தோர்க்குசொர்க்கம் பிசகில்லையே. ௩௧

சொல்லமுடியுமோ றமுலான்வரிசைகள் தோழர்களே
அல்லற்படாமற் றேடும்பறுலை யறிந்துகொண்டே
இல்லஞ்சதமில்லை யென்றிருந்தாலு மிறந்திடுவீர்
கல்பிலிருத்தி நோம்புந்தொழுகையுங் கைகொள்ளுவீர். ௩௨

கலாவானநோம்புக்கு வாயிரங்காசு கனகமது
பிலமாயழித்து மொன்றுக்குறாறு பிடித்திடினும்
பலமொன்றுமில்லை யென்றுமுன்னபியும் பகர்ந்தனர்காண்
தலம்விட்டுபோமுன் நோம்பதைப்பேணுஞ் சகோதரரே ௩௩

அம்பரம்பூமி வெளியெங்குமாள்வோ னவன்மறையில்
வம்பாகபூவில் நோம்பைவிடாமல் வையுமென்றே
தம்பியில்லாம லிருப்போன்மொழியதை தள்ளிவிட்டால்
கும்பமுடைந்து போனற்றெரியுங் கூட்டாளிகளே. ௩௪

பிருசமாய்முப்பதுஞ் சஃபானிலாறும் பிடித்துவந்தால்
வருஷமுழுது நோம்புகள்வைத்த வரங்கிடைக்கும்
முருசற்கரசர் முகம்மதுசொல்லுக்கு மோசஞ்செய்தால்
பருசைகேடான நரகதைநாளைக்கு பார்த்திடுவீர் ௩௫

தடிசதமில்லை யென்றிருந்தாலுந் தகர்ந்துவிடும்
மடிவுவருமென்று சொன்னேனுலகினில் மானிடரே
பிடிமண்ணையிட்டு நாளைகபூறிற் புதைக்குமுன்னே
வடிவிலான்றூதருரைத்தமொழியை மனதில்வைப்பீர். ௩௬

சாகையில்லாதவர் சொன்னபறுலை தவிர்ந்துவிட்டு
மாகையிற்சிக்கி பறுலதைவிட்டிடு மானிடரே
தோகைஹவ்வாவை மறட்டியுலகிற் றரக்கிவிட்ட
பாகனிபுலீசு கூட்டம்புகாமற் பயந்துகொள்வீர். ௩௭

கையைப்பிடித்து கொடுபோகுமென்று ஹதீதிற்சொன்னார்
வையமதிலே யறுபத்திமூன்று வயதிருந்தோர்
மெய்யாகச்சொன்ன பறுலதைநீங்கள் விட்டுவிட்டால்
அய்யமதான நரகிற்புகுந்து அழுதிடுவீர். ௩௮

தூதருரைத்த மொழிபழுதாகுமோ தோழர்களே
மாதர்க்கரசி பாத்திமாதந்தையின் வாக்கியமே.
ஆதரவான றமுலானிநோம்பை யதபுடனே
தீதறப்பூவி லெடுத்தோர்க்குகிட்டிடுஞ் ஜன்னத்துமே. ௩௯

பெரியோனிடத்தில் றம்லான்மன்றாடும் பெருமைகளை
அறியும்படிக்கிச் சொன்னாரறுசதிற் சென்றவர்தான்
பிரியமதாக தருவீஹுதன்னைப் போய்த்தொழவும்
ஷரியத்தைப்பூவி லெடுத்தநபியுமே சாற்றினராம் ௪௰

முப்பதுநாளு முடியுமட்டாக முறைப்படிக்கி
தப்பாமல்நோம்பு பிடித்தோர்க்குநாளை சந்தோஷமுண்டாம்
இப்பாரதனி லெடுக்காமற்பூவி லிறந்துவிட்டால்
ஜப்பாறுடைய கோபத்திலாவீர் சகோதரரே. ௪௧

ஆலமுழுது நிறைந்தவன்றூதர் ஹதீதிலே
பாலங்கடத்தி பதியதிற்சேர்க்கும் பறுலெனவே
கோலமில்லாதான் கோபத்திலாகுமுன் கூட்டாளிகளே
காலமுடிந்து வுயிர்போகுமுன்னே கருதிக்கொள்வீர். ௪௨

மறையிலுரைத்த வாக்கியம்பாரு மனதில்வைத்தே
தறையிலிருந்து பறுலதைவிட்ட சகோதரரே
யிறைதான்மொழிந்த நோம்பதைவிட்டா லெடஞ்சலுரும்
கரைந்துகரைந்துக் கபுறிற்கிடந்து கதறிடுவீர். ௪௩

அஞ்சிலொன்றான பறுலதைவிட்டா லவஸ்தையுண்டாம்
கொஞ்சமுழுங்கள் கல்பிற்பயமில்லை குதாதனக்கே
துஞ்சிடுஞ்செய்தி மறந்திடில்நாளைத் துய்யவன்றான்
நஞ்சுறும்பாந்த ளிருக்குந்தலத்தில் நடத்திவைப்பான். ௪௪

நமுலான்பகலி லொஜீவனஞ்செய்தாற் நஜீசெனவே
சமுசயமன்றி நபிசொல்லைப்பாருஞ் சகோதரரே
நிமுசமலக்கு வந்துயிர்வாங்கி நிலம்புகுந்தால்
நமுதன்றிநாளைப் போவீர்நரகத்தி நாமதிலே. ௪௫

அந்தமுஹம்மது சொன்னபறுலுக் கழிவுசெய்தால்
எந்தவிதந்தான் ஷபாஅத்துச்செய்வா ரிறுதியிலே
சொந்தமதாக தொழுகையுநோம்புந் தொடர்ந்துகொள்வீர்
கந்தங்கமழு நபியும்மத்தாகிய காளைகளே. ௪௬

நம்மையுலகிற் றீனிலழைத்திடு நாயகர்தான்
செம்மையதாக சுன்னத்துநோம்புகள் சேர்த்துவைத்தார்
இம்மையில்நீங்கள் நோம்புத்தொழுகை யெடுத்துவந்தால்
எம்மைப்படைத்தோ னிறுதியநாளி லீடேத்தஞ்செய்யான். ௪௭

வாடியேபோவோ மெனச்சொல்லிநீங்கள் மண்ணதிலே
பேடிகள்போல வானீர்பறுலைப் பேணுமலேதான்
சாடியுடைந்து போமென்றுசற்றும் பயமில்லையே
ஓடியொளிக்க விடமுண்டோநாளை யொடுக்கத்திலே. ௪௮

அறசினிலேகும் வழியிலொருவ ரழகுடனே
பெரிதாயிருக்க கண்டுஅவருடன் பேசினராம்
முருசல்நபிக்கி சலாஞ்சொல்லிமுத்தி மொழிந்தனர்காண்
வரிசையதாக முன்னிருபெட்டகம் வைக்கக்கண்டார். ௪௯

பெட்டிக்குளென்ன விருக்குதென்றேநபி பேசியபின்
அட்டியில்லாம லுமதுமத்தானவ ரவனியிலே
கெட்டியாய்நோம்பு பிடித்தவர்பேரின் கிதாபிதுக்குள்
மட்டிலடக்கா ளிடத்திஸ்மஷரில் வைப்பேனென்றார். ௫௰

இந்தஹதீது விருக்குதாறத்ன விலாசத்திலே
சொந்தமாய்வாங்கிப் பார்த்திடும்யான்சொன்னேன் தோழர்களே
முந்தமுஹம்மது சொன்னமொழியை முழுதும்விட்டால்
சிந்திவிழுந்து தவிப்பீர்நரகத் தீயதிலே ௫௧

நோன்பின் படலம்-முற்றிற்று.

—*—

ஆகபடலம் ௪-க்கு-கூடிய பாடல்-௨௨௯.

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இஃது,

ஜக்காத்தின் படலம்.

தேட்டைச்சதமென்று யெண்ணியேமாலை சிலவுசெய்து
வீட்டைப்பெரிதாகக் கட்டியேவைத்து வீரியத்தால்
நாட்டையோடுக்கி யிருந்திடும்போது நமன்பிடித்து
கோட்டைப்பிரந்திடு மைதரும்போனார் குழியதிலே. ௧

துரும்பைத் தூணுக்கிடு மிறைசொற்மறந்திடுந் தோசிகளே
கரும்புக்கடைவைத்த உசைனுமேகச்ச வடங்கள்செய்து
அரும்பாகத்தேடியே வைத்தமுதலை யவனிவிட்டு
வெருங்கரமாகவே மண்ணிற்புகுந்தது மெய்யலவோ. ௨

அய்க்கடைவைத்து வியாபாரஞ்செய்யபு துற்றகுமான்
மயக்கமதாகச் சிலனாள்கிடந்துமே மாலையிட்டு
துயறதிற்சிக்கிப் போம்போது யாருந் துணையன்றியே
வியாகுலத்தோடு மவுத்தானசெய்தி மெய்யல்லவோ. ௩

தன்றியந்தண்டி லொருமண்டிகட்டித் தகுதியதாய்
யென்றுமதிலே யிருக்கலாமென்ன யின்நயத்துன்னி
பன்றுளோர்தேடு முதலையிழந்துமே பாரைவிட்டு
ஒன்றுமில்லாமலே யிருத்தின்மண்ணி லொடுங்கினர்காண். ௪

இப்படியெத்தனை கோடிமனுக்க ளிறந்துவிட்டார்
அப்படிதானே நமக்குவருமென் றறிந்திலையோ

கற்படிபோல விருப்போமென்றெண்ணி ஹக்காவுடைய
சொற்படிகட்டிக் கிரிந்காற்கிட்டாது சொர்க்கமென்றே ௫

ஜானுமுசம்மது கட்டினனுன்வீடொன்று சத்திரம்போல்
வானும்புவியு மழியுமட்டாயதில் வாழவென்றே
யீனமதாக மவுத்தைமறந்து யின்றசொற்றட்டு
மானமில்லாதவர்க் கேதுனாத்தாலென்ன வையகத்தே. ௬

தூங்கிவிழித்து தொழுகையைவிட்டுத் துனி யாவதனை
வாங்கியெடுத்து வைத்துமேமண்ணில் வாழ்வதன்றே
ஓங்கியபேர்க ளிதிக்கக்கடைசியிற் ஒண்டியதாய்
சாங்கிருவானுமே போனான்கபூரிற் சலிப்புடனே. ௭

சேர்க்குமுதலை சிலவுகள்செய்துமே செம்மையதா
யார்க்குமுதவும் படியாய்மஜீதொன் றலங்கரித்து
தீர்க்கமதாக வயதோடிருந்துமே செல்வம்பெற்று
மார்க்குஷாவென்னு மபியனும்போனான் மண்ணதிலே. ௮

வாடகைய[illegible]ன்றும் பணம்வாங்கிச்சேர்த்து பகில்த்தனமாய்
சாடைகள்பேசி தூரத்துரீரொத்தீம் சனங்களைத்தான்
கோடாமலேரித் திரிகிநீர்னுள்ளக் குழிபுகுந்தால்
பாடாகவந்து முடிந்திடுமென்று யான்பாடினனே. ௯

அஞ்சாறுமண்டி கடைகளிருக்குது ஆஸ்தியென்ன
கொஞ்சமுமங்கைகள் பயமத்துப்போனீர் குசாதனக்கே
வஞ்சமதாக மலக்குயிர்வாங்கி மரித்துவிட்டால்
நஞ்சுரும்பாம்பினை விட்டுமேநாய னதாபுசெய்வான். ௰

வில்லினுயரம் ரவிவருமென்னவே வேதத்திலே
சொல்வந்திருப்பதை யேன்மறந்திரெங்கன் றோழர்களே
அல்லும்பகலுந் திரிகிரீசிச்சை யனுசரித்து
கொல்லுமலக்கு வருவாரென்றெண்ணமுங் குறிப்பில்லையே, ௰௧

கற்கண்டுபோலவே வாய்கொண்டுபேசி யெககாலமுமே
யிற்கண்டுதேடியே பொய்யும்படினா யியம்பிடுவீர்
சொற்கொண்டுலஞ்சங்கள் வாங்கியேதின்னிடுந் தோழர்களே
மற்கனடுவெந்திடு மலக்கல்மவுத்துக்கு வங்கையெதுவோ. ௰௨

அல்லாவுக்காக சிலவுசெய்யாம லவனியிலே
பொல்லான்வலையிற் சிக்கியேநீங்கள் புலம்புகிறீர்
சொல்லாமலோடிடு மானும்பரிந்து துரிதமதாய்
வல்லவன்றாதர் ஹாதிதினைப்பாருமே மண்ணதிலே. ௰௩

பசியாயிருக்குமெளியோர் முகத்தை பாராமலேதான்
குசியாகத்தின்றுக் குலாவித்திரியுங் குரும்பர்களே
நஜிசாயிருக்கும் நரகம்புகாமல் நபிசொற்படி
மஜ்லிஸிற்சென்று யெளியோருக்கன்னம் வழங்கிடுவீர். ௰௪

யெள்ளிலுமிச்ச மிளப்பமதாகு மிரக்குஞ்செய்கை
உள்ளமகிழ்ந்து குடுக்காமலேழையை யோட்டுகிறீர்
முள்ளுஞ்செடியுந் துணையுமில்லாத முழுக்கபூறின்
பள்ளத்திலுங்களைப் போடுவாரென்னும் பயமில்லையே. ௰௫

தனமுள்ளபேர்கட்கு தாவத்துசொல்லியே தானழைத்து
மனமகிழ்வோடு குடுப்பீருமக்குண வருமெனவே
இனஞ்சனமொன்று மில்லானைச்சேர்த்திடு மேழைகளை
கனமாவசைகளைச் சொல்வீர்கள்வாசற் கதவடைத்தே. ௰௬

இரந்துண்பவர்க்கு மீயாமலுண்ணரி விடுகுழியிற்
மரப்பொன்றுமில்லான் விடுவானேசொல்லிடும் மானிடரே
சிரப்பாயழைத்து குடாதிடில்லுனை சிறுமையுண்டாம்
விரப்பாய்நுழைந்து பிரியாணியுண்டிடும் வீரர்களே. ௰௭

வெறுமையுடையவர் தங்களைதேடி விருந்தருக்கு
அருமையாய்க்கூட்டிக் கொடுபோய்வைத் தங்கமுதளித்தால்
மறுமைநாள்மட்டுங் கபுரிற்புகுந்து மகிழ்ச்சியுடன்
உறுமையாய்நுனை விட்டிடுவானென்று முள்ளவனே. ௰௮

அல்லாவைச்சேர்ந்த மிசுக்கீனைத்தேடி யமுதளித்தால்
பொல்லாபலாய்களு மென்றுமணுகாது பூவதிலே
வல்லாண்மைபேசியே தானுகித்தின்னிடும் வம்பர்களே
யில்லல்லா வென்னுமிறையோன்றனக்க துயேர்த்திடுமோ. ௰௯

மண்டிகள்வைத்துமே வர்த்தகஞ்செய்கின்ற மானிடரே
வண்டியிலேறியே வோடுநீர்தாவத்து வந்தவுடன்
ஒண்டியாயென்று விருப்போனைச்சேர்த்தோக் குதவிடுவீர்
பெண்டிரும்பிள்ளையு மா[illegible]ராதுகாண் பேதையரே ௨௰

சாளயமான மனிதர்க்கீயாமலே தரணியிலே
காளைகள்போலவே தின்னுநீர்காயம களிப்புறவே
நாளைமலக்கு வருவதைதங்கள் நம்பாதிருந்தால்
மூளையுருகி யழுதிடுனில் நோசமுண்டாம். ௨௧

ஏருங்குதிரையுங் குடியாயிருக்கு மிடமதர்க்கும்
போரதுசெய்யு மாயுதமோடு புடவைகட்கும்
பாரிற்றொழிலே நடத்துந்தராசு படிகளுக்கும்
ஊரிற்ஜக்காத்து யில்லையென்றாதி யுரைத்துவிட்டான் ௨௨

இதுவன்றிவேறோ யிருக்குமுதலொரு தோட்டமும்
பதுக்காமற்பூவில் ஜக்காத்துமீயப் பரனுரைத்தான்
ஒதுக்கமாய்வைத்து யீயாதிருந்திடி லொடுக்கத்திலே
கொதிக்குநரகிற் புகுவீரல்லாதுக் குணமில்லையே. ௨௩

நூற்றுக்கிரண்டரை ரூபாய்க்குடுத்திட னேவென்னகாண்
நேற்றுமவுத்தாகிப் போனவர்கையி லெதுகுடுத்தீர்
பார்த்தும்பயமது வில்லாதிருந்திடும் பாவிகளே
கூற்றுவன்வந்தால் விடுவானோவுங்களை கொஞ்சத்திலே. ௨௪

தனமதை வைத்துமே ஜக்காத்தியாமற் தரணியிலே
மனம்போல்திரிந்துபின் மாளவிருக்கின்ற மானிடரோ
வினைவந்துயமன் பிடித்துயிர்வாங்கிடும் வேளையிலே
இனம்வந்துனை யுதகாதுவுங்க ளிடஞ்சலுக்கே ௨௫

பக்கீர்கள்சொற்றைக் குடுக்காமற்நீங்கட் பதுக்கிவைத்து
சொக்கியுயிர்விட்டுப் போனால்தெரிந்திடுந் தோழர்களே
மக்கிப்போனாலு மெழுப்பிடுவான்மன்னன் மகுஷரிலே
அக்கினிதன்னிற் புகுதாமல்ஜக்காத் தளித்திடுவீர். ௨௬

என்பதிடத்தி னிறையோன்மொழிந்ததை யேன்மறந்தீர்
பன்பதுபேசி ஜக்காத்துக்குடாத பகிலர்களே
அன்பர்கமழ்நபி சொன்னஹதீதை யகற்றிவிட்டால்
துன்பத்திற்றுளை யகப்படுவீர்சொன்னேன் றோழர்களே. ௨௭

கரத்தைப்பொருத்தியே வைத்திடுமெங்கள் ஹபீபிரசூல்
வரத்திலுயர்ந்த முகம்மதர்சொல்லை மறந்துவிட்டால்
பரத்தையிழந்து விடவோஜக்காத்தை பதுக்கிவைத்தீர்
துரத்தியடித்து விடவல்லோயிந்தத் தொழிலெடுத்தீர். ௨௮

மறைமொழிதட்டி சக்காத்துகுடாமல் மண்ணதிலே
தரையைச்சதமென்ன வெண்ணியிருக்குஞ் சகோதரோ
முறையல்லநீங்களுஞ் செய்யுஞ்சியற்கள் முழுதிலுமே
இறையவன்றூதர் ஷபாயத்துனைக்கி யெய்திடுமோ. ௨௯

எளியோரைக்கண்டா லிரக்கங்களன்றி யிருக்கிறீர்
அழியாமலென்று மிருப்பீரோசொல்லு மவனியிலே
குழியிற்புகுந்தா லறிவீர்ஜக்காத்தைக் குடாதவகை
பழிவந்துசூழுமே ஞாலத்தணையிற் படுத்தவுடன். ௩௰

நாயனுரைத்த மொழிமாரிப்பூவில் நடக்கிறீர
மாயன்பிடித்திடு முன்னேமறையினின் வழியுணர்ந்தே
ஞாயமாய்ப்பார்த்து குடுக்காதபேர்கள் நரகதிலே
ஓயாமலென்று மிருப்பாரெனநபி யோதினர்காண். ௩௧

ஆனாலும்நீங்க ளச்சங்களன்றி யவனியிலே
ஏனோபெருமைகட் சொல்லித்திரியு மிடும்பர்களே
வானோர்கள்வந்துயிர் வாங்கிடும்போது மடிவுவரும்
ஊனமகற்றிடுந் ஜக்காத்தையீக யிணங்கிடுவீர், ௩௨

சடியையச்சதமென வெண்ணியேநீங்கட் ஜக்காத்ததனை
படியிற்குடாம லிருந்துமேனாளைப் பரனிடத்திற்
மடிவதிற்சிக்கியே மண்ணினைநீங்கி வருத்தமுடன்
குடியாநரகி லிருப்பாரெனநபிக் கூறினரே. ௩௩

ஜக்காத்தைநீங்கட் குடுக்காமற்சேர்த்து தனமதனை
ரொக்கமாய்வைத்து யேகிடினாளை நோவினையாய்
துக்கங்கட்பட்டு வழுதிடுவீர்களே தோசக்கிலே
வெக்கங்கள்கெட்ட குபிர்போலேதீயினிற் வெந்திடுவீர். ௩௪

வரம்பெற்றுவந்த முகம்மதர்சொல்லை மறந்துவிட்டுத்
திரமாகப்பேசி ஜக்காத்தையீந்திடா தினவரோ
மரம்போலேசாய்ந்து வுயிரேகினாளை மண்ணறையில்
பிரம்பாலடிகள் படுவாரெனநபி பேசினரே. ௩௫

இருநான்குபேர்கட் கீயுஞ்ஜக்காத்தை யெடுத்துக்கொண்டு
அருநான்கெழுத்தின் கலிமாவையோதியு மாவதென்ன
சிரநான்குமுன்று வுள்ளநரகினிற் சிக்கினன்றாய்
நிரமாறிநீங்க டெரிவீரென்றேநபி நிகழ்த்தினரே. ௩௬

பயமற்றுநீங்கட் ஜக்காத்தைகுடாமற் பதுக்கிவைத்தால்
மயமற்றதீயி னெறிவீர்கட்சொல்லினேன் மானிடரே
கயமதிலேறிப் பவனியுலாவுங் ஹபீபுனாயை
நயமென்னவெண்ணிடா பாவிகளினாளை நரகமதே. ௩௭

எட்டுபேர்சொற்றை குடுக்காமல்நீங்க ளெடுத்துகொண்டால்
விட்டுப்போமென்று யெண்ணியிருக்கு மிலேச்சர்களே
பட்டும்படாமலே பேசுகிறீருங்கள் பணப்பவுசால்
சுட்டுக்கொளித்திடும் ஞாளகபூரினில் சொத்துவந்தே. ௬அ

காதகுடுத்து கேழ்க்கிறீர்ஙித்தங் ஹதீதுகளை
மாதுடன்மக்கட்கு தனந்தேடிவைக்கின்ற மானிடரே
ஏதுக்கோநீங்கட் ஜக்காத்துமுதலை யெடுத்துகொண்டு
சூதுக்கும்வேசைக்குங் கள்ளுக்குமாலை துலைத்திடுவீர். ௬௯

தனந்தான்குறைந்து விடுமென்றுவெண்ணியே தாரணியில்
மனந்தான்வெருத்து ஜக்காத்துக்குடுத்திடா மானிடரே
கனமானவன்ற னேவலைநீத்தால் கடைசியிலே
சினங்கொண்டெறிவார் மலக்குகள்ளுளைத் தீயதிலே. ௭0

காப்பாத்திக்கொள்ளு முதலைஜக்காத்து கடைசிமட்டும்
ஞாப்பதிலொன்று குறையாதெடுத்து றெம்லானதிலே
கேழ்ப்பவரெட்டுப் பேர்கட்குநீங்கட் குடாதிருந்தால்
மூப்பாகவந்தோன் மொழிந்தார்கபூரில் மழிப்பரென்றே. ௭௧

ஜக்காத்தீயாவிடில் முதலுங்குறையுஞ் சடுதியிலே
அக்காளுந்தங்கை தகப்பன்சகோதர னவர்க்களித்தால்
ஹக்காகநீங்கட் குடுத்தமுதலை கணக்கிலே
வைக்கார்கிருமின் ஹாத்திபெனுஞ்சொல் மலக்குகளே. ௭௨

ஐம்பத்திரெண்டறை ரூபாவுடையோ ரவனியிலே
வம்புத்தனமா ஜக்காத்தைவாங்கி வயர்கிறாய
இம்புற்றுத்தின்று விட்டால்ஹறுமென வெங்கள்நபி
நம்பித்திருவிள மானஹதிதனை ஞன்சொன்னனே. ௭௩

நாலுபத்துக்கொன்று யீயாமல்ஞளை நவின்றுசெத்தால்
கால்பத்தும்செம்புத் தறையில்நடக்கையிற் கண்டுகொள்வீர்
மால்தந்தோன்சொல்லை மறந்திடிஞளை மருஷரிலே
மேல்பத்திதீயிற் வெந்திடுவீர்கள் மிலேச்சர்களே. ௭௪

மறைமொழிதட்டி ஜக்காத்துகுடாமற் மரித்துவிட்டால்
இறையிடம்போஞ றெலன்னஜபாபு யியம்பிடுவீர்

தறையிற்புதைத்திடப் போம்போதுவுங்கள் தனவருமோ
கறையுங்கபூரி லரிவீர்தனந்தேடுங் காரியமே. ௬௫

குர்ஆன்மொழியிற் குறையுண்டோசொல்லுங் குருடர்களே
மருவானைபோலே யெண்ணங்கட்வைத்தே மயங்குகிறீர்
வருமானந்தேடி மனைவிக்கிவைத்து மடிந்ததர்ப்பின்
வெருங்கரமாகவே மண்ணிற்புகுந்து வெருண்டிடுவீர். ௬௬

தண்டனைக்குள்ள வகப்பட்டாலுன்னோ சலித்தழுவீர்
சண்டித்தனமாய் ஜக்காத்துக்கூடாத சண்டாளர்களே
ஒண்டியாயுன்னோ கபூறிற்புகுந்து வொடுங்கிடுவீர்
மண்டிகடைவைத்து வர்த்தகஞ்செய்கின்ற மானிடரே. ௬௭

ஹராமானகச்ச வடஞ்செய்பப்பூவில் கருதியெண்ணி
திரமாகஷாப்பும் வீடுகட்கட்டிடுந் தீனவரே
இரவாமலென்று மிருக்கவோயிந்த விதஞ்செய்கிறீர்
பிரவாதிருக்கு மிறைமொழிகம்பிடா பிரபுக்களே. ௬௮

கல்பதிற்சத்தும் பயமன்றி பூவில் சஞ்சரித்திருந்தின்றீர்
வில்லினுயரப் பொழுதகின்[illegible] [illegible]ம்பிமனு
குல்லும்நபுசென்று சொல்லியழுவார் கு[illegible]த்திற்
கல்லுமுருகிக் கரைந்திடுமென்கவி க[illegible]க்கே. ௬௯

ஜக்காத்தின் படலம்

முற்றிற்று.

ஆகபடலம் ௫-க்கு கூடிய பாடல்-உஎ௬.

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இஃது,

ஹஜ்ஜினுடைய படலம்.

முதலைக்குடுத்த யிறைசொல்லைதட்டி முறண்டதுவாய்
மதளையும்பெண்டு மால்விட்டுப்போக மயங்குகிறீர்
பதவிபெறும்படி ஹஜ்ஜதுசெய்தாற் பலன்பெறுவீர்
சிதல்தின்றுபோய்விடுந் தேகம்சதமில்லை தீனவரே. ௧

பணஞ்சிலவாமென்று ஹஜ்ஜினுக்கேகப் [illegible]யப்படுநீர்
சிணப்பொழுதேவுயிர் போவதைநீங்கள் தெரிந்திலையோ
கணமெனும்பூதம் பிடித்தவர்போலே கியாமத்திலே
குணங்கெட்டுமங்கே திரிவாரெனநபி கூறினரே. ௨

புதையலைக்காக்கும் பூதங்கட்போல பொருளைவைத்து
சதைதோலெலும்பின் வி[illegible]கைநீ[illegible]கள் [illegible]தமென்னுநீர்
கதையென்று[illegible]சொல்[illegible]யென்[illegible]மலேகியே ஹச்சுசெய்வீர்
மதையானைபோல வீரு[illegible]லுமண்ணாற் மறைந்திடுவீர். ௩

அஞ்சாவதான ஹஜ்ஜுசெய்யாம லவனியிலே
வஞ்சகமாக தனஞ்சேர்க்குவைக்கும் பகீலர்களே
கொஞ்சமுமுங்கள் மனதிற்பயமில்லை குதாதனக்கே
தஞ்சாவூராந்தன் சமுகத்திற்போய்விடிற் றுணுணர்வீர். ௪

ஹஜ்ஜுக்குயேகி கடங்கழியாமலே காசைவைத்து
நிச்சயமாக விருப்போமென்றெண்ணிடும் நேசர்களே
குச்சிலிருக்குஞ் சரமோடிபோனாற் குழியினுள்ளே
அச்சிட்டகாசொன்றும் வாராதென்றெண்ணி யறிந்துகொள்வீர். ௫

அஞ்சாறுநூறு சி[illegible]ப்போமென் றவனியிலே
தஞ்சாவூராளு மகாராஜன்சொல்[illegible]ட்டீர்
வஞ்சகங்கல்பிற் வைத்துமேஹஜ்ஜதை மண்ணில்விட்[illegible]ல்,
துஞ்சிடில்நாளை கபூறிற்றெரியுஞ் சுகதுக்கமே. ௬

ஆதமுங்ஹல்வா கூடுமறபா மலையதுதான்
மாதமாம்ஹஜ்ஜீ ஒன்பதிற்கூடும் வரிசையதை

சேதம்வருமுன் மாலுள்ளோரேகித் தெரிசித்திட
காதங்கமழும் நபிக்கிதவீலதிற் காட்டினனும். எ

வயதிலொருஹஜ்ஜீ செய்யும்படிக்கி வல்லவன்றன்
தயவாகச்சொன்ன மொழியதைநீங்கள் தவிழ்ந்துகொன்றால்
குயக்கலம்போல வுடைந்துமேநாளை குழிபுகுந்து
மயக்கமாயோடித் திரிவீரொடுக்க மஃஷரிலே. அ

கவனங்களன்றி யிருக்கிறீர்காசைக் கனமென்னவே
அவனிட்டகட்டளைப் படிநடவாமலசாத்தியமாய்
புவனஞ்சதமென்று ஹஜ்ஜுக்குநீங்கள் போகாதிருந்தால்
தவனம்பெரிதாய் கிடந்திடுவீர்கள் ஜஹன்னத்திலே. கூ

அல்லாகுடுத்த முதலென்றெண்ணமலே யாசைவைத்தே
இல்லானியற்றுங் கஃபத்துல்லாவுக் கேகாதிருந்துப்
பொல்லாதவன்றன் சொற்போற்நடந்துமே பூவைவிட்டால்
வல்லோன்முனிவும் வந்திடுமாலு மழியுஞ்சொன்னேன். ௰

நபிதானுரைத்த ஒசிய்யத்தைப்பார்த்து நடந்திடுவீர்
ஹபீபிறசூலின் கலிமாமொழி[illegible] கா[illegible]களே
இபுலீசின்சொல்லை யெடுக்கா[illegible] ஹஜ்ஜுக் [illegible]டிலோ
சபீயுல்மு[illegible]த்னிபீன் ஷபாஅத்தில்நாளைக்கிச் சார்ந்திடுவீர், ௰க

கன்னிபுருடர்களெல்லோர்க்குஞ்ஹஜ்ஜுக் கடனெனவே
சென்னிதனிலுடு வைத்தோர்க்குஆதி தெரிவித்தனும்
வுன்னியிலேறி யோடுங்கள்மண்ணி லொடுங்குமுன்னே
வன்னியில்நாளை யெரியாமற்மக்க நகர்தனக்கே. ௰உ

மாலுள்ளபோர்கள் ஹஜ்ஜுசெய்யாமற் மனமுரண்டாய்
ஞாலஞ்சதமென்று வெண்ணிடிநாளைக்கி நஷ்டமுண்டாம்
கோலங்கள்யாவும் படைத்தோன்மொழியை குவலில்விட்டுக்
காலனு[illegible]டி[illegible]லறிவீர்ஹக் கா[illegible]சொ[illegible]ன். ௰௩

எத்தனைகோடி முதல்தேடிவைத்து யிருந்தவனா
கத்த[illegible]சுரு[illegible]யில் றூஹைப்பிடித்திட காண்கிலையோ
பி[illegible]ளைபபோலே பினத்திரீர்ஹஜ்ஜுக்குப் போங்களென்றால்
செத்தபினல்லவோ தெரியுங்கபூரில்யான் செப்பினதே. ௰௪

ந[illegible]ருமெளியோர்க்கு ஜக்காத்துங்ஹஜ்ஜும் நவிலவில்லை
[illegible]ளையிருந்தால் பாருங்ஹதீதை முழுதிலுமே
கா[illegible]கள்போலே திரிகிறீகாசதைக் கையில்வைத்து
கா[illegible]ந்தெரிந்திடு மக்கம்போகாத நடப்புகளே. ௰௫

முதலைப்பெரிதென்று மெண்ணியேநீங்கள் மூர்க்கஞ்செய்தால்
சிதல்தின்றுபோடுமே நாளைக்கபுறுக்குட் சேர்ந்தவுடன்
புதல்வரும்பெண்டிரும் வாரார்கள்நாளைப் போம்பொழுது
சதமில்லைசொன்னேன் ஹஜ்ஜுக்குப்போவீர் சடுதியிலே. ௰௬

அந்தப்பதியிற் சிலவுசெய்தாலொன்றுக் காயிரமென்
றிந்தைப்பிரித்த நபியுரைத்தார்ஹதீ தெங்க[illegible]கமக
சொந்தமுதலுள்ளோர் ஹஜ்ஜுசெய்யாமலே துஞ்சிவிட்டால்
பந்தமதாகவே நரகத்தைநாளைக்கிப் பாத்திடுவீர். ௰௭

சிலவாகப்போகுந் தனமென்றுமுன்னித் தெரிந்துகொண்டே
பிலமாகவென்று மிருப்போமென்றெண்ணி பினத்துகிறீர்
கலகம்விளைத்திடு மவுத்துப்பிடித்து கபுற்புகுந்தால்
தலமானமக்கம் போகாதசெய்தியைத் தானறிவீர் ௰௮

ஆறுநூறாயிரத் [illegible]றுகூடி யறபாவதிலே
சேருந்தொகையிற் குறைந்தால்[illegible] சேர்ந்திடுவார்
பாருங்கள்பூவில் பணமுள்ளபேர்க்கு ப[illegible]ம்
ஊருஞ்சதமில்லை சொன்னேனுலகத்தி லுள்ளவர்க்கே. ௰௯

அறுசுக்குங்கீழே யிருக்குதுஆதி யவனுடைய
பெருமையதான கஃபத்துல்லாவெனும் பொற்பதியே
உருமையதாகி விடுவீர்மஜ்தினி னுட்புகுந்தால்
குருவாமுஹம்மதர் பிறந்தவூராகுங் கூட்டாளிகளே. ௨௰

வெள்ளியினாலுனிற் குப்பாவோதிடும் விபரமெல்லாம்
உள்ளமகிழ்ந்துமே கேட்டுமனதி லுகப்பில்லையேன்
பள்ளியைவிட்டு வெளியினில்வந்தால் பயமன்றியே
தள்ளியேபூவில் நடந்தாலறிவீர் தறையினுள்ளே ௨௧

அறப்புக்குப்போக பணஞ்சிலவாமென வஞ்சியஞ்சி
தறஹிலுரைத்த பறுலதைவிட்ட சகோதரரே
உறவுள்ளபேர்க்கு நகைகள்சமைக்கவே யோடுகிறீர்
பிறகுதெரியும் ஹஜ்ஜதைவிட்டப் பெருமைகளே. ௨௨

மறையிலுரைத்த பறலைமறந்துமே மண்ணதிலே
வறைபோலேபூவி லிருப்போமென்றெண்ணி மனந்துணிவாய்
தறையைச்சதமென்று யெண்ணியிருக்குஞ் சகோதரரே
நரைகண்டால்நாளை மவுத்துவருமென்று நம்பலையோ. ௨௩

காத்தோடிப்போயி விடுமென்றுமெண்ணங் கடுகின்றியே
சேர்த்துமுதலைச் சேகரஞ்செய்திடுந் தீனவரே
கூத்துவன்வந்துயிர் வாங்கியேநாளைக் குழிபுகுந்தால்
நாத்தமதாகு முடலிதுவென்னுமே நம்பலையோ. ௨௪

ஓதிடுமகுத்[illegible]காரர்கள்சொன்னது வுங்களுட
காதினிற்கேட்டு அனு[illegible]ம்பயமற்றக் காரியமேன்
மாதுமால்மக்களை யெண்ணி[illegible]யேஹஜ்ஜை மறந்துவிட்டால்
யாதுவரும்பின்னால் நாளைகபுறுக்குள் யாஞ்சொன்னதே. ௨௫

எங்கள்நையினு ரெடுத்தபறு[illegible]ழ்ந்துவிட்டால்
சிங்கம்போல்வந்து பிடிப்பார்மலக்கு க்ஷணமதிலே
பங்கப்படுவீர் நாளைகபுறிற் படுத்தவுடன்
அங்கமழியுமுன் னேகுவீர்நீங்கள் ஹஜ்ஜதர்க்கே. ௨௬

ஆல[illegible]யும் பிறந்தார்களந்த [illegible]பதிலே
ஞாலத்துக்கெல்லா ந[illegible]துவாம்
[illegible] முன்னமேநீங்கள் மனதுவைத்து
காலங்கடத்தி விடாமலேயேகி ஹஜ்ஜுசெய்வீர் ௨௭

ஏழையாஞ்சொன்னமொழியதைநீங்க ளெண்ணம்வைத்து
கோழைத்தனமா யிகழ்ந்துவிடாமல் கூட்டாளிகளே
காளைப்பருவம் தவறிடுமுன்னமே ஹஜ்ஜுசெய்தால்
நாளைத்தினத்திலே போகலாஞ்சொர்க்க நகர்தனக்கே. ௨௮

ஆதியுரைத்த படிநடவாம லவனியிலே
ஜாதிஜனங்களைப் பெரிதெனவெண்ணுஞ் சகோதரரே
ஊதிடுமூச்சு வொழிந்திடிற்மண்ணி லொடுங்கிடுவீர்
சோதியிடத்திலே நாளைத்தெரிந்திடுஞ் சுகதுக்[illegible]மே ௨௯

காலமுழுது மிருப்பதுண்டோசொலுங் காளை[illegible]ளே
நாலுமுழமுள்ள வீடுசதமென்றோ நம்புகிறீர்
ஆலமுழுது நிறைந்தவன்சொல்லை யகலவிட்டால்
கோலப்படுத்தி விடுவானிறையெனக் கூறினனே. ௩௰

உட்டுகள்ரெண்டு மூன்றுமேவைத்து தறையதிலே
கட்டுமட்டாக வீடுகள்கட்டக் கருத்திலெண்ணி
துட்டுச்சிலவுகட் செய்கிறீர்மிக்கத் துரிதமுடன்
பட்டுப்போமுன்னே ஹஜ்ஜுக்குப்போக பயணம்வைப்பீர். ௩௧

எட்டாவாகிய வீட்டுக்குபோக வெண்ணம்வைத்து
துட்டுச்சிலவுகள் செய்திடிற்நாளை சுகங்கிடைக்கும்
செட்டுகட்செய்து யிருந்திடிலங்கே திருவிடத்திற்
கட்டுக்கபனுடன் போவீர்களென்று ஹக் காணசொன்னேன். ௩௨

ஹருமானசொத்தை யெடுத்துமேநீங்கள் ஹச்சுசெய்தால்
திறமென்றுமில்லான் கபூல்செய்யானென்று ஜீனிலத்திற்
சுறத்திற்பயணம தானோர்க்கிரங்கிடுஞ் சுறுதியிலே
இறத்திலதிக முடையோனுரைத்ததாம் நீனவர்க்கே. ௩௩

இம்பிஹருர்ஜின்முன் சார்ப்பதுகாட்செய் யிபாதத்தெல்லாம்
கம்மியாய்போயி விடுமென்றிறசூல் ஹதீதுரைத்தார்
அம்மினுலல்ஹம் தோதாதிருக்குஞ் சிம்மிகள்போல்
விம்மியழுது திரிவீர்கள்மேலோன் சமூகத்திலே. ௩௪

மாலைச்சதமென்று வெள்ளணியே பூவில் மகிழ்ந்திருந்தால்
ஓலைகிழிந்திட வெகுநாளிருக்குதோ வுங்களுக்கே
சேலையிற்சுத்திக் கொடுவெகிமண்ணிற் கபிணமிட்டபின்
காலைப்பிடித்து யிழுப்பார்மலக்கு கியாமத்திலே. ௩௫

ஹஜ்ஜினுடைய படலம்- முற்றிற்று.

—※—

ஆகபடலம் கூ-க்கு-கூடிய பாடல்-கூ௱௰க.

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

—*—

இ ஃ அ,

வட்டியை விலக்குப் படலம்.

கொஞ்சவயலைப் பெரிதாகவெண்ணிக் குவலத்திலே
அஞ்சாமலீனங்க ளிருந்திடுங்காலை யரிந்துகொள்வீர்
அஞ்சாமலென்று மிருப்பவன்சொன்னதை தூரவிட்டால்
பஞ்சமாப்பாவிகட் போலவேபா[illegible]கள் பட்டிடுவீர். ௧

தனியாய்கபூரிற் புகுந்திடுஞ்செய்கையைத் தான்மறந்து
அனியாயமரண ஹராம்வ[illegible]
துனியாவைவிட்டுத் துஞ்சிடுங்காலைக்குத் துன்பமுண்டாம்
கலியானவுய னெரிப்பாநரகில் ஹக்காணைசொன்னேன். ௨

ஹராமானவட்டி முதல்வாங்கிடுகிறீர் காசினியில்
இரவாமலென்று மிருப்பதுண்டோசொல்லு மிவ்வுலகில்
மறைவாகவென்று முள்ளவன்சொல்லை மறந்துவிட்டால்
விரகாயெரிந்து விடுவீர்கள்மேலோன் சமுகத்திலே. ௩

மறைமொழிதப்பியே வட்டிபலிசைகள் வாங்கினவர்
தறையிலிருந்துதா துஞ்சிடுங்காலை ஜஹன்னத்திலே
இறைகோபமென்னும் லகுனத்துப்பெற்று யெரிவரென்றே
பிறையையழைத்துமே பிரித்தமுகம்மதர் பேசினர்காண். ௪

வல்லான்மறையை மறந்துபலிசைகள் வாங்கினவர்
பொல்லாநரகிற் புகுதுவர்சத்தியம் பொய்யில்லையே
எல்லாமழிந்து யெழும்பிடும்நாளி லிவர்களெல்லாம்
தொல்லையாய்வட்டியைத் தின்றோர்களென்று தூசணிப்பார். ௫

மாலிக்குரைத்த மறையைமறந்திடு மானிடரே
சோலிவிறுலை யகப்படுவீர்கள் சொன்னேனிசமே
ஆலியின்மாதிலர் சொன்னஹதீதை யகற்றிவிட்டால்
ஹாவிக்கிடத்திலிற் சிக்கிடுவீர்கள் ஹக்காணைசொன்னேன். ௬

நாலுவேதத்திலுஞ் சொன்னான்பலிசை நஜீசெனவே
மாலேக்குடுத்து ஹறாம்வட்டிவாங்கிடு மானிடரே
தோல்சதைகவீடு சதமல்லநாளேக்கி சொக்கிவிடும்
கால்னிகுழியில் பிடிப்பார்நொடியிற் ஹக்காணைசொன்னேன். எ

சங்ஙைதக்கிவந்தது போலேயிருக்குமித் தாரணியை
சொந்தமென்றெண்ணி ஹறாம்வட்டித்தின்னிடுந் தோசிகளே
இந்தப்புவியினி குயிர்போலநின்று யிறந்துவிட்டால்
வந்துசனியனும் பிடித்திடும்ஞளை மகுஷரிலே அ

எகுதிநசறானி போலாவரென்றுமே யெங்கள்நபி
தகுதியாய்சொன்ன ஹதீதைமறந்த சண்டாளர்களே
மகுதிவருகிற நாளுமேகிட்ட வருகுதுகாண்
அகுதிகள்போலவே ஆகாமல்வட்டி யகற்றிடுவீர். கூ

ஒடுக்கத்துநாளொன்று வருமென்றெண்ணும லுலகதிலே
கொடுத்துமுதலே ஹறாம்வட்டிவாங்கும் கூட்டாளிகளே
யெடுத்துமேனைகயில் கொடுபோகமாட்டீ ரிரந்துவிட்டால்
படுக்குங்கபுறிற் புகுத்தால்தெரியும் பயல்மொழியே. ௰

மயில்வடிவாக யிருந்தோர்மொழியை மறந்துவிட்டு
குயில்கூவும்பூவில் மனம்போல்நடக்குங் கூட்டாளிகளே
அயலார்பொருளை ஹறாமாகவாங்கி யருந்தினவர்
வயிலதிலேகிப் புகுதுவர்சத்தியம் வண்மையிதே. ௰க

செட்டிகள்போலவே வட்டிகள்வாங்கிடுந் தீனவரே
எட்டிப்பிடித்து மலக்குயிர்வாங்கி யிறந்துவிட்டால்
பொட்டியில்வைத்த தனத்தாலுனக்குப் புரோசனமோ
கெட்டியாய்ப்பூவி லிருந்தவர்யார்சொலுங் கிளைஞர்களே. ௰உ

கொஞ்சமும்புத்தி யில்லாமல்பூவில் குதிக்குகிறீர்
அஞ்சாமல்தின்று வருகிறீர்வட்டி யதின்முதலே
வஞ்சகமாகத் திரிந்தாலும்ஞளை மகுஷரிலே
பஞ்சதுபோல யெரிந்திடுவீர்கள் பள்ளத்திலே. ௰௩

காமதுதின்று வளர்ந்தவுடலைக் கனலதிலே
மரம்போலெரிந்துக் கிடக்கவோவட்டியை வாங்குகிறீர்
வரம்பெற்றுவந்த முகம்மதர்சொன்னது வாஸ்தமதே
பரமதுவுங்கட்கு கிட்டாதெனக்கவிப் பாடினனே. ௰௪

வட்டிக்கெழுபது பாவங்களுண்டென வள்ளல்நபி
கெட்டியாய்ச்சொன்ன நீதியைமறந்த கிளைஞர்களே
பட்டிகள்போலே அலைகிறீர் பாரைச் சதமென்றெண்ணி
சட்டியுடைந்து போகுங்கபுரில் சலித்திடுவீர். ௰௫

காபிறைப்போல மாலைக்குடித்துக் கராந்தின்னுவீர்
தாபரமில்லான் சொன்னமறையதை தட்டிவிட்டுச்
யாபாரஞ்செய்பவர் வட்டிக்கிவாங்கிட ஞாயமில்லை
தீபமாக பரக்கத்துமாறியே சேதமுண்டாம். ௰௬

காயஞ்சதமெனப் பூவதில்நீங்கள் கராம்பொசித்தால்
மாயமாய்வந்துப் பிடிப்பார்மலக்கல் மவுத்தென்பவர்
ஓயாமலென்றும் வட்டியெடுத்தா லொடுக்கத்திலே
காயுந்நரகிற் புகுந்திடும்ளெ கியாமத்திலே, ௰௭

பூவிலிருந்து கராம்வட்டிவாங்கிப் பொசிப்பவரோ
நாவில்மறையை யுரைத்தவர்சொல்லை மறுகவிட்டுப்
பாவிகள்போலே அலையுதீர்பாரில் பணமதற்கே
ஆவியுதிர்ந்ததங்கே சென்றால்நரகி லழுந்திடுவீர் ௰௮

மறையதிற்சொன்ன வாக்கியந்தப்பியேமண்ணதிலே
இறையவன்கோபமாகிடுஞ்செய்கையை யேயெடுத்திர்
தரையினிலென்று மிருந்தவராரோ சகோதரரே
நரைகண்டால்பூவில் மவுத்தடையாளங்கள் நம்பிடுவீர். ௰௯

அரசுக்குப்போன மிராவதில்கண்ட வதிசயத்தை
குருசிலுயர்ந்த முகம்மதுநபியிடம் கூறினர்காண்
பெரிதாய்வயறு மலைபோலுயர்ந்துப் பெருத்திருக்க
உருவையாய்வட்டியை தின்றோரைக்கண்டேனென் றோதினரே. ௨௰

வட்டியெடுப்பவர் தாயைச்சனுச்செய்த வயமென்றே
கட்டித்தசையை பெண்ணுக்கிவைத்த கபீபுரைத்தார்
பட்டிகள்போலே வலையுதீர்பாரில் கருத்தின்னவே
சட்டியுடைத்தால் தெரியுந்தனத்தின் நன்மைகளே. ௨௧

மாலைகுடித்துமே சோடிபெடுப்பது வட்டியல்லோ
சீலைகள்வித்துத் திரவியந்தேடிடுந் தீனவரே
காலும்புவியில் நீண்டாரோர்சொன்ன நீதியைவிட்டு
வேலையதுவாய்த் திரிந்தலைபுகிறீர் வீரர்களே. ௨௨

சத்தாதைப்போலே தனந்தேடிவைத்தால் தரணியிலே
செத்தாக்கால்ஞனைக் கொடுபோவதுண்டோ திரவியத்தை
முத்தாயுதித்தவர் மொழியையமாந்திடு மூர்க்கர்களே .
கத்தாயிடத்தில் போனால்தெரியும் ஹக்காணைசொன்னேன்: ௨௩

கோடிதனங்களைத் தேடிவைத்தாலுங் குழியிற்குள்ளே
சாடியுடைந்தாற் போயிப்புகுதுஞ் சகோதரரே
மாடிகள்கட்டியே வைக்குறீர்நீங்கள் மனமகிழ்ந்தே
தாடிகளைத்து மவுத்தைமறந்தச் சகோதரரே- ௨௪

காப்பிக்கிச்சோடிக ளென்னமுதலைக் கடன்குடுத்து
நாப்பியேபத்துப பதினைந்துவாங்கிட ஞயமதோ
மூப்பிலதிகம தானநபியு மொழிந்தனர்காண்
சாப்புகள்வைத்து ஹராமதைத்தின்னுஞ் சகோதரரே. ௨௫

வட்டிஹராமென்னுஞ் சோடியெடுத்திடும் பகிலர்களே
பட்டிகள்போலவே சாகவோயிந்தப் படிசெய்கிறீர்
செட்டிகள்தானிந்த பலிசையெடுத்துமே தின்றிடுவார்
சட்டியுடைந்தால் போவீர்ஜகன்னத்தில் சத்தியமே, ௨௬

நரைகமழெங்கள் முகம்மதர்சொல்லை நழுகவிட்டுத்
தரையைச்சதமென வுன்னிகராந்தின்னுஞ் சகோதரரே
நரைகள்வருமென்று மனதிலெண்ணாமல் குதிக்குகிறீர்
சிறையிலகப்பட்டுக் கொண்டால்தெரிந்திடும் தீனவரே. ௨௭

கனியானவன்றன் சொல்லைமறந்து ஹராம்வட்டியை
அனியாயமாக முதலென்றுதேடு மசடர்களே
பனியாதமக்க ளொவருமடிந்துமே பாரதிலே
இனியாரெடுத்துப் போனதுண்டோநீங்க ளியம்பிடுவீர். ௨௮

வெழுக்கங்கள்ரோஷங் கயாவன்றிபூவில் விதவிதமாய்
ரொக்கங்கொடுத்து ஹராம்வட்டிவாங்கிட வொப்புகிறீர்
மக்கம்பிரந்த முகம்மதர்சொல்லை மறந்துவிட்டு
ஹக்கனிடத்தினில் போனால்தெரியுங் கபுறுக்குள்ளே. ௨௯

இம்மிஹராமதை யுனறிடில்ஞர்ப்பது நாள்யிபாதத்தெல்லாம்
கம்மியாய்போய்விடு மென்றேநபிதான் கழறினர்காண்
சிம்பிகள்போலே வலைந்துவொடுக்கம் சீவன்விட்டுத்
தம்மைக்கபுரீ லடக்கிடும்போதல்லோ தானுணர்வீர். ௩௰

ஹறாமானவட்டி முதலையெடுத்து கயிர்செய்யினும்
பிரவாமலென்று மிருப்போன்கபூல்செய்யான் பேயர்களே
மரவாமல்பூவில் திரியுநீர்வாழ்வை மகிகூழிவைத்தே
உரவுக்கிளையுந் தனமும்வராது வொடுக்கத்திலே. ௩௧

கட்டிக்கிநீங்கள் குடுத்துமேபாண்டை வரைந்தெழுதி
பெட்டியில்வைத்து பூட்டியிருக்கின்ற புல்லர்களே
கெட்டியாய்னுளை மலக்குயிர்வாங்கி கிரகம்விட்டால்
பட்டிகள்போலே குலைப்பீர்கபுறிற் படுத்துக்கொண்டே. ௩௨

பதியில்பயமற்று இன்னுநீர்நீங்கள் பலிசைமுதல்
விதியத்தனுளை யுயிரேகிமண்ணி லுழுந்தவுடன்
கதியத்துயென்று முள்ளோனிடத்திலே கள்ளனைப்போல்
மதியத்துபின்றல் ஜகன்னம்புகுதுவீர் மானிடரே. ௩௩

குத்துபாகட்டியே வைத்தோருனாத்தார் குர்ஆன்மொழியை
பத்துவாபோலே யென்றுமல்பூவில் பலிசைமுதல்
சத்தும்பயமன்றித் தின்றவர்னுளை ஜகன்னத்திலே
முத்துமெரியும் படிசெய்வானென்றென்று முள்ளவனே. ௩௪

மதியையழைத்து பிரித்துப்பொருத்து முகம்மதெனும்
நதியைகரத்தி லழைத்தநபியும்மத் தானவரே
பதியைநிசமென வெண்ணியேநீங்கள் பலிசைதின்றால்
சதியனிபுலீசு கூட்டத்தில்சேருவீர் சத்தியமே ௩௫

அன்னமுகம்மதர் நபியும்மத்தாகிய ஆண்பெண்களே
தன்னலேதான்கெட்டுப் போரீர்சகந்தான் சதமெனவே
பின்றல்வருந்துய ரெண்ணுமறபூவில் பிழைகள்செய்தால்
கண்ணலேகண்டிடுவீர் காரம்வட்டியின் காரியமே. ௩௬

மேலோன்மொழியை மாந்திடில்நாளை வெயிலதிலே
பால்போலமூளைக் கொதித்திடும்போதினில் பாய்ந்திடுவீர்
மாலசல்பெருமை கிடையாது அந்த மகுஷரிலே
கால்தான்சருகி விழுவீர்நரகக் கனலதிலே. ௩௭

பொருளைச்சதமென வெண்ணிகாரந்தின்னும் புல்லர்களே
இருளாங்கபுரில் புகுந்தாலிறையிட மென்னசொல்வீர்
அருளதைத்தேடிப் பிடியாதிருந்திடி லாகிறத்தில்
மருள்கொண்டபித்தனைப் போலேதிரிந்து மயங்கிடுவீர். ௩௮

வட்டிகள்வாங்கி முதல்சேர்த்துவைக்கின்ற மானிடரோ
கட்டிச்சுருட்டிக் கொடுபோய்ஞளெக் கயுறதிலே
அட்டியில்லாமல் புதைத்துமருதின மானதர்ப்பின்
வெட்டியும்பார்க்க வருவாரோவுங்க ளினஞ்சனமே. ௩௯

நாளும்புதீது நிசக்கும்புதிதென நாயன்சொன்னன்
வேளைக்கொஜிவனந் தருகாதிருப்பனே மேலவனும்
மானவிருப்பத்தை யெண்ணுமல்வட்டியை வாங்குகிறீர்
தேனுங்குடிகொண்ட நரகினில்சேர்ந்து திகைத்திடுவீர். ௪௰

வானவர்வ[illegible]க் கோட்டைபோல்சுத்தி வளைத்துகொள்வார்
மானமறைக்கத து[illegible]யுண்டோனுளை மகுஷரிலே
கோனுவாதட்டி ஹராம்வட்டியுண்ணுங் குரும்பர்களே
தான்தான்வயரு பிழைக்கவோயிந்தச் சதிசெய்கிறீர். ௪௧

ஒடுக்கத்தில்நம்மை யெழுப்புவானுதி யுடையவன்ருன்
படுக்குங்குழியில் மனுமுதலாகியப் பல்லுயிரும்
நடுக்கமதாகி யழுவார்நபிகள் நபுசெனவே
இடுக்கம்வருமென்று சொல்லிக்கவியா லியம்பினனே. ௪௨

சூறதுலூத மலக்குயெழுந்து துணிந்திடுவார்
பாறின்மலையும் பலதும்பரந்திடும் பஞ்சதுடாய்
சேறுமுணர்ந்து சிவந்திடும்பூமிதான் செம்பதுபோல்
ஊரும்பதியும் பொருளுஞ்சதமல்ல வுங்களுக்கே. ௪௩

சீராகபார்த்துத் தெளியாமல்பூவில் திரிந்துசெம்பொன்
வாரியெடுத்துக் குவித்தாலொன்ஞேடு வருவதுண்டோ
பேரும்பிலனும் பொருளுஞ்சதமில்லை புல்லர்களே
ஆருந்துணையன்[illegible]ப் போனுல்கபுரி லரிந்துகொள்வீர். ௪௪

முன்னோர்களேகிட[illegible] படுக்குந்தலத்தை முழுதரிந்தும்
பின்னேநமக்கு வரு[illegible]மன்றெண்ணுத பெரியவரோ
சொன்னேனுலகி ல[illegible]ளர்க்கெல்லாஞ் சுருக்கமதாய்
மண்ணேயெவர்க்கு[illegible] சதமானவீடது மானிடரோ. ௪௫

பெண்டீனாகீங்கள் பெரிதாகயெண்ணியே பூவதிலே
சண்டிகள்போலவே மாய்கையிற்சிக்கித் தயங்குகிறீர்
கண்டிசுரப்பளிப் பொன்னகையிட்டுங் கடசியிலே
நன்றிமரந்து விடுவார்ஞெடியினில் ஞரியரே. ௪௬

செட்டிகள்போலவே ஓடிதனமதை தேடிவைத்து
கெட்டியாய்நாமு மிருப்போமென்றெண்ணுங் கெடும்பாகளே
பட்டிகள்போலே சாகாமலுங்கள் பயணத்திற்கு
கட்டிசோர்கொண்டுப் போகிடகல்பிற் கருதிடுவீர்; ௪௮

அறிவுள்ளோர்தம்மைப் பழிப்பாகப்பேசு மசடர்களே
குறியாகயென்று மிருப்பீரோசொல்லுங் குவலத்திலே
சரியாகநீங்கள் சக்காகுடா மல் தவிழ்ந்துவிட்டால்
யரியாதிகெட்டுத் திரிவீர்களுனே மகுஷரிலே. ௪௯

பரியாசஞ்செய்து தூரத்துகிறீரேழை பக்கீர்களை
கரிசோருமுன்று விருக்கும்பெருமையோ கா[illegible]கிறீர்
சரியாகச்சொன்னேன் மவுத்துவருமே க்ஷணமதிலே
நரிநாயுந்தின்றிடும் நாற்றவுடலையோ நம்புகிறீர். ௫௰

கொழுத்தவுடலதுப் புகுந்திடும்நாளைக் குழியினுள்ளே
பழுத்துநரைத்தும் பயமற்றிருந்திடும் பாவிகளே
ஒழித்தோடிப்போக யிடமுண்டோநாளை யொடுக்கத்திலே
எழுத்துஅழிந்துமே போனால்நரகி லெரிந்திடுவீர். ௫௧

தோலுஞ்சதையு மெலும்புள்ளவீட்டைச் சுகமெனவே
பாலுந்தயிரும் நெய்யோடுவன்னம் பருகினன்றாய்
நாலுமுழமிந்த சடமழியாதன்றோ நம்புகிறீர்
மாலுமனையொடு செல்வமுங்கூட வாராதுகண்டீர். ௫௨

உயிர்போனாலொரு முடலதைநம்பி யுலகத்திலே
தயிரியம்பேசி யலைந்துத்திரியுஞ் சகோதரரே
அயிரொளிவீசும் அஹம்மதர்சொன்ன ஹதீதின்படி
கயிர்க்கொடுக்காத பகிலரெரிவார் கபுர்தனிலே, ௫௩

அவனிட்டகட்டளை நீக்கிநடந்தா லவனியிலே
எவனிடஞ்சென்றுமே சொல்வீர்கள்நீங்க ளி[illegible]துவிட்டால்
கவனமில்லாமலே காசைச்சதமென்னுங் கா[illegible]
தவனங்கள்மிஞ்சி யழுவீர்கள்நாளை ஜகனத்தி[illegible]லே. ௫௪

கோனுடன்குண்டணிக் கூரித்திரிந்தங் குவலத்திலே
வேளைவருமென்று மெண்ணாதிருந்திடும் வீணர்களே
நாளைமவுத்தது வந்துப்பிடித்தால் நரகத்திலே
தூளைவிறகதுபோலே யெரிவீர்கள் தோசிகளே, ௫௫

தெண்டிப்பாய்பூவி லலைந்துதிரவியந் தேடியென்னா
ஒண்டியாளாலை கபுரில்புகுது முடப்பிரப்பே
பெண்டிரும்பிள்ளையும் விட்டுப்புவியில் பிரிந்திடுவீர்
நன்றிநமக்கவர் செய்வதுமுண்டோசொல் னாளைக்குமே. ௫௬

கொடியஹறாமென்னும் வட்டியைனாளுங் குறிப்புடனே
படிமீதில்நல்ல வர்த்தகம்போலே பழகிக்கொண்டீர்
இடிபோல்மலக்கு மவுத் துயிர்வாங்கி யிரந்தபின்னர்
மடிவில்கப்படு வீர்க[ளோ]னாளை மண்ணுக்குள்ளே. ௫௭

பெரும்பாவமான வட்டியைநீங்கட் புவியதிலே
கரும்புபோலெண்ணி தின்றிடில்னாளை கியாமத்திலே
இரும்பால்விலங்கிட்டு யிழுத்துக்கொடுபோ யெரிநரகிற்
றரும்பாயெரித்து விடுவாரெனநபி சொன்னதுவே. ௫௮

எடுத்துமேகையில் கொடுபோவதுண்டோ யிருப்புகளை
குடுத்துக்கடனின் சோடியெடுக்குங் குரும்பர்களே
அடுத்துமலக்கு வந்துயிர்வாங்கி யறைபுகுந்து
படுத்துக்கிடக்கின்ற போதுதெரியும் பயல்சொன்னதே. ௫௯

பதியைநிசமென்று யெண்ணியேநீங்கட் பலவிதமாய்
மதியத்துமிக்க வலையுநீர்மாலைச் சதமெனவே
விதியத்துனாளை மண்ணிற்புகுந்தால் விசனமுண்டாம்
துதிபெற்றவள்ளல் முகம்மதர்சொல்லைத் துடர்ந்திடுவீர். ௬௰

பெட்டியில்வைத்திடும் பொருளுமனைவியும் பிள்ளைகளும்
சட்டியுடைந்தால் வருவாரோபின்னால் தரையினுள்ளே
கெட்டியாயென்று மிருப்பீரோவுங்கள் கிரகத்திலே
பட்டிபோலோடிப் பணமிச்சந்தேடிடும் பாயிகளே. ௬௧

மூச்சைப்பிடித்துமே பேசுவீர்பூவின் முதலதர்க்காய்
சூக்ஷக்கயாத்துக் க[ப]ரிற்புகுந்திடுஞ் தோஸ்திகளே
ஆக்ஷியாயென்று மிரு[ந்]தவன்சொல்லை யகற்றிவிட்டால்
பேச்சத்துப்போ[னா]ல் வருமோதனஞ்சொல்லும் பேயர்களே, ௬௨

நோட்டுக்குவட்டங்கள் வாங்குகிறீர்நீங்கள் நூற்றுக்கொன்று
கேட்டுயெடுப்பது வட்டியல்லோசொல்லுங் கேடர்களே
ஈட்டுநகைக்குப் பலிசைகள்வாங்கி யெடுக்குகிறீர்
காட்டுக்குப்போனால் தெரியுங்கராந்தின்றக் காரியமே. ௬௩

தரிப்பன்றியோடித் திரிந்துவுலகில் தனமதனை
இருப்புகள்சேர்த்து வயப்பெட்டிவைக்கின்ற யின்பர்களே
துருப்புக்குதிரைபோல் மலக்குயிர்வாங்கியே துஞ்சிவிட்டால்
செருப்படி ஞுளை யுங்களுக்கென்னவும் செப்பினனே. ௬௪

பெருமையாய்ப்பூமியில் தனந்தேடிவைக்கின்ற பெயர்களே
சிருமைப்படிவீர்கள் ஞுளைக்கபுரினிற் சேர்ந்தவுடன்
அருமையாய்சேர்ந்த முதலினைவிட்டு வகன்றிடுவீர்
மருமையினிங்கள் போவீர்நரகினில் மானிடரே. ௬௫

கையில்பொருள்வைத்து யேழைக்கிரங்கிடா கா[illegible]களே
வையமதிலே யிருப்பதுண்டோசொல்லு மவுத்தின்றியே
மெய்யானவன்றன் மறைமொழிதட்டி விட்டுகிறீர்
ஐய்யப்படுவீர்கள் நாளைகபுரி லடக்கியபின். ௬௬

சுருதிதனிலிறை சொன்னமொழியதை தூரவிட்டு
உருதியில்லாமலே ஹறாம்வட்டிவாங்கு முடப்பிறப்பே
அருகினுள்வந்து பிடித்துயிர்போனு லகாஞுடியிற்
குருதிப்பெருகும் வயிலதில்ஞுளைக் குடியிருப்பீர். ௬௭

வட்டிக்கொருஹத்து வந்ததுண்டோசொல்லு மானிலத்தில்
பெட்டிப்பணத்தைக் குடுத்துஹறாந்தின்னும் புல்லர்களே
சட்டியுண்டாந்துயிர் போயிடிற்ஞுளை ஜகன்னத்தின்மேல்
தட்டிளிலிட்டு யெரிப்பான்றணியவன் சத்தியமே. ௬௮

வட்டியையுண்பவர் வடிவதைமாரியே மண்ணைவிட்டு
அட்டியில்லாமலே யெழும்புவரென்னவே ஆலநபி
கெட்டியாய்சொன்ன ஹதீததைக்கேட்டுங் கேளாததுபோல்
திட்டமுடன்ஹறு மென்னுளுந்தின்றிடுந் தீனவரே. ௬௯

தீனென்றுசொல்லவும் வாயுமுண்டோஞுளைத் திருவிடத்தில்
ஈனமதாக ஹறாம்வட்டிவாங்கிடு மென்பிறப்பே
வானமும்பூமியும் படைத்தவன்சொல்லை மறந்துவிட்டால்
மானமழிந்து நரகத்தில்வெந்து மடிந்திடுவீர். ௭௰

குர்ஆன்மொழியை யுணராமல்நீங்களுக் குவலதிலே
கெருவமாய்பேசி ஹறும்வட்டித்தின்கிற சேவலரோ
உருவமுமாறி யெழும்பியேஞுளை வயிலதிலே
சருகதுபோலே யெரியுமுன்தீமையைத் தவிழ்ந்திடுவீர். ௭௧

சந்தாபமுண்டோ யிறையவன்சொல்லிற் சகோதரரே
அந்தகர்போலே வலையுகிறீர்நித்ய மாசையினால்
கந்தங்கமழு முஹம்மதர்சொன்ன ஹதீதுகளை
சிந்தையிற்வைத்து நடந்தோர்க்குக்கிட்டிடுஞ் ஜென்னத்துமே. ௭௨

பயல்சொன்னசொல்லதைப் பாருமனதிற் பயங்கள்வைத்து
மயலதிற்சிக்கியே மாளவிருக்கு மனுடர்களே
வயலதுதோட்டமு மாளும்வராது வழித்துணையாய்
சியலாம்ஷரகை யெடுத்தோர்க்குக்கிட்டிடுஞ் ஜென்னத்துமே. ௭௩

மாயவலைக்குள் சிக்கியேமண்ணிற் மயங்குகிறீர்
காயஞ்சதமில்லை யென்றிருந்தாலுங் கபுர்புகுதும்
வாயால்முகம்மதர் சொன்னமொழியைமனதிலுன்னி
நாயமாய்ப்பூவில் நடந்தோர்க்குசொர்க்கம் நலந்தருமே ௭௪

மூச்சோடிப்போனால் முழிப்பீர்கபூரில் முன்கீரிடத்தில்
பேச்சினாலேதும் வருவதுண்டோசொல்லும் பேயர்களே
ஆட்சியாயென்று மிருப்பவன்சொல்லை யகற்றிவிட்டால்
காட்சிமழுவால் சுடுவார்மலுக்கு ஹியாமத்திலே. ௭௫

சுடுவதுநிக்ஷயந் துய்யோனுரையினைத் தூரவிட்டால்
படுவீர்களென்றும் பகர்ந்தேனுங்கட்க்கு பாறதிலே
கெடுவீர்களென்று முகம்மதர்வாயால் கிளரினர்காண்
தடுமாறிக்கீழே விழுவீர்சிராத்தெனுங் தடமதிலே, ௭௬

பட்டிகள்போலவே யோடியலைந்துப் பணங்குடுத்து
வட்டிகள்வாங்கியே பெட்டியில்வைத்திடும் வம்பர்களே
யெட்டிப்பிடித்துயிர் போயிடிற்றனை யிடுகுழியில்
கெட்டியாய்கையிற் கொடுபோவதுண்டோசொல் கேவலரே. ௭௭

துட்டென்றும்நீங்கள் கொடுபோவதில்லை துனியாவதிலே
செட்டுகெட்செய்து திரவியந்தேடிடுந் தீனவரே
பட்டுயிர்நீங்கிடின் வாராதுவொங்கள் பணங்களெல்லாம்.
கட்டுங்கபனொடு புகுவீர்கபுரிற் கலங்கிடவே, ௭௮

நீங்களெடுத்துக் கொடுபோகவில்லையோ நேற்றுதினந்
தாங்களுமப்படிப் போவீர்களல்லோ தறையிற்குள்ளே
வாங்கல்குடுக்கலு மெல்லாம்பாக்கு மவுத்துவந்தால்
நாங்களுமவ்விதம் போவதும்நிட்சயம் நாளைக்குமே. ௭௯

பணத்தைக்கரத்திற் கொடுபோவதுண்டோ பயணமுற்றால்
சிணத்தில்மரித்து கபுரில்புகுந்திடுந் தீனவரே
மணத்தைப்பொருந்தி வரும்நபிவாக்கியம் வழுகவிட்டால்
பிணத்தைச்சுடுவது போலேநரகிற் பிரண்டழுவீர். ௮௰

பொல்லாதவன்தன் சியலதிற்சிக்கிப் புவியதிலே
வல்லோனுரைத்த மன்றயைமறந்திடு மானிடரே
அல்லாவின்றூதர் ஹதீதைத்தேடி யருட்புரிந்தால்
கல்லானநெஞ்சமுங் கரைந்திடுமென்கவி கண்டவர்க்கே. ௮௧

பெரியஹறாமென்று ஹிஞ்சீறிறச்சியைப் பேணிக்கொண்டு
ருரியயிறச்சிக் கதிகமாம்வட்டியை யுன்பதிலே
மரியாதிக்கெட்டுப் போவீர்கள்நாளை மண்ணறையில்
பிரியமதாகவே சோடியெடுத்திடும் பேப்பர்கள். ௮௨

வட்டிக்கெழுபது பாவங்களுண்டென்றும் வள்ளல்நபி
கெட்டியாய்சொன்ன ஹதீதைமறந்தக் கெடும்மர்களே
செட்டிகள்போலே பலிசையெடுக்கின்ற தீனவரே
பட்டிகள்போலவே சாகவோயிந்தப் படிசெய்கிறீர். ௮௩

மலைபோலமாலைத் தேடிக்குவிக்கின்ற மானிடரே
தலையேலே தூக்கிக் கொடுபோவதுண்டோ தரணிவிட்டே
கலைமொழிதட்டியே ஹறாம்வட்டித்தின்னுங் கசடர்களே
உலைவாய்மொழுகது போலேவயிலதி லுருகிடுவீர். ௮௪

தீனுனவர்கள் வயத்திற்பிறந்துந் திருடரைப்போல்
கோனுரைநீக்கி ஹறாம்வட்டிதின்னுங் குரும்பர்களே
மானுடன்பேசிய வள்ளல்ஹதீதை மறந்துவிட்டால்
தான்படும்பாடது நாளைத்தெரியுந் தரையிற்குள்ளே ௮௫

நிலையாகப்பூவி லிருப்பமென்றெண்ணி நினைவைவைத்து
அலைகிறீர்நீங்கள் பொருள்மிச்சந்தேடிட ஆசையினால்
வலையதில்சிக்கிய பிணைமீட்டவள்ளலின் வாக்கியத்தின்
கலையையுணர்ந்தும் நடவாமல்பேசுங் கசடர்களே. ௮௬

வட்டியெடுக்கு மனுடனாநீங்கள் வரவழைத்துக்
கெட்டியாய்சாதங் கொடுத்தாலுமென்ன கிடைத்திடுங்காண்
மட்டிகட்போலே விருந்தாலும்நாளை மறணம்வந்தால்
செட்டிகட்கூடி யிருக்குந்தலத்தினிற் சேர்ந்திடுவீர். ௮௭

காபர்களோடி யிருக்குந்தலத்தைக் கலையதிலே
தாபரமில்லான் சொன்னானேகத் தலந்தனிலும்
தீபரமாகவே வட்டிகாரந்தின்னுந் தீனவரே
ஆயத்திற்றனை யகப்படுவீர்க ளவனிடத்தே ௮௮

வட்டியெடுத்திடு மாண்பெண்களெல்லாம் மகுஷரிலே
பட்டிகள்போலே குலைத்துக்குலைத்துப் பதைத்திடுவார்
கெட்டியாயாதி யுரைத்தான்குர் ஆனிற் கேவலரே
சட்டியுடைந்திடுமுன்னே ஹறாத்தைத் தவிழ்ந்திடுவீர். ௮௯

தவிராமற்றித்தமும் தின்னுமேவந்தால் ஜகனத்திலே
குவியுங்குபிர்றைப் போலேகிடந்து குலைந்திடுவீர்
அவியொளிவீசு முகம்மதர்சொன்ன ஹதீதின்படி
கவியுங்குணவிட்டுத் தவ்பாவைசெய்யிற் ஹயிறதுவாம். ௯௰

அல்லாவின்றாத ருரைத்தார்நமக்கு அவனியிலே
பொல்லாதகெட்ட ஹறாமானவட்டியைப் பொருளெனவே
கல்லால்சமைத்திடு முருவைப்பணிந்திடுங் காபிரைப்போல்
நல்லாகவாங்கியே தின்றோர்நரகில் நடுங்கிடுவார். ௯௧

பயமச்சமன்றியே பலிசைகள்தின்றிடும் பாபிகளே
நயமென்றுவெண்ணிக் காபிர்கள்போலவே நடக்குகிறீர்
சயமதிலேரிநற் பவனிவருகின்ற காலமட்டும்
மயமத்ததியி லெரியவோவட்டியை வாங்குகிறீர். ௯௨

இந்தச்சடலை மறியும்விழிக ளிமைக்குமுன்னே
சொந்தமென்றெண்ணி யிருக்குறீர்வெழுக்கஞ் சலையன்றியே
கந்தங்கமழு முகம்மதர்சொன்ன ஹதீதின்படி
வந்ததுபோலவே போவீர்களுலை மண்ணதிலே. ௯௩

மாளாமற்நீக்க விருப்பதுண்டோமிகு மாலைவைத்து
சாலையாமாகிய யேழைக்குயீயாத சகோதரரே
காளையைப்போலே திரிந்துவுலகிற் ஹராந்தின்குமீர்
நாளைக்கியேயி னடுங்கப்பிடித்திட நண்ணுவதே. ௯௪

மண்டிமளிகையிற் சரக்குகள்விற்கவே மால்குடுத்து
கண்டிதாவொன்றுக்குப் பத்துப்பதினைந்து கைக்குமெய்யாய்
தெண்டித்துப்பேசியே சோடியெடுக்கின்ற தீனவரே
ஒண்டியாய்நாளைக்குப் போகும்பயண முணர்வில்லையே. ௯௫

குணமில்லாவாழ்வைச் சதமென்றுவெண்ணிக் குவலதிலே
பணந்தேடிவைத்து யேழைக்கீயாத பாவிகளே
மணங்கமழ்வேதர் முகம்மதர்சொல்லை மரந்துவிட்டால்
புணம்போலே நரகபுரிலெரிவது பொய்யில்லையே. ௬௬

ஆதம்ஹவ்வாவுங் கோதுமைத்தின்ற வயள்ளதையினால்
நீசமுடையவன் பஹாருவென்னும் நிலத்திற்விட்டான்
மாதமுங்கெய்தி முடிந்தால்னொடியில் மவுத்துவரும்
பாதம்புவியிற் படாதவர்சொன்ன பனுவலிதே. ௬௭

பெருமையுடன்பொருள் தேடியேவைத்திடும் பேதைகளே
வருமையுடையவா வந்தாலவர்க்கு வழங்கிடுவீர்
அருமையாயத்தேடு முதலெல்லாம்விட்டு ஆகிரத்தில்
சிறுமைப்படுவீர்கள் நாளைமகுஷரில் திருமுன்னமே. ௬௮

ஆலிம்கள்சொல்லும் நசிஹத்தைகேட்டு மவுனியிலே
கேலிகட்போலவே பேசித்திரிகின்ற கேவலரே
சோலிவருமென்னு மெண்ணமிலாமித் துலைத்துவிட்டு
ஹாவிக்கிடத்திலிற் போனால்தெரியுங் கவலைபதே. ௬௯

சுருதியிலாதி மொழிந்தான்மவுத்து சுருக்கெனவே
உறுதியில்லாமற் வாய்மதம்பேசு முடப்பிறப்பே
மதியாய்நீங்க டலையுகிதீர்மிச்ச மாலதனால்
பருதியின்சூட்டால் மூளையுருகியே பாய்ந்திடுமே. ௭௰

மாலதைக்காச்சிச் சுடுவேனென்றுதி மறைதனிலே
பாலதைப்போலவே சொன்னதலீலதைப் பார்த்திலையோ
காலதுனைகயு முருவமும்பேசிடும் ஹியாமத்திலே
வேலதில்குத்தி யிழுப்பார்நரகினில் வெந்திடவே. ௭௧

நிட்சயமாகவுணர் வீரோசொல்லும் நிலமதிலே
கச்சவடஞ்செய்து மால்மிச்சந்தேடிடுங் காளைகளே
பிச்சையிடாமலே சேர்க்குதீர்ஏராங்கள் பொருட்களைத்தான்
அச்சமில்லாமற் மவுததைமறந்திடு மாண்பெண்களே. ௭௨

மதிராசுதன்னிலே வேடிக்கைப்பார்க்க மனமகிழ்வாய்
துதியாகக்கூடிட் டவுறன்னிற் போனார் சந்தோஷமுடன்
புதிதாகக்கட்டிய பந்தலினுள்ளே புகுந்தவுடன்
சதியாகவெந்து மடிந்ததுயின்னஞ் சகிக்கிலையே. ௭௩

தாவிப்புகுந்து வருகவேபோன சனங்களெல்லாம்
ஆவியகன்றுமே வெந்துக்கரியா யழிந்தனர்காண்
ஹாவியாதன்னிற் போயிப்புகுந்ததைக் கண்டில்லையோ
சாவொன்றுமில்லா செய்திடுஞ்செய்கையைத் தா[illegible]ரிவீர். ௱௪

மனையாளுடனே மக்களைக்கூட்டி மகிழ்ச்சியுடன்
இணைபிரியாமற் போனோற்கிமிஷத்தி னேனிறந்தார்
வினையாய்வருமென வெண்ணிடிம்செல்வரோ வீரியரோ
துணையொன்றுமிலலான் சொன்னதைப்பாருஞ் சுருக்கதிலே. ௱௫

பந்தலைப்பார்த்து வருகிரோமென்றுமே பாவையிடம்
சிந்தைமகிழ்ந்துப் போனவரெல்லாந் திரும்பவில்லை
இந்தவிதத்தை யறியாமற்நீங்க டிவ்வுலகை
சொந்தமென்றெண்ணி யிருந்தாலொருதினஞ் சொக்கிடுவீர். ௱௬

கையின்பொருளை வெளியோர்க்குழிய கலங்குகிறீர்
ஐயமிடாமற் முதல்சேர்த்துவைத்திடு மாண்பெண்களே
துய்யோனுரைத்த மறையதைப்பாருஞ் சுருக்கதிலே
வையகம்விட்டுப் போவீர்கள்மண்ணிற் மறைந்திடவே ௱௭

இப்பாரைவிட்டுப் போவோமென்றெண்ண மெள்ளளவும்
வைப்பார்கள்தம்மையே கண்டிலன்யானிந்த வையகத்திற்
ஜப்பார்குடுத்த முதலதைநீங்க டறையிற்விட்டுச்
செப்பாம்லிங்கு மடிந்திடுவீர்கள் ஜெகமதிலே. ௱௮

அந்திப்பகலுமே ஆசைப்பெரிதென் றலைந்தலைந்து
மந்திகட்போலே குதிக்கிறீருங்கள் மதமிஞ்சியே
தந்தியருந்துமே போயிடில்லுளைத் தனைப்புகுதும்
பிந்திகபுரி லுணர்வீர்தனத்தின் பெருமைகளே. ௱௯

எறும்புகடையத்தி லெல்லாம்படைத்தோ னியம்பினன்காண்
குறும்புசெய்யாம லெனக்காகப்பிச்சைக் குடுமெனவே
வரம்புத்தவறி நடந்திடிற்றுளை மருஷரிலே
துரும்பதுபோலே யெரிந்துநரகிற் சுழலுவீரே. ௱௰

சிறுமைப்படுவ துணராமற்நீங்க டிரவியத்தை
வெறுமையுடையவர்க் கீயாமல்நித்தம் வெருட்டிவிட்டீர்
அருமையாய்வைத்து யிருந்தமுதலை யவனிவிட்டுப்
பெருமைக்குலைந்து விடுவீரெனநபி பேசினரே. ௱௰௧

எத்தீமகடன்னைக் கடுஞ்சினமாகவே யேசுகிறீர்
கத்திறுல்தள்ளி விடுமெனச்சொல்லிக் கதவடைப்பீர்
பித்தர்கள்போலே கொடுமைகட்செய்து புவியைவிட்டு
முத்தன்சமுகத்திற் போயிடிலென்ன மொழிசொல்லுவீர். ௱௰௨

எளியோர்மனமது நொந்திடிற்றுளை யிறையிடத்திற்
பழிவந்துசூழ்ந்து விடுமென்றுயிக்கவிப் பாடினன்காண்
அழியாவரம்பெத்து யாரிருந்தார்க டவனியிலே
குழியிற்புகுந்தா லரிவீரிறைசெய்யுங் கோலங்களே. ௱௰௩

எத்தனைக்கோடி முதல்தேடிவைத்து யிறந்ததர்ப்பின்
சித்தமாநீங்கள் கொடுபோவதில்லையே தீனவரே
கத்தனிசுறாயி லுயிர்வாங்கிப்போனல் கபுருக்குள்ளே
மெத்தவருத்தம் படுவீர்களென்று மெய்சொன்னனே. ௱௰௪

அணிகேட்டுவந்து யிரப்பவர்தம்மையே தூசணிப்பீர்
பணியிட்டுதைத்த வுடுப்பையணிந்திடும் பாவிகளே
பிணியாமவுத்து வந்துபிடித்தால் பிழைப்பதுண்டோ
மணிவிட்டுப்போமெனுஞ் செய்கையரந்திடு மானிடரே. ௱௰௫

குளிரினிருக்கு மெளியோர்க்குஆடைக் குடாதிருந்தால்
பளிரெனத்தண்டத் தடியடுமண்ணிற் படுத்தவுடன்
களிகூர்ந்துநீவி ரெளியோர்க்குப்பூவிற் கலைகுடுத்தால்
வெளியெங்குமோர்குடை யாள்வோன்றருமத்திற் மேவிடுவீர். ௱௰௬

ஒன்றுக்குப்பத்து குடுப்பேனென்றுநபி யோதினதால்
சென்றங்குயேகிடி லேழுபத்தென்றுதான் செப்பினர்காண்
மன்றல்கமழ்நபி வாயாலுரைத்தனர் மண்ணதிலே
நன்றெனும்நீவி ரெடுத்துநடந்திடி நன்மையுண்டாம். ௱௰௭

சிங்கப்புலியலி திறலொன்றீந்து ஜெகத்தரசி
மங்கைதனக்கென கொடுவந்தநல்கனி மாதனையை
அங்குவருமைய ரானமுசாபருக் கதையளித்து
தங்களுமேகின ராசியிருந்த தலமதற்கே. ௱௰௮

அப்போதெழுந்து அலிமுகம்நோக்கியே யன்னையருந்
ஹபீப்பாகநீங்களக் கனிதன்னைக் குடுத்ததினுற்
இப்பாரிலெங்களின் ஹாஜத்தைநீக்கி யினிதுறவே
ஒப்பாரெனக்கு சகாயஞ்செய்தானென சாற்றினரே. ௱௰௯

இருவரும்பேசி யிருந்திடும்போது யின்பமுடன்
மருகமழ்வாச வள்ளல்முகம்மதர் வரய்திரங்கே
அருமையாயீன்ற மகவைமணந்த அலிதமக்கு
வருங்கனியத்துயே சல்மானெடுத்தங்கு வந்தனர்காண். ௱௨௰

வந்தவளவினில் கூவியலியை வரவழைத்து
சிந்தையிலுன்னிக் கனியொன்றெடுத்து ஜேபிலிட்டு
இந்தைபிரித்தோ ரனுப்பினரென்னவு மீய்ந்திடவே
அந்ததபக்கைத் திரந்துக்கனியை யலியெண்ணினர். ௱௨௧

இந்தசபக்கி லிருக்குங்கனியது யெட்டொன்றென்று
மூந்த அறவில் புலியலியாரு மொழிந்திடவே
சொந்தயாயுங்க ளுத்தையுணர்ந்திட சோதித்தனன்
சந்தேகந்திர கனியொன்றிதுவெனத் தந்தனரே. ௱௨௨

பத்துக்குவொன்றுக் குறைவதென்றுன்னிப் பழமதனை
வைத்துயெனக்குள தல்லவென்றேசொலி மருந்தனராம்
சுத்துமொருகுடை யாள்பவன்சொன்னான் சுருதியிலே
குற்றமதற்கொன்றும் வாராதெனவுலிக் கூறினராம். ௱௨௩

வானோர்கொடுவந்து வைத்தார்முகம்மதர் வள்ளலிடந்
தீனைவிளைத்தவ ரீந்தாரெடுத்திதைத் திவரமாய்
நானேகொடுவந்தே னென்றேசல்மானும் நவின்றனராம்
தானதைக்கேட்டுப் புகழ்ந்தாரிறையைச் சந்தோஷமதாய், ௱௨௪

இந்தஹதீது யிருக்குஞ்ரெத்ன விலாசத்திலே
சொந்தமாகீவி ரெடுத்ததைநோக்கித் துலங்கிடுங்காண்
அந்தகர்போல வலேயாமலுங்க ளாஸ்திகளை
சிந்தைமகிழ்ந்து செலவுசெய்தாலுருஞ் ஜென்னத்துமே. ௱௨௫

ஆதிமொழிந்தப் படிநடந்தோர்க்கு வவனியிலே
சாதிசனமுடன் மக்களும்வாழ்வுந் தழைக்குமென
நீதியதான ஷரகைவிடாமற் நிலேநிருத்த
காதர்முகியித்தீ னென்னும்பயல்கவி கட்டினனே. ௱௨௬

வெயிற்படுமென்றே குடைகளைவாங்கி விரித்துமண்ணிற்
ஓயிலாய்பிடித்து வுலாவித்திரிகிரீ ருல்கதிலே

அயிலமதைவிட்டுப் போனாலெழும்பிடு மாகிரத்திற்
வெயிலதிற்மூளை கொதித்திடுமென்றசொல் மெய்யில்லையா. ௱௨௭

ஹறாமானசொற்றுகள் செங்கற்சுண்ணாம்பிற் கலக்குமென்றே
திறமாகச்சொல்லி யிருப்பதைநீங்கள் தெரிந்திலேயோ
அறமதுவோங்க கூபாவில்வந்த அணபியிமாம்
உறமாகப்பூவிற் யோதினர்காணவ ருங்களுக்கே. ௱௨௮

விருந்தெனச்சொல்லி யழைத்துமேமிக்க விருப்பமுடன்
பருந்துண்டமாக விரைச்சியுடனே பலாவுமிட்டு
வெருமையுடைய மிசுக்கீன்களுக்குவெண் சோறுமிட்டால்
சிறுமைப்படுவீர் னாளைக்கபுரினிற் சேர்ந்தவுடன். ௱௨௯

எல்லாருமிருஞ் சரியாவெண்ணாமலே யிவ்வுலகிற்
பொல்லாதவெண்ணங்கள் வைத்துவிருந்தனைப் போடுகிறீர்
அல்லாவைச்சார்ந்த மிசுக்கீன்களுக்கு அளியாதிருந்தால்
வல்லான்றனக்கது வேர்க்குமோசொல்லிடு மானிடரே. ௱௩௰

கேட்டால்குடுக்க மனதுவராத கேவலரே
நாட்டாண்மைசெய்யும் நகருமனைக்குமே நலகிடுவீர்
மாட்டாங்கிபோலே திரிந்துனொடியில் மவுத்துவந்து
போட்டால்கபுரி லுணர்வீர்களென்மொழி பொய்நிஜமே. ௱௩௧

பெரியப்பெரிய பெட்டியிலுங்கட் புடவைகளை
சரியாகிரப்பி வைத்திருந்தாலுந் தரணியினிற்
உரியானத்தாடு திரியுமிசுக்கினுக் குதவிடீர்
மரியாதைக்கெட்டு விடுவீர்கள்னாளை மகுஷரிலே. ௱௩௨

திருவின்மொழியை மறந்துதினமும் திரியுகுதீர்
பருவமாயென்று மிருப்பதுண்டோசொல்லும் பாயிகளே
குருவாமுகம்மதர் சொல்லுங்ஹதீதை குறைவுசெய்தால்
சருகதுபோல வெரிவீர்கபுரிற் சத்தியமே. ௱௩௩

கபுருக்குள்ளேகும் பயணமறந்துமே காசினியிற்
சபுருக்கிருபையு முள்ளோன்மறைமொழி தட்டிவிட்டோர்
தபுருக்கைவெண்டிடுந் தாஹாநபியுமை சார்ந்தவர்க்கு
அபிமானமுள்ள வருள்சொர்க்கமுடு மமைந்திடுமே. ௱௩௪

கண்டுபடித்த ஹதிதைவிட்டுக் கலக்கமுடன்
மண்டிகள்வைத்து யாபாரஞ்செய்திடு மானிடரே

பெண்டிரும்பிள்ளையும் வாராதுனைக்கிப் போம்பொழுது
ஒண்டியாய்ச்சென்று கபுரிற்புகுந்து வுதைப்படுவீர் ௱௩௫

உதவிகளுண்டோ காளைக்கபுரி லுடப்பிறப்பே
பதவிகட்போலவே மால்கொள்ளைசெய்திடும் பாங்கற்களே
நிதமுமினாயவ நீதிமறைநெறி நீத்துவிட்டால்
சதமானவீடு நரகமல்லால்வேறு தகமையதோ. ௱௩௬

தஞ்சமென்றுள்ளவன் பெயர்சொல்லிகேழ்க்குஞ் சவால்தனக்கு
கொஞ்சமும்பூவி லீயாதிருக்கும் குரும்பர்களே
எஞ்சாவுடல மழிந்திடிற்மண்ணி லிடுவர்சொன்னேன்
குஞ்சுமனைவியர் வாரார்கள்ளுனைக் குழியதிலே. ௱௩௭

ஒன்றுக்குபத்துக் குடுப்பேனென்றுறுதி யுரைத்ததுவை
என்றுமிரவா திருப்போமென்றெண்ணி மிகழ்ந்தவிட்டு
வின்றுயிரப்பவர்க் கியாமல்சேர்த்திடும்வீரியரே
அன்றுடஞ்செய்திடும் பாவங்களாலே யழிந்திடுவீர். ௱௩௮

மட்டியில்முன்னு லமைத்தனன் ஆதத்தை வல்லவனும்
கெட்டியா யாயிரமாண்டேயிருந்துங் கெறடுவதுபோல்
தொட்டுமலக்குயிர் வாங்கினர்காணிந்த தொல்புவியிற்
சட்டியுடைந்தால் தெரியுங்கபுரினின் சங்கடமே. ௱௩௯

உயிரதுயேகு முதலுமழிந்திடு மொடுக்கத்திலே
கயிர்கள்கொடுக்க கடும்பஹிலாகிடுங் கசடர்களே
பயிர்தின்விளைத்த முஹம்மதர்சொல்லதைப் பாரில்விட்டால்
மயிர்ப்பாலம்செல்ல முடியாதுனைரோ மகுஷரிலே. ௱௪௰

வின்னம்வருமென்று மெண்ணுமற் பூவினில் மெய்மறந்து
இன்னமலேகனு ளாகயிருக்க மியல்புரிந்தீர்
அன்னமுகம்மதர் சொன்னஹுதிதை யகற்றிவிட்டால்
சுன்னமதுபோல் நீத்திடுவாரெனச் சொல்லினனே. ௱௪௧

பனுவாகப்போகு முன்னேயிறைமொழி பார்த்துநன்றாய்
நினவாகயென்றுங் குடுப்பீர்சதக்கா நிலமதிலே
கினவதுபோலவே பூவினின்வாழ்வுக் கிலேசமுறும்
சனுசாதொழுது வடக்கிடுவாரெனச் சாற்றினனே. ௱௪௨

உள்ளதுநூறு வயதுமுடிந்து வுடலழிந்தால்
பள்ளமதான கபுரினிலேகப் பயணமுறும்
கள்ளன்வலையி லகப்பட்டுக்கொண்டு கலங்குகிறீர்
முள்ளுந்தோலுள்ள வீடுசதமதோ மூர்க்கர்களே. ௯௰௫

வட்டியை விலக்கு படலம்

முற்றிற்று.

ஆகபடலம் ௭-க்கு கூடிய பாடல்-௪௱௪.

பிஸ்மில்லாஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இஃது,

ஜினாவை விலக்குப் படலம்.

மறைமொழிதட்டியே ஜினாவினைச்செய்திடு மானிடரே
குறைவொன்றுமில்லான் சொன்னதைப்பாருங் குவலயத்திலே
பிறையையழைத்தவர் சொல்லைமறந்தால் பெருநெருப்பின்
தறையிற்புகுந்தால் தெரிந்திடுமென்மொழி சத்தியமே. ௧

முப்பத்திமூன்று மிடத்திற்மறையில் மொழிந்ததனை
தப்பென்றுவெண்ணியே யென்றுஞ்ஜினாச்செய்யுஞ் சண்டிகளே
இப்பாரைவிட்டுப் போனால்கபுரி லிருந்திடுவீர்
ஐப்பாருடையசொற் பழுதாகுமோ சகோதரரே. ௨

குனாவாஞ்ஜினாவைப் பயமன்றிச்செய்யுங் குரும்பர்களே
பனாவாகப்போவீர் நாளைதினத்திற் பலிஹத்துடன்.
மனமொத்துவேறு சாதிப்பெண்ணோடு மருவுகிறீர்
இனம்விட்டுநீங்கட் போவீர்நரகி லெரிவதற்கே. ௩

கெட்டஜினாவை விரும்பித்திரிகின்ற கேடர்களே
இட்டமாய்பூவி லிருப்பதுண்டோசொல்லுந் தினந்தினமும்
வட்டமதியை யழைத்தவர்சொல்லை மறந்துவிட்டால்
தட்டேழுமுள்ள ஜகன்னம்புகுவது சத்தியமே. ௪

பலசாதிபெண்களை ஜினவதுச்செய்திடும் பாயிகளே
பிலமாகவென்று மிருப்பதுண்டோசொல்லும் பூவிலே
மலாமத்திற்சிக்கி மரித்துமேனுளே மகுஷரிலே
சலாமத்தைவிட்டு நரகிற்புகுவது சத்தியமே. ரு

தீனிற்பிரந்து மருஜாதிபெண்களை சேர்ந்துகொண்டு
மாநிலந்தன்னிற் ஜினுவினைச்செய்திடு மானிடரே
வானதிலுள்ள மலக்குயிர்வாங்கி மரித்ததர்ப்பின்
போறுல்தெரியுங் கபுரினிலென்மொழிப் பொய்யலவே. சு

பக்கத்திலுள்ள பிரசாதிப்பெண்ணைப் பழகிக்கொண்டு
வெழுக்கமில்லாமலே ஜினுவதுச்செய்திடும் வீணர்களே
துக்கப்படுவீர் ஞளைத்தினத்தினிற் தஞ்சிவிட்டால்
மக்கமுகம்மதர் ஷபாயத்துஞ்செய்யார் மானிடரே. எ

தாடியுமீசையும் நரைத்தும்ஷரகை தவிர்ந்துவிட்டு
கூடிஜினுக்களைக் கூசாமற்செய்யுங் குறும்பர்களே
தேடிப்பிடித்து மலக்குயிர்வாங்கியே செத்தவுடன்
பேடிகட்போலே நரகிற்புகுதுவீர் பொய்யில்லையே, அ

குவிமுலையாளைக் கூடிஜினுச்செய்யுங் குறும்பர்களே
அவிரொளிவீசு முகம்மதர்சொல்லை யறிந்திலையோ
புவியைச்சதமென்று யெண்ணியிருக்கின்ற புல்லர்களே
செவியினிற்கேட்டும் பயமில்லையோசொல்லுங் தீனவரே, கூ

பிரவாமலென்று மிருப்பவன்சொன்னதைப் பொய்யெனவே
மருசாதிப்பெண்களை ஜினுவதுச்செய்திடு மானிடரே
ஹராபாகப்போவீர் ஞளைதினத்திற் கனலதிலே
விரகாயெரிந்துக் கிடப்பீர்கள்யான்சொன்னேன் மெய்யதுவே. ய

மறைமொழிதட்டி ஜினுவதுச்செய்திடு மானிடரே
தரைமீதிலென்று மிருப்பீரோசொல்லுங் தடிதிடனாய்
நறைகமழ்வீசு முகம்மதர்சொல்லை நழுகவிட்டுக்
குறைவாகவெண்ணிக்கொண்டோர்நரகிற் குடியிருப்பீர். யக

புவியாமவத்துப் பிடிக்குமென்றெண்ணத்தைப் பூவில்விட்டு
வலியோனுரைத்த மறைமொழிதட்டிய மானிடரே
சலியாமல்நீங்கட் ஜினுவதுசெய்து சடமழிந்தால்
அலிமாதுலர்தன் ஷபாயத்துஞ்ளக் ககப்படுமோ. யஉ

ஒடுக்கமவுத்து வரு[illegible]மென்றென்ணும லுலகதிலே
நடுக்கங்கடன்றி ஜினாவதுச்செய்குறீர் நாள்கடந்தால்
இடுக்கங்கட்செய்யு மலக்குயிர்வாங்கி யிரந்ததர்ப்பின்
படுக்குங்குழிக்குள் போனால்தெரியும் பயல்சொல்வதே, ௰௩

புவனத்திற்நீங்கட் பொருள்சதமென்றுப் புலம்புகிறீர்
மவுனமாய்பேசி ஜி[illegible]வதுச்செய்கின்ற மானிடரே
சவனத்தடைபோல் மவுத்துப்பிடித்துத் தரைபுகுந்தால்
கவனத்துடனே [illegible]ந்தழுவீர்கள் கபுரதிலே. ௰௪

கலாலானபெ[illegible]கள் வீட்டிலிருக்கக் கருத்தழிந்து
பலசாதிபெ[illegible]களை ஜினாவதுச்செய்திடும் பாயிகளே
மலைவுவருமென்று வெண்ணுமற்பூவில் மனந்துணிந்தால்
உலையின்மெழுகாக யுருகுவீர்வன்னி யோடையிலே ௰௫

[illegible]வுண்ணிஜினாச்செய்யும் பாயிகளே
விதிதான்[illegible]முடிந்துமே போனால்கபுருக்குள் வெந்திடுவீர்
கதியென்றுயத்து திரிவீரவனைக் கழுத்தில்வைத்தே
மதியையழைத்த நபியுமண்டாடார் மானிடரே. ௰௬

ஹராமதைச்செய்து திரிந்தோர்கள்நாளை கியாமத்திலே
நிசமா[illegible]நின்று அழுவார்வெயிலில் நிழலன்றியே
இரம[illegible]கனீங்கட் குடிவெறியால்செய்யுஞ் செயலதர்க்காய்
மரம்போல்கிடந்து யெரிந்தாலுணர்வீர் மானிடரே. ௰௭

[illegible]டைசினாள்மட்டு மெரிவீர்கபுரிற் கட்டைகள்போல்
படாயதுப்பேசி ஜினாவதுச்செய்திடும் பாயிகளே
விடாமலைபூவிற் றிரிந்தோனானாலை[illegible] மேலவந்தான்
புடம்போலநீத்துப் போடுவான்பூ[illegible]விட்டுப் போனவுடன். ௰௮

என்னேரமொக்க டலையிலகுனத் [illegible]ரங்குமென்றே
மன்னர்முகம்மதர் சொன்னார்ஹதீ[illegible]கள் மானிடரே
பின்னாலைநீங்க லெண்ணுமற்பூவிற் பி[illegible]ழகட்செய்தால்
முன்னாள்மலக்கு யிருவரும்போனசொல் [illegible]ண்டோ. ௰௯

குளித்தால்முழுக்கனுப் போகாஜனாவின் கொடுமையினால்
பழிப்பானநாத்த முடையவராகியே பவிஹத்துடன்
ஒழித்தாலும்னாளை விடுவதில்லைச்சொன்னே னுங்களைத்தான்
அழித்து அழித்து யெழுப்புவானுதி யனலிலிட்டே. ௨௰

ஜினாச்செய்தபேர்களை யடித்துவதைத்திட திவரமாய்
குனவுக்குநூ ஹறத்துவிதியாய் குர்ஆனதிலே
வினவாகச்சொல்லி யிருக்குதுவெட்ட வெளிச்சமதாய்
பனுவாகப்போமுன்னே பயந்துகொள்வீரெந்தன் பாயிகளே. ௨௧

மனாவாயுலகிற் ஜினாவதுச்செய்கின்ற மானிடரே
அறத்துக்குரியவ னானபவிஹறத்தி லாக்கிடுவான்
குளத்தைமீன்போலவே துள்ளுதீர்நீங்கள் கு[illegible]திலே
பரத்தையிழந்து விடுவீரெனக்கவிப் பாடினனே. ௨௨

சிரிப்பாம்ஜினாவை பயமறச்செய்திடுந் தீனவரே
குறிப்பாயுணர்ந்துக் கொள்வீர்கள்னைக் குழிபுகுந்தால்
இருப்பிடம்விட்டுப் போயிடவொன்றென்று முள்ளவனான்
நெருப்பின்கதையா லடிப்பானெனவுஞ்சொன்னே னிட்சயமே. ௨௩

ஜாதிவிட்டுச்சாதி யேகிஜினாச்செய்யுஞ் சகோதரரே
ஆதிமறையினிற் சொன்னசொல்நீங்க டறிந்திலையோ
வீதிகடோறு மலைகுதீர்வேசை விகாரத்தினுல்
ஓதியுணர்ந்தும் பலனில்லைப்பூவினி லுங்களுக்கே. ௨௪

புலியாமவுத்துப் பிடிப்பதென்னுமலே புவிதனிலே
எலிவலைபோல யிருக்கின்றயோனிக்கே னிச்சைவைத்தீர்
கலியாயொன்வீட்டின் கன்னியிருக்க கருத்தழிந்தால்
வலியவனானைக் கொடியநரகில் வதைத்திடுவான். ௨௫

ஜினாவைவிரும்பி யுலகிற்றிரியுந் தீனவரே
பனுவாகப்போவீ ரிறைகோபமாகிப் பவிஹறத்துடன்
ஜனாசாவாய்நீங்கட் போனவுடனே தரையிலுள்ளே
நினவாகிடந்து சலித்தழுவீரது நிட்சயமே. ௨௬

கொடிதாம்ஜினாவை விரும்பித்திரியுஞ் சுரும்பர்களே
மடிவாமலக்கல் மவுத்துப்பிடித்து மரித்துவிட்டால்
படியாங்கபுரிற் புகுந்தவுடனே படைத்தவனான்
கடியாலடிக்கும் படிசெய்வானென்னவுஞ் சாற்றினனே. ௨௭

சொன்னதையுண்மையென் றெண்ணிடி லுங்க டேரமெல்லாம்
அன்னமுகம்மதர்க்கு காகவுமாகி யகற்றிடுவான்
என்னமோசொல்லிப் புலம்புகிறானென்று எண்ணிடிலோ
சுன்னமதாகவே நீற்றிடுவானெனச் சொல்லினனே. ௨௮

குறைவாம்ஜினாவைச் செய்யுநீர்கொஞ்சமுங் கூச்சமன்றி
ஜனாசாவெனும்பெயர் வந்திடிலாதி தனியவன்றன்
பனவாகவுங்களின் சூரத்தைமாற்றியே பன்றிகட்போல்
நினவாயெழுப்பி பலீஹத்துசெய்குவா னிதம்நிதமே. ௨௯

தீனிற்பிறந்து விபசாரஞ்செய்யுந் திருடிகளே
மானமில்லாமலே பேசுநீர்மண வாளர்களை
நானென்றவாண்மை... பேசிடில்நாளை நரகத்திலே
வானும்புவியும் வெளியமைத்தோன்வைப்பான் மங்கையரே. ௩௰

சூளைகள்போலே யலைகிறீர்வெட்கஞ் சுணுக்கன்றியே
வேளைவருமென்று மெண்ணமல்மெய்யைச் சதமென்னவே
காளைகள்தேடி ஹறாமது செய்திடுங் கள்ளிகளே
மூளைச்சிதற வடிப்பார்கபுறில் முன்கிறுநக்கீரே. ௩௧

கொண்டானிருக்கக் கள்ளனைத்தேடியே கூடுகிறீர்
வண்டத்தனமாக மாறதுசெய்திடு மங்கையரே
தொண்டையைக்காட்டிக் கணவனைசித்தமுந் தூஷணித்தால்
சண்டதுபோலே யெரிவீர்ஜஹன்னத்திற் சத்தியமே ௩௨

ஆசைப்பெரிதாய்த் திரிகிறீர்சித்த மவனியிலே
காசைச்சதமென்று மெண்ணிஹறாம்செய்யுங் கள்ளிகளே
வேசைகள்போலே விபசாரஞ்செய்திடி மேலவந்தான்
தாசிகள்கூட போட்டங்கெரிப்பான் ஜஹன்னத்திலே. ௩௩

கையைப்பிடித்த கணவனிருக்ககண் காட்டிமெள்ள
பையல்கள்பார்த்துத் தேடியெடுத்துப் படுக்குகிறீர்
மையலிற்சிக்கி ஜினாவதுச்செய்திடு மங்கையரே
ஐயப்படுவீர்கள் நாளைகபுறி லடங்கியபின். ௩௪

பத்தாவிருக்கப் பாரதில்நீங்கட் பலவிதமாய்
ஹத்தாக்கட்போலே காளைகள்தேடிடுங் கன்னியரே
குத்தாக்கள் போலேயலைகிறீரிந்த கூட்டைநம்பி
செத்திடில்நாளை யெரிப்பான்கபுறுக்குள் சேர்ந்துவுடன் ௩௫

பொன்னகை போட்டுத் துயிலுமுடுத்திப் புவியதிலே
என்னுமழியா திருப்பதென்றெண்ணி யிருக்குகிறீர்
வின்னம்வருமென்று மெண்ணமற்பூவிற் மெய்மறந்து
சுண்ணமதுபோ லாக்கிடுவானென்றுஞ் சொன்னனேயான். ௩௬

திட்டியால்நித்தந் தெருப்பார்த்திருக்குஞ் சேயிழையே
மட்டியினுள்ளே புகுந்திடுஞ்செய்கை மறந்துவிட்டீர்
தொட்டிபோலுள்ள கபுறிற்புகுந்திடற் றுன்பமுண்டாம்
சட்டித்தகருமுன் ஜினாவையுங்களையுந் தள்ளிடுவீர் ௩௭

ஆங்காடிவாங்கித் தின்னத்திரியு மம்மையரே
பங்கமதான ஜினாவுக்குப்பையயல்கள் பார்க்குகிறீர்
தங்கநகையுஞ் சரிகையால்தைத்திடுஞ் சட்டைகளும்
அங்கமதிலே போட்டாலும்நாளைக் கழிந்திடுவீர். ௩௮

சிறுதீண்டிவாங்கித் தின்னத்திரியுந் தெரிவையரே
மருதண்டியிட்டு மயக்கிப்பயலை வரவழைப்பீர்
பருசதைவிற்றுத் திரிகிறீர்பள்ளர் பறையரைப்போல்
இருசைகள்கெட்டுப் போவீர்கள்நாளைக் கியாமத்திலே. ௩௯

புருடரிருக்கப் புறத்தியான்றன்னைப்புணருகிறீர்
உருசைபெரிதல்ல வென்றிருந்தாலு முடலழியும்
பிருசமாய்நீங்கள் செய்திடும்பாவங்கள் பின்றொடரும்
அருசமாய்விட்டுத் தௌபாவைச்செய்திடுந் தோகையரே ௪௰

அதிசயமான கிழவிகள்வந்தா லகற்றுமென்றே
கதிநாவின்கேழ்வ ருரைத்தார்நசீயத்திற் கன்னிகளே
புதிதாய்க்கிழவிகள் வந்தாற்பிழையை விளைத்திடுவார்
மதியாலறிந்து அடித்துத்துரத்திடு மங்கையரே. ௪௧

கரைத்தகிழவியின் சொற்கேட்டுவெங்கள் நபிமகளார்
வறத்தினில்நின்ற ஹுசைனுமேமகஞ்சினில் மாண்டனர்காண்
அறத்திகள்போலே திரிகுவாருங்கட் குடிகெடுக்க
துரத்தியடித்து விடுவீர்கள்யான்சொன்னேன் றோகையரே ௪௨

மாயக்கிழவி வருவார்கள்நித்தம் வலியவுமே
வாயாற்பலமொழி பேசிஜினாவில் வருத்திவைப்பார்
நாய்போற்கிழவிக ளுண்டுமனேகர் தையூசுகட்போல்
பேய்போற்றிரிந்து கெடுத்திடுவாள்சொன்னேன் பெண்டுகளே. ௪௩

கிழவிகள்கையில் வளையலணிந்துக் கிலுகிலென்ன
வுழவுகள்பார்த்துத் திரிவார்கள்நித்தமு மூர்முழுதும்
களவாகக்கூட்டிக் கெடுத்திடுங்கள்ளியைக் கண்டவுடன்
தளவும்விளக்குமாற் கொண்டடித்துத் துரத்திடுவீர். ௪௪

கசப்புங்கொடிய ஜினவதுசெய்திடுங் கள்ளிகள்தான்
இசப்பனைப்போலே திரிவார்கள்நித்தமு மில்முழுதும்
பசப்பிப்பசப்பிப் பேசிடும்பாங்கியைக் பார்த்தவுடன்
வசையதுப்பேசி யடித்துத்துரத்திடு மங்கையரே. ௪௫

கிழவிகள்சொல்லைக் கேட்டிடில்கேடு வருமெனவே
பழமொழிபேசி யிருப்பதறியிரோ பாவையரே
வழமைகள்சொல்லி வருவார்கொடிய வஞ்சகத்தாற்
சுழவாலடித்துக் கொண்டையுமறுத்துத் துரத்திடுவீர். ௪௬

குடிகள்கலைத்துக் கூட்டிக்கொடுக்குங் குறத்திவந்தால்
தடிகொண்டடித்துச் சாணிப்பால்வார்த்துத் தலையிலுள்ள
முடியையறுத்து முன்னாலேபோட்டு முரங்கிழிய
மடியைப்பிடித்துச் சாத்திடுவீர்சொன்னேன் மங்கையரே. ௪௭

கணவந்தனக்கு மொன்றறுதாண்டு கலாவிருந்தால்
மணமாகவொத்து வாழ்ந்திடில்சொர்க்க மனேகிடைக்கும்
கணமுடன்சண்டை பிடித்திடில்நாளை தீயதிலே
பிணம்போலெரிந்திட நேரிடும்யான்சொன்னேன் பெண்டுகளே. ௪௮

நாலுபெண்விக்கா செய்யும்படிக்கி நபியிறசூல்
ஆலமதிலே யுரைத்தஹதீதை யறிந்திலையோ
ஞாலத்தில்நீங்கள் நிதஞ்சண்டைபோட்டால் நரகதிலே
கோலமில்லாதா னெரிப்பதுதப்பில்லைக் கோதையரே. ௪௯

ஒருத்திக்கொருத்திப் புறம்பேசிநின்டா லுலகதிலே
அருத்துக்கறிதின்று ரத்தங்குடித்தாரென் றுலநபி
பெருத்தவறிவுள்ள வாயிஷாதம்முடன் பேசினதால்
வெறுப்பாய்புறம்பேசி யிருந்தால்நரகதில் வெந்திடுவீர். ௫௰

சக்களத்திபேரில் நித்தமும்பூவிற் சாடிசொன்னால்
பக்கத்திலுள்ள பெண்ணெல்லாங்கூடி பழித்திடுவார்
வெட்கங்களன்றிப் பேசுறீர்நீங்கள் வெகுமுறுக்காய்
குக்கலைப்போலே குலைத்துநரகிற் குடியிருப்பீர். ௫௧

றெத்தக்கொழுப்பி னாசையுமிஞ்சி நிலமதிலே
பத்தாவிடத்தில் நிதஞ்சாடிசொல்லிடும் பாவையரே
கத்தாவுரைத்தப் படிநடக்காதிடிற் கன்னிகளே
செத்திடில்நாளைம் படுவீர் நரகில் செருப்படியே. ௫௨

வெட்கஞ்சுணைக ளில்லாமற்பூவில் விதம்விதமாய்
சக்கன்றியுங்க ளுடலிலிருப்பதைச் சாற்றுகிறீர்
மக்கநபிமகள் ஷபாஅத்துமன்றி மகுஷறிலே
துக்கத்திற்சிக்கிக் கொள்வீர்கள்யான்சொன்னேன் றேழைகையரோ. ௫௩

கோளனைச்சேர்ந்துக் கெர்ப்பமுண்டாகிய குறியுணர்ந்துக்
காளையைத்தேடியே காவனெழுதிடுங் காரிகையே
மூளைகளெல்லா முருகிடும்வேளை முன்னேனி[illegible]த்திற்
சாளையப்பட்டு மழுவீர்ஜஹன்னத்திற் றையலரே. ௫௪

மனைக்குள்மகள்தான் ஜினாவதுசெய்ய மகிழ்ந்திருந்தால்
வினையும்பலீகத்து மாகிடும்நாளை மேலோனிடத்திற்
இனையாகிநீங்கள் பெண்கள்சிரிக்குஞ் சியல்கள்செய்தால்
பனுவாகிநாளை யெரிவீர்நரகதின் பள்ளத்திலே. ௫௫

தன்மகன்செய்யுஞ் ஜினாவுக்குமித்தக தலைமுழுக
மனமொத்துநீங்கள் தண்ணீரெடுத்துமே வைக்குகிறீர்
பொன்னினகையுந் துயிலதுதேடிப் பிழைகள்செய்தால்
வன்னியதனிற் புகுந்திடுவீர்சொன்னேன் மங்கையரே. ௫௬

பச்சைவடத்தால் துயில்களுடுத்திப் பசப்பிமெள்ள
லூச்சாப்பயல்களைத் தேடிஜினாவுக் குடன்படுவீர்
மிச்சமுதல்க ளிருப்போரைத்தேடும் பீவிகளே
குச்சுவழிந்து போனல்நரகிற் குடியிருப்பீர். ௫௭

கெர்ப்பமழிக்க யருந்ததுதேடுங் கிழவிகளே
இப்பாரதிலே கூனதுசெய்து யிறந்ததற்பின்
ஜப்பாறிடத்தில் போயிடில்காளைத்தையூசெனவே
வைப்பான்மலக்கு மாலீக்கிடத்தில் மங்கையரே. ௫௮

ஜினாவிற்பிறந்த பிள்ளைக்கினாளை ஷபாயத்துண்டோ
மனையிற்கணவ ளிருக்கமற்றோரை மருவுகிறீர்
வினைவந்துபூவிற் பிடித்திடுமென்றசொல் மெய்பல்லவோ
குனையலிமாமகன் சொல்லைமறந்திடுங் கோதையரே. ௫௯

குத்திசதமென்று வெண்ணியேயுங்கட் கொழுப்பதனால்
சத்தியந்தப்பி ஜினாவதுசெய்திடுந் தையலரே
எத்திசையோர்குடை யாள்வோனிடத்தினி லேகியபின்
கொத்திப்பிடுங்கித் தின்றிடும்நாகங் குழியதிலே. ௬௰

மவுத்தைமறந்து திரிகிறீர்மண்ணில் மதயிஞ்சியே
சவுத்துங்குரலு மொடிக்கிடும்நாளை சூனைப்பொழுதில்
கவுத்துகஞ்செய்யுந் தனிபாவைநீங்கட் காயமென்றால்
அவிழ்த்திடுங் குக்கலைப்போலே திரிந்துவலதிடுவீர். ௬௧

ஜினாச்செய்தவீட்டில் இயாமநாள்மட்டுந் தக்கோனுடைய
லானத்திறங்கி விடுமென்றுரைத்தன ரால்நபி
கனமாகவுங்கட் கணவனைவிட்டுக் கரும்கள்செய்தால்
ஜனமெல்லாங்கூடும் நாளைமஹ்ஷரிற் றூனறிவீர். ௬௨

வல்லோனுரைத்த மறையைமறந்துமே மண்ணதிலே
பொல்லாஜினாவது செய்திடில்நாளைப் புதைக்குழியில்
இல்லாவனுப்பு மலக்குகள்வந்துமே யெட்டடிக்குள்
கொல்லாமற்கொன்று நரகநெருப்பைக் கொளுத்திடுவார் ௬௩

பொய்யானவாழ்வைச் சதமென்றுவெண்ணிடும் பெண்டுகளே
வையம்நிஜமில்லை யென்றிருந்தாலு மவுத்துவரும்.
மையலிற்சிக்கி ஜினாவதுசெய்கிறீர் மண்ணதிலே
மெய்யாயிருப்போ ளிடுவான்நரகத்தில் மெல்லியரே. ௬௪

காத்துப்பட்டாலுன்னைத் தூக்கிப்போமென்று கணவன்முகம்
பார்த்துமொழிந்துப் பலிஹத்துச்செய்திடும் பாவையரே
சாத்துக்குமாகாச் சடலத்தைநீங்கள் சதமென்றெண்ணி
கூத்துகளாடித் திரிந்தால்நரகிற் குடியிருப்பீர். ௬௫

தாடியும்மீசை யில்லாதசண்டிப் பயல்களுடன்
கூடிமகிழ்ந்து குலாவிஜினாச்செய்யுங் கோதையரே
ஓடியொளிக்க விடமுண்டோகாளை யுயிர்ப்பிரிந்தால்
ஜாடியுடைந்தால் போவீர்ஜஹன்னத்திற் றையலரே. ௬௬

பணமும்நகையுந் தயிலுந்தாவென்று பத்தாவுடனே
தினமாய்கித்தஞ் சண்டைகள்செய்திடுந் தெரிவையரே
மணஞ்செய்தபேர்க்கு வஞ்சகஞ்செய்தால் வயிலதிலே
பிணம்போலெரிந்து விடுவீரெனநபி பேசினரே. ௬௭

பணங்காசுகையி லிருப்பதினாலே பயமன்றியே
குணமதுகெட்டுத் திரிகிறீர்கூடு சதமெனவே
க்ஷணமதில்வந்து மலக்குயிர்வாங்கித் தரைபுகுந்தால்
பிணம்போலேபோட்டு யெரிப்பான்நரகிற் பெரியவனே. ௬௮

முதல்மிச்சங்கையி லிருக்குதென்றெண்ணி மொழியுகிறீர்
சிதல்தின்னுந்தேக மிதுவென்றுநீங்கள் தெரிந்திலையோ
பதிலொன்றுஞ்சொல்லக் கூடாதுநாளை மலக்குவந்தால்
மதில்வைக்குமண்ணிற் குழிநேருண்டிவைத்து மறைத்திடுவார் ௬௯

செத்தாலுநாங்கட் சாவோமல்லாது திரவியத்தை
வுத்தாருறவின் முறையார்க்குப்பூவி லுதவிசெய்யோம்
கத்தாவுடைய பேர்சொலிக்கேழ்க்கினுங் காசொன்றீயோம்
வைத்தாலும்பெண்டீர் பிள்ளைக்கிவைத்துமே மறைந்திடுவோம். ௭௰

லங்காவுத்தி நகைகளும்போட்டு நடையில்வந்து
எங்கேவருகிறா ரிளங்காரியென்றுமே யெட்டியெட்டி
பங்கமில்லாமலே பார்த்தெதிர்நிற்கின்ற பாவையரே
அங்கமழிந்தாற் போவீர்நரகி லழுவதற்கே. ௭௧

அரசிலைவாளி குழலதிற்போட்டு அசைத்தசைத்து
பருவமயதுக் குபிரர்க்கெதிர்நிற்கும் பாவையரே
முறுஸல்க்கரசர் நபிதான்ஹறாத்தென்ற முழுதும்விட்டால்
துருசமதாகப் போவீர்நரகதின் குழியிலே. ௭௨

கங்கணங்கொப்பு வளையலும்போட்டுக்கதவடியில்
அங்கமசைத்துக் குபிரர்க்கெதிர்நிற்கு மன்னையரே
சிங்கமதான மவுத்துப்பிடித்துயிர் சிந்திவிட்டால்
நங்கமதாகக் கிடந்தழுவீர்கள் நரகதிலே. ௭௩

பட்டிரவுக்கையுந் தாவணிபோட்டுப் பகல்முழுதும்
எட்டித்தெருவை நிதம்பார்த்திருக்கு மேந்திழையே
பட்டிபோல்நித்தங் குலைக்கிறீருங்கட் பத்தாகளையே
சட்டியுடைந்தால் போவீர்கனலிற் றுழ்வதற்கே. ௭௪

காலினிற்றண்டை மோதிரம்போட்டுக் கலகலெனக்
கோலமணிந்துத் தெருப்பார்த்திருக்கின்ற கோதையரே
மால்தங்கைவீட்டி லிருக்குதென்றெண்ணி மகிழுகிறீர்
ஞாலத்தைவிட்டுப் போனுத்தெரிந்திடும் யான்சொன்னதே. ௭௫

கலைகளுடுத்தித் தெருவில்நடக்கின்ற காளையுடன்
தலையாட்டிநித்தம் நகைபேசிநின்றிடுந் தையலரோ

புலையாட்டைநம்பிப் புருஷர்க்குவஞ்சகம் பூவில்செய்தாய்
நிலைகெட்டுநாளை யெரிவீர்நரகின் நெருப்பதிலே ௭௬

கொண்டபுருடனைப் பூவதில்நீங்கள் குறைபதுவாய்
வண்டத்தனமாக வசைமிச்சம்பேசிடு மங்கையரே
தொண்டைகள்காட்டித் தூஷணஞ்செய்திடும் தையலர்தான்
சண்டதுபோல யெரிவீர்நரகதிற் றையலரே. ௭௭

பத்தாவைப்பூவில் பழிஹக்குச்செய்திடும் பாவையரே
சத்தாகிலும்பய மில்லையேயுங்கட் சரீரத்திலே
வுத்தகணவன் மனநொந்தால் வயிலதிலே
வித்தாயிருப்பவன் போட்டெரிப்பான்சொன்னேன் பீவிகளே ௭௮

கொண்டபுருடன் வெறுமைபாராமல் குவலதிலே
சண்டைகள்போட்டுத் தனிவாயுரைத்திடுந் தையலரே
மண்டையெழுந்து முடிந்திடில்நாளை மண்ணறையில்
முண்டமாய்ப்போட்டு யெரிப்பானிறையவன் முவந்தர்களே. ௭௯

நோவாய்ப்புருடன் கிடக்கையில்நீங்கள் நொடிகொடுத்துக்
கேவலமாகவே பேசுநீருங்கள் கிரகத்திலே
ஏவல்விலகல் ஷறஹதைவிட்டு யிடும்புசெய்தால்
காவலில்லாத நரகதிற்போடுவான் கன்னியரே. ௮௰

அணியும்நகையுந் தாவென்றுசொல்லியே தூஷணித்துப்
பணிதனக்காகப் பத்தாவைப்பேசிடும் பாவையரே
பிணிவந்துநாளை யுயிர்போனபின்புப் புதைகுழியில்
தனிவாய்க்கிடந்து யெரிவீர்கள்நாளைத் தையலரே. ௮௧

ஜினாவை விலக்குப் படலம்

முற்றிற்று.

—*—

ஆகபடலம் ௮-க்கு-கூடிய பாடல்-ருாசு ரு.

57

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இஃது,

கட்குடியை விலக்குப் படலம்.

கராத்திற்பெரிது சிறிதெனச்சொல்வதைக் கண்டதுண்டோ
அறத்திலுயர்ந்த நபியும்மத்தாகிய ஆண்பெண்களே
மரத்தினிலூருங் கள்ளதைப்பால்போல் மனதிலெண்ணி
கரத்தினில்வாங்கிக் குடித்தோரெறிவார் கபுருக்குள்ளே. ௧

அடிதப்பிப்போகுமென் றெண்ணுநீர்நீங்க ளவனியிலே
படிவிட்டறைக்குட் போனால்தெரியும் பயல்மொழியே
குடிகெட்டுப்போகுமென் றெண்ணுமற்கள்ளைக் குடிக்குகிறீர்
தடிவிட்டுயிரங்கே போனவுடன்படுக் தண்டடியே, ௨

மறுமொழிசொல்லிட மாட்டீர்மலக்குகள் வாய்மொழிக்கே
பறுவமாய்கள்ளைக் குடித்துத்திரிகின்ற பாயிகளே
சிறுமையிற்சிக்கிக் கொள்வீர்கள்ளைத் திருவிடத்திற்
வறுமைவருமுன் தௌபாவைச்செய்திடு மானிடரே. ௩

விலக்கலைநீங்கள் விடாமலெ[illegible]த்திடின் மேதினியில்
மலக்கல்மவுத்து வருத்தமாய்றூஹதை வாங்கிடுவார்
கலக்கம்வருமென்று வெண்ணுமல்நித்தமுங் கட்குடித்தால்
உலக்கைபோல்தண்டத் தடிவிழுமுங்க ளுடலதிலே. ௪

வெறியானவஸ்துகள் முழுதுங்கராமென வேதத்திலே
பெரியோனுரைத்த சொற்தட்டிப்பேசுதீர் பூவதிலே
கரிகாய்சமைத்துக் கொடுபோதீர்கள்ளுக் கடையதற்கே
மரியாதைகெட்டுப் போமுன்மதுவை மறந்திடுவீர், ௫

கள்குடித்தோர்கள் தெரிவில்கிடப்பதைக் கண்டுகொண்டே
பள்பறைப்போலே வோடுறீர்நீங்கள் பனையடிக்கே
உள்ளுக்கிருந்திடு மீமானுமாறி யொடுக்கத்திலே
சள்ளையில்லுள்ள யகப்படுவீர்சொன்னேன் சத்தியமே. ௬

கள்ளுஞ்சனாவும் வட்டியும்பொய்யுங் கராமெனவே
வள்ளல்முகம்மதர் வாயால்மொழிந்திடும் வாக்கியத்தை
எள்ளளவேனு மெடுக்காதிருந்து மிறந்துவிட்டால்
பள்ளமதான நரகிற்புகுந்துப் பதைத்திடுவீர். ௭

கூட்டுக்காய்கள்ளைக் குடிக்கிறீர்நீங்கள் சுணையன்றியே
ஆட்டுக்கறிகளைத் தின்றுமதனை யருந்துகிறீர்
பாட்டுகள்பாடி வெறிகொண்டலைந்திடும் பாவிகளே
போட்டுக்கொளுத்தியெரிப்பார்கபுரிற் போனவுடன். ௮

சாகாதிருக்கவோ கள்ளைச்சதமென்று சண்ணுகிறீர்
போகாதிருந்தவர் யாரெனச்சொல்லிடும் புவிதனிலே
தாஹாநபியினின் ஷறகைத்தவிர்ந்திடிற் றறையினுள்ளே
வேகாமல்வெந்து விடுவீர்கபுரில் விஜனமுடன். ௯

நீச்சர்கட்செய்திடும் வேலைபநீங்கள் நிலமதிலே
ஆச்சரியத்துட னெடுத்திராதுநல்ல அழகெனவே
மூச்சதுநீங்கியே போனால்கபுரில் முன்கர்நக்கீர்
கூச்சங்களன்றி யடிப்பார்களென்னவே கூறினனே. ௰

கள்ளைக்குடிப்பதிற் பலனுண்டோசொல்லுங் கசடர்களே
விள்ளுங்கலிமா வாராமலேபூவில் மெய்மறந்து
சள்ளையிற்சிக்கி மவுத்தாகிநீங்க ளடைபுகுந்தால்
வள்ளல்முகம்மதர் ஷபாயத்துசெய்யார் மானிடரே. ௰௧

மடத்தனமாகக் குடிக்கிறீர்கள்ளை மாநிலத்திற்
படைத்தோன்மறையிற் சொன்னதலீலே பராமுகமாய்
நடத்தையைவிட்டு விடாமலெடுத்தோர் நரகைவிட்டுக்
கடைத்தேறமாட்டா ரென்றுநபியுங் கழறினரே. ௰௨

அறத்தையிழந்து கராத்தைவிரும்பி யவனியிலே
மரத்தடியேகிச் சாணானிடங்கள்ளை வாங்குகிறீர்
குரத்தைமீன்சுட்டுக் கொடுபோவிருங்கள் கொடுங்கையிலே
பரத்தையிழந்து பலிஹூத்திலாயிடும் பாவிகளே. ௰௩

பரக்கத்துமாரும் வயதுங்குறையும் பலாயுமுண்டாம்
இரக்கமுமற்று போய்விடுங்கல்பி னிருளடையும்
ஆராகத்தைநினி லழைத்தோர்ஷபாயத்துஞ் சுகமுமில்லை
மரக்காமல்கள்ளைக் குடித்துத்திரிகின்ற மானிடரே. ௰௪

மானிடர்கண்டால் நகைப்பார்களுங்கள் வாய்மணத்தால்
தான்கொண்டபெண்டீர் முகமாரிபாயிற் சயனஞ்செய்வாள்
ஏனென்றுகேழ்க்க மதியற்றுநீங்க ளிடுதடிப்போல்
மானமில்லாமல் கிடப்பீர்மதுவின் மயக்கத்திலே. ௰௫

மதுவின்வெறியால் கிடப்பீர்களுங்கள் மனையிற்குள்ளே
எதுநடந்தாலுந் தெரியாதிருந்திடு மீனர்களே
புதிதாயொருவனை மனைவியர்கூடிப் புணர்ந்திடினும்
அதுவுந்தெரியா தனக்குறுங்கள்வெறி யானதினால். ௰௬

காடிகளேறியே வோடுநீர்களுக் கடையதற்கே
தாடியுமீசை நனைத்துங்குடிவிடாச் சகோதரரே
சோடியாய்கூடியே போவீர்பனைமரத் தோப்புகட்கே
சாடியுடைந்தபின் போவீர்ஜகன்னத்திற் சத்தியமே. ௰௭

பரியாசம்போலவே யெண்ணுநீராதி பனாந்தசொல்லை
தெரியாமல்கெட்டு மதுவுண்ணக்சற்றிடுந் தினவரோ
சரியாம்ஷரகின் படிநடவாமற் ஜகன்னத்திலே
ரியாகவெந்து விடுவீர்கள் கட்குடிக்காரர்களே. ௰௮

பதியைநிஜமென்று வெண்ணியேநீங்கட் பலவிதமாய்
திமுடியாதென மிக்கவுமீசை முறுக்குகிறீர்
இயனிபுலீசு சொல்லையெடுத்த சகோதரரே
தியற்றுகாலைத் திரிவீர் கட்குடிக் காரர்களே. ௰௯

நடித்தாலு [illegible] பில வண்டோசொல்லுங் குறும்பர்களே
அடித்தாலுங்கீழே விழுந்துயெழுந் வலறிடுவீர்
பிடித்தாலுநேரே நிற்கப்பிலனில்லாப் பேயர்களே
டிந்துகுடியில் புகுந்தாலறிவீர்கள் மானிடரே; ௨௰

வானமும்பூமியும் யாவும்படைத்தோன் மறையதிலே
னமாய்சொன்ன ஹறாமானகள்ளதை யேன்குடிப்பீர்
ானமில்லாம லிருந்துநொடியில் மவுத்துவந்தால்
ான்படும்பாடு தெரிந்திடும்நுளை ஜகன்னத்திலே. ௨௧

ஞனபேர்கள் வயற்றிற்பிறந்துந் திருடரைப்போல்
ானமில்மாமற் கள்ளையருத்திடு மானிடரே
னமதாகவே யீமானிழந்து யிறந்தபின்பு
பானுல்நரகிற் புகுவீர்கள்சத்தியம் பொய்யில்லையே. ௨௨

ஒருகரங்கள்ளைக் குடித்திடிலீமா னொழிந்துவிடும்
மருதரம்வாங்க நினைத்திடில்வல்லோன் பலாவிரங்கும்
பருகும்பழக்கம் விடாமற்றிரிகின்ற பாயிகளே
கருகும்நெருப்பினில் வெந்திடுவீர்கள் ஹக்காணைசொன்னேன். ௨௩

குடிவெறியாகத் திரிந்தோர்க்கிறையவன் கோபமுண்டாம்
படியிற்பழகிய பழக்கம்விடா திடின் பாயிகளே
முடிவுனாள்வந்து பிடித்துயிர்போனால் முன்கீருடைய
தடியடியுங்கட்க்கு தப்பாதுவென்னவுஞ் சாற்றினனே. ௨௪

சட்டைத்தலைப்பாய் சராயுமணிந்துச் சாணானிடம்போய்
பட்டையிற்கள்ளை வாரெனச்சொல்லிடும் பாயிகளே
துட்டைக்கொடுத்து யேன்ஹராந்தேடுறீர் தோசிகளே
கட்டையழிந்துபின் போனாலறிவீர் கனலதிலே. ௨௫

இசுலாத்திலுள்ள வடையாளமுங்களுக் கென்னசெய்ய
கசடானகாபர்கள் போலேநடக்குங் கயவர்களே
பிசகாமவுத்தது வந்துபிடித்து பிரண்டுவிட்டால்
தசைகள்கழிந்திட வடிப்பார்நரகிற் றடியதனால், ௨௬

மஸ்துக்குடித்துமே வாய்மதம்பேசிடும் வம்பர்களே
பஸ்தியிலென்று மிருக்கவோயிந்த பழக்கம்வைத்தீர்
கஸ்திவருமென்று மெண்ணாமற்காயங் கழிந்தபின்பு
அஸ்தியுருகும் நெருப்பதினாளை யகப்படுவீ[illegible] ௨௭

சுன்னத்துஞ்செய்து தாடியும்வைத்து துலுக்க[illegible]ல்
என்னத்துக்காக பெயரெடுத்தீ[illegible]சு லாமெனவே
சொன்னசொல்விட்டு மதுவைக்குடித்திடிற் றுன்பமுண்டாம்
வின்னமதான நரகிற்புகுந்துமே வெந்திடுவீர். ௨௮

அதாபுவருமெனச் சொன்னதைநீங்க ளகலவிட்டு
மதஹபுமாறி மனம்போல்மதுவை மருவுகிறீர்
கிதாபுனுரைத்த மொழிமாறிப்பேசுங் கெடும்பர்களே
பதவிகளற்று யெரிவீர்ஜகன்னமாம் பள்ளத்திலே. ௨௯

ஆபத்துவந்து விடுமென்றெண்ணாம லவனியிலே
பாவத்தைச்செய்யும் படியாய்பணங்கட் பருகுகிறீர்
கோபத்திற்சிக்கி மலக்குயிர்வாங்கிக் குழிபுகுந்தால்
சாபத்திலாகி நரகிற்புகுந்து சலித்திடுவீர். ௩௰

குழிவிட்டுனுளே யெழுப்பிடும்போது குதாவுக்களே
வழிகெட்ட கூட்டமென் றெண்ணியே சூர்த்தை மாத்திவோன்
விழிகெட்டுப்பூவில் திரிந்துகிதமு வெறிகுடித்தால்
கழிபட்டுனுளே யலேவீர்கள்கட்குடிக் காரர்களே. ௯.௧

சூலுங்கழுத்தினிற் கொட்டருவெரனையுந் தூக்கிக்கொண்டு
காலதுனுலு வால்முகம்நீண்ட கருநிறமாய்
பால்போலேகள்ளைக் குடித்தோரெழும்புவர் பாறைவிட்டுக்
கோலப்படுத்தியே வைப்பானிறையவன் கோபங்கொண்டே, ௯.௨

நஜிசனைதத்தின்னுங் கைவானைப்போலே நசியும்மத்திற்
குசியாகக்கள்ளைக் குடித்தோர்வருவார் குழியைவிட்டே
பசியாகவென்று மிருக்குஜகன்னத்தின் பள்ளத்திலே
எரிஜுடன்கூடி யெரிவீர்களென்று மியம்பினனே. ௯.௩

பழிப்பானகள்ளைக் குடித்திடும்பள்ளர் பனையனாப்போல்
செழிப்பாகநீங்கள் தேடுந்திரவியஞ் சிலவுசெய்வீர்
ஒழிந்துமேனுளும் பழகியிருந்தா லொடுக்கத்திலே
எழுப்பிவிருத்தியதாபுகட்செய்வா னிறையவனே. ௯.௪

தோட்டத்திலேயியே சேருவீர்கட்குடித் தோழரெல்லாம்
ஆட்டமும்பாட்டமு மதிகமுண்டாயிடு மவ்விடத்தில்
வாட்டமில்லாமல் மதுவைக்குடித்திடும் மானிடரோ
கூட்டம்பிரிந்து வோர்நெர்ப்போதுக் குழிப்புகுவீர். ௯.௫

நால்மணிநேரத்தி லோடுநீர்கட்குடி நாட்டம்வைத்தே
கோல்புரியாதி குருஆனிலோதினன் குற்றமென்றே
பால்போலவெண்ணெய் பலனுளும்நீங்கள் பருகுகிறீர்
சொல்தனைசவீடு சதமல்லோ ஆவித் துலேந்திடுமே. ௯.௬

துஞ்சினுல்லுளைச் சுடுவானிறையவன் துரிதமுடன்
அஞ்சாமற்கள்ளைக் குடிக்கிறீராதி யருள்மறந்துக்
கொஞ்சமும்புத்திக ளில்லாதிருக்குங் கூட்டாளிகளே
பஞ்சதுபோல யெரிவீர்ஜகன்னத்தின் பள்ளத்திலே. ௯.௭

கள்ளின்வெறியால் திரிந்துவலேந்த கசடர்களே
வள்ளல்முகம்மதர் திரேனெரன்றோதவும் வாயுமுண்டோ
உள்ளுக்கிருக்கிற யீமானும்மாறி யுயிரிழந்து
பள்ளத்திலேகிப் புகுந்தால்தெரியும் பயல்மொழியே. ௯.௮

மஜ்லிஸினிலேகி வணங்காமல்நீங்கள் மனமுரணடாய்
பசியாரக்கள்ளைக் குடித்தீர்களானால் பராபரந்தான்
முசியாமலென்றும் நரகத்திலிட்டு முனங்கும்படி
நஜிசானகாபர்களூடேயிருந்திட நவின்றிடுவான். ௧௯

கலிமாமொழிந்து யீமானுங்கொண்டுமே காபரைப்போல்
சலியாமற்கள்ளைக் குடிப்போனானுளே ஜகன்னத்திலே
வலியவனிட்டு யெரித்திடுவானென்று வள்ளல்நபி
கலியுகந்தன்னி லிருப்பார்களென்ன ஹதீதுரைத்தார். ௨௰

தப்பாமல்பூவி லதுபோலநீங்கள் தலையெடுத்து
ஐப்பாருடைய கோபத்திற்சிக்குஞ் சகோதரரே
இப்பாரில்கள்ளைக் குடிப்போர்களனை யெரிநரகில்
வைப்பார்மலக்கு மாலிக்கிடத்தில் மகுஷரிலே. ௨௧

ஆயதுரைத்த மொழியைமறந்து அவனியிலே
வாயால்பினத்தி மதுவைக்குடிக்கின்ற மானிடர்கள்
நாய்போலேசெத்துப் புகுவார்களனை நரகதிலே
காயஞ்சதமில்லை சொன்னதுசத்தியங் கண்டுகொள்வீர். ௨௨

அடித்துத்தலையை யுடைத்தாலுஞ்சொல்வதற் கஞ்சவேனோ
படித்துபடித்து பழித்திடவேனித்தம் பார்தனிலே
அடிக்கப்பகைக்க வுதைத்தாலுமனுவிலல் தூஷணிப்பேன்
குடித்தவெறியிற் கோல்கொண்டடிக்கும் குரும்பர்களே. ௨௩

சின்னத்தனமா யெனைப்பேசிநீங்கள் சினந்துகொண்டால்
வின்னமெனக்கொன்றும் வாராதுகாணிந்த மேதினியில்
வன்னமயில்வடி வாகயிருந்த வள்ளலடி
சென்னியில்வைத்திடுங் காதிர்முகியத்தீன் செப்பினனே. ௨௪

தையலர்சொல்லைத் தட்டாமல்நீங்கள் சானுனிடத்திற்
கையில்கலசங் கொடுபோய்வாங்குதீர் கள்ளதனை
மையலிற்சிக்கி மதுவையருந்திடு மானிடரே
ஐயப்பட்டாரல்லோ ஹவ்வாசொல்கேட்டுமே ஆதம்நபி. ௨௫

இந்தச்செயலை யறியாமல்நீங்க ளிடறதுவாய்
சொந்தமனைவியின் சொற்போல்நடக்கின்ற தோழர்களே
கந்தங்கமழும் நபிமொழிந்தார்கள் ஹறுமௌவே
சந்தாபமாக வெண்ணிடில்நாளைக்குத் தானறிவீர். ௨௬

பொல்லாதவெந்தன் சொல்லதைஹவ்வா புகன்றதினல்
தொல்லையிலாதம் முன்னூறுவருடந் துயரடைந்தார்
அல்லாவின்றூதர் சொன்னஹிதை யகற்றிவிட்டு
இல்லாள்மொழியை நம்பிடில்பின்னு விடஞ்சலுண்டாம். ௪௭

கொழுப்பதுமிஞ்சிப் போயல்லோகள்ளைக் குடிக்குகிறீர்
இளைப்புஞ்சளியும் வலிப்புமுண்டாகி றணங்களுண்டாம்
பிழைத்துவெகுநா ளிருக்கலாமென்றும் பிழைகள்செய்தால்
அழைக்குமலக்கு வருவார்கொடியினி லன்னையரோ, ௪௮

பெண்ணாய்ப்பிறந்து வந்தீர்கள்பூவதிற் புத்தியன்றி
மண்ணாக்கீங்கள் போனலதிலோர் வருத்தமில்லை
எண்ணாருமுள்ளவன் சொன்னதலீலை யிகழ்ந்துவிட்டால்
வண்ணான்வெளுப்பது போலேமலக்குகள் மாட்டிடுவார். ௪௯

ஆதம்நபியின் விலாவெலும்பாலே ஹவ்வாதனையும்
பாதமுடியுமில்லான் படைத்தனன் பாவையென்றே
கோதுமையான கனியைக்கொடுத்தக் கொடுமையினல்
மாதமூவாயிரந் தனுனூறாயுமு வருத்தப்பட்டார். ௫௰

அந்தநபியின் பெண்மக்களான அரிவையரே
சொந்தமோயிந்த வுலகதின்வாழ்வென்றுஞ் சொல்லிடுவீர்
சிந்தைமகிழ்ந்துக் குடிக்கிறீர்களைத் தினந்தினமும்
இந்துமதத்தின் பெண்போல்நரகி லெரிந்திடுவீர். ௫௧

பனையதிலூறுங் கள்ளதைநீங்கள் பழக்கமதாய்
மனைக்குளழைத்துக் குடிக்குறீருங்கள் மதமிஞ்சியே
தினைக்குமுன்வந்து விடுவார்மலக்கு நிமிஷத்திலே
சினைப்படுவோமென்று யெண்ணினற்சேய்கள் கிட்டாதுகண்டீர். ௫௨

மனைவிக்குகள்ளை வாங்கிக்கொடுவரு மானிடரே
பனுவாகப்போவீர் நாளைக்கபுரில் படுத்தவுடன்
துனைவதுநீங்கள் பயமற்றுச்செய்யுங் குரும்பர்களே
இனம்விட்டுநாளைக் குபிருடன்சேர்ந்து யெரிந்திடுவீர். ௫௩

இருபேருங்களைக் குடித்திடிலகுணத் திரங்குமென்றே
சுருபமுமாறி ஆயிசுக்குறைந்து தொழிலுங்கெட்டு

பெருமைபிடித்து மேகத்தால்தேகம் மெலிந்துபுண்ணாய்
கருகும்படிவந்து நேரிடுங்காணுங் கசட்கர்களே. ௫௪

கருமவியாதிக ளாருந்தொடர்ந்திடுங் கட்குடித்தால்
பெருமையாயெண்ணிக் கொண்டல்லோநீங்கள் பினத்துகிறீர்
சிறுமைவருமென்று வெண்ணுமற்பூவிற் றிரிவதெல்லாம்
மறுமைநாள்வந்தா லறிவீர்மதுவுண்ட வண்மைகளே. ௫௫

மக்களில்லையென்று மதுவைக்குடிக்கிறீர் மண்ணதிலே
வெட்கமில்லாத வேசைகள்போலே விதம்விதமாய்
பக்கத்திலுங்கள் கணவனைச்சேர்ந்தும் பலனில்லையாம்
துக்கப்படுவதே யல்லாமற்பூவிற் சுகமில்லையே. ௫௬

அடிக்கடிபூவிற் சிரிக்கிறீருங்க ளாண்மையினால்
கொடிக்குமுன்வந்து விடுவார்மலக்கு நிமிஷத்திலே
துடிக்கத்துடிக்க வுயிரேகினீளத் துஞ்சிவிட்டால்
கடிக்குமரவுந் தேள்வந்துவுங்கள் கபுறக்குள்ளே. ௫௭

சத்தம்வெளியாகக் கேழ்க்கமொழிந்திடுந் தையலரே
குத்தம்வருமென்று யெண்ணுமற்கள்ளைக் குடிக்குகிறீர்
முத்தன்சமுகத்தில் போயிடில்நாளை முனிவுபெற்று
புத்தைவணங்கிடும் பெண்போலேநின்று புலம்பிடுவீர். ௫௮

வழக்கமதாக வாண்பெண்ணுங்கூடி மதுவதனை
பழக்கம்பெரிதாய் குடிக்கிறீர்நித்தமும் பாரதிலே
உழக்குப்படியா லளந்ததைவாங்கி வீட்டினுள்ளே
புழக்கமதாக வெடுத்தால்நரகிற் புகுந்திடுவீர். ௫௯

ஞட்டினாற்பிள்ளை தரிக்கவில்லையென்றுஞ் சொல்லிச்சொல்லி
ஆட்டுக்கறிகளுந் தின்றுமேகள்ளை யருந்துகிறீர்
வீட்டுக்குள்வைத்துக் குடித்தாலுநாளை மேலோனுடைய
சோட்டடியுங்கட்குத் தப்பாதுயூன்சொன்னோன் றூகையரே. ௬௰

மனைவியுமன்னனுஞ் சோடாயிருந்து மதுக்குடித்தால்
யினமொன்றுமில்லான் லஹனத்திறங்கு மிருவருக்கும்
பனைமரம்போலே கிடப்பீர்வெறியினிற் பாயதிலே
நினைவுமறந்து விடுவீர்கள்கள்ளின் நிஷானதினால். ௬௧

கள்ளைக்குடித்து விருபேருஞ்சேர்ந்தால் கருமுடுகும்
பள்ளுப்பறைகளும் செய்வார்களந்தப் படியல்லவோ
எள்ளும்பயமன்றி யேன்பிறந்தி ரிசுலாமதிலே
வள்ளல்நபிமகள் ஷபாஅத்துஞ்செய்யார் மகுஷரிலே. ௯௨

கட்குடியை விலக்குப் படலம்

முற்றிற்று.

—*—

ஆகபடலம் ௯-க்கு-கூடிய பாடல்-௫௯௭.

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இஃது,

முகற்றமாதத்திற்செய்யுங் கெடுதிகளை

விலக்குப் படலம்.

முகற்றமாமாதம் பிறைனேக்கிநீங்கள் முனைவுடனே
விகற்பமாய்பூவில் குழிக்கெல்லித்தியில் விரகுமிட்டு
தொகுப்பாயெரிக்கிறக் காரணமென்னமோ சொல்லிடுவீர்
நகைப்பார்க்கிடவென்ன காணுந்தெரிந்திலீர் நாயமதோ. ௧

உங்கட்குதவிகள் செய்பவன்றன்னை யொதுக்கிவிட்டு
சங்கையாய்பஞ்சா தனக்குமேநீங்கள் தாள்பணிந்து
லங்கரிழுக்குரோ மென்றுமேசொல்லி நகைக்கிடமாய்
பங்கங்கள்செய்திடில் பரமனுக்கென்ன பகர்ந்திடுவீர், ௨

நேத்திக்கடனென்று நினைத்திடும்வேஷத்தால் நீங்களுமே
கூத்துகளாடிக் குலாவித்திரிகின்ற குறும்பர்களே
ஆத்துமமுள்ள வனைக்குமோயிந்த வவதியெல்லாம்
காத்தோடிலங்கு கர்த்தன்சமுகத்திற் களாந்தழுவீர். ௩

ஆய்வுலகத்தி லனேகபுத்துண்டு அதுகட்கெல்லாம்
தாய்புத்துவென்று சோடித்ததர்க்கு தனமளித்து

ஏய்புத்தியாலே யெடுத்துத்திரிந்திடு மேழைகளே
கோய்வுத்துமாண்டுயி ரேகிடுயிக்கு நொடியதிலே. ௪

காடாக்கழுத்திலுங் கையிலுங்கட்டி நளினமுடன்
சோடாகச்சேர்ந்து தெருத்தோருமாடிடுந் தோழர்களே
ஆடாமலாடிப் பழிக்குகிறீரண்ணை லசைனுசனை
கேடாகவந்து முடிந்திடும்னாளே கியாமத்திலே. ௫

பஞ்சாகிறுத்திடு மிடத்துக்குநீங்களும் பாணக்கத்தை
அஞ்சாமலேகொடு போய்வைத்தெடுத்ததை யருந்திடிலோ
நஞ்சாயிருக்குமே நாளைக்கியாமத்தில்லுயன்முன்னே
வஞ்சகமான செயலதைவிட்டு மறந்திடுவீர். ௬

இந்தச்செயல்களை பார்க்கவனேக ரின்பமுடன்
மங்கைகளாகவே திரண்டங்கேபோவார்கள் வையகத்தில்
அந்தச்செயலால் வருதுமனேக வவஸ்தைகளே
சொந்தமாய்பஞ்சாவை வைத்தோர்க்குலந்திடுந் தோஷமென்றே. ௭

மஆவியாவின்ற மகன்றுனெஜிதின் வல்வினையால்
ஹாவியாவென்னும் நரகிற்புகுந்தான் கடைசியிலே
பாவிகளாகி விடுவீர்களிந்தப் படிநடந்தால்
ஆவியழிந்தபின் நரகினிற்றாழ்ந்து அழுதிடுவீர். ௮

றஜாக்கஞ்செய்து யிருக்கலாமென்றல்லோ றுட்டம்வைத்து
மோசங்கள்செய்த வெஜிதுமருவான் முதலுமெங்கே
றோசங்களன்றிர் திரியுகிரீரிந்த வுடலைநம்பி
வாசங்கமழும் நபிசொல்மறந்திடு மானீடரே. ௯

கிமுசாண்டிருக்கலா மென்றல்லோவெண்ணி க்ஷணமதிலே
தமதுபடையினுல் நபிகுலத்தோரை தகித்துவிட்டான்
குமுசலாய்க்கூடி யோசனைசெய்தக் கொடியவனை
கிமைக்குள்மவுத்துப் பிடித்திட்டசெய்தி கிஜமில்லையா. ௰

மறந்துவுலகின் வாழ்வினைநித்த மனதிலெண்ணி
பிறந்துஅரசைப் பெரிதெனவெண்ணிய புல்லனுந்தான்
யிறந்திடுஞ்செய்கை யரியாமற்கெட்ட வெஜிதவனும்
கறைந்துநரகி லெரியுரானே கியாமமட்டும். ௰௧

பித்தளைச்செம்பினை யுருச்செய்துநன்னபிப் பேரென
வைத்திடிலென்ன வகைசொல்வீர்னாளை மனுஷரிலே
செத்திடும்பின்னால் நரகத்திலிட்டுச் செருப்பதனால்
கத்தாவடிக்கும் படிசெய்வானென்றுக் கழறினனே. ௰௨

ஷரக்கிலில்லாச் செயலையெடுத்துத் தரைதனிலே
மறவாமல்பஞ்சாவை வைத்துவணங்கிடும் வம்பர்களே
குறைவானவேலையைச் செய்வீர்களானாற் கொடுநரகிற்
விறகாயெரிந்து விடுவீர்களென்று விளம்பினனே. ௰௩

பத்தினியாம்பீவி பாத்திமாபெற்றிடும் பாலகனைக்
குத்திரமாகக் குறைவுகள்செய்திடுங் குரும்பர்களே
அத்திரிவிட்டுச் சுடுவார்மலக்கு வவன்சொற்படி.
புத்தியில்லாமலே வேஷமிட்டாடிடும் புல்லர்களே. ௰௪

சொர்க்கக்கனியுண்டு வளர்ந்திடுமெங்கள் துரையுசைனை
மக்கத்தைச்சேர்ந்த கருபலாவென்னு மைதானத்திலே
வெழுக்கமில்லாத வெஜிதவன்செய்த வினையதனால்
துக்கப்படாமலே வேஷமிட்டாடிடுந் துட்டர்களே. ௰௫

கருபலாதன்னில் ஷகிதாயிடுமெங்கள் சண்மணியை
பெருவெல்லாம்நீங்கள் பஞ்சாவைவைத்துமே சேவிக்கிறீர்
குருவாமுகம்மதர் பேரர்க்குப்பூவிற் குறைகள்செய்தால்
சருகாகிடந்து யெரிவீர்கள்னாளை ஜகன்னத்திலே. ௰௬

பாராயிமாமென வைகளைமிச்சமாய் பண்ணிவைத்து
சேராக்களிட்டு யிமாமுசைனென்னவே செப்புகிறீர்
காரணமேகக் குடையிடுமெங்கள் கபிபிறகுல்
பேரனைப்பூவிற் பழித்தோர்க்குநாளைப் பெருநரகே, ௰௭

காசிம்பஞ்சாவென விலக்கித்தகடொன்றைக் கத்தரித்து
பூசிமினிக்கியே பூமாலையிட்டிடும் புல்லர்களே
ஆஷிங்குலத்தினி லுள்ளவர்பேரை யதர்க்குவைத்தால்
தூஷணிப்போர்க்கு யிடமாகுமல்லவோ தோஷிகளே. ௰௮

தாபுத்துசெய்து வலங்காரமாகவே தாளையொட்டி
பாவித்தெடுத்துத் தெருத்தோருஞ்சுற்றிடும் பாயிகளே
சேவித்துகையை யெடுத்திடுங்காபர் செயல்கள்செய்தால்
ஆபத்திற்சிக்கி நாளைநரகி லழுந்திடுவீர். ௰௯

ஒன்பதும்பத்தும் னோம்பும்பிடித்திட வுங்களுக்காய்
அம்பர்கமழ்நபி வாயாலுரைத்தன ரவனியிலே
செம்பொனகர்க்கர சானோர்மொழியைத் தெருவில்விட்டு
வம்பாகவேஷம் பூண்டோரெரிவார் வயிலதிலே. ௨௰

எரிவதுசப்பிலே யேழாம்நரக மிடமதிலே
அரிவீர்கள்ளுளே யசனுவசைன்பேனாவைத் தாடினவர்
பொரியிற்புகுந்து வெஜீதுடன்கூடிப் புலம்பிநித்தம்
கரியாயுருகியே வெந்திடுவீர்கள் ஹக்காணைசொன்னேன். ௨௧

புத்தைவணங்கிரார் காபர்களென்றும் புவிதனிலே
சுத்தமாய்நீங்கள் நடப்பதுபோலவே தூஷணித்தீர்
பத்துயிருபது ருத்தல்பித்தாளை பஞ்சாக்கள்செய்து
வைத்துயிமாமெனச் சொன்னாலதர்க்குப் பதிலல்லவோ. ௨௨

தெளிவானதீனிற் பிறந்துமேநீங்கள் திருடனைப்போல்
வெளியரியாமலே பஞ்சாக்கள்வைத்து வணங்குகிறீர்
ஒளிவாமுகம்மதர் பேரனையிந்த வுலகத்திலே
பளியதுசெய்த வெஜீதுடன்கூடிப் பதைத்தழுவீர். ௨௩

உமையாகுலத்தார் செய்திடும்பாவங்க ளுங்களுக்கே
சுமையாகவந்து விடுமென்றுயானிதைச் செப்பினனே
யிமைநொடிக்குள்ளே வருங்காண்மவுத்து விவ்வுலகில்
சமையம்வருமுன்னே விட்டுதவ்பாச்செய்வீர் சகோதரரே. ௨௪

கலையென்றுசொல்வது வேதமதல்லவோ கசடர்களே
நிலையில்லைசொன்னேன் நமக்கிந்தவாழ்வு நிலமதிலே
குலைபாதகங்கட் செய்தவெஜீதுக் குலங்களெல்லாம்
மலைபோல்நெருப்பி லெரிகிறானுளே மனுஷர்மட்டும். ௨௫

சிலைகளைவைத்து வணங்குராரென்னைச் சின்மதுவாய்
உலகிற்குபிணா பழித்துமேவித்த முதாசனித்து
தலையன்றிக்கைகளை பித்தளையாலே சமைத்துவைத்தீர்
கலைமொழிதேரா திறந்தால்நரகிற் கரைந்தழுவீர். ௨௬

ஷக்கென்றுயென்சொல்லை யெண்ணிடில்னுளைத் தனையைவிட்டு
ஆக்கனிடத்திற் போனால்தெரியுங்கா ணசடர்களே
மக்கமுகம்மதர் மகவாம்பயந்திரு"மாணிக்கத்தை
வெக்கப்படுத்தியே வைத்தால்நரகினில் வெந்திடுவீர். ௨௭

அறபுக்கரையினி லில்லாமற்கெட்ட வமலதுவை
ஷறகைக்கெடுத்து யெடுத்துநடக்குஞ் சகோதரரே
குறைவுவருமென வெண்ணாமற்பூவில் குதிப்பதெல்லாம்.
பிறகுதெரிந்திடும் பஞ்சாக்கள்வைத்த பெருமைகளே. ௨௮

முராதெனவேசிலர் வேஷங்கள்பூண்டு மிருகத்தைப்போல்
கராம்வாங்கியுண்ணத் திரிவோர்கள் நாளை யொமத்திலே
நிரமாறிபூவிட் டெழும்பிநரக நெருப்பதிலே
மரம்போற்கிடந்து வெந்திடுவீர்சொன்னேன் மானிடரே ௨௯

வயற்றுப்பிழைப்புக்குப் பஞ்சாவெனச்சொல்லி வைத்துக்கொண்டு
கயறதைக்கொண்டு பின்கட்டுகட்டியே கைகளைப்போல்
தயார்செய்துவைத்துப் பணம்வாங்கித்தின்னுஞ் சகோதரரே
துயராய்கிடந்து அழுவீர்நரகத்தின் சூடதிலே. ௩௰

பண்டிகையென்னவே வேஷங்கள்பூண்டுப் பணமதற்காய்
மண்டிகள்தோறும் வருவாரனேக மனுடர்கள்தான்
சண்டிகளுக்குமே காசுகொடுப்பவர் ஜகனத்திலே
தெண்டனைக்குள்ளே யகப்படுவாரெனச் செப்பினனே. ௩௧

க்ளாபோகநீங்கட் புளியிட்டுத்தேய்த்துக் கழிகின்றாய்
தளையில்மினுக்கியே வைத்தாலுஞ்சாதிபித் தாளையல்லோ
பிறையையமைத்த முகம்மதர்போரின் பெயரைவைத்தீர்
மறையையுணர்ந்துப் பாராமற்பேசிடு மானிடரே. ௩௨

பூவாரந்தன்னையும் பூண்டுபித்தாளையைப் பூசிக்கினும்
நாவாலொருமொழி சொல்வதுண்டோவுங்கள் நாட்டத்துக்கே
கோவாமுகம்மதர் மகவாம்பயந்தக் குலக்கொழுந்தை
தாவாரந்தோறுமே வைத்துஉசைனெனச் சாற்றல்நன்றோ. ௩௩

குழியினெருப்பிட் டெரித்துக்கூத்தாடுங் குலாமர்களே
பழிவந்துசூழும் நாளைக்கபுரிற் படுத்தவுடன்
யிழிவாகவெண்ணரி யுரைக்கிறீரெங்க ளிமாமுசைனை
கழிவாநரகிற் புகுதுவீர்நீங்கள் ஹக்காணைசொன்னேன் ௩௪

மஜீதிலெதிரில் பஞ்சாநிறுத்தி மகிழுகிறீர்
யெஜிதுகுலத்திற் பிறந்துவளர்ந்த யிடும்பர்களே

குஷியாகப்பார்த்து நடந்தவர்களைக் குழிப்புகுந்தால்
பசியாயிருக்கும் நரகத்திற்சேர்வீர் பலிகத்துடன். ௯௫

முகற்றமாதத்திற்செய்யுங் கெடுதிகளைவிலக்குப் படலம்
முற்றிற்று.

ஆகபடலம் ௰-க்கு கூடிய பாடல்-௬௯௨.

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இஃது,

தையூசுகளுக் குபதேசித்த படலம்.

பெண்டுகள்தன்னின் மனம்போற்றிரிந்திடப் பூவதிலே
கண்டுங்காணாதது போலேவிருக்குங் கசடர்களே
என்றென்றுமுள்ளவ னுள்ளநரகி லிட்டுங்களை
சண்டதுபோலே யெரிப்பானென்னுளுந் தையூசுக்களே. ௧

கூட்டிக்குடுத்து கூலிவாங்கித்தின்னுங் குரும்பர்களே
ஏட்டிலெழுத வடங்கானிடஞ்சென்று லென்னசொல்வீர்
நாட்டிகழுவினிற் போட்டுநரகதில் னுறும்படி
தாட்டிகமுள்ளவன் செய்திடுவான்சொன்னேன் தையூசுகளே. ௨

தனமுள்ளோர்வந்தா லழைத்துபோயில்லதிற் றனிறுத்தி
கனமாம்பெண்சாதியை யெதிரிலழைக்குங் கயவர்களே
இனஞ்சனமொன்று மில்லான்மொழியை யிகழ்ந்துவிட்டால்
சனமெல்லாங்கூடும் னுளிற்றையூசென சாற்றிடுவான். ௩

பெண்டுகள்தன்னை மனம்போலலைந்திடப் பூவில்விட்டு
கண்டுகலந்து கூடியிருக்கின்ற காளைகளே
உண்டுபடுத்தியே வைத்தோனரகி லுங்களைத்தான்
தண்டனைச்செய்து யெறித்திடுவானும்மை தையூசுகளே. ௪
கேடானச்செய்கை மனையாள்நடப்பதைக் கேட்டிருந்துஞ்
சோடாகக்கூடி யிருந்துமேவாழ்கின்ற தோஷிகளே

ஓடாமலோடித் திரிந்தாலுமன்னே யொடுக்கத்திலே
பாடாகவந்து முடியுந்தையூசெனும் பாதகரே. ௫

ஷரகைத்தவரி ஜினாச்செய்தப்பெண்ணென்றுந் தான்தெரிந்து
உரவாகக்கூடி யுலகத்தில்வாழு முலுத்தர்களே
கராபாகினாளைக் கபுரிற்கிடந்து கியாமமட்டும்
விரகாயெரிந்து விடுவீர்தையூசெனும் வீணர்களே. ௬

வெழ்க்கத்துக்கஞ்சி மறைக்குதீர்பீவிசெய் வேலைகளை
துக்கத்தில்னாளை யகப்படுவீர்கள் சொன்னேனிசமே
மக்கமுகம்மதர் சொன்னஹதீதை மறந்துவிட்டால்
ஹக்கன்கணக்கதில் தையூசெனச்சொல்லக் கண்டுகொள்வீர், ௭

தையலர்செய்யுஞ் ஜினாவதைநீங்கள் தான்மறைத்தால்
வையகமென்றுஞ் சதமில்லைகாணுவீர் மட்டிகளே
கைகாலுருப்புகள் பேசிடும்னாளை கியாமத்திலே
துய்யோனிடஞ்சென்றால் தையூசெனச்சொல்லித் தூசனிப்பான். ௮

மனையாள்செயலை மறைத்துவுலகில் மகிழ்ந்திருந்தால்
வினையாகவந்து முடிந்திடுங்காணும் பீவிஜினா
துணையாய்கபுரில் வருவதுண்டோ வுங்கள்தோகையர்கள்
யிணையொன்றுமில்லானாளைதையூசென வேசிடுவான். ௯

அவள்மாய்கையாலே செயலைமறைத்து அவனியிலே
செவியதிற்கேட்டு விலகாதிருந்திடுந் தீனவரே
சவளத்துயரம் வெயிலில்நிறுத்தி தையூசெனவே
புவனமும்விண்ணும் நிறைந்தோனரகத்திற் போட்டெரிப்பான். ௰

தப்பாம்ஜினாவைக் கண்ணினாற்கண்டுமே தான்மறைத்து
இப்பாரதனில் நமக்கென்னவென்று யிருந்திறந்தால்
ஜப்பாரிடத்தினிற் போயிடில்னாளை தையூசெனவே
வைப்பானரகிற் பொய்யல்லோயான்சொன்னேன் மானிடரே. ௰௧

ஆசையினாலே செயலைமறைத்து வவள்மகரின்
காசதைகேட்டு மடிபிடிப்பாளென்றக் காரியத்தால்
வேசையைவிட்டு விலகாதிருந்திடும் வீறர்களே
தோஜக்கிலிட்டு தையூசெனச்சொல்லிச் சுட்டிடுவான், ௰௨

தளையில்மகளை யதிகமாய்வைத்ததால் தையலர்கள்
குளைவாம்ஜினாவைச் செய்தால்வெளியிடக் கூசுகிறீர்

பிரவாமலென்று மிருப்போணிடத்தினிற் போனவுடன்
விரகாயெரிந்து விடுவீர்கைசெனும் வீறர்களே. ௰௩

மூவர்சுவர்க்கம் புகுதார்களென்ன முகம்மதர்முன்
ஆவலாய்சொன்ன ஹதீதைக்கேட்டு மறிந்திலேயோ
பாவப்பஹிலரும் பாரில்லைதயூசெனும் பாதசரும்
ஆவிமுதுமையில் ஜினுவினைச்செய்த வசடருமே. ௰௪

பெண்டுகள்தன்னை கோஷாவில்வைக்கப் பெரியோனுரைத்தான்
பண்டுகலந்து யெவரோடும்பேசப் பழகிக்கொண்டு
கண்டுங்காணாதது போலேயிருக்குங் கசடர்களே
வண்டனிபுலீசு கூட்டத்தில்சேர்த்து வதைசெய்குவான். ௰௫

தீனுணபேர்களைக் கண்டிடிலோடித் தினமொளிப்பார்
ஈனமதான காபர்கள்முன்னே யெதிரில்நிற்பார்
மானமில்லாம லெதிர்நின்றுபேசிடு மாதர்களே
ஆனுலவர்க ளாண்பிள்ளையென்று மறிவிலலேயே. ௰௬

நன்மையுந்தின்மையு முணராதிருந்திடும் நாய்கள்முன்னே
செம்மையாய்நீங்களும் பேசுவதுங்கட்குத் தீங்கல்லவோ
உம்மையாய்வந்த நபியுரைத்தார்ஹதீ துங்களுக்காய்
இம்மையிற்கோஷா வெவர்க்குமேசெய்குவீ ரேந்திழையே. ௰௭

புருஷமார்பெண்களைப் பேணுமற்பூவிற் பிறருடனே
வரிசையாய்பேச யிடங்குடுத்தோர்கள் மநுஷரிலே
அறஷைப்படைத்தவன் சொனுன்தையூசென்றவர்களையே
பரிசைகள்கெட்டுப் போமுன்னேபேணுங்கள் பாவையரே. ௰௮

ஒருபெண்ணுல் ஞல்வர்நரகிற் புகுவதுவுண்மையதாம்
அருவையர்தங்களைப் பேணுங்கள்நித்தமு மவனியிலே
குருமுன்னேயாகிலும் போகாவிட்டாலுங் குறைவருங்காண்
பெருகும்நெருப்பினில் போகுமுன்காத்திடும் பெண்டுகளே. ௰௯

சொல்தட்டும்பெண்களை யுடனேதலாக்குகள் சொல்லுமென்றே
பல்லுயிர்யாவும் படைத்தோன்மறையிற் பறைந்துவிட்டான்
இல்லாளைநீங்கள் மனம்போல்நடக்க யிடங்கொடுத்தால்
பொல்லாநரகிற் புகுதுவீர்சத்தியம் பொய்யில்லையே. ௨௰

தாங்கக்கூடாத மகர்வைத்துநிக்காகத் தான்முடித்தால்
ஆங்காரமாகவே பேசிடுவார்களதட்டியுமே

தீங்காமல்ஜீத்த மவர்கைக்குள்ளாய்விடு வீரெனவே
வேங்கைப்புலியலி மாதுலர்சொன்ன விசனமிதே ௨௧

மங்கைமருட்டிலகப்பட்டால்பூவிற் வலுக்குறைந்து
பங்கங்கள்கெட்டுத் திரிவீர்கள்னாளைப் பரனிடத்தே
பொங்கும்வியாதி வருத்தங்கள்வந்துப் பிடிக்குமென்றே
யெங்கள்முகம்மதர் நபியுமெடுத்து யிசைத்தனரே. ௨௨

பெண்ணாலேகெட்டவர் கோடானகோடிப் புவியதிலே
மண்ணாசைவைத்து யிருந்தோருமாண்டு மறைந்துவிட்டார்
கண்ணாசையாலே யலைந்துவொடுக்கங் கபுர்புகுந்தால்
விண்ணோ[illegible]ள்தண்டத் தடிபடுவீரென்று மெய்சொன்னனே. ௨௩

வீட்டையலங்க[illegible]ரஞ்செய்[illegible]முடித்து விளக்குவைத்து
கூட்டைப்பெரி[illegible]ன்று யெண்ணிக்குதிக்குங் குறும்பர்களே
ஓட்டையிழந்து நடப்ப[illegible]தைங்[illegible]ள் நம்பாதிருந்தால்
மாட்டையடிப்ப[illegible]து போலேபடிப்பார் மலக்குகளே. ௨௪

காளைகட்போலே திரிந்துமதுவுண்டு காசினியோர்
ஆளைமகனென்று சொல்லவோயிந்த தொழிலெடுத்தீர்
[illegible]ாளைமகுஷரி னாளையிலங்கிகளும் நாயதுபோல்
ஊளைகளிட்டுத் திரியவோபூவி லுடலெடுத்தீர். ௨௫

தையூசுகளுக் குபதேசித்த படலம்
முற்றிற்று.

—— * ——

ஆகப்படலம் ௰௧-க்கு கூடியபாடல்-௬௫௭.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது,

பலஹதீதுப் படலம்.

விண்ணின்மதியை யழைத்தெதிர்பேசிடு மெய்யிறசூல்
கண்மணியாகிய மகவின்குலத்திற் கருகரித்து
மண்ணிற்பிறந்து வந்திடுமெங்கள் மகபூவடியை
எண்ணியிருந்திடும பயல்காதிர்முகிய்யதீ னியம்பினனே. க

திருவாயுலகில் வந்திடும்ஷெய்கப்துல் காதி[illegible]னும்
அருவுருவில்லான் கிருபைகள்பெற்று [illegible]மேல
குருவாஞலிகட் கரசாகவந்த கௌதடியை
கருவாகச்சிந்தையில் வைத்தோனுரைத்த கவியிதுவே உ

மன்னரப்பாசு மகவாயுதித்துமே வையகத்தில்
இன்னங்கயாத்தா யிருக்கவரம்பெற்ற யேந்தல்நபி
சொன்னமணிபோல் வந்தஹிலுறின் சுவடடியை
என்னகத்துள்ளே வைத்துக்கவியை யியம்பினனே. ௩

தங்களபூபக்கர் மகவாகவந்திடும் சர்க்குணராய்
திங்கள்வதன மொளியாயுஞ்செய்ய துசைனவராம்
பங்கயமாகவே ஹாதிரிபாவை பழக்கிவைத்த
யெங்கள்குருவின் பொருட்டாற்கவியை யியம்பினனே. ௪

உருவமொன்றில்லா தசையதைபெண்ணு யுலகதிலே
அறுபத்துமூன்று வருடமிருந்து வாசுசெய்ய
தருவாயெழுந்து வந்தமுகம்மதர் தாளிணையை
கருவாகயெண்ணிடுங் காதிர்முகிய்ய தீன்கவியிதுவே. ௫

பாரதினுள்ள தீனவர்கட் பதமலரை
நேராகநெஞ்சி லிருத்தியுலகில் நிரைகடல்முன்
சேரிலொருதுளி நீர்போலெடுத்துச் சிறியவன்றன்
கூருந்தமிழினிற் பிழையைத்திருத்துங் குதாதனக்காய். ௬

மண்ணிலிருந்துமே னுளேமறைந்திடு வம்பனுக்காய்
விண்ணும்வெளியும நிறைந்தோனிடத்தினில் வேண்டுதலாய்
எண்ணுந்துவாக்களைச் செய்புமுதியோ ரிணையடியை
கண்ணுலேமுந்திடுங் காதிர்முகிய்யத் தீன்கவியே. ௭

ஈனப்பயல்தா னுவறைத்தக்கவியிதி விழிவுகண்டால்
தானதைநேரா திருக்கியேவைத்திடுஞ் சர்க்குணர்க்கு
கோனின்கிருபையும் பரக்கத்தும்னுளேக் கொடிநிழலும்
மான்நடங்காட்ட நதிகடந்தோரின் மன்றுட்டமுண்டாம். ௮

வழிவாறுவொன்றுந் தெரியாமற்செப்பு மடையனுக்காய்
ஒளிவாய்நிறைந்தோ னிடத்திற்துவாச்செய்தா லுங்களுக்குத்
தெளிவாகுங்கல்பும் நிதமும்றகுமத்துஞ் சென்னியிலே
பொழியும்மைமோ ராவிறங்கிடும்பூவிட்டுப் போமளவே. ௯

குழியில்வருத்தம் வருமென்றுவெண்ணிக் குவலதிலே
பழிப்பாய்பிறக்க பயற்காகநீங்கள் பரனிடத்தில்
வழியாய்துவாச்செய்யும் பெரியோர்க்குனுளே மவுத்ததர்ப்பின்
அழிபாமலென்று மிருப்போன்கிருபை யுண்டாகுஞ்சொன்னேன். ௰

த்தியாய்பார்த்துத் தெளிந்துகொள்வீர்கள் புவியதிலே
த்தியமாகவே சொன்னேனெளது சகோதரரே
த்திசனேவிட்டுப் போமுன்னேநீங்கட் குதாசொற்படி
த்திப்பிடித்து ஷாரகின்படிக்கிப் பணிந்திடுவீர். ௰௧

பெண்டுக்கும்பிள்ளேக்கும்பொருள்தேடிவைத்தப் பெருலமையெல்லாம்
கண்டுகொள்வீர்கள் மவுத்தானபின்பு கபுர்புகுந்தால்
ன்றுமிருப்போன் சொல்லதைநீங்க ளடாதிருக்கில்
தெண்டனேயாக நரகிற்புகுதுவீர் தீனவரே. ௰௧

வேசையுராசை விகாரங்கட்கொண்டிடும் வீரர்களே
ஆசைகள்வைத்து திரிந்ததினலுனக் காவதென்ன
காசையுந்தேடிப் புதைத்துப்புவியிற் களிப்புடனே
மீசைமுறுக்கித் திரிந்தால்மலக்கு விடுவதுண்டோ. ௰௨

டுதட்டாகவீடுகட்கட்டித் தரணியிலே
செட்டுகட்செய்து முதல்மிச்சந்தேடிடுந் தீனவரே
கட்டிச்சுருட்டுங் கபனிலுனக்கனைக் காசளவும்
இட்டுப்புதைப்பவ ருண்டோவுலகி லியம்பிடுவீர். ௰௩

என்றும்புவியி லிருப்போமென்றெண்ணி யிருக்குகிறீர்
குன்றமலைபோ லிருந்துவாய்பேசுங் கூட்டாளிகளே
வின்றமனையுஞ் செல்வமும்வாயல் விலகுமட்டும்
அன்றுகுழியிற் புகுந்தால்ஜபாபென் னறைந்திடுவீர். ௰௪

தாய்தந்தையான சகோதரர்சூழுஞ் சனங்களெல்லாம்
பெயரோவுங்கட்கு வொத்தாசையென்றுமே பேசுகிறீர்
மாயவன்வந்து வுயிர்வாங்கியேகி மரித்தபின்பு
வாயல்கடந்தங்கே போனால்தெரியும் வருத்தங்களே. ௰௫

பந்துஜனமு மனைவியுமக்களும் வாழ்வுமுதல்
தந்துயிருக்குதென் றெண்ணிமனதில் சந்தோஷிக்கிறீர்
வந்துபிடித்து மலக்குயிர்வாங்கி மரித்ததர்ப்பின்
சந்தூக்கிலேறியே போனால்தெரியுந் தனையினுள்ளே. ௰௬

தெரிவையர்தங்கள் வலையதிற்சிக்கியே சீரழிந்து
உருவமுமாறிப் போவோமென்றெண்ண முமக்கில்லையோ
பெருமைக்குலைந்துப் பணச்செலவாகியே பேர்கெட்டிடும்
அருவருப்பான மாதர்கள்யோனி யகிட்கிடங்கே. ௰௭

சூதகமோடிடும் வாசலைநம்பித் தொழுகைவிட்டுப்
பாதகஞ்செய்து யிறைசொல்மறந்திடும் பாதகரே
வேதமுறையினை விட்டுமேநீங்கள் மெய்மறந்து
பூகம்பிடித்திடு மாதர்கள்யோனி புதைக்குழியே. ௰௮

பெருமைகள்மிச்சமாய் பேசலாமூச்சதைப் பேணிக்கொண்டால்
உருமையாயுங்கட் குறைத்தேனனது வுடற்பிறப்பே
சிறுமைப்படுமுன்னே தேடினால்நீங்கள் செயம்பெறுவீர்
மறுமைனாள்வந்தால் களிகூர்ந்துசொர்க்கத்திற் வாழ்ந்திடுவீர். ௰௯

சொர்க்கம்புகுதும் வழியதைத்தேடுஞ் சுருக்கதிலே.
மக்கமுகம்மதர் சொன்னரொசியத்தில் மாறிடரோ
தர்க்கங்கட்பேசித் திரிந்திடில்னாலை ஜகன்னத்திலே
வெக்கமில்லாத குபிர்போல்கிடந்துமே வெந்திடுவீர். ௨௰

ஷரகதைப்பேணிக் கொள்ளாமற்போனால் ஜகன்னத்திலே
விரகாகிடந்து வெந்திடுவீரென்று மெய்சொன்னனே
குணவானகாரியஞ் செய்துமேனாலைக் குழிபுகுந்தால்
சிரசாலைதன்னிற் கிடப்பாரென்றேயிறை செப்பினனே. ௨௧

இஷ்டத்தொழில்களை விட்டுமே நீங்கள் துனியாவதிலே
கஷ்டமுடனேதான் தேடும்பொருட்களை ஹக்கனுக்காய்
இஷ்டமுடனே செலவுகட்செய்து விருந்திறந்தால்
திட்டமாய்ஞுனா ஜெகன்னத்திற்சேருவீர் தீனவரே. ௨௨

பிள்ளையில்லாதவர் பொருள்சேர்த்துமென்ன பிரயோசனமோ
சள்ளையதாக உனக்கெனக்கென்றுமே சண்டையிட்டு
கொள்ளையிடுவது மல்லாமற் கோட்டுகச்சேரிக்கும்
அள்ளிக்குடுத்து ஹறாம்ஜிஞு செய்தா லதுவுனக்கே. ௨௩

உனைப்போலேயெத்தனைக் கோடானகோடி யுலகத்திலே
எனைப்போல்சமர்த்த ரில்லையெனச்சொல்லி யியம்பினவர்
பனைப்போலச்சாய்ந்துக கபுரினில்போயி படுக்குஞ்செய்தி
நினைப்பில்வராமல் மறந்துவாய்பேசிடும் நேசர்களே ௨௪

அல்லாவுக்காகச் செலவுசெய்யாம லவனியிலே
இல்லங்கட்டி யலங்காரஞ்செய்யு மினியவரே
குல்லுமழிந்து விடுமென்று ஆதி குர்ஆனதிலே
சொல்லவிருப்பதை யேன்மறந்தீர்களோ தோழர்களே. ௨௫

அளியாதிருப்ப தவனன்றிவேறே யாருமுண்டோ
தெளிவாய்மறையினிற் றேடாதிருக்கின்ற தீனவரே
ஒளிவிற்பிரிக்க முகம்மதர்போனு ருலகைவிட்டே
குளியதில்னுளைப் புகுதுவீர்நீங்களுங் குறிப்புடனே ௨௬

சூறூதும்போது வெல்லாமழிந்திடுந் தோழர்களே
ஆரும்புவியி லிருப்பதில்லையென் றறிந்திலையோ
[illegible]ருடன்செங்கலாற் கட்டியவீட்டை நிலத்தில்விட்டு
[illegible]ரிணைவிட்டுப் போவீர்கபூரிற் படுப்பதற்கே. ௨௭

இந்தமனையைச் சதமென்று வெண்ணி யிருந்திறந்து
அந்தமனைக்குள்ளே போனுலறிவீ ரவன்செயலை
சொந்தமென்றெண்ணி யிருக்குதீர் பூவில் சுனையன்றியே
சிந்தையில்நீங்கள் தெரிந்துகொள்வீர்சொன்னேன் றீனவரே ௨௮

திண்ணமதாக மழிந்திடுஞ்செய்கை செகத்திற்விட்டு
கண்ணற்றுயில்லையெடுக்குதீர்செங்கற் கருங்கல்லினுல்
சுண்ணாத்தைப்பூசி கட்டியவீட்டைத் துனியாவில்விட்டு
எண்ணத்துடனே கிடப்பீர்கபூரி லிருளதிலே, ௨௯

வாசமதாகப் பூவெண்ணெய்ப்பூசி மயிர்வளர்த்து
நேசமதாக விருப்பதென்றெண்ணி நிலமதிலே
மோசமதான மவுத்ததுவந்தால் மூவந்தர்களே
நாசமதாகிப் போகுமுடலென நம்பிலையோ ௫௰

பரமத்துப்போய்விடு மென்னுமேனிகட் பயங்கள்வைத்து
சரமத்துப்போய்விடு முன்னேநல்ல தவங்கள்செய்தால்
கிரமத்துனூலோக் கபூரிற்புகாமல் நினைவிலெண்ணி
இசமாய்த்தொழுது கெஞ்சியழுவீர் தினந்தினமே. ௫௧

கையிலிருக்கும் பொருளதைக்கேட்கிற் கடுஞ்சினமாய்
வையகந்தன்னில் வசையாகவேசிடில் வம்பல்லவோ
ஐயோன்மறையினில் சொன்னதன்சுருக்கிற் குடுமெனவே
மையுமானூலோக் கபுரிற்புகுந்திடு மானிடரே, ௫௨

ஈயாதப்பாவி யிருந்தென்னபூவி லிறந்துமென்ன
வாயால்வசைகட் பிதற்றித்திரிகின்ற வம்பர்களே
தாயுந்தகப்ப னுடன்முறையாருஞ் சலித்திடவே
காயங்கபுரிற் புகுந்திடுமனூலோக் கண்டுகொள்வீர். ௫௩

ஆட்டுக்கும்பாட்டுக்குங் கோட்டுக்குஞ்சூதா யவடைக்கும்
வீட்டுக்கும்மாட்டுக்கும் நட்டான்பணங்கள் வெறியதர்க்கும்
சேட்டுக்குஞ்செட்டிக்கும் வட்டிக்குமாலைச் செலவுசெய்வீர்
காட்டுக்குனூலைப் போவோமென்றெண்ணங் கடுகில்லையோ, ௫௪

தீட்டுக்குள்வைத்து வுருவாய்சமைத்துமே சேயெனவே
நாட்டுக்கனுப்பியே வைத்தவன்சொல்லை நழுகவிட்டுத்
தேட்டுக்காய்பிச்ச மோடித்திரிகின்ற தீனவரே
காட்டுக்குனூலைப் போவோமென்றெண்ணங் கடுகில்லையோ ௫௫

வீட்டுக்குநல்ல வெளிச்சமதான விளக்குவைத்து
போட்டுனுங்காலிகள் கட்டிலுமெத்தையும் பூச்செடியும்
நாட்டுக்கலங்காரஞ் செய்கின்றபோதில் நமன்பிடித்தால்
காட்டுக்குனூலைப்போவோமென்றெண்ணங் கடுகில்லையோ. ௫௬

கூட்டுகள்வைத்துமே வியாபாரஞ்செய்து குவலதிலே
சோட்டுடன்நல்லச் சரிகையுடுப்புடன் சோடித்துமே
ஈட்டும்பலபணி வயல்தோட்டமான பிடமும்விட்டுக்
காட்டுக்குனூலைப் போவோமென்றெண்ணங் கடுகில்லையோ. ௫௭

பூட்டுந்துறப்பும் விதவிதமாகிய பெட்டிகளும்
கேட்டுக்குக்காவற் காரரைவைத்துக் கிலேசமன்றி
போட்டுச்சடாவிற் கிருக்கிட்டுவைத்திடும் புனிதர்களே
காட்டுக்குனாளைப் போவோமென்றெண்ணக் கடுகில்லையோ. ௩௮

சூட்டுக்குநல்ல மருந்ததையுண்டுச் சுகப்படுத்தி
மூட்டுச்சரமு மிடைக்கட்டுஞ்சட்டையு மோதிரமும்
போட்டுக்குலாவியே பூவிற்றிரிகின்ற புனிதர்களே
காட்டுக்குனாளைப் போவோமென்றெண்ணக் கடுகில்லையோ, ௩௯

பட்டுடுப்புந்தலைப்பாகைலேஞ்சிப் பாப்பாசுமுதல்
துட்டுக்குடுத்துமே வாங்கியணிந்து துனியாவதிலே
செட்டுகட்செய்து திரவியந்தேடிடுந் தீனவரே
கட்டுங்கபனொடும் போவோமென்றெண்ணக் கடுகில்லையோ. ௪௰

சீட்டையெழுதியே மாலைக்குடிப்பீர் தினந்தினமும்
கேட்டும்ஹதீதை மறந்துஹராந்தின்னுஞ் சேடர்களே
மூட்டைப்பெருக்கவோவுணனுதீர்மூச்சை முழுதுங்கம்பி
காட்டுக்குனாளைப் போவோமென்றெண்ணக் கடுகில்லையோ. ௪௧

ஆட்டியிரச்சியும் பலாச்சோருமுண்டு வவனியிலே
ரோட்டுகடோரு முலாவித்திரிகிறீ ரொண்டியதாய்
கேட்டிடுமேழைகட் காசொன்றீயாத கெடும்பர்களே
காட்டுக்குனாளைப் போவோமென்றெண்ணக் கடுகில்லையோ ௪௨

நீட்டும்நெளிப்புட னுல்லாசமான லிபாசுகளும்
போட்டுமெருட்டித் திரிகிறீர்பூவிற் புகழுறவே
ஓட்டுங்குதிரையும் வண்டியுமானு முலகில்விட்டுக்
காட்டுக்குநாளைப் போவோமென்றெண்ணக் கடுகில்லையோ. ௪௩

இந்தவிதத்தை புணராமல்நீங்க ளிவ்வுலகைச்
சொந்தமென்றெண்ணி ஹறாமுதற்சேர்த்திடுந் தோழர்களே
அந்தமநுஷரி னுள்வருமென்னு மனுவிலுந்தான்
சிந்தையிற்சற்றும் பயமன்றிருக்கின்ற தீனவரே. ௪௪

தேடும்பொருளைக் கொடுபோவதில்லை செகத்தைவிட்டு
நாடும்நகரமும் சதமில்லைனாலோ நமன்பிடித்தால்
கூடுபிலவொன்று மெண்ணியேமண்ணிற் குறும்புசெய்யில்
பாடும்வருத்தமும் பார்ப்பீர்கபுரிற் படுத்துக்கொண்டே. ௪௫

காலனிசுருயில் வந்திடுவானெனக் கண்டிலையோ
மேலெண்ணமோடிப் பறந்திடுக்காணிக்க மேதினியில்
மாலானதெல்லாம் விட்டுமேனுளை மண்ணறையில்
தோல்சதைவீடு துலைந்தால்தெரியுஞ் சுகதுக்கமே. ௪௬

தஞ்சமதாக மனையானைநீங்கள் சதமெனவே
அஞ்சாமற்கோடி தனந்தேடிவைக்கிலு மாவதென்ன
கொஞ்சமும்புத்திக ளில்லையோபூவில் குரும்பர்களே
வஞ்சகமானதை விட்டுமறையின் வழிநடப்பீர். ௪௭

கட்டுஞ்சுவரின் சுடுசெங்கல்வைத் துமே காரையிட்டு
தட்டோடுபோட்டு யில்லதைக்கட்டியே ஜன்னல்வைத்து
சுட்டுச்சதிரக்கல் பரவியவீட்டை துனியாவில்விட்டு
இட்டகபனொடு போவீர்கபுரி லிருப்பதர்க்கே. ௪௮

ரோட்டிக்கிடக்கு மிடமதைச்சேர்த்து ஒழுங்குடனே
பூட்டுங்கதவுட னில்லதைகட்டுநீர் பூவதிலே
போட்டுகுளோப்பு வெளிச்சத்தைவிட்டுப் புகுங்குழிக்கி
காட்டுக்குளுள்ளப் போவோமென்றெண்ணங் கடுகில்லையோ. ௪௯

கட்டுமுட்டாகவே வீடுகள்கட்டிக் கதவையிட்டு
வட்டமதாகபித் தாளையிணுணிகள் வாங்கிதைத்து
துட்டுச்செலவுகட் செய்திடும்வீட்டைத் தூரவிட்டு
இட்டகபனோடும் போவீர்கபுரி லிருப்பதர்க்கே. ௫௰

மோடானவீட்டுக்குப் பிலமானவோடுகள் மூடிவைத்து
ஆடிடும்வூஞ்ச லிட்டுமேநீங்க ளதிற்படுத்து
சோடாகக்கூடி யிருந்திடுமில்லினைத் தூரவிட்டு
காடாயிருக்குங் குழியிற்புகுவதைக் கண்டிலையோ. ௫௧

தேவடியாக்களின் ஆட்டக்கும்பாட்டுக்குந் தேடிநன்றாய்
ஆவலாயோடியே பார்த்துமகிழு மசடர்களே
கோவானறெப்பன் சொல்லதைவிட்டால் குவலயத்திற்
பாவந்திரண்டுக் குழியில்புகுந்து பதைத்திடுவீர். ௫௨

சூளைகளாடுந் தலம்போயிபார்த்திடுந் தோஷிகளே
வேளைவருமென்று மெண்ணுமற்பூவில் மெய்மறந்து
காளைகட்போலே திரிந்துழைக்கங் கபுர்புகுந்தால்
மூளைச்சிதற வடிப்பார்தலையில் முன்கர்நக்கீரே. ௫௩

67

ஹராமானபார்வை பார்த்துத்திரியுங் கசடர்களே
திரமாகவென்று மிருப்பீரோசொல்லுஞ் செகமதிலே
வரம்பெத்தவள்ளல் முகம்மதர்சொல்லை மறந்துவிட்டால்
நிரமாரிப்பூவிட் டெழும்பீர்னுனே நிச்சயமே. ௫௪

கூத்துக்கும்பாட்டுக்கு மோடியலையுங் குரும்பர்களே
சாத்துக்குனே யெப்பாரோ சொல்லுந் தடியிறந்தால்
காத்தைப்பெரிதாக யெணணிக் திரியுங் கசடர்களே
நாத்தமதாகியே போமுடலென்றுநீ நம்பலையோ. ௫௫

வேடிக்கைப்பார்த்திட வோடுநீர்நீங்கள் வெகுசுருக்காய்
தாடியுமீசை நரைத்துமறிவற்ற சகோதரரே
கூடியெடுத்துக் கபனிட்டுனேக் குழிபுகுந்தால்
ஓடியொளிக்க யிடமுண்டோசொல்லுவீ ருங்களுக்கே. ௫௬

ருகங்கட்பாடு மிடங்களைநோக்கி நடந்துசென்று
மோகங்கட்வைத்து வோடுநீர்நீங்கள் மூவந்தரிடம்
ஆகங்கட்சொன்னப் படிநடவாமலழிந்துவிட்டால்
நாகங்குடியா யிருக்கும்நரகிற் நடந்திடுவீர். ௫௭

வேஷங்கள்பூண்டு விளையாடும்சபையில் வீற்றிருந்தால்
நாசங்கள்வந்து நேரிடுமென்ன நபிமொழிந்தார்
தேசங்கட்சுற்றி திரிந்தாலொடுக்கந் தேகத்திலே
காசம்பிடித்து மவுத்தாகுவீரெனக் கழறினனே; ௫௮

தனங்களைநன்றாய் குலுக்கியேயாடிடுந் தாசிகளை
மனமகிழ்வோடும் பார்த்துதிரிகின்ற மானிடரே
இனஞ்சனமொன்று மில்லானுமுறைத்தா னிடமெனவே
சினமாகனுனைத் தீயிலெரிவது திண்ணமங்கண்டீர். ௫௯

அல்லாமுகம்மது சொல்மாறிநீக ளவனியிலே
பொல்லாஹறாமெனும் பார்வைகட்பார்க்கின்ற புல்லர்களே
எல்லாமடிந்தபின் னெழுப்புவானென்ற தெக்கீனில்லையோ
வல்லோன்சமுகத்திற் போனலங்கேது வகையுரைப்பீர். ௬௰

படிமீதிற்நீங்கள் பரத்தையர்க்காகப் பணங்குடுத்தால்
வடிவதுமாரி யெழும்புவீர்னுனே மண்ணைவிட்டே
குடிகெட்டுப்போமென்று யெண்ணுமற்பூவில் குரும்புசெய்தால்
இடிபோலடிகள் விழுந்தால்கபுரினி லென்னசெய்வீர். ௬௧

கோழியிரச்சியு முட்டையும்ரொட்டிக் குர்மாவுடனே
யேழைக்கீயாமலே தின்னுநீரென்று மிருப்பமென்றே
பாழாகும்வீட்டைச் சதமென்றுவெண்ணிய பாதகரே
தாழ்வாக்கபுரிற் புகுந்தால்தெரிந்திடுஞ் சங்கடமே. ௬௨

அல்லாகுடுத்த முதலதைவைத்து அவனியிலே
கல்லதுபோலே விரப்போர்க்கீயாத கசடர்களே
வல்லானுரைத்த மறைமொழிதட்டியே வம்புசெய்து
பொல்லாநரகிற் புகுதவோயிந்தப் பிழைசெய்கிறீர். ௬௩

பக்கீர்கள்வந்து சுவாலதுசெய்தால் பராமுகமாய்
எக்கீன்கொள்ளாம லிருக்குறீரென்று மிருப்போமென
மக்கியேபோகு முடலதைநம்பியே மாலைவைத்து
சொக்கியேமண்ணிற் புகுந்தால்தெரியுஞ் சுகதுக்கமே ௬௪

அல்லாமுகத்துக்காய் கேழ்க்குஞ்சுவாலுக் கவனியிலே
பொல்லாமொழிகளைப் பேசித்துரத்திடும் புல்லர்களே
சொல்லாமலோடும் மூச்சதைநீங்கள் சுகமென்னவே
வல்லாண்மைபேசி யிறந்தால்நரகில் வதைப்படுவீர். ௬௫

அன்னாள்ஹதீதுவும் விலையானூர்பூவில் அல்லாதனக்காய்
பின்னாளலியு மிறைதனக்காகவே பிள்ளையொன்றை
முன்னாளொருதி யிடத்தினில்வித்து முதல்குடுத்தார்
இன்னாளில்நீங்க ளியாதிருக்கி லிடர்வருமே ௬௬

ஓடியலைந்து தனந்தேடிவைத்து வுலகைவிட்டுச்
சாடியுடைந்தங்கே போனாலுங்கூட தனம்வருமோ
பேடிகட்போலவே வாய்மதம்பேசிடும் பேயர்களே
தாடியின்றோமம் நறைந்தால்மவுத்துக்குத்தான்கொடியாம், ௬௭

கூலிக்குவேலை செய்வோனைநீங்கட் கொடுமைசெய்தால்
மாலிக்கிடத்தினிற் சிக்கியேநாளை வதைப்படுவீர்
ஆலிமின்மாதுலர் சொன்னஹதீதின்படியறிந்து
சோலிவருமுன்னே கணக்கதைப்பார்த்து துலைத்திடுவீர்; ௬௮

வருமைபாய்வந்து கூலிசெய்தோர்கள் வயறெரிக்தால்
கருமங்கள்வந்து பிடித்திடும்நாளைக் கியாமதிலே
சிருமைகள்பட்டு அலைந்துதிரியுமுன் சீக்கிரமாய்
அருமையதாக வழைத்துகொடுத்து வளிப்பிடுவீர். ௬௯

நம்பியிருந்திடுங் கூட்டாளிமார்களை ஞானிலத்திற்
கும்பியெரியும் படியாகச்செய்யுங் குரும்பர்களே
தம்பிதமையர் சகோதரர்தம்மைச் சதிவுசெய்தால்
வெம்பிநெருப்பி லெரிந்திடுவீரென்று மெய்சொன்னனே. ௭௰

கூடுங்கூட்டாளியின் மார்களுக்கேதுங் குரவுசெய்தால்
பாடுவருத்தமும் வந்துமுதலும் பலவிதமாய்
தேடும்பொருளைச் சரியாய்கணக்குத் தீராதிருந்தால்
மாடுபோல்கத்தும் படியாயடிப்பார் மலக்குகளே. ௭௧

வருத்தமெடுத்தக் கூட்டாளிமார்களே வஞ்சகமாய்
துரத்தநினைத்துக் கூட்டைக்குறைக்கின் றதுட்டர்களே
பொருத்தப்படிக்கிக் கொடுக்காதிருந்துமே பூசைவிட்டால்
பருத்தவுடலு மெரியும்நரகதின் பள்ளத்திலே. ௭௨

நம்பிமுதலைக் குடுத்தோணாநீங்கள் நானிலத்திற்
சம்பியழும்படிச் செய்வீர்களானால் ஜகன்னத்தின்மேல்
கம்பியின்பால[illegible]க்கவிடாமலேகாதல்சருகி
கும்பிநெரிப்பி லெரியும்படிக்கி குதாசெய்குவான். ௭௩

வருத்தமாய்பாடு பட[illegible]டோர்க்குநீங்கள் வயறெறிய
கருத்தினிலுன்னியே வஞ்சகஞ்செய்தால் கியாமத்திலே
பருத்துக்கொழுத்து மலையைச்சுமந்துமே பாதையிலே
கிருத்திவெயிலினிற் நிண்டழுவீர்கள் நிசஞ்சொன்னனே. ௭௪

வேலைகட்செய்து முடிந்தவுடனே விரசதுவாய்
மாலைக்குடுத்து வனுப்பாதிருந்தால் மஹ்ஷரிலே
காலைப்பிடித்து யிழுத்துநரகிற் கலங்கிடவே
சூலாலேகுத்தி யெரிப்பாரெனநபி சொல்லினரே. ௭௫

சம்பளக்காரர்க்கு வஞ்சகஞ்செய்தால் ஜகன்னத்திலே
உம்பர்கள்கொண்டு போய்நரகத்தினி லுள்ளிடுவார்
அம்பர்கமழு முகம்மதர்சொன்ன ஹதீதின்படி
துன்பம்வருமெனச் சொன்னேனுலகினில் தோழர்களே ௭௬

எழியோர்கள்சொற்றை யட்மாயெடுத்தா லிறையிடத்திற்
பழியாகவந்து சூழ்ந்திடுயான்சொன்னேன் பாதகரே
அழியாமலென்று மிருப்பீரோசொல்லு மவனியிலே
மொழிமாறிப்பேசிக் கூலிக்குறைத்திடில் மோசமதே. ௭௭

ஒளிவாமுகம்மதர் தினில்பிறந்த வுடப்பிறப்பே
தெளிவாகநோக்கி யுணர்வீர்கள்யான்சொன்ன செய்திகளை
அளியாமலென்று மிருப்பவன்சொல்லை யனுசரித்தால்
களிகூர்ந்துசொர்க்கம் புகுந்திடுவீர்கள் ஹக்காணை சொன்னேன். ௭௮

வள்ளலாய்வந்தமுகம்மதர்விண்டிடும்வாக்கியத்தை
எள்ளளவேனுந் தவராமல்நீங்க ளெடுத்துவந்தால்
புள்ளும்புராவடி வானோரிருக்கின்ற பொன்னகரிற்
சள்ளையில்லாமலே சேர்வீர்கள்யான்சொன்னேன் சத்தியமே. ௭௯

பாவியான்செய்தப் பிழைதனைப்பொருக்க பரனிடத்திற்
நாவினால்நீங்கள் துவாச்செய்குவீரென நாடுகிறேன்
ஆவியழிந்து விடுமென்றுசொல்லி யனுதினமும்
கூவிக்கரைந்திடுங் காதிர்முகிய்யதீன் கூரினனே. ௮௦

கொடுமைகட்செய்து தனந்தேடிவைக்குங் குரும்பர்களே
மிடுமைவருமென்று யெண்ணுமற்மீசை முறுக்குகிறீர்
அடிமையாய்வந்து பிறந்தோர்க்குபித்தனை யாறுவரென்
கடுமையதான வதாபைக்கபுருக்குள் கண்டுகொள்வீர். ௮௧

துனியாவிடக்கென்று வெண்ணுமற்சுத்தி தொழில்கட்செய்து
அனியாயமாக காமுதல்தின்னு மசடர்களே
பணிசெய்ததங்கப் பணிகளுமாலும் பாம்பதுபோல்
முனிந்துக்கடித்து யிழுக்ககபுரில் முடுகிடுமே. ௮௨

காடிக்குதிரையுந் தண்டிகையேருங் கசடர்களே
தேடித்தனம்வைத்து செத்திடினுன்னுடன் சேருமோசொல்
கூடிக்கபனிட் டெடுத்துக்குழியதிற் போட்டிடுவார்
மாடிமேல்மாடி யேன்வைத்துக்கட்டுதீர் மானிடரே. ௮௩

கோடியுந்தேடிக் கொடிப்போடநீங்கள் குவலதிலே
சாடியும்பொய்யும் புரமதுச்சொல்லுஞ் சகோதரரே
கூடியிருந்திடு மக்களுஞ்சுத்தங் குடும்பங்களும்
வாடியிழந்துயிர் போனாலுங்கூட வருவர்களோ. ௮௪

தடியைப்பிலனென்று யெண்ணித்திரியுஞ் சகோதரரே
மடிவாய்மலக்கு வருவாரென்றெண்ண மறந்துவிட்டீர்
வடிவானபெண்ணு மக்களுங்கூட வருவதில்லை
செடிசூழுங்காட்டிற் புதைப்பார்களென்று தெரிந்திடுவீர், ௮௫

ஆதமுனைமைத்த நபிமார்கள்பெற்றிடு மாண்பெண்களும்
நீதமாயாண்ட வரசரும்போனார் நிலத்தினுள்ளே
சேதம்வருமென்று வெண்ணாமல்நீங்கள் திரிந்தலைந்தால்
பாதகஞ்செய்ததி னாலேமிகவும் பதைத்தழுவீர் ௮௬

கண்கள்மறைந்துத் திரிகிறீகாசைக் கருத்திலெண்ணி
பெண்களின்மையல் பிடித்துக்கொண்டாடிடும் பிரபுகளே
புண்போலேநீர்கள் பொசித்தோடும்வாயலைப் புஷ்பமென்றே
மண்ணில்மயங்கியே மாலைக்குடுத்திடு மானிடரே ௮௭

இருட்டறையான கபுரில்புகுதுவீ ரென்றிருந்தும்
மருட்டிலகப்பட்டுக் கொண்டல்லோநீங்கள் மயங்குகிறீர்
இருட்டிபிலீசவன் வந்தணுகாமல் தினந்தினமும்
உருட்டுந்தசுபியை கையில்வைத்தோதிடு வுண்மையிதே. ௮௮

ஊரார்பொருளைச் சதியாலெடுத்து வுலகதிலே
வீறுய்வழக்குகட் பேசித்திரிகின்ற வீறாகளே
தீராமல்நீங்கள் [illegible]தால்கபுரினில் சேறழிவீர்
இறு[illegible]வ னுளைநரகத்திற் போட்டெரிப்பான். ௮௯

தீனனபேர்களின் சொத்தறதைவாக்கியே தின்னுவிட்டு
போனாலும்னாளை விடு[illegible]னேபூவிற் பொருள்குடுத்தோன்
ஆனாலுமங்கே தனங்கொண்டுபோயு மளிப்பதுண்டோ
யீனமாய்நீங்க ளெரிநரகாழ்ந்து யெரிந்திடுவீர் ௯௰

கடன்பட்டுலகிற் குடுக்காமற்செத்தோர் கழுத்ததிலே
வடமிட்டுத்தூக்கியே வைப்பானிறைவன் மகுஷர்மட்டும்
யிடம்விட்டுமண்ணிற் புகுதுமுன்நீங்க ளெவ்விதமும்
உடலால்வருக்த மெடுத்ததைத்தீரு முலகதிலே. ௯௧

தீராமல்நீங்கள் செத்திடில்னாளைத் திருவிடத்தில்
வாராமல்பூவி லிருப்பதுண்டோசொல்லு மானிடரே
ஆர்கடனாகிலு மளித்தகைத்தீரு மவனியிலே
நோய்குடுத்து பகஷதைப்பெற்றால் கிருமத்துண்டாம். ௯௨

பாலங்கடந்திட மாட்டீர்கடன்பட்டப் பாதகரே
மாலைக்குடுத்தவன் வந்துமரித்து மடிபிடிப்பான்
நாலாவிதத்திலுங் கெடுதிவருமென னயன்சொன்னான்
காலால்நடந்து தேடிப்பிடித்துக் கடன்குடுப்பீர். ௯௩

செத்தாலுமுங்களை விட்டுவிடாதுகாண் செல்லும்புள்ளி
உத்தாருறமுறைக் காகப்பணத்தை யொளித்துவைத்து
ஹத்தாயிடத்தினிற் போனால்கடனுக்கு காசுண்டுமோ
சத்தும்பயக்களு மில்லையோகடன்கொண்ட சண்டிகளே ௯௪

சாவதைநிட்சய மெண்ணுமற் நீங்கள்தரணியிலே
ஆவலாய்மெத்தையு மேடையுங்கட்ட வலையுகுறீர்
தீவரமாக மலக்குயிர்வாங்கியே செத்தபின்பு
தாவியெடுத்துக் கொடுபோய்நுனை தகனஞ்செய்வார். ௯௫

உப்பதுபோட்ட மீன்போலேனுரு முடலதுவை
செப்பமிடுவதா லேதுக்குதவுங்காண் செப்பிடுவீர்
தப்பாதுவுங்கள் முடிவுநாள்வந்தால் க்ஷணப்பொழுதில்
கப்பலொடைவதுப் போலேயிருந்திடுங் காயமதே. ௯௬

ரொணக்கடன்வாங்கி மனையாளிடத்தினி லொப்பிவிட்டுப்
பிணம்போலேநீங்கள் மண்ணின்குழியில் புகுதுகிறீர்
க்ஷிணமதிலுங்கள் முகப்பத்தைவிட்டுமே தேவியர்கள்
பணமுங்குடுத்து தேடுவார்சின்னப் பயல்களையே

கண்டதுங்கேட்டது மில்லையோவுங்கள் காதுகண்ணால்
பெண்டுகெட்செய்யும் பிரட்டுமுருட்டும் புவியதிலே
வண்டுகள்பூவுக்கு வந்ததைமொய்த்திடும் வாறதுபோல்
உண்டுகலந்திடக் கூடுவாரொன் றுணர்ந்துகொள்வீரே, ௯அ

பேரைக்கெடுத்து விடுவார்நொடியில் பேதையர்கள்
ஊரைக்கெடுத்திடும் பெண்டுகள்சொல்லி லுறுதியுண்டோ
சீரைக்கெடுக்கும் படியாகநீங்கள் திரவியத்தை
ஆரைக்கெடுத்து பேன்பொருள்வைப்பீ ரவர்களுக்கே. ௯௯

ஆசைகள்மிச்சங் குடியாயிருந்திடு மாயிழைகள்
காசையுபத்திரஞ் செய்வதுண்டோசொல்லுங் காசினியிற்
மோசக்கருத்துண்டு யென்னுளும்பெண்கள் மொழியதிலே
மாசத்தசோதியின் தூதருரைத்தது வாஸ்த்தமதே. ௱

நாளைத்தினங்குழி போகுமொழிதனை நம்பில்லையோ
ஆளும்புவியைச் சதமென்றுவெண்ணிய ஆம்பர்களே
மூளைகளில்லையோ வுங்கள்முடியில் முழுதிலுமே
வேளையொருடியில் வந்திடுங்காணும் வீறியரே. ௱௧

வந்துமவுத்துப் பிடித்திடிலென்ன வகைசொல்லுவீர்
சந்தூக்கிலேரி விடுவோமென்றெண்ணந் தப்பிடுமோ
அந்தகர்போலவே ஓடித்திரியு மசடர்களே
பிந்திக்குழியினி லவதிவருமென்றும் பேசினனே. ௱௨

ரொக்கமுதலைக் கடனாகவாங்கி யொளித்துவிட்டு
வெழுக்கமிலாமலே யின்சால்மெட்டேறிடும் வீரியமோ
அக்கனிடத்தினில் போயிடில்நாளை யவதியுண்டாம்
சொர்க்கம்புகுந்திட மாட்டீர்கடன்பட்ட தோஷிகளே. ௱௩

என்றுமளியா திருக்கவோசெய்வீர்க ளிந்தவிதம்
வின்றமனைவயல் தோட்டமும்வாங்கிடும் வீரியமோ
சென்றிடும்றூகு மலக்கல்மவுத்துகை சேர்ந்துவிடும்
அன்றுதெரிந்திடுங் கடனால்வருகு மதாபுகளே. ௱௪

ஏன்விட்டீர்நல்ல வெழிலானமல்களை யென்றைக்குமே
கோனிட்டகட்டளை மறக்கவொண்ணாது கூட்டாளிகளே
வான்மட்டும்நீங்க பறந்தாலும்நாளை மவுத்துவரும்
தான்கெட்டுப்போனால் வாராதுவொன்றுந் தனித்துணைக்கே. ௱௫

துணையாயிருக்குங் கியாமநாள்மட்டுந் தொழுகையன்றோ
இணையில்லான்றூதர் சொன்னஹதீதை யெடுத்திடுவீர்
மணஞ்செய்தபெண்டிரு மக்களுஞ்சுற்றமும் வருவதில்லை
அணையுந்துகிலிற் [illegible]புரி லடக்கிடுவார். ௱௬

வள்ளல்முகம்மதர் சொன்னாரொசியத்திற் மானிடரோ
கள்ளுஞ்ஜினாவும் வட்டியுண்போருங் கியாமத்திலே
கள்ளுங்கிஞ்சீரு ரூபமாய்நாளை சமைப்பனென்றே
வெள்ளிசிரசில் தரித்தமுகம்மதர் விசளமிதே. ௱௭

சொன்னசொல்பாருஞ் ஜவாஹிருஹதீதில் துரிதமுடன்
வின்னம்வருமுன் விலகிடுவீர்கெட்ட வேலைகளை
அன்னமுகம்மதர் சொன்னஹதீதை யகற்றிவிட்டால்
இன்னமுமென்ன வெடுத்துயெடுத்து யிசைத்திடுவேன். ௱௮

அறிவாளர்சொல்லை யுணராமற்பூவி லகற்றிவிட்டு
பெரிதாயுடுப்பிட்டு வந்தாலவர்களைப் பேணிடுவீர்
[illegible]றிசோரும்செய்யுங் குடுப்பிரவர்களைக் கண்டவுடன்
[illegible]ரியல்லோகீங்களும் செய்யுஞ்சதக்கா ஜப்பாற்தனக்கே. ௱௯

மலைபோலேநம்மை யகப்படும்யான்சொன்னேன் மானிடரே
தலையைத்தடவுங்க ளெத்தீமைனோக்கித் தரணியிலே
கலையைப்பிடித்தவர் சீமான்களென்ற ஹதீதிருக்க
அலைகிறீர்நீங்கள் வண்ணான்றுயிலுக்கு ஆசைவைத்தே. ௩௰

பெருமையையெண்ணி கொடைகுடுக்காத பேயர்தம்மை
சிருமைபடுத்தியே வைப்பான்கபுறினில் சேர்ந்தவுடன்
மருமைனாள்வந்து விடுமுன்னேநீங்கள் மனதிரங்கி
வருமையுடையவர் வந்தால்குடுத்திடு மானிடரே. ௩௰௧

சாளையமாக வெளியோரைக்கண்ட தருணமதிற்
வேளைக்கொஜிபனங் கொடித்திடிலங்கே மேலவனும்
சூளைநெருப்பிற் புகுகாமலுங்களைச் சொர்க்கத்திலே
நாளைசுகத்தினிற் வைப்பானிறையவ னான்சொன்னனே. ௩௰௨

பெரியோர்கடன்னுடன் பேசாமல்விட்டுப் பிரிந்திடுவீர்
சரிகைதலப்பா பட்டாடையோர்வந்தால் சங்கைசெய்வீர்
முரீதைவித்துப் பணம்வாங்குவோரந்த முரடரெல்லாம்
கரியாகவெந்து விடுவார்கள்நாளை கியாமத்திலே. ௩௰௩

பணத்தையெடுத்து முரிதைவிர்க்கின்ற பாதகர்தான்
குணத்தையுணர்ந்து கொள்ளாமற்பூவில் கூறுகின்றார்
மணத்தைதெரிந்து மிருந்தாலும்வாயினா லொன்றுரைத்து
பிணத்தைப்பொசித்திடும் னாயதுபோலே பிரிந்தலைவார். ௩௰௪

நடக்கும்விதங்களை யுணராமல்நீங்கள் னானிலத்திற்
அடக்கமுடையோர் வந்தாலடித்து வகற்றிடுவீர்
இடக்குகட்செய்யும் ஷெய்குமார்சொல்லு மோராதெனவே
விடக்குகளுண்ணும் நாய்போல்பணத்திற் விருப்பம்வைத்தே. ௩௰௫

அக்ஷரமொன்றி லடங்காதிருந்திடு மாதியருள்
உட்சரங்கொண்டு தெளிந்தோர்க்ககப்படு முண்மைசொன்னேன்
மச்சதுக்குள்ளே தொனிகேழ்க்கும்கித்த மராமலேதான்
இச்சைவைத்தாதியைத் தேடுவீரெண்சா ணிடந்தனிலே. ௩௰௬

கலையைபிடிக்கும் படிசொன்னாரெங்கள் கபீபிறசூல்
உலையதைமூடியே யூதினால்கிட்டு மொருபொருளே
மலையதிலேறி மயங்கித்திறிகின்ற மானிடரே
அலையாமலெண்சாண் விடதிற்றேடு மகமியமே. ௩௰௭

வானமும்பூமி நடுவினிற்றேடிடா மானிடரே
கோன்வலம்சுத்தி வரும்ரவிதன்னிற் குரிப்புணர்வீர்
ஞானமில்லாதவர் சொல்வார்வறையு மெழுத்தெனவே
நாளும்வெகுளுள் திரிந்தேனவர்சொல் நயமென்னவே. ௱௰௮

அஞ்சுபேர்கூடி யிருக்குங்கலத்தை யறிந்துகொண்டால்.
பஞ்சதுபோலே பரந்திடும்பாவங்கள் பாறதிலே
நெஞ்சதுக்குள்ளே யிருக்குதுதேடுங்கள் நித்தம்நித்தம்
துஞ்சனுலொன்றுங்கிடையாதுயான்சொன்னேன் றோழர்களே. ௱௰௯

ஊனமையைக்கண்டு வுரவானுல்நாளை யொடுக்கத்திலே
சீமான்றனமும் பெறுவாரெனநபி செப்பினர்காண்
ஆமாமெனுங்கலி மாவாலெழுப்பி யறிந்துகொண்டால்
கோமானுகவியும் பெற்றுசுவர்க்கங் குடிகொள்ளுவீர். ௱௨௰

கல்பதைப்பேணி ஷுறகதினுள்ள கடனிருத்தி
இல்லதுக்குள்ளே யிருக்குதென்றெண்ணி யிரவுபகல்
சொல்லாமற்சொல்லி யிருந்துலகத்தினிற் சொக்கிவிட்டால்
அல்லாறகுமத்தும் நபியின்ஷபாயத்தி லாகிடுவீர். ௱௨௧

பொருளாசைவைத்து முரீதுக்குடுத்திடும் பேர்களெல்லாம்
அருளாசையொன்றுந் தெரியாதபேர்களென் றறிந்துகொள்ளும்
மருளாம்புவியிற் வழிகண்டிருக்கு மவுலிகண்டால்
இருளையகற்று மொழிகளுனக்கு மியம்பிடுவார். ௱௨௨

வயருபிழைக்கத் திரிவார்கள்ஷெய்கென்னும் வைய்யகத்திற்
பயாளவேனு மவர்கண்டதில்லை பயானதிலே
கயாதுவான ரஹிமதிகண்டு கருத்தில்வைத்தால்
துயரோடிப்போகு மென்றேமனதைத் துணிந்திடுவீர். ௱௨௩

அலிபதுலாமுங் ஹேயதுமீமுந் தாலதுக்குள்
ஒலிமாருணர்ந்த வழியென்றிருக்குது வுண்மைசொன்னேன்
சலியாமல்நித்தமுந் தேடுங்களுங்கள் சடமதிலே
கலிமாவகமியக் காத்தோடிபோனபின் காண்பதுண்டோ. ௱௨௪

மங்கையர்சொல்லை மனதினிலெண்ணி மதிமயங்கி
சங்கைகள்கெட்டுத் திரிந்தவர்கோடி தரணியிலே
கொங்கையைக்கண்டு வலையினிற்சிக்கி குவலையத்திற்
பங்கங்கள்பட்டுத் திரிந்தாலுமுளைப் பலிஹத்துண்டே. ௱௨௫

தனத்தின்பெருமையி னாலேயுலகிற் சதிவுசெய்தால்
ஆணத்தும்படைத்து ஆள்பவனாலே யதாபுசெய்வான்
க்ஷணத்தில்மவுத்தது வந்தால்கபுறதில் சீறழிவீர்
பணத்துக்கோரீமான் கொண்டேயிருக்கிறீர் பாயிகளே. ௱௨௬

எட்டிலெழுத வடங்காதவன்சொல் லிகழ்ந்துவிட்டு
வீட்டையுமாட்டையுந் தேட்டைப்பெரிதென் னும்வீறர்களே
ஆட்டையருக்க வவதிகள்வைப்பா றவனியிலே
கோட்டையிடிந்திட னாள்நீமமுண்டோ குரும்பர்களே. ௱௨௭

என்றென்றுமுள்ளவன் சொல்லைமறந்து யிடாதுவாய்
நன்றாய்குடும்பர்க்குப் பொருள்மிகத்தேடிட நாடுகிறீர்
கன்றுபசுவு முதவுமோ னாளைக் கபுருக்குள்ளே
குன்றுகள்போலே யிருந்துவாய்பேசுங் குறும்பர்களே. ௱௨௮

தஞ்சாவூரானா மகராஜன்சொல்லைத் தவிழ்ந்துவிட்டு
அஞ்சாமற்பூவைச் சதமென்றுநம்பு மசடர்களே
வஞ்சமதாக பாவங்கள்செய்தால் மகுஷரிலே
பஞ்சதுபோலே நெருப்பிலெரிவீர்கள் பாயிகளே. ௱௨௯

அழியாமலென்று மிருப்பவன்சொல்லை யகத்திவிட்டுப்
பழிபாதகங்கட் பயமன்றிசெய்திடும் பாயிகளே
எழியோர்கள்சொற்றைக் கொடுக்காமல்வைத்து யிறந்துவிட்டால்
குழியிற்கிடந்து அழுவீர்கள்னாளைக் குறும்பர்களே, ௱௩௰

வடிவொன்றுமில்லான் செல்லுகள்மாரி மடிவதுவாய்
படியில்இரிந்து யிறந்திடில்னாளை பலிஹத்துண்டாம்
தடிதானழிந்துப் போனபின்கூட தனம்வருமோ
இடிபோலடிகள் விழுந்தால்கபுருக்குள் ளென்னசெய்வீர். ௱௩௧

பிறப்புமிரப்பு மில்லான்மறையதிற் பொய்களுண்டோ
விறப்பாய்இரிந்து முதல்கேடிவைக்கின்ற வீறர்களே
இறப்பவர்சொற்றைக் குடுக்காமல்வைத்து யிறந்துவிட்டால்
மறப்பானோநீங்கள் செய்தமடிவதை வல்லவனே· ௱௩௨

ஆதியின்சொல்லைத் தள்ளியுலகினி லாஸ்த்திகளை
ஜாதிஜனமுதல் பெண்டுபிள்ளையென்றுந் தான்வைக்கிறீர்
ஓதியுணர்ந்து யிருந்துமேயுங்கட் குணர்வில்லையோ
வீதிகடோறு மலைந்துதிரிந்திடும் வீறர்களே. ௱௩௩

கொஞ்சமும்புத்திக ளில்லையோபூவில் குரும்பர்களே
தஞ்சமதாக வுடலைச்சதமென்று தாவுகிறீர்
குஞ்சுக்குழந்தை தனங்கள்வராதுக் குழியினுள்ளே
துஞ்சாதிருந்தவ ராருண்டுச் சொல்லுவீர் தோழர்களே ௩௬௪

வெளியெங்குமோர்குடை யாளுமிறையவன் வேதமதிற்
தெளிவாகத்தேடியே பாராதிருக்குந் தீனவரே
அழியாதிருந்தவ ராரென்றுசொல்லு மவனியிலே
விழிரெண்டிருந்துங் குருடாகப்போன விதஞ்சொல்லுவீர், ௩௬௫

சாராயங்கள்ளு மபினிகெஞ்சாவுந் தாணியிலே
மாறாமல்வாங்கிக் குடித்துதிரிகின்ற மானிடரே
நேரானவார்த்தையை நிகழ்த்தியுங் கேளாமல்விதவிதமும்
ஞாயமுள்ளவன் சொல்லைமறந்திடும் புனிதர்களே. ௩௬௬

நிறைமானவஸ்தை விலகாமல்நீங்கள் கருத்தில்வைத்து
நிறமாகத்தேடித் தின்னுக்களித்திடுந் தீனவரே
இறவாமலென்று மிருக்கவோயிந்த யிடந்தனிலே
மறைவாகக்கள்ளைக் குடித்திடில்லுன்னை வகைப்படுவீர். ௩௬௭

குணாவானக்காரியஞ் செய்துமேனுளைக் குழிபுகுந்தால்
பிறகாயெரிந்து விடுவீர்கள்பூவில் விசனமுடன
சராபாகவுங்களை யதாபுசட்செய்வான் கியாமமட்டும்
பிரவாதிருக்கும் யிறைமொழிதன்னிற் பிசகுமுண்டோ. ௩௬௮

வீணுக்கோர்நீங்க ளுலகிற்பிறந்தது வீறியரே
ஆணுமேபெண்ணு மதபாயிருமென் றவனுரைத்தான்
சாணெட்டுமுள்ள சடலமழிந்திடில் தன்மையுண்டாம்
தோனுக்கபுரில் புகுந்தாலுமங்கே சுகமில்லையே ௩௬௯

பின்னால்வருந்துய ரெண்ணாமற்பேசிடும் பேதைகளே
தன்னாலேதான்கெட்டுப் போனால்கபுரிற் சலித்தழுவீர்
சொன்னாலுமுங்கள் காதுக்கோராதுகாண் தோழர்களே
என்னாலேசொல்லி முடியாதுகாணு மிதுநிசமே. ௩௭௰

புத்தியாய்பார்த்து தெளிந்துகொள்வீர்க ளிதன்பொருளை
கத்திவிட்டானென வெண்ணினால்நாளை கியாமத்திலே
பத்திநெருப்பி லெரிவீரல்லாது பலனொன்றில்லை
அத்தியெரும்பு படைத்தோன்மேலாணை யரிந்திடுவீர். ௩௭௧

குண்டணிக்கோளும் பிறமூக்குடிகொண்டக் கோதையர்கள்
மண்டுமனையும் வயல்தோப்புகாணிகள் வாங்குமென்பார்
உண்டுசுகித்து விருப்பாருனதுயி ருள்ளமட்டும்
கண்டுமறந்திடும் பெண்டுகட்சொல்லை கினுவிலுமே. ௱௬௨

ஹவ்வாமொழியை கேட்டுமுன்னாத மழுதழுது
தவ்பாவுஞ்செய்து முன்னூருவருடம் சஞ்சலித்தார்
இவ்வாருடைய பெண்சொல்லைக்கேட்டு யேன்கெடுவீர்
செவ்வையிலாகிட வொட்டார்களிந்த தெரிவையரே. ௱௬௩

பெண்சொல்லைக்கேட்டு வரசுமிழந்து பிர்ஊமகொண்டு
மண்ணில்மதிகெட்டு வலைந்தார்கள்கோடி மானிடர்கள்
எண்ணங்கலங்கிடச் செய்வார்களும்மை யிணங்கும்படி
கண்கட்டிவித்தையை நொடியினிற்செய்வார் காரிகையே. ௱௬௪

இன்னமனேகஞ் சொல்லலாம்பெண்க ளிடரதுவை
சின்னப்படமன முள்ளவர்நம்புவார் தேவியர்சொல்
தன்னாலேகெட்டுப் போவாரனேகந் தரணியிலே
பின்னாலுணர்ந்துமே கொள்வீர்களெந்தன் பொய்நிஜமே. ௱௬௫

முன்னாலேபோனால் தெரிந்திடுமெந்தன் மொழிகளுமே
பன்னாளும்பெண்கள் மொழியினிற்பொய்கள் பலுக்குமென்றே
முன்னவன்றூதர் முகம்மதர்வாக்கிய மோசமுண்டோ
என்னாலைசொல்ல முடியாதுபெண்க ளிருதயமே. ௱௬௬

நேரிழைதங்க டுரைக்கின்றசொல்லை நிஜமென்றெண்ணி
பாரதிற்வஞ்சகம் பயமறச்செய்திடும் பாயிகளே
பேறைக்கெடுக்கச் சதிமானஞ்செய்து பிணத்தியுமே
மாறுகப்பேசிடு மங்கையர்யோனி மகாப்பெரிதே. ௱௬௭

ஜலதாரைப்போலே நீரோடும்வாயல் தன்னைநிதங்
கலைகொண்டுமூடி யிருக்குங்குழியெனக் கருத்துணர்ந்தும்
உலையின்மெழுகது போலேவுருகு மூடப்பிரப்பே
முலைகாட்டுமாதர் யோனிப்பெரிய முழுக்கிடங்கே. ௱௬௮

அல்குலினாசையை வைத்துமனதி லறமிழந்து
கல்வைத்திழைத்தப் பணியுடன்காப்புங்கங்கணமும்
எல்லாங்குடுத்து வேசியர்வீட்டினிம் வீற்றிருப்பீர்
பொல்லாதமாதர் யோனிவியாதிப் புதைகுழியே. ௱௬௯

கன்னியாராசை மயல்மீறியுள்ளங் கலக்குகிறீர்
வன்னியினுள்ளே புகுதவுடலை வளர்க்குகிறீர்
சென்னிதனிலுடு வைத்தநபியினின் றீனவரோ
அன்னையவ்வாவுட சொற்கேட்டுஆத மழுதனர்காண். ௩௰

நாளைமவுத்தது வருமென்றனுட்டம் நழுகவிட்டால்
சாளயமாக கபுறினிற்நீங்கள் தவித்திடுவீர்
வேளையிலங்கு விசனப்படுவது வீணல்லவோ
மூளைச்சிதற வடிப்பார்தடியிற் முன்கர்நக்கிரே. ௩௰௧

பாலமிருப்பது மெய்யென்றுயெண்ணிப் பயத்துடனே
ஆலம்படைத்தவன் றன்னைத்தொழாம லயர்ந்திறந்தால்
கால்கையுருப்பு சகலமும்சாட்சியாய் கருதுமப்போ
மாலதுபாம்பாய் சுத்திவதைத்திடு மாணிடரே. ௩௰௨

பிள்ளையும்பெண்டிருஞ் சுற்றமும்வாழ்வும் பிலனென்றெண்ணி
கள்ளளவேணும் பயமத்திருக்கிறீ ரிறைதனக்கே
கொள்ளைமவுத்து பிடித்துக்குழியிற் குலைந்தழுவீர்
உள்ளபடிக்கியான் சொன்னேனெனது வுடப்பிறப்பே. ௩௰௩

தராசில்நிறுத்திடுவா னன்மைதின்மை தனியவன்றுன்
கர்சுகடன்களைத் தீராமற்செத்திடில் கியாமத்திலே
பரிசைகட்கெட்டு நன்மைமுழுதும் பரிகுடுத்து
விரைசாய்நரகிற் புகுதுவீர்சத்திய மெய்யிதுவே. ௩௰௪

கூடப்பிறந்திடும் பெண்ணுண்கள்சொற்றைக்குடாதிருந்தால்
மோடானபாலத்திற் போய்போதுயற்றி முனைந்திழுப்பார்
சோடாகவந்தவர் ஆக்கைக்குடாதிடிற் சீக்கிறத்தின்
பாடாகவந்து முடியுமென்றிக்கவிப் பாடினனே. ௩௰௫

இனையளவாகிலும் விடாமற்கண்க்கிற் றிடமுடனே
மனுதேவார்கட்செய்யு மடிவும்படரும் வஞ்சகமுங்
குனுவுஞ்சதியும் பலிசையுங்குடிகட் கொடுமைகளும்
வினவாயெழுதி டயிறியிற்போடென்பான் மேலவனே. ௩௰௬

எதுக்கோநீங்க ளிந்தவிதத்தை யெடுத்துக்கொண்டு
மாதுமக்களென்ற யெண்ணத்தினுலே மயங்குகிறீர்
வாதுகட்பேசி வலுவாலெடுத்திடு மால்களெல்லாம்
சூதுக்கும்வேசைக்கும் கள்ளுக்குமாகத் துலந்திடுமே. ௩௰௭

குழியதிற்கேழ்வி யிலையென்றுமெண்ணுங் குரும்பர்களே
அழிவுனுள்வந்து பிடித்தங்கேபோனு லறிந்துகொள்வீர்
வழியானவேத முறையானகட்டளை மறந்துவிட்டால்
பழிவந்துசூழ்ந்து விடுமென்றுயிக்கவிப் பாடினனே. ௱௫௮

அஞ்சுபத்தாயிரம் வருடங்கணக்குக ளாகுமென்றே
மஞ்சுக்குடையிடு முஹம்மதுனாத்தசொற் வாஸ்தமதே
நெஞ்சிற்பயமத்து யிருக்கிறீர்பூலவை நிஜமென்றெண்ணி
தஞ்சாவூரானு மகராஜனுளைக்கி தண்டிப்பனே. ௱௫௯

முன்னுல்குணங்குடி யார்சொன்னசொல்லுக்கு மோசமுண்டோ
பின்னுல்படுந்துய ரெண்ணுமற்பூவிற் பினததுகிறீர்
என்னுலேக்கூடிய மட்டுங்கவியா லெடுத்துரைத்தேன்
தன்னுலேதான்கெட்டுப் போமுன்ஷரிஅத்தைச் சார்ந்திடுவீர். ௱௬௰

சத்தியமாகயான் சொன்னேனெனது சகோதரரே
புத்தியுள்ளோர்க்கு யிதுபோதுங்காணும் பொருளறிய
குத்திதனைவிட்டுப் போகுமுனீங்கட் குணங்குடியை
பத்திப்பிடித்து கொள்ளுமென்றேகவிப் பாடினனே. ௱௬௧

உன்னைத்துதித்தே னிறையேநீயன்றி யொருவருண்டோ
என்னையுலகி லிகட்சியாய்செய்து பிரக்கிலேயோ
அன்னையைப்போலவே ஆதரவாகிய ஆண்டவாவுன்
றன்னடிசேர்த்து காத்திடுவாயென் றயாபரனே. ௱௬௨

புலவோர்கட்சொல்லும் பொருளும்பொய்யென்று புலம்புகிறீர்
உலமாக்கள்சொல்லும் வகுலூநவிகத்து தகாதென்கிறீர்
கலகமவிளைக்கும் வைஷயித்தானுடனே கலந்துகொண்டே
உலகைச்சதமென்று யெண்ணினுல் கல்பிலுருதியுண்டோ. ௱௬௩

மணமுரண்டாக விருக்குதீர்போது மவுத்துவந்தால்
தனம்வந்துவுங்களுக் காதரவாகுமோ தரையினுள்ளே
கனமாகயெண்ணிப் பூவின்பொருளால் கலங்கியேதான்
எனஞ்ஜனத்தார்க்கென்று யென்தனம்வைப்பீ ரிடும்பர்களே. ௱௬௪

புத்தியும்போகும் பிலஹுங்குறையும் பொருளழியும்
தத்துவஞானமும் போதமுங்கல்வியும் சருகிவிடும்
சத்தியெடுத்திடுக் குன்மமேகங்களுந் தான்பிடிக்கும்
கத்தியமாதர்கள் யோனிமனுக்கு நரகமதே ௱௬௫

நயமாகத்தேடி பிடிப்பாருலகிற் நாரியர்கள்
பயமாகப்பேசி தனமுள்ளமட்டும் பணிந்திடுவார்
ஜெயம்போனபோது தெரிவதிற்கண்டால் சிரிக்குகின்ற
வியமுருமாதர் யோனிப்பெரிய விரிகடலே. ௱௬௬

பத்தாவுனையன்றி வேரேயொருவனைப் பாரேனென்பார்
உத்தாரமொன்று முறையாமலொண்டி யிருந்திடுவார்
வித்தாரம்பேசிடும் வேசையைநம்பிடும் வீறியரே
வத்தாமலோடிடும் நீர்க்குழிமாற்ற மருந்துமுண்டோ. ௱௬௭

மங்கையர்தங்கள் வலையதிற்சிக்கி மதிமயங்கி
அங்கமெலிந்து தனமுமழிந்து வவஸ்தைபட்டு
வங்குஞ்சொரியும் வெறிபிடித்தாடிய மானிடரே
பங்கங்கட்செய்திடு மாதர்கள்யோனி படுக்குழியே. ௱௬௮

குழியில்வருந்துய ரொண்ணுமற்றீங்கட் குவலதிலே
மொழிமாரிப்பேசி முதல்தேடிசேர்க்கின்ற மூர்க்கர்களே
அழியாமலென்று மிருக்கவோயிந்த அடஞ்செய்குகிறீர்
பழிவந்துசூழ்ந்திடும் நாளைக்கபுரிற் படுத்தவுடன். ௱௬௯

பேணுநீருங்கட் சரீரம்வாடாமற் பெலப்படுத்தி
ஆணிகழன்று போமென்றசெய்கையை யறிந்திலையோ
வாணியஞ்செய்து மால்சேர்த்துவைத்த மகிமையெல்லாம்
தோணிக்விழ்ந்த வுடனேதெரிந்திடுந் தோழர்களே. ௱௭௰

தாய்தந்தைசொல்லைத் தட்டிநடக்குஞ் சகோதரரே
மயவநாளைப் பிடித்துயிர்வாங்கி மறித்தவுடன்
நாய்போலலைந்துத் திரிவீரல்லாது நயங்கிட்டுமோ
காய்நரகுக்கிரை யாகிடுவீர்கள் ஹக்காணைசொன்னேன். ௱௭௧

பெத்துவளர்த்த தாயையிழந்து பெண்டீருடைய
பத்தம்பெரிதென்றுயெண்ணியிருக்கின்ற பாவிகளே
குத்தம்வருமென்று யெண்ணுமல்நீங்கள் குழிப்புகுந்தால்
கத்தனிடத்திலே போனாலறிவீர் ஹக்காணைசொன்னேன். ௱௭௨

தாய்மனம்நோகச் செய்வீர்களானுல் சக்ருத்ததிலே
வாயால்கவிமா மொழியவருதிகாண் மானிடரே
காய்போலநீங்கள் குலைத்துவுயிரை நமன்பிடித்தால்
காயமழிந்து நரகில்புகுவீர் ஹக்காணைசொன்னேன். ௱௭௩

தாய்தக்கைமாரைப் பூவதில்நீங்கள் சதிவுசெய்தால்
ஓயாமலென்றும் நரகதில்வெந்து வுருகிடுவீர்
காயத்தையென்றும் பிலனுகயெண்ணுங் கசடர்களே
நாயனுரைத்த மறையதைப்பாருங்கள் நாஞ்சொன்னேனே. ௫௭௪

தாயுந்தகப்பன் பசியோடிருக்கவுஞ் சாதங்கறி
நாய்போலேதித்தந் தின்னுதீர்நாயன் நபில்மறந்து
மாயனுயிரைக் கொடுபோனல்நாளைக்கி மண்ணறையில்
காயம்புகுந்த உடனேயறிவீர் ஹக்கானைசொன்னேன். ௫௭௫

மனைவியுரைக்குஞ் சொல்லதைநம்பிடு மானிடரே
பனுவாகப்போவீர் தாய்மனதோகப் படுத்திவைத்தால்
வினுவாகப்பார்த்து அறிவீர்யிறைமொழி வேதத்தையே
ஜனுஸாவாய்நீங்க ளாயிடுவீர்சொன்னேன் சத்தியமே. ௫௭௬

செத்திடில்நாளைக் கபுறில்படுவீர் செருப்படிதான்
கத்தாவிடத்திலே போனல்நரகதில் கைதுசெய்வான்
மூத்தாயிருந்த முஹம்மதர்சொன்னது மோசமுண்டோ
பித்தரேநீங்கள் பிதாவன்னைமார்களைப் பேணுங்களே. ௫௭௭

முலைப்பால்குடித்த மாதாவைநீங்கள் முகஞ்சினக்க
கலைப்பாள்கொடியில் பெண்டிரைச்சொல்லுங் கள்ளிகளே
தலைப்பாவுஞ்சட்டை யணையும்படிபெற்ற தாய்மனந்தான்
மலைப்பாகச்செய்து வைத்தால்நரகில் வதைப்படுவீர் ௫௭௮

மான்விழியாளின் சொல்லாலேமாதா வயரெரிந்தால்
தான்படும்பாடு பின்னல்தெரியும் சகோதரரே
கோனுரைதப்பி யீன்றெடுத்தோர்க்குக் கொடுமைசெய்தால்
வானேரிமீண்ட நபியுமண்டாடிடார் மானிடரே. ௫௭௯

அன்னையுந்தங்கை யின்னுமொண்டறியா வசடர்களே
பின்னையும்பெண்டீர் பின்னைப்பெரிதெனப் புலம்புகிறீர்
உன்னைமுன்னுலே வுருவாய்ச்சமைத்த வுடையோனுரைத்தான்
என்னைப்போல்நீங்கள் பிதாவன்னைமார்களை யெண்ணுமென்றே. ௫௮௰

கட்டியறுத்த சகோதரியாகிய கைம்பெண்களை
பட்டிபோலுன்பெண் குலைக்கும்படியாகப் பார்த்திருந்தால்
அட்டியில்லாமல் நாளைமகுஷறி லாண்டவன்றான்
வட்டிகள்வாங்கிடுங் கூட்டத்திற்சேர்த்து வதைகள்செய்வான். ௫௮௧

கூடப்பிறந்திடும் பெண்களைப்பூவிற் கொடுமைசெய்தால்
மாட்ப்பிராவா யிருந்தோருடைய மன்ருட்டமில்லை
சேடாகமுன்பின் வந்தோரைநீங்க ஷேணித்தால்
கேடாகவந்து முடிந்திடுங்காணுங் கெடும்பர்களே ௱௮௨

சகோதரிமாரை யடித்துத் துரத்திடுஞ் சகோதரரே
மகோதரமான வியாதிப்பிடித்து மறித்திடுவீர்
அகோரமதான அதாபில்லகப்படு வாரெனவே
உகாரமதான எழுத்தாயுதித்தவ ரோதினரே. ௱௮௩

தந்தையில்லாத யெத்தீம்கள்சொற்றைத் தான்பறித்துச்
சொந்தமதாகி யெடுக்கநினைத்திடுந் துஷ்டர்களே
சிந்தையில்நீங்கள் பயமீத்துபூவில் திரிந்தலைந்தால்
அந்தமகுஷரில் முந்தியதாபி லகப்படுவீர். ௱௮௪

முந்தமயில்வடி வாகயிருந்த முஹம்மதரும்
இந்தஹதீதை யெடுத்துரைத்தார்கள் யெத்தீம்களுக்காய்
சந்தாபமாக யெண்ணிடில்நாளை ஜஹன்னத்திலே
பந்தமதுபோ லெரிந்திடுவீர்சொன்னேன் பாயிகளே. ௱௮௫

நாயன்மொழியு நபியின்ஹதீதின் படிநடந்தால்
மாயன்பிடித்துப் போனுலுனை மகிமையுண்டாம்
பேயனைப்போலே புலம்பிவிட்டானென்று பேசினவர்
போயென்னநீங்கள் யிருந்தென்னபூவிற் புரோஜனமோ. ௱௮௬

கெடுபுத்தியாகத் திரிகிறீர்பூவில் கிலேசமன்றி
அடுப்புத்தீக்கொஞ்சஞ் சுட்டுவிட்டாக்கா லழுதிடுவீர்
கடுப்புமதிகமா யாகிடுமுனைக் கடைசியிலே
இடுப்பளவானக் கபுறில்கிடந்து யெரிந்திடுவீர். ௱௮௭

கியாமனுள்மட்டுங் கபுறில்கிடந்து கனையும்படி
அபாயமாய்வந்துப் பிடிப்பார்மலக்கு அரைநொடியில்
உபாயமாய்ப்பேசி யூரைக்கெடுக்கின்ற லுத்தர்களே
சபாஅத்துநாளைக் கிடையாதெனக்கவி சாத்தினனே. ௱௮௮

தீனபேர்க்கு யிரங்காமல்நீங்கள் தினந்தினமும்
தானாகத்தின்று யிருப்போமென்றெண்ணுஞ் சகோதரரே
ஆனாலுமுங்கள் யெண்ணமழியு மரைநொடியில்
போனுல்கபுறி லறிவீர்களென்மொழி பொய்நிஜமே. ௱௮௯

பேணிக்கொள்வோர்க்கு யிதுபோதுங்காணும் பூவதிலே
மாணிக்கம்போலே வெளியாகச்சொன்னேன் வாஸ்த்தமதாய்
ஆணிப்பொன்தேடிக் குவித்தாலுமுங்கட்கு ஆகிறிலே
காணிக்காசாகிலுங் கூடவராது கபுறுக்குள்ளே. ௱௯௰

நிட்சயமற்ற வுடலைச்சதமென்று நிண்ணயமாய்
அச்சங்களன்றித் திரிகிரீர்மக்களுக் காஸ்த்திவைக்க
மிச்சமுதல்வைத்துப் போனோர்புதல்வர் வெறுமணமாய்
பிச்சையிறந்திடக் கண்டேனென்கண்ணிணுல் பேயர்களே. ௱௯௧

தனம்வைத்தால்மக்கள் வாழ்வார்களென்று தறணியிலே
மனம்வைத்துத்தேடிக் குவிக்கிறீர் மாலை மலைமலையாய்
சிணமத்துப்போய்விடு மூச்சதைநம்பிடுந் தீனவரே
பணம்வைத்தசெய்கை யறிவீர்கள்நாளைப் பரனிடத்தே. ௱௯௨

தினங்கெட்டுநீங்கள் குதிக்குறீர்கூடு திடமெனவே
கணம்விட்டுப்போகுமே ஓர்நொடிப்பொழுதிற் காற்றகண்டால்
வனம்விட்டுயேகும் வுளுவைபோல்நின்று மயங்கிடுவீர்
யினம்விட்டுநாளைப் போனாலறிவீர் யிறையிடத்தே ௱௯௩

யிறைமொழிதப்பி யிருக்குறீர்யென்று மிருப்போமென்றே
மறைமொழிதன்னிலே பொய்யுண்டோசொல்லிடு மானிடரே
தறையைநிசமென்று யெண்ணிமால்தேடச் சதிவுசெய்தால்
சிறையிலகப்பட்டுக் கொள்வாரென்றேநபி செப்பினரே. ௱௯௪

அவன்றானுரைத்தப் படிநடவாதிடி லாபத்துண்டாம்
எவன்தானுதவி செய்குவானென்றுமே யெண்ணுகிறீர்
மகன்தானுக்கூட வருவதுண்டோசொல்லு மண்ணுக்குள்ளே
உகன்தான்முடியு மட்டுங்கபுறி லுதைப்படுவீர். ௱௯௫

பட்டால்தெரிந்துக் கொள்வீர்கள்யான்சொன்னேன் பாயிகளே
முட்டாள்கள்போலே திரிகிறீர்மூச்சை முழுதும்நம்பி
சுட்டாலுமுங்கட் குணவுவராதுகாண் தொல்லுலகிற்
கெட்டாலுங்கெட்டு விடுவோமென்றெண்ணிடுங் கேவலரே. ௱௯௬

மாய்வுற்றதேகம் நில்லாதுயென்று மனதுணர்ந்துந்
காயற்றபிள்ளை யிருக்குதென்றெண்ணிச் சலிக்குகிறீர்
காயத்தில்றூஹா யிருந்தாலுங்கர்த்தன் கார்ப்பதன்றே
காயத்தைநீங்க டறிந்தில்லையோநன்றி யற்றவரே. ௱௯௭

மக்கட்கு நீங்கள் மணமதுசெய்திட மண்ணதிலே
ஒருக்கமுதலைச் செலவுகட்செய்து வுடுப்புடுத்தி
வொழுக்கமில்லாத வேசைகட்பாடிட வீதிவந்தால்
துக்கப்படும்படிச் செய்வான்காணுங்களைத் துய்யவனே. ௱௯௮

ஹதீதின்படிக்கு நிக்காகுசெய்யாமல் கனத்தையெண்ணி
பதிதனிலுங்கட் பணத்தின்பெருமையைப் பண்ணுகிறீர்
சதியனிபுலீசு சொல்போ லுலகினிற் றுண்டந்தால்
மதிமோசமாகி னுளைக்கபுறில் வதைப்படுவீர். ௱௯௯

வாணமத்தாப்பு வகைவகையாகிய வாத்தியமும்
நாணமில்லாமல் வுன்னியிலேத்தி நபுபத்துடன்
மானமில்லாமல் வீதிகட்சுத்திடு மானிடரே
ஜாணெட்டுவுள்ளக்குழியிற் புகுந்தபின் றுணறிவீர். ௨௱

அல்லாயிறசூல் சொன்னமொழியை யகலவிட்டுப்
பொல்லானிபுலீசு சொல்லதை நீங்கள் பொருந்திக்கொண்டீர்
இல்லாளுந்தானு மக்களுங்கூட்டி யிரவில்சென்று
நல்லாகக்கூடித் தின்றதைநாளைக் கறிந்துகொள்வீர். ௨௱௧

எண்ணங்கவலைக் கொள்ளவேணு மிரக்கமன்றி
வண்ணம்பெரிதா யிருக்குதென்றெண்ணி மகிழ்ந்திருந்தால்
விண்ணம்நொடியில் வருமென்றெண்ணாத மிலேச்சர்களே
சுண்ணம்போல்நீத்து விடுவானரகதில் துய்யவனே. ௨௱௨

கவனமில்லாமலே வுண்டுவுடுத்திக் கழித்திடவே
புவனமதிலே பொருட்குடுத்தோனைப் புகழாதிருந்தால்
தவனம்பெரிதாய் கிடந்துஸக்றுத்தில் சலித்திடுவீர்
மவுனமாய்ப்பேசி யிறப்போர்க்கீயாத பகீலர்களே. ௨௱௩

மீண்டங்கேகொண்டுப் போகலாமென்றுமே மேதினியில்
பண்டுகள்வாங்கி வைத்துயிருக்கும் பகீலர்களே
மாண்டுக்குழியில் போனவுடனே மலக்குடைய
மீண்டடியுங்கட்குத் தப்பாதுநாளை நிட்சயமே. ௨௱௪

நன்றிமறந்து பேசுறீர்தேச நடபடிபோல்
ஒன்றியாயென்று மிருப்பவன்சொல்லை வுதாசனித்து
சண்டிகட்போலே திரிந்திடில்நாளை ஜஹன்னத்திலே
தெண்டனைக்குள்ளே யகப்படுவீரென்று செப்பினனே ௨௱௫

ஒருதுள்ளிநத்துபாக் கொண்டல்லோநம்மை வுருச்சமைத்தான்
புறுக்கானில்சொன்ன மொழியையறிந்திடாப் புல்லர்களே
கெருவங்கள்பேசித் திரிகிறீர்பூவில் கிலேசமன்றி
சுரூபம்நெருப்பில் புகுமுன்னேநீங்கள் தெளபாவைச்செய்வீர், உ௱சு

ஆயத்தின்மஃனாவைக் கேளுங்கள்சென்று ஆலிங்களிடம்
காயத்தையென்றும் பிலனாகவெண்ணுங் கசடர்களே
மாயத்தைச்செய்யு மிபுலீசுடைய வலையிற்சிக்கும்
நாயத்தைநீங்க ளறிவீர்கியாமத்தி னாளையிலே. உ௱எ

சுருதிதனிலிறை சொன்னதலீலதைத் தூஷணித்து
வுறுதியில்லாமல் மனம்போல்நடக்கிறீர் வுலகதிலே
அறுதினாள்வந்து முடிந்திடிநாளை யாகிறத்தில்
பருதியின்சூட்டில் கொதித்திடுமூளைகட் பாவிகளே உ௱அ

பேடிகள்போலே திரிவீர்தனத்தின் பெருமையினால்
தாடியுமீசையும் வைத்துக்கொழுத்த ஜடலம்நன்றாய்
மாடியுமாளிகை கட்டுகிறீர்மண்ணின் வாழ்வைநம்பி
சோடிபிரிந்தால் கறைபுகுமென்று சுணையில்லையோ. உ௱கூ

மக்களில்லாதவர் மால்தேடிமண்ணில் மகிமையென்ன
வெட்கமில்லாமல் வீசைமுறுக்கின்ற வீறியரோ
துக்கம்வருமென்று மெண்ணுமற்பூவிற் சொகிக்கியபின்
ஹக்களிடத்திலே போனால்தெரியுங் கடுமைகளே உ௱௰

மெத்தைமேல்மெத்தை வைத்தில்லைக்கட்டி வெகுசிறப்பாய்ச்
சொத்தைப்பெரிதா யெண்ணித்திரிகின்ற தோழர்களே
கத்தாமொழிந்த தலீலதைவிட்டுக் கடைசியிலே
செத்திடில்நாளைப் படுவீர்கபுறிற் சிறுமைகளே. உ௱௰க

பத்தைப்பிடித்துப் பாராமல்நீங்கள் பதிதனிலே
மெத்தையுங்கட்டிலும் போட்டுமெத்துவாகத் தூங்குகிறீர்
வத்தலுடைந்து போகாதென்றெண்ணி மகிழ்ந்திருந்து
செத்தபின்னாளைப் படுவீர்கபுறிற் சிறுமைகளே. உ௱௰உ

அத்தைமகளைக் காவனெழுதி யவள்சொற்படி
சொத்தையெழுதி வைக்கிறீர்நீங்கள் துனியாவதிலே
கத்தனுறைத்தப் படிநடவாமற் கடைசியிலே
செத்தபின்னாளைப் படுவீர்கபுறிற் சிறுமைகளே. உ௱௰ங

அத்தர்புனுகு சவ்வாதணிந்துமவனியிலே
நித்தமும்வாழ்ந்து யிருப்போமென்றெண்ணி நிகழ்த்துகிறீர்
கத்தன்மலக்கு வந்துமேகாற்றை கைபற்றுவார்
செத்தபின்னாளைப் படுவீர்கபுறிற் சிறுமைகளே. உ௱௰௪

அத்தியெரும்பு படைத்தோன்மொழியை யகலவிட்டு
குத்திச்சதமென்று ஷரீஅத்தைவிட்ட கூட்டாளிகளே
முத்திதரும்வழி தேடாமல்நாளைக்கி மூச்சொழிந்து
செத்தபின்னாளைப் படுவீர்கபுறில் சிறுமைகளே. உ௱௰௫

கொத்துச்சரப்பளி மாலாவுஞ்சங்கிலிக் கோர்வைகளை
சித்தமாயச்செய்து கொடுக்கிறீருங்கள் துணைவியிடம்
பித்தம்பிடித்து ஷரீஅத்தைப்பூவிற் பேணுதிருந்தால்
செத்தபின்னாளைப் படுவீர்கபுரில் சிறுமைகளே. உ௱௰௬

வெத்திவிருதுக ளுள்ளவன்சொல்லை வெறுத்துவிட்டுப்
புத்தியாய்நீங்கள் ஷரீஅத்தைவிட்டுமே பூவதிலே
மத்தியீம்போலே குதிக்கிறீர்மாலை மதித்துகொண்டு
செத்தபின்னல்லோ தெரியுங்கபுரில் யான்செப்பினதே. உ௱௰௭

முத்தாயிருந்த முஹம்மதர்சொல்லை முழுதும்விட்டு
பெத்தார்பிறந்தார் பெரிதென்றுவெண்ணிப் பினத்துகிறீர்
சற்றுகிலும்பய மன்றியிறைசொல்லைத் தள்ளிவிட்டீர்
செத்தபின்னல்லோ தெரியுங்கபுறில்யான் செப்பினதே. உ௱௰௮

அத்திதனிலே காளமதானே ரவர்மொழியைப்
புத்தியென்றெண்ணி ஷறகைப்பிடித்திடாப் புதல்வர்களே
குத்தாக்கள்போலே குதிக்கிறீரிந்தக் கூட்டைநம்பி
செத்திடலல்லோ தெரியுங்கபுரில்யான் செப்பினதே. உ௱௰௯

இத்திமரம்போல் பருத்துக்கொழுத்து மிருக்குகிறீர்
சத்தியமாக வருவார்மலக்கு க்ஷணமதிலே
எத்திசையோர்குடை யாள்வோன்தலீலை யெடாதிருந்து
செத்தபின்னல்லோ தெரியுங்கபுறில்யான் செப்பினதே. உ௨௰

பெத்தமகனும் பெண்டிருஞ்சுத்தம் பெரிதெனவே
வித்தாயிருப்போன் மறையின்மொழியதை விட்டுவிட்டீர்
முத்தனிஜ்ஜாயில் வருவார்கண்மூடி முழிக்குமுன்னே
செத்திடில்நாளை யறிவீர்பயல்சொன்ன செய்திகளே. உ௨௧

நித்தமுநீங்கள் மவுத்தானபேரை நிலத்துக்குள்ளே
வைத்துமேமூடி மண்ணிடுஞ்செய்கை மறந்துவிட்டீர்
முத்தனிஜ்ராயில் வருவார்கண்மூடி முழிக்குமுன்னே
செத்திடில்நாளை யறிவீர்பயல்சொன்ன செய்திகளே. ௨௨௨

பத்தரைமாத்துத் தங்கத்தைவாங்கிப் பணிகள்செய்து
மொத்தமாய்ச்சேர்த்துப் பொட்டியில்வைப்பீர் மூவந்தருக்காய்
முத்தனிஜ்ராயில் வருவார்கண்மூடி முழிக்குமுன்னே
செத்திடில்நாளை யறிவீர்பயல்சொன்ன செய்திகளே. ௨௨௩

வத்தாதசெல்வ மிருக்குதென்றெண்ணியே வையகத்தில்
பெத்தார்பிறந்தார் பெண்டீர்பெரிதென்றும் பேசுகிறீர்
உத்தாருறவின் முறையாருநாளைக் குதவியில்லை
செத்திடில்நாளை யறிவீர்பயல்சொன்ன செய்திகளே. ௨௨௪

கொத்துக்கொத்தாக மாலாவுஞ்சங்கிலிக் கோர்வைசெய்து
பத்துப்பதினைந்து வாயிரம்பொன்னைப் பவுசென்றெண்ணி
சித்தாகவென்று மிருப்பவன்சொல்லைத் தெருவில்விட்டு
செத்தபின்னாளை யறிவீர்பயல்சொன்ன செய்திகளே ௨௨௫

எத்தும்பிரட்டும் பொய்சொல்லிமாலை யெடுத்தெடுத்து
சுத்துக்கட்டென்று மெத்தைகள்வைத்துமே சோடிக்கிறீர்
சத்துப்பிரிந்து போமென்றசெய்தியைத் தான்மறந்தால்
செத்தபின்னாளை யறிவீர்பயல்சொன்ன செய்திகளே ௨௨௬

கத்தாவெருமைகட் போலேகொழுத்துக் கறிகள்வைத்து
எத்தாகப்பேசி ஹறாமானவட்டி யெடுக்கிறீர்
சத்தாகிலும்பய மில்லாதிருக்கும் சகோதரரே
செத்திடில்நாளை யறிவீர்பயல்சொன்ன செய்திகளே. ௨௨௭

புத்தைவணங்கிடும் ஹிந்துக்கட்போலே புவியதிலே
பத்துக்கலாக்கால் வட்டிகள்வாங்கிடும் பாவிகளே
கத்தாவிலக்கும் ஹறாமதுதின்றால் கடைசியிலே
செத்திடில்நாளை யறிவீர்பயல்சொன்ன செய்திகளே. ௨௨௮

பட்டுசெருப்புந் தலைப்பாகைசட்டை பாபடாசணிந்து
செட்டுகள்செய்து திரவியந்தேடிடுந் தீனவரே.
எட்டுச்சாண்வீடு சதமில்லைநாளை யிறந்தவுடனே
கட்டுங்கபனொடும் போவீர்களந்தக் கபுரதர்க்கே, ௨௨௯

எழும்புதசையுள்ள வீடழியாதென வெண்ணங்கொண்டு
சுலுமுகட்செய்து முதல்மிச்சந்தேடிடுந் தோழர்களே
சிலம்புச்சிதன்னி லிருந்தநபிசொல் தெளியாதிருந்தால்
புலம்பியழும்படி நேரிடும்நாளைப் புதைக்குழியில். ௨௯௰

வழியொன்பதுள்ள வீட்டைச்சதமென்று வையகத்திற்
களிகூர்ந்துபூவிற் றிரிகிறீர்நீங்கள் கண்மறைந்தே
ஒளிவாமுஹம்மதர் சொல்லைமறந்த வுடப்பிறப்பே
பழிவந்துசூழுமுன் படைத்தோன்மறைமொழி பார்த்திடுவீர். ௨௯௧

மனைவிகள்றண்டு மூன்றுமணஞ்செய்யு மட்டிகளே
வினைபோலேமேகம் பிடித்துமிருக்குதீர் மேனியிலே
தனமதுசேர்த்து வைக்குதீர்பூவைச் சதமென்றெண்ணி
ஜனம்வந்துவுங்கட் குதவாதுநாளைத் தரையினுள்ளே ௨௯௨

பிள்ளையில்லாதவர்க் கேந்தான்பெருமைப் பூவதிலே
வெள்ளைகள்பூசி கட்டுதீரில்லை வெகுசிறப்பாய்
கொள்ளைநோய்வந்து பிடித்தால்தனங்கொண்டு போவதுண்டோ
துள்ளித்துடித்துப் போனால்தெரியுஞ் சுகதுக்கமே. ௨௯௩

சேயத்தபேர்கள் திரவியந்தேடியே சேர்த்துமென்ன
காயத்தையென்றுஞ் சதமாகவெண்ணுங் கசடர்களே
நேயத்துவாழ்ந்து மிருந்தவர்யார் நூறாண்டுமட்டும்
ஞாயத்தைநீங்கள் தெரியவெனக்கு நவின்றிடுவீர். ௨௯௪

அடிக்கடிமாறிப் பேசுதீர்நீங்க ளவனியிலே
துடிக்கப்பதைக்கப் போய்விடுஞ்செய்கையைத் தூரவிட்டுப்
படித்துப்படித்துப் பலவிதஞ்சொல்லிடும் பாவிகளே
குடித்துக்குழித்து விருந்தாலும்நாளைக் குழிபுகுவீர். ௨௯௫

நாளைமலக்கு வருவாரென்றெண்ணம் நம்பாமலேதான்
காளைகள்போலே மொழிமாறிப்பேசிடுங் கசடர்களே
வேளைமுடிவது வந்தாலுயிர்போயி மீள்வதுண்டோ
மூளையுருகும் படியாய்நரகில் முழுகிடுவீர். ௨௯௬

நாப்பதுமுப்பது வாயிரரூபாயை நம்பியல்லோ
தோப்புந்துறவும் வயல்தோட்டம்பெண்டீர் சுகமென்கிறீர்
மூப்புமிளமையும் பாராமல்மூச்சைப் பிடித்திடுவார்
சாப்புந்தனமும் வாராதுநாளைத் தரையிற்குள்ளே. ௨௯௭

எட்டடி வீடு சதமில்லையுங்களுக் கென்றிருந்தும்
பட்டுப்போமென்று மெண்ணுதிருந்திடிற்பாரதுக்குள்
கட்டுங்கபனுடும் போவீரல்லாது கையதிலே
துட்டொன்றுநீங்கள் கொடுபோவதுண்டோ துனியாவைவிட்டே ()

குலுக்கிமினிக்கித் திரிகிறீர்ங்க கூட்டைநம்பி
எலிக்கிப்பகையாய் பூனையிருக்குதென் றெண்ணலையோ
சலிக்கும்படியாய் வருவார்மலக்கு க்ஷணமதிலே
அலிக்கிமகலைக் குடுத்தோர்ஹதீதை யறிந்திலையோ. ௨௩௯

தனத்தைப்பெரிதா யெண்ணிபோநீங்கள் தறைதனிலே
அனைத்தும்படைத்தோன் சொல்தட்டிப்பேசி யலையுகிறீர்
சினத்தால்பிடித்து மலக்குயிர்வாங்கியே செத்துவிட்டால்
இனத்தாருங் கூட வருவாரோநாளை யிடுகுழியில். ௨௪௰

என்றென்றுமுள்ளவன் சொல்லைமறந்து யிடாதுவாய்
மன்றுமனையும் வயல்தோட்டம்வாழ்வால் மகிழுகிறீர்
பன்றுள்ளபேர்கள் கபுறில்படுகின்ற பாடறிந்தால்
ஒன்றுமேபூவில் செய்யாமல்விட்டு வொதுங்கிடுவீர். ௨௪௧

நானென்றுமாண்மை பேசுவோர்நாளை நரகதிலே
தான்சென்றிருப்பது தப்பில்லையென்று தறைதனிலே
மானுடன்பேசு முஹம்மதர்சொன்ன மறைமொழியை
தான்கண்டுபார்த்து தெரிந்துகொள்வீர்கள் சகோதரரே. ௨௪௨

பெருமையினாலே கன்னுசுயென்றுமே பேரும்பெத்து
சிறுமையிற்சிக்கி லகுனத்திலாகியே சீரழிந்தான்
கருமைவிழிமயில் ஆயிஷாகேள்வர் ஹதீதின்படி
வருமைவருமுன்னே விட்டுத்தௌபாச்செய்யு மர்கிடமே ௨௪௩

விழிமானுடனே பேசிடும்நன்னபி வினவினதை
கழிகூர்ந்துபூவி லெடுத்தவர்ஜென்னத்தைக் கண்டுகொள்வார்
இழிவாகயெண்ணைக் கொண்டவர்நாளை யெரிநரகின்
குழியில்கிடந்து யெரிவாரெனநபி கூறினரே. ௨௪௪

நான்சொன்னசொல்லை நம்பாமல்பூவில் நடந்துவந்தால்
தான்படும்பாடு பின்னுற்றெரியுஞ் சகோதரரே
கோன்தானுரைத்தப் படிநடவாமற் கொடுமைசெய்தால்
ஊன்தான்பெருகும் வைலதில்நாளை விழுந்திடுவீர். ௨௪௫

தறைமையச்சதமென்று மெண்ணியேநீங்கள் தட்டுதட்டாய்
அறைகளும்வைத்துக் கட்டுநீரில்லை யலங்கரித்தே
மறையையுரைத்த முஹம்மதர்சொல்லை மறந்துவிட்டால்
இறையிடம்போனு லென்னசொல்வீரென் றியம்பிடுவீர். ௨௪௫

காணிக்கரைகளுந் தோட்டங்கள்வாங்கக் கருத்திலெண்ணி
வாணிபஞ்செய்து மால்மிச்சந்தேடிடு மானிடரோ
தோணிகவிழ்ந்துப் போய்விடுங்காணுஞ் சுறுக்கதிலே
ஏணிமேலேறி மிஃறாஜிசெண்டோ ரியம்பினர்காண். ௨௪௬

ஆருந்துணையாய் வருவாரோநர்ளை யடக்கியபின்
ஊரிலிருந்து யெடுத்துக்கொடுபோ யொன்றியதாய்
சேருமணலையுந் தோண்டிக்கபுருக்குள் சேர்த்திடுவார்
பாருமனதில் நபிசொன்னசொல்லை பயங்கள்வைத்தே. ௨௪௭

பயமற்றபேர்கள் மூதேவியேறும் பரியெனவே
ஜெயம்பெற்றுவந்த முஹம்மதர்வாயினுற் செப்பினர்காண்
நயமாயுரைத்த மறைமொழிதட்டி நடந்துவந்தால்
மயந்தானதிகக் கொடியநெருப்பிற் மயங்கிடுவீர். ௨௪௮

செல்வத்தைநீங்கள் பெரிதாகவெண்ணி ஜெகமதிலே
கல்புமகிழ்ந்து வலைகிறீர்காசு சதமெனவே
கொல்லுமலக்கு வந்துயிர்வாங்கிக் குழிபுகுந்தால்
அல்லும்பகலு மழுதுபுரண்டு அலறிடுவீர். ௨௪௯

மறுமைநாள்வந்து விடுமென்றெண்ணுமலே வையகத்தில்
பெருமையாய்ப்பேசி தனந்தேடிவைக்குறீர் பெட்டிகளில்
வெறுவீட்டில்நாளைப் புகுந்தாலனேக விஜனமுண்டாம்
பருவந்தவறுமுன் பார்த்துகொண்டோர்க்குப் பலங்கிட்டுமே. ௨௫௰

பத்தெட்டுலக்ஷப் தனஞ்சேர்ந்திருக்கும் பவுசதனுல்
முத்தன்மறைமொழி தட்டியேசெய்யுறீர் மோசங்களை
கத்தனிசுறுயில் பிடிப்பாருயிரைக் கணப்பொழுதில்
செத்தபின்னுளை யறிவீர்பயல்சொன்ன செய்திகளே ௨௫௧

மொத்தமுதல்க ளிருக்குதென்றெண்ணி மூர்க்கமதாய்
சுத்தன்மொழிந்த சொல்லைமறந்து துடிக்குறீர்
கத்தனிஜ்றுயில் பிடிப்பாருயிரைக் கணப்பொழுதில்
செத்தபின்னுளை யறிவீர்பயல்சொன்ன செய்திகளே. ௨௫௨

பெற்றமகளு மருயக்கமார்முதல் பேத்திகளுஞ்
சற்றம்பெரிதென்று யெண்ணியேபூவிற் றொழுகைவிட்டீர்
பத்துயிருபதினாயிரம் ரூபாயும் பாரில்விட்டுச்
செத்தபின்னல்லோ தெரியுங்கபுரில்யான் செப்பினதே. ௨௫௪

பெத்திடுங்காயுந் தகப்பன்மாற்செய்யப் பூவதிலே
உத்தமைப்பார்த்து விலகாதிருக்கு முடம்பிறப்பே
அத்திடுமூச்சைப் பிலனென்றுபெண்ணி யலையுகிறீர்
செத்தபின்னல்லோ தெரியுங்கபுரில்யான் செப்பினதே. ௨௫௫

குத்திரக்கூத்தியும் காவனொழுதுங் குமரிகளைச்
சுத்தமதாக நம்பியேபூவிற் றொழுகைவிட்டீர்
பித்தர்கள்போலே மூச்சைப்பெரிதென்று பேசுகிறீர்
செத்தபின்னல்லோ தெரியும்பயல்சொன்ன செய்திகளே. ௨௫௬

ஆசைப்பெரிதா யலைகிறீர்சித்த மவனியிலே
காசுசதமில்லை யென்றிருந்தாலுங் கபுற்புகுவீர்
வீசையுந்தாடி பழுத்தும்பயனில்லா விருத்தர்களே
ஓசைகளன்றி வருவார்மலக்கு வொருநொடியில். ௨௫௭

தென்னைபனையீத்தம் தோப்புகள்வாங்கி லேஸங்கிகட்ட
சன்னதெழுதி ருத்தகைக்கீந்து சாஞனிடத்திற்
முன்னமுதலை யடுவான்ஸ்வாங்கிடு மூமீன்களே
பின்னால்மருஷறி லென்னசொல்வீர்கள் பெரியோனிடத்தே. ௨௫௮

மறையில்விலக்கிடுங் வஸ்தவைநீங்கள் மனந்துணிந்து
தறையிற்குடுத்துத் தனம்வாங்கிச்சேர்க்குஞ் சகோதரரே
முறையில்லைநீங்கள் செய்திடும்வேலை முன்னோந்தனக்கு
இறைகோபமாகி லகுனத்தம்பெற்று யெரிந்திடுவீர் ௨௫௯

மதுவதுகட்ட மரத்தைக்கொடுக்கின்ற மானிடரே
அதுவும்ஹறுமென்று சொன்னாருலகில் ஆலிம்களெல்லாம்
வதுவைக்கிவாங்கிக் குடித்தாலும்வட்டிய தாகுமெனறும்
உதுமானலிபுலி மாதுலர்சொன்ன வொசியத்திலே ௨௬௰

எந்தவிதமுந் தனஞ்சேர்ந்தால்போதுமென்றெண்ணங்கொண்டு
அந்தம்வடிவு மில்லான்மறையை யகலவிட்டீர்
சொந்தமென்றெண்ணி யிருக்குறீர்தேகல்சதை வீடதுவை
சந்தூக்கிலேறிப் போனால்தெரியுந் தறையிற்குள்ளே. ௨௬௧

பூமியினுள்ளே புகுந்திடுஞ்செய்கை பொய்யெனவே
ஆமினர்பெற்ற அகமதர்சொல்லை யகற்றிவிட்டீர்
மூமீன்களாகிக் கலிமாமொழிந்து முதல்தனக்காய்
ஈமானிழந்து சக்ருத்தில்நாளை யிறங்கிடுவீர், ௨௬௨

படிக்குள்பயண மாகிடுஞ்செய்கையைப் பாரில்விட்டுக்
கொடிப்போட்டுவாழ்ந்து மிருப்போமென்றெண்ணிக் குதிக்கிறீர்
தடிக்குளிருக்குஞ் சரமோடிப்போகித் தரைபுகுந்தால்
அடிக்குமலக்கு வருவார்அடி யெட்டு வைக்குமுன்னே. ௨௬௩

அஞ்சுமொழிவந்து கேழ்ப்பர்மலக்கு வறையிற்குள்ளே
தஞ்சாவூராளு மஹாராஜனேவற் றடியுடையோர்
துஞ்சாதிருந்தவ ராருண்டுஞ்சொல்லுந் துனியாவதிலே
எஞ்சாவுடல்தான் சதமில்லையென்று மியம்பினனே ௨௬௪

பாரிலிருக்கும் பொழுதல்லோகெட்டப் பகையனைத்தான்
வேரையறுத்து வெருட்டில்லாக்கி வெற்றியுண்டாம்
மாரானவேலைகட் செய்துநொடியில் மவுத்துவந்தால்
நீரதுபோல வுடலதுவெந்திடும் நேசர்களே. ௨௬௫

இடரானகாரியஞ் செய்குதீரென்று மிருப்பமென்றே
படரானபொய்களைச் சொல்கிறீர்பூவில் பணமதர்க்காய்
குடராய்மவுத்தது வந்துப்பிடித்துமே சொக்கிவிட்டால்
கொடிதாயழுதிடு வீரந்தனுளைக் குழியதிலே. ௨௬௬

அல்லாமறையதிற் சொல்லாதசொல்லை யரிந்தெழுதி
சொல்லியேனுரு மெதிரிகட்பேசிடுந் தோழர்களே
வல்லாண்மையுள்ளவன் றூதருரைத்த வழிநடந்தால்
எல்லாம்வழியா யிலங்கிடுங்கல்வி யிருளகன்றே ௨௬௭

நபியைநமைப்போல் மனுவென்றுரைப்பவர் நாசமதாய்
அபிமானங்கெட்டு மவுத்தாகும்வேளை யழுதிடுவீர்
கபுரிற்புகுந்து அவதியாம்போது கலங்கிடவே
நபுசதுவெந்து வுருகிடுமேயந்த நாளையிலே ௨௬௮

ஒளிவிற்பிரிந்த முகம்மதரோது மொசியத்திலே
வளியாகளுலு யிமாம்வந்துதினை வளர்த்தனர்காண்
தெளிவாகப்பேசி யிருப்பதைநீங்கள் தெரிர்
களிவாகப்பூவி லுரைத்தால்கபுரிற் கண

நாலுமதஹபு யேதென்றெடுத்து நவின்றவர்கள்
தோலுமெலும்புஞ் சதையுமேவெந்து சுன்னமதாய்
ஆலம்படைத்தவன் தோசக்கிலிட்டு வதாபுசெய்வான்
கோலப்படுமுன்னே தவ்பாவைச்செய்தால் குணமுண்டுமே. உஎ0

பெருமைகள்மிச்சம் பேசாமல்கல்பதைப் பேணிக்கொண்டால்
அருமையாய்நாளை மகுஷரிலாதி யழைத்திடுவான்
வருமைவருமுன்னே வாக்குமனதொன்றாய் வைத்திருந்தால்
சிறுமையகன்று போய்விடுங்காண்சொன்னேன் தீனவரே. உஎக

எல்லாத்தவமும் பலித்திடுங்கல்பி லிரக்கம்வைத்தால்
அல்லா றகுமத்து பெற்றுமேசொர்க்கத்தி லாகிடுவீர்
பொல்லாதானாகிய விபுலீசுசொல்லைப் பிடித்துக்கொண்டால்
வல்லான்முனிவும் நபியினுதர்கோபமும் வாய்த்திடுமே. உஎஉ

இறக்கமில்லார்க்கு சொர்க்கமில்லையென்று யெங்கள்நபி
மறக்காமல்முன்னே வொசியத்துசெய்தது வாஸ்தமல்லோ
பிறக்காமலென்று மிருப்போன்மறையிற் பொய்களுண்டோ
உறக்கம்போல்வந்து விடுங்காண்மவுத்து உலகதிலே. உஎங

சிறப்புகழ்பெற்றிடும் ஆலநபியின் திருவிளக்கதை
மறக்கும்படியாய் செய்வானிபுலீசு மாயனுந்தான்
பிறக்குந்தருணம் வருவாநமக்கு யிடரதுவாய்
உறக்கத்திலுங்கலி மாவைமறந்திடா தோதிடுவீர். உஎச

கலிமாவைநீங்க ளுறுவாக்கிக்கொண்டால் கியாமமட்டும்
சலியாமலென்றுங் கபுரில்படுத்துச் சயனஞ்செய்வீர்
அலிமாதுலர்தன் சொன்னஹதிதின் படியரிந்தால்
ஒலிமார்கள்கூட்டத்திற் சேர்ப்பானிறையவ னுண்மையதே. உஎரு

அலிபதுக்குள்ளே யிருக்குதுபாரு அகமியமே
புலிவந்துபாய்ந்திடு மோர்நொடிப்போதில் பூவதிலே
வலியவன்சொன்ன வழிநடந்தோனை மகுஷரிலே
ஒலிமார்கள்கூட வெழுப்புவானுனை யுடையவனே உஎசா

பெண்ணுக்குமாணுக்கும் பொருளைச்சரியாய் பிரிக்கும்படி
எண்ணுமுள்ளானிறை சொன்னமறையி லிதமுடனே
விண்ணும்வெளியும் விளைந்தோன்மொழியை வெறுத்துவிட்டால்
மண்ணறைபுகுந்த வுடனேவுணர்வீர்கள் மானிடரே. உஎஎ

இணக்கமில்லாம லீன்றிடுஞ்சேயருக் கிழிவுசெய்தால்
வணக்கம்பழுதாய் போய்விடும்காணும் வஞ்சகரே
கணக்குவழக்குகள் தீர்ந்திடும்னாளை கியாமத்திலே
மணக்குங்கஸ்தூரியின் வள்ளமண்டாட்டமங்கில்லையே. ௨௭௮

தனத்தைச்சரியாய் பிரித்துக்குடாமற் சதிவுசெய்தால்
அனைத்தும்படைத்த ஆள்பவனாலை யதாபுசெய்வான்
இனத்தோர்கட்சொல்லை யெடுக்காமல்பூவி லிறைசொர்படி
மனதால்தெளிந்துக் குடுப்பீர்கள்பெண்மக்கள் மாலுகளை. ௨௭௯

பாலத்திற்சென்று பரிசைகெடாமற் பரன்சொற்படி
ஞாலத்திற்நீங்கட் சரியாய்பிரித்து நடத்திடுவீர்
மாலத்துப்போகு மோர்நொடிதன்னில் மவுத்துவந்து
காலத்துப்போனால் தெரிந்திடும்யான்சொன்னக் காரியமே; ௨௮௰

ஆணுக்கொருபங்கு பெண்ணுக்கரைபங்கு வவனியிலே
பேணிப்பிரித்துக் குடுக்காமற்பூவிற் பிழைகள்செய்தால்
காணிக்கரைகளை விட்டுமேனாளைக் கபுர்புகுந்தால்
பாணியைக்காணி லழைத்தநபியும் பகைத்திடுவார். ௨௮௧

மக்கட்குநீங்கள் வஞ்சகஞ்செய்யின் மகுஷரிலே
துக்கமதாக அழுவீர்கள்னாளைத் துய்யோனிடத்திற்
வெக்கங்கெட்டுப் போகுமுன்வேத விதிப்படியே
ஹக்கனுறைத்தப் படிநடப்பீர்கள் ஹக்காணைசொன்னேன் ௨௮௨

தனக்குப்பிறந்திடும் பிள்ளைகடன்னிலே தாழ்த்தியுண்டோ
உனக்குத்தெரியா திருந்திடிலாரு முனைக்கிலையோ
எனக்கென்னபோய்விடும் நீதான்புவியி லிடர்கட்செய்தால்
கணக்குந்திராசில் நிறுத்தால்தெரிந்திடுங் காரியமே. ௨௮௩

மறையின்படிக்கிப் பிரித்துக்குடாமல் மனமுறண்டாய்
குறைசெய்துபெண்கள் மனதுபுழுங்கிக் குழிபுகுந்தால்
இறையிடஞ்சென்று யென்னவிதத்தை யியம்பிடுவீர்
தரையிலிருந்துச் சதிமானஞ்செய்யுஞ் சகோதரரே ௨௮௪

அல்லாவின்றூதர் அகம்மதர்சொன்ன ஹதீதின்படி
எல்லாஞ்சரியாய் நடந்திடினாலை யீடேத்தமுண்டாம்
பொல்லானிபுலீசு சொற்போனடந்துப் புவியைவிட்டால்
வல்லோன்முனிவும் நபியவர்கோபமும் வந்திடுமே ௨௮௫

சோட்டிகள்போட்டு சோடித்துவைத்து சுதன்றனக்கு
கூட்டிக்குடுத்துக் குலாவியிருக்கின்ற கோதையரே
தோட்டிப்பறையர் பெண்டுகட்செய்யுந் தொழிலெடுத்தால்
தாட்டிகமுள்ளான் வைப்பாநரகதிற் றையலரே. ௨௮௬

மகள்தனைநீங்கள் மறுபேரிணங்கவு மகிழ்ந்திருந்து
இகழாமற்பார்த்து யிருந்துமேனாளை யிறந்துவிட்டால்
சுகமதுகெட்டுக் குழியதிற்போட்டுச் சுடுமெனவே
புகழிற்சிறந்தோன் சொல்வான்மலக்குக்குப் பூவையரே. ௨௮௭

வயல்தோட்டமுள்ள மனிதனைப்பார்த்து வரவழைத்து
செயல்மாறிப்பூவிற் ஜினாவதுச்செய்யுந் தெருவையரோ
மயலதையூட்டி மயக்கிப்பிடித்து வாணாளழிந்தால்
துயிலென்றுமில்லா நரகதிற்போட்டுமே சுட்டிடுவான். ௨௮௮

தாலியிழந்துப் போனதினாலிந்த தறையதிலே
கூலிக்கிக்குத்திப் பிழைத்ததினாலே குறைவுண்டுமோ
சோலிப்படுத்துஞ் ஜனாவினைமண்ணிற் றுணிந்துசெய்தால்
ஆலிக்கிமாதுலர் ஷபாயத்தில்லாம லலைந்திடுவீர். ௨௮௯

ஆசையிருந்தால் ஷறகின்படிக்கி யவனியிலே
வேசையாடாமற் காவீனெழுதுங்கோ பீவிகளே
தோசைபோலுங்க ளல்குலைவிற்றுமே துஞ்சிவிட்டால்
பாசங்களற்று நரகினில்யேகுவீர் பறத்தையரே. ௨௯௰

இருமூன்றுவாசை யிருப்பதினாலே யிடரதுவாய்
பருவவயதுப் பயல்களைப்பார்த்துப் படுக்குகிறீர்
சுருவமழிந்துப் போயிடிற்நாளைத் துய்யவன்றான்
பெருகும்நெரிப்பிற் போட்டெரிப்பான்சொன்னேன் பெண்டுகளே(

எவருமறியா ரெனச்சொல்லியுங்களை யெத்திடவே
சவரமுங்கையிற் கொடுவருவார்கள் தாயதுபோல்
கவரதுப்பேசிக் கூட்டிக்குடுக்கின்ற கள்ளிவந்தால்
சுவரதிற்றட்டிடுஞ் சாணிப்பாலூற்றித் துரத்திடுவீர் ௨௯௨

சிகப்புப்பிடவை யுடுத்திகிழவிகள் ஜெகமதிலே
யுகப்புடன்பேசி புதல்விக்கிமாப்பிள்ளை யுடனெடுப்பார்
நகைப்பாகப்பேசிக் குடிகட்கெடுத்திடும் நாறியளை
பகைப்பாகப்பேசி யடித்துற்றுரத்துங்கள் பாவையரே. ௨௯௩

கனமாகத்திட்டியால் பார்த்தால்ஜனாவென்று ஹதீதிலே
முன்னால்முஹம்மதர் மொழிந்தார்களல்லோ மூவந்தர்களே
சொன்னாலுமுங்கட்கு வெட்கமும்ரோசமுஞ் சுணையில்லையே
பின்னால்நரகிற் படும்பாடறிவீர்கள் பெண்டுகளே. ௨௬௪

கைவிரல்நீட்டிக் காலைகள்போவதைக் கண்டிருந்தால்
வையமதிலே ஜினாவாகுமென்றும் வள்ளல்நபி
மெய்யாகச்சொன்ன ஹதீதைமறந்திடு பீவிகளே
துய்யோனிடத்தினிற் போனால்நரகதிற் சுட்டிடுவான். ௨௬௫

கெட்டநடப்பா யிருக்கின்றபேச்சைக் குழலதிலே
சட்டமாய்கேட்டு மகிழ்ந்தாலுங்கெட்ட ஜினாவெனவே
வட்டமதியை யழைத்தநபிசொல் மறந்துவிட்டால்
கஷ்டங்கட்பட்டு மெரிவீர்நரகதிற் கன்னியரே. ௨௬௬

பட்டிகள்போலே திரிகிறீர்பயல்களைப் பார்த்துநிதம்
எட்டிக்கதவை யொருச்சாய்த்துமுங்க ளில்லதிலே
மட்டிபயல்களும் காபிர்நடக்கும் வழியதனை
அட்டியில்லாமலே பார்த்தாற்ஜினாவென் றறிந்துகொள்வீர். ௨௬௭

பலவிதமாக வருமேஹறுமெனும் பார்வையினால்
நலமென்றுமெண்ணி திட்டிச்சிமிட்டி நடக்குகிறீர்
பிலமாகவென்று மிருப்போமென்றெண்ணிடும் பெண்டுகளே
குலமதுக்கெட்டு யெரிவீர்நரகக் குழியதிலே. ௨௬௮

ஜினாவிலதிகமதா யிடும்பார்வைகள் தையலரோ
நினைவுமறந்து திரிகிறீர்கித்த மிருப்பமென்றே
வினாவாகுறாறு ஹத்தையடிக்கவும் வேதத்திலே
இனமொன்றுமில்லான் சொன்னாநபிக்கல்லோ வேந்திழையே. ௨௬௯

மறைவாகச்செய்து திரிகிறீர்கித்தமு மண்ணதிலே
பிறவாமலென்று மிருப்போனறியானோ பெண்டுகளே
குறைவாம்ஜினாவைச் செய்துமேநாளைக் குழிப்புகுந்தால்
வீறகாயெரிந்து விடுவதுதப்பில்லை மெல்லியரே. ௨௭௰

பெரும்பாவந்தௌபா செய்திடிற்போகுமோ பெண்டுகளே
சிருபாவமெல்லாந் தௌபாவால்நீங்கிடும் சிணமதிலே
துரும்பர்லேபாம்பை வதைத்தோர்கள்சொன்னார் தோகையரோ
குரும்பதைவிட்டு ஜினாவதைப்பேணுங்கள் குவலதிலே. ௨௭௧

புருடனிருக்க ஜினுவதுச்செய்திடும் பெண்டுகளை
துருசாய்பிடித்துக்களரியில்விட்டுத் துப்பிநன்ருய்
பருசைக்கெடுத்து சங்காரஞ்செய்ய படைத்தவன்ருன்
முருசல்நபிக்கி யிறக்கினுன்வேத முவந்தர்களே. ௩௱௨

பூவில்மறைத்து யிருந்துமேநாளைக்கி போனவுடன்
சாவில்லான்விட்டு விடுவானேவுங்களை தையலரோ
கோவிற்பசுபோற் றிரிகிறீரிந்த கூட்டைநம்பி
ஆவியழிந்தால் போவீர்நரகி லழுதழுதே ௩௱௩

துன்யாவுக்காக மறைத்திடிற்நாளை தோஸக்கிலே
தனியவன்போட்டு யெரிப்பதுதப்பில்லை தங்கையரோ
மனிசர்க்குநீங்கள் வெட்கம்வைத்தாக்காற் மருஷரிலே
குனுவதுசெய்த குபிர்போலநின்று குரலிடுவீர். ௩௱௪

மட்டையடிக்கி மறைக்குறீர்மானங்கள் போகுமென்றே
கட்டையழிந்தால் தெரிந்திடும்நாளைக் கியாமத்திலே
வெட்டவெளியில் விட்டுக்கசைகொண்டு மேலவன்ருன்
சட்டைகிளம்பும் படியடிப்பான்சொன்னேன் தங்கையரே ௩௱௫

ஆலத்திலுள்ள மனுஜின்னுங்கூடிடு மாகிறத்தில்
ஞாலத்திற்நீங்கள் செய்தஜினுவை நலமுடனே
வாலாயமாக வமல்நாமாவல்லோ வீடத்தில்வைப்பார்
கோலப்படுமுன்னே ஹுத்தடிவாங்கிக் குழிப்புகுவீர்- ௩௱௬

ஹுத்தடிவாங்க வெழ்கமென்றெண்ணிக் கபுற்புகுந்தால்
மெத்தவருத்தப் படுவீர்கள்மேலோன் சமுகத்திலே
சுத்தநெருப்பிற் காய்ச்சுங்கசைகொண்டு தோலுரிய
கத்தனடிக்கும் படிசெய்வாநாளைக்கன்னியரே. ௩௱௭

பேயனுன்சொன்ன மொழியதைப்பேணுங்கட் பூவதிலே
காயஞ்சதமில்லை யென்றிருந்தாலுங் கபுற்புகுதும்
ஞாயமாதேடிக் கொண்டிடிற்னுளை சக்ருத்ததிலே
மாயன்பிடித்து போனலுங்கிட்டும் வரிசைகளே. ௩௱௮

வீணுய்க்கவிகள் புலம்பினுனென்றும் வெறுத்துவிட்டால்
வாணுலழிந்தங்கே போனுல்தெரிந்திடு மானிடரோ
ஊனுல்பெருத்து யிருந்தாலும்ன[illegible] யொடுக்கத்திலே
போனுலுணர்ந்துக் கொள்வீர்களெனமொழி பொய்மிஜமே. ௩௱௯

பிரியமாய்பாவி பயல்யான்மொழியிற் பிழையிருந்தால்
அறிவாளர்கண்டவுடனே திருத்தி அல்லாதனக்காய்
கறியதில்லுளே யேரிடுமெங்கள் ஹபீபிறசூல்
திருவடிக்கண்டிட காதர்முகிய்யத்தீன் செப்பினனே. ௯௱௰

சொக்கியபோகு முடலென்றெண்ணுமற் றுணிகரமாய்
பக்கிவண்டிகளும் சோடிக்குதிரையும் வாங்குகிறீர்
தக்கிகள்போட்டச் சட்டைவாக்களிட்டு நடப்பதெல்லாம்
இக்கிரிமாவினை யின்றேனெடுத்த யிடும்பல்லவோ. ௯௱௰௧

நபிசொல்லைத்தட்டி நடந்துவுலகதை நம்பியுமே
கபிறகூல்தன் காத்தின்மண்ணாலே கடைசியிலே
அபியாநெருப்பி லாகியேபோனு னபுஜகிலும்
கபிறுக்குளவன் தனுகாமந்காருங் கயாத்துமட்டே. ௯௱௰௨

எல்லாம்படைத்தோன் றனக்கெதிராக யிவ்வுலகில்
வல்லாண்மைப்பேசி யிருந்தான்பிறவூனென்ற மட்டியுமே
அல்லாவின்றூதர் மூசாதுவாவாவி லவனழிந்து
பொல்லாநரகிற் புகுந்திடுஞ்செய்தியிற் பொய்களுண்டோ. ௯௱௰௩

அஞ்சதுபத்து ஆயிரம்ஆண்டு அவன்றொழுது
நெஞ்சிற்பெருமை நினைத்ததினுலே நிமிஷத்திலே
துஞ்சாதிருப்போன் லகுனத்துப்பெற்றுமே சூமனென்றே
நஞ்சதுபோலவே ஆனுணபியாத மக்களுக்கே. ௯௱௰௪

அஞ்சாமல்நீங்க ளவனைப்போல்பூவதி லாண்மைசொல்வீர்
கொஞ்சமும்கல்பிற் பயமில்லையோசொல்லுங் கூட்டாளிகளே
வஞ்சகம்பொய்யும் பகில்த்தனஞ்செய்கின்ற மானிடரே
நஞ்சதுப்போலே யாகுங்கியாமத்து நாளையிலே. ௯௱௰௫

சொர்க்கம்புகுதும் வழிகாட்டிவைக்குந் தொழுகையன்றோ
மக்கம்புரந்த நபியும்மத்தாகிய மானிடரே
ஷக்கென்றெண்ணுமல் ஷறகையெடுத்தால் சந்தோஷமுண்டாம்
றறக்கனுடைய தீதாரும்பெற்றுக் களித்திருப்பீர். ௯௱௰௬

ஷறகன்றிவேறோ ஏவமுண்டோசொல்லும் சகோதரரே
மறமன்றிக்காய்த்தோன் மறைமொழித்தேடி மனதிற்வைப்பீர்
திறமெல்லாமோடிப் பரந்திடும்ஞானச் சிணமதிலே
பரஞ்சேர்த்துவைக்கும் படியாகப்பார்த்து பயங்கள்வைப்பீர். ௯௱௰௭

ஆதத்தின்மக்களில் தீனைபேர்களி லாணும்பெண்ணும்
சேதம்வராமல் தொழுகையெடுத்தால் ஜெயம்பெருவீர்
மாதம்றம்லா னோம்பைவிடாமலே வைத்துமண்ணில்
நீதமதாக நடக்கயின்னாலே நிகழ்த்தினனே ௲௱௰௮

சந்தோஷமாகவே நாளைமகுஷரில் தானிருக்க
சொந்தமதாகிய வுடப்பிறப்பென்றுத் துணியாவதிலே
இந்தமொழியை யெடுத்துக்கவியா லியற்றினனே
சிந்தைமகிழ்ந்து பார்த்தோர்க்குகிட்டிடும் ஜென்னத்துமே. ௨௱௰௬

கலிமாத்தொழுகை நோம்புஜக்காத்துடன் ஹஜ்ஜியதை
சலியாமல்தீனே ரெடுக்கும்படியாகச் சாத்தினன்காண்
ஒலியாமுகியித்தீன் பொருட்டால்தெரிந்திதை யோதினவர்
வலியோன்கிருபையும் ஷபாயத்தும்பெற்றுமே வாழ்ந்திடுவீர் ௲௨௰

புலிமானொருதுறை நீருண்ணவைத்த புகழ்றசூல்
அலிமாமுலையி னமுர்துண்டோர்சொன்ன கதிதின்படி
கலியுகந்தன்னில் தீனோ ஆண்பெண் கதிபெறவே
சலியாமல்பார்த்து ஷறகையெடுப்பீர் சகோதரரே. ௲௨௧

சத்தியஞ்செய்து தனந்தேடிவைக்கும் சகோதரரே
செத்திடில்னாளை வருமோகபுரில் திரவியந்தான்
புத்தியில்லாம லிருக்கிறீர்பூவைப் புரோசனமாய்
அத்திரெரும்பு படைத்தோன்தலீலை யறிந்திடுவீர். ௲௨௨

மோசங்கள்செய்து தனந்தேடிவைப்பீர் மூவந்தருக்காய்
பாசத்திற்சிக்கி யலைகிறீர்பாரில் பயன்களன்றி
வாசங்கமழும் நபியும்மத்தாகிய மானிடரே
ஊசியுங்கூட வாராதென்றெண்ணு மூடப்பிரப்பே. ௲௨௩

நிட்சயமாகத் தெரிந்துமேபொய்யை நிகழ்த்துகிறீர்
குச்சிலிருக்கும் சரமதைநீங்கள் குறிப்பென்றெண்ணி
மச்சுமாளிகையும் கட்டுறீர்மண்ணில் வாழ்வதற்கே
அச்சமில்லாமல் வருவார்மலக்கென் றறிந்திலேயோ. ௲௨௪

எத்தீம்களுக்கு யிடாதுசெய்ய யிடும்பதுவாய்
சத்தியம்செய்து விடுவதேன்பூவில் சகோதரரே
சுத்தியாயென்று மிருப்பவன்சொல்லதைத் தூஷணித்தால்
கத்தியமுதுக் கிடப்பீர்கபுரில் கியாமமட்டே. ௲௨௫

பொய்மைநிஜமென்று சொல்வீர்கள்பூவின் பொருளதர்க்காய்
வையமதிலே யிருப்பீரோசொல்லு மநுஷர்மட்டும்
தையலர்சொல்லை நம்பியுலகிற் சதிவுசெய்தால்
துய்யோனிடத்தில் போனால்தெரியும் சுகதுக்கமே ௩௨௬

சுற்றத்தார்தம்மை மோசங்கள்செய்யத் துணிந்துகொண்டு
நித்தமும்நீங்க ளலையுரீர் பூவை நிஜமெனவே
சற்றும்பயங்களு மில்லாதிருக்கும் சகோதரரே
கர்த்தன்சமுகத்திற் போனாலறிவீர் ஹக்காணைசொன்னேன், ௩௨௭

சதமில்லையிந்த துனியாவின்வாழ்வு சகோதரரே
பகமதுப்பூவில் நீண்டாதோர்சொல்லதைப் பார்க்கில்லையோ
விசவிதமாகச் சோதிப்பீர்வீணும் வழக்கதுவை
பிதாதந்தையில்லான் சொல்லை மறந்த பிரவிகளே. ௩௨௮

சொல்லதைதட்டிப் போட்டார்களென்றுச் சினங்கள்வைத்தே
பொல்லாங்கதானக் கெடுதிநினைத்தோர் புவியதிலே
வல்லாண்மைப்பேசி யிருந்தோருமண்ணில் மறைந்தனர்காண்
அல்லாவுக்காகப் பயந்துகொள்வீர்சொன்னே னம்பர்களே. ௩௨௯

புலிபோல்மவுத்துப் பின்னாலிருப்பது பொய்களுண்டோ
உலிமாதுலர்சொல் லரியாமற்பூவி லலையுகிறீர்
கலியுகக்கால மிதுவெனவெண்ணிக் கருத்திற்வைத்து
வலியோனுரைத்த மறைமொழிதேடிடு மானிடரே. ௩௩௰

அமலெல்லாமோடி யழிந்திடுங்கல்பி லஹசதுவைத்தால்
சமரதைவெண்ட நபியும்மத்தாகும் சகோதரரே
உமருஹத்தாவின் மருகருறைத்ததை யுண்மைகொள்வீர்
ஹிமாருபோல்பூவில் இரிந்தால்மநுஷரி லிடஞ்சலுண்டாம் ௩௩௧

நம்பிக்கையில்லையோ நாளைமநுஷரில் நன்மையெல்லாம்
தம்பிரான்சொன்ன மறையின்மொழியிற் சந்தேகமுண்டோ
கும்பியெரியும் நரகேழிருக்கு கூட்டாளிகளே
வெம்பிப்புவியில் தவ்பாவைச்செய்திடில் மேன்மையுண்டாம். ௩௩௨

கேழ்வியதிக மாகிடும்னாளைக் கியாமத்திலே
சூழமலக்குகள் கோட்டைபோல்சுத்தி சூழ்ந்துகொள்வார்
ஆளுமிறையோன் மறையதைப்பார்த்து அறிந்துகொள்வீர்
மூளையுருகுங் காலமூடுகுமுன் மூமீன்களே. ௩௩௩

செம்புத்தகையதில் கண்டால்தெரிந்திடுந் தினவரோ
வம்புத்தனம்விட்டுத் தவ்பாவைச்செய்திடு மண்ணதிலே
தும்பம்வருமென்றுச் சொன்னேனெனது தோழர்களே
கம்பியின்பாலத்தின் மேல்செல்லநாளைக் கலங்கிடுவீர். ௩௩௪

றவியுமேகிட்ட வந்துநெருங்கிடும் நாளதுவாம்
புவியெல்லாந்தாம்பிற மாக்கியேவைப்பான் புதியவனே
அவியும்பிற்காலம் வருமென்றுநீங்க ளன்புவைத்து
தவிரும்ஜினுவுங் கள்ளதும்வட்டியுந் தள்ளிடுவீர். ௩௩௫

பிலஞகப்பூவில் பெரும்பாவஞ்செய்யிற் பிழைகளுண்டாம்
குலமானதீனிற் பிறந்திடுமெந்தன் கூட்டாளிகளே
தலமாங்கபுருக்குள் போய்விடுமுன்னே தவிழ்ந்துவிட்டால்
நலமானசொர்க்கம் புகுதுவீரென்று நான்சொன்னேனே. ௩௩௬

குச்சிலிருக்கு மூச்சத்தால்நாளைக் குழிப்புகுவீர்
பிச்சிப்பிடித்து வலைகிறீர்பூவைப் பிலனென்றெண்ணி
ஹஜ்ஜிஜக்காத்து முதலுள்ளபேர்க்குக் கடனதுவாம்
அச்சிட்டக்காசொன்றும் வாராதென்றெண்ணி யறிந்துகொள்வீர். ()

பெட்டியில்வைத்தப் பொருளுமனைவியும் பிள்ளைகளும்
வட்டியெடுத்த தனமும்வராதுகாண் மண்ணுக்குள்ளே
மட்டியினுள்ளே புகுந்திடுமுன்னே மனதில்வைத்து
தட்டியடிப்படு முன்னேகராத்தை தவிழ்ந்திடுவீர். ௩௩௮

இறையவனேவலைத் தட்டினல்மண்ணி லிடஞ்சலுண்டாம்
தரணியிலுள்ளத் தனம்பெரிதல்ல சகோதரரே
பிறையையழைத்த முகம்மதர்சொல்லிற் பிசகுமுண்டோ
அரையளவான கபுரிற்புகுந்தா லறிந்துக்கொள்வீர். ௩௩௯

எங்களையீன்ற தந்தையுந்தள்ளை யிருவரெங்கே
வங்கமும்வைத்த நூகுநபிபெற்ற மக்களெங்கே
இங்கள்வதன வொளியாயும் ஷிதுநபியுமெங்கே
பொங்குங்கடலின்மீன் வயத்தின்யூனுசு போனதெங்கே. ௩௪௰

அல்லா அருள்பெற்ற மூசாவும்ஹாறூன் நபியுமெங்கே
வல்லாண்மைபேசிடும் பிரவூனும்ஆசியா மயிலுமெங்கே
எல்லையில்கோம்பல மானஅய்யூபு வெழிலரெங்கே
இல்லானதுப்பும் தூதர்யாக்கூபெனு மேந்தலெங்கே. ௩௪௧

சதாகோடிசங்கம் நமைப்போலிருந்தோர் தறையிற்குள்ளே
கதாவாய்தொழுகையை விட்டோரழுதுக் கலங்குகிறார்
பிதாவாதமக்களின் பின்வந்தநபியெங்கே பிரபுகளே
அதாம்சொன்னமோதீன் பிலாலெங்கேபோனு ரறிந்துக்கொள்வீர். ()

எளியோர்நிலத்தை யெடுக்கிறீரெத்துப் பிரட்டதுவாய்
அளியாமலென்று மிருந்தவர்யார்சொல் லவனியிலே
தெளிவில்தெளிந்த பாத்திமாபெத்திடுஞ் செல்வரெங்கே
வலிகாட்டிவைத்த அபுசாலிஹீன்றிடும் வள்ளலெங்கே. ௩௪௩

மாணிக்கப்பூரில் பிறந்துவரம்பெற்ற வள்ளலெங்கே
காணிக்குறுத்தாய் வந்திடும்லுக்குமான்ஹக்கீமெங்கே
ஆணிமுத்தான தவுர்ஆலமென்ற வரசுமெங்கே
பாணிசுரத்தி லனைந்தநபிபெற்ற பூவையெங்கே. ௩௪௪

மாபியாபெற்ற மகன்தானிஜீது மர்வானுமெங்கே
ஷாபிபனபி மாலிக்கியன்பிலி ஹஸ்ஸாலியெங்கே
ஆபியத்தான யீசாவையீன்றிடு மன்னேயெங்கே
ஹாபில்தானீன்றிடும் பிள்ளேயெங்கேசொல்லுங் காளேகளே. ௩௪௫

திருவாயுதித்த யீசுபுயீன்றிடுஞ் செல்வியெங்கே
குருவாகவந்த அலிதான்பயின்றக் குமாரரெங்கே
தருவாயுலகில் லொலிகட்கரசெனுந் தங்களெங்கே
பருவமதான ஆயிஷாபீவி பதுமையெங்கே. ௩௪௬

இல்லாவனுப்பும் தூதராய்வந்த யிபுராகிமெங்கே
பொல்லாதகெட்ட நமறூதுயீன்றப் புதல்வியெங்கே
அல்லாவருள்தங்கும் அசனுசனென வவர்களெங்கே
வல்லாண்மைபேசிய வபுஜஹில்பெற்ற மகவுமெங்கே. ௩௪௭

அந்தரமேகி யிறையுடன்பேசிய அண்ணலெங்கே
சுந்தரமான அபூபக்கரீன்றிடுந் தோகையெங்கே
இந்தொளிப்போலே யிலங்குமசுகாபி மார்களெங்கே.
சிந்தாஷாவென்னும் பேர்பெற்றுவந்திடும் சீயமெங்கே. ௩௪௮

சித்திக்குபெற்றவப்துற்றகுமானவர் தேவியெங்கே
புத்தியில்மிக்க வுதுமானுரீன்றப் புதல்வரெங்கே
குத்தியைவெட்டிப் பிளந்தஅலியின் குமாரரெங்கே
வெத்தியைப்பெற்ற ஷமுறூனெனச்சொல்லும் வேந்தரெங்கே. ௩௪௮

அலிதந்தையான அபுத்தாலிபென்ற வரசரெங்கே
புலிபோலுலகிற் பிரந்தஹம்ஜாவெனும் புண்யரெங்கே
கலிமாமொழிந்த வப்பாசுவென்னுங் கனகமெங்கே
வலியோனருள்தங்கு மூமறுஹத்தாவீன்ற மக்களெங்கே. ௨௫௰

இடும்புகள்செய்த அபீலஹபென்னும் யேந்தலெங்கே
கடுமையாய்நம்ம நபிக்கெதிர்பேசிடுங் காபரெங்கே
அடிமையதான சல்மான்பாரிசென் றரசரெங்கே
மிடிமையதிக வயஸ்கரணி வேந்தரெங்கே ௨௫௧

திருவில்பிரிந்த நபிமகளான ஜைனபெங்கே
மருவொன்றுமில்லா உம்மகுல்தூமெனு மயிலுமெங்கே
பருவமதான றுக்கய்யாவென்னும் பாவையெங்கே
தருவாயுதித்த ஹாத்தூனெனச்சொல்லுந் தங்கமெங்கே. ௨௫௨

கோலமில்லாதா னனுப்பும்நபிகளின் கூட்டமெங்கே
மாலானுயர்ந்த தாவூதுயீன்ற மகவுமெங்கே
ஞாலமதிலே வுதித்தயிசுமாயில் நபியுமெங்கே
பால்போல்தெளிந்த யிபுறாஹீமதாகம் பாஷாவெங்கே. ௨௫௩

மையத்தெழுப்பி தீனிலழைத்த மஹ்பூபெங்கே
தையலையாணுருச் செய்தபுகாரி தங்களெங்கே
ஜெயமானதக்கனை பீருமுகம்மது சீயமெங்கே
வையகத்தோர்கள் வாழ்த்துங்குணக்குடி வள்ளலெங்கே. ௨௫௪

காட்டானைமீதி லிருந்திடுஞ்ஷேய்கப்துல் காதிரெங்கே
ஓட்டாண்டியான வேடச்செந்தூரு வொலியுமெங்கே
கூட்டைமறந்த மஸ்தானுய்வந்த கோயாவுமெங்கே
தட்டாண்மையுள்ள ஐதுருசென்னும் தங்களெங்கே. ௨௫௫

கொச்சியில்வாழ்ந்து யிருந்தக்குறஷிக் குலங்களெங்கே
அச்சிபங்காள தீவதிற்சென்றபு பக்கரெங்கே
பிச்சையெடுத்த வளையல்மஸ்தானெனும் பிரபுவெங்கே
யெச்சியிலையை யெடுத்திடும்பேட்டு மஸ்தானுமெங்கே. ௨௫௬

சத்தங்தொனியு மில்லான்மொழியிற் சந்தேகம்வைத்து
செத்திடிஞரை யென்னசொல்வீர்கள் திருவிடத்தே
முத்தநுவறைத்த ஷறகதைநீங்கள் முழுதும்விட
சுர்றமாயுங்கள் கல்பிறபயமில்லை தோழர்களே ௨௫௭

நித்தமுமைந்து தரம்சொலிக்கூப்பிடும் நிலமதுதான்
கர்த்தன்மலக்கு வதுபோலபார்த்துக் கணக்கிடுவார்
அத்தனுரைத்த ஷரகனைத்நீங்க ளகற்றிவிட
சுற்றமாயுங்கள் கல்பிற்பயமில்லைத் தோழர்களே. ௩௫௮

வித்ததுபோல மறையிலிருக்குது விபரந்தாய்
குற்றம்வருமென்ற வெண்ணங்க ளற்றுக்குதிக்குகிறீர்
பத்தனுரைத்தப் பருலஞ்சும்விட்டால் பலிஹறத்தென்றேன்
சுற்றமாயுங்கள் கல்பிற்பயமில்லைத் தோழர்களே. ௩௫௯

கர்த்தமதான முஹ்ஸலீம்சொன்ன ஹதிதுகளை
நித்தமும்கேட்டு வச்சமுமில்லையே நேசர்களே
குற்றம்பிடித்து விடுவேனென்றுதிக் குர் ஆனில்சொன்னான்
சுற்றமாயுங்கட் கல்பிற்பயமில்லைத் தோழர்களே. ௩௬௰

வற்றாதச்செல்வ மிருக்குதென்றெண்ணி மனமகிழ்ந்து
கர்த்தாகுடுத்த முதலென்றுநீங்கள் கண்டில்லையோ
சித்தமிரங்கி யிரப்போர்க்கியாமலே சேர்த்துவைக்க
சுற்றமாவுங்கள் கல்பிற்பயமில்லைத் தோழர்களே. ௩௬௧

மக்கத்துக்கேகி வந்தபின்வட்டிக்கி வாங்குகிறீர்
பக்கத்திலுள்ளோ ரறியாரோபண்ணும் பாப்பத்தியம்
அக்கனின்றாதர் சொன்னஹதீதை யகற்றிவிட்டால்
துக்கம்வருமென்று மெண்ணுமற்செய்வதேன் தோழர்களே. ௩௬௨

சொந்தமுதலால் தொழில்செய்தா லுங்கட்குத்தோஷமில்லை
அந்தமுடிவு மில்லாதான்றூத ரவர்கள்செய்தார்
சிந்தையில்நீங்கள் பயமன்றித்தேகம் சதமென்னவே
எந்தவிதமும் தனஞ்சேர்ந்தால்போதுமென் றெண்ணுகிறீர். ௩௬௩

நாமம்தரித்த அபூஹனிபாவென்னும் நாயகர்தான்
ஷாமுக்கனுப்பிய பட்டிலொன்றுத் தாழ்வுகண்டு
தாமும்பழுது காட்டாதவித்த சந்தேகத்தினால்
நீமமதான கனகம்கராமென்றும் நீக்கிவிட்டார். ௩௬௪

கடன்வாங்கிப்போனே னில்லின்சுவரதிற் கட்டியொன்றை
இடனையெடுத்து டேலாப்பிடித்திடுஞ் செய்திகண்டு
உடனேயவன்றன் சீட்டைக்கிழித்துமே வீடரிந்து
இடம்விட்டகன்று வந்தார்களல்லவோ யெங்களிமாம் ௩௬௫

இந்தவூறிதை யரிவீர்களேழு தொபுகளின்
சந்தாபமுண்டோ சொல்லுமெனது சகோதரரே
செந்தூரம்நெத்தியில் வைக்குமுழுக்தான் சேட்டிடத்தில்
கந்துக்குவாங்கி யேபாரம்செய்யில் கராமல்லவோ. ௧௬௬

வலியவேவந்துக் குடிக்குராமொன்று மனமகிழ்ந்து
சலியாமல்வாங்கி யெடுக்கிதிர்நோட்டுக் தங்கப்பவுனும்
அலிமாதுலர்தன் சொல்லேமறந்து அவனியிலே
கலியுகந்தன்னில் திரவியந்தேடக் கருத்தில்வைத்தே, ௧௬௭

மொட்டைத்தலையுள்ள செட்டிமுழுக்கா னிடத்திலேயும்
வட்டிக்குவாங்கி யேபாரம்செய்திடு மானிடரே
அட்டியில்லாமல் வருவார்மலக்கு அனாநொடியில்
சட்டியுடைந்தால் தெரியுமிறைசெய்யும் சங்கடமே. ௧௬௮

பங்களாவான வீடும்சிலமும் வல்துகளும்
இங்கேயிறந்தால் கொண்டோவதுண்டோ வினவிலத்தில்
தங்கள்முகம்மதர் சொன்னகதிதைத் தவிழ்ந்துவிட்டால்
பங்கமிருந்து அழுவீர்கபுரிற் படுத்துக்கொண்டே, ௧௬௯

உங்களைப்பெற்ற தாய்தந்தையான வுடற்பிறப்பும்
மங்கையுமீன்ற மக்களுமண்ணிற் மறைந்தில்லேயோ
அங்கமழிந்துப் போமென்றெண்ணுமலேயுகிறீர்
சிங்கம்போல்வந்து விடுவார்மலக்குச் சிணமதிலே. ௧௭௰

இந்தவுலகுச் சதமில்லேக்காணு மெவர்களுக்கும்
அந்தமில்லாதான் சொன்னதிலே யறிந்துக்கொள்வீர்
சந்தாபமுண்டோ சொல்லுமெனதுச் சகோதரரே
வந்ததுப்போலே போகும்படிவரு மண்ணுக்குள்ளே. ௧௭௧

சொந்தமென்றெண்ணி யிருந்தவரெல்லாம் துஞ்சிவிட்டார்
அந்தவழிதா னமக்காகுமென்று அறிந்துக்கொள்வீர்
சிந்தையின்சத்தும் பயங்களுமில்லேயோ தீனவரே
அந்தரமேகி வந்தநபிசொல் லறிந்துக்கொள்வீர், ௧௭௨

நாளேக்கிருப்பது நிட்சயமுண்டோ நம்முடல்தான்
வேளைநொடியில் வந்திடுமென்று விதம்சொல்லுவீர்
ஈளையுங்காச மேகம்பிடித்து யிறந்துவிட்டால்
சாளையப்பட்டுக் கறைவீர்கபுரில் தனித்தவுடன். ௨௭௧

உடும்புடன்பேசும் நபிசொல்லைநீங்க ளுகாசனித்து
இடும்பதுப்பேசித் திரிகிறீரிந்த வுடல்பெரிதாய்
கஞ்சினமாக யிஜ்ராயில்வந்துக் காற்றதுவை.
பிடுங்கிடும்போதுத் தெரிந்திடும்பேயன் புலம்பினதே. ௧எ௪

பேர்தானெடுக்க வேணுமென்றெண்ணிப் புவியதிலே
தாராளமாகச் செலவுசெய்வீர்கள் தனமதுவை
பாராளும்ராஜர் வந்திடிலோடிப் பழகிக்கொள்வீர்
மாராதச்செல்வ முடையோனுரைத்த மறையைவிட்டே. ௧எ௫

மட்டியால்நம்மை வகுத்ததன்சொன்ன மறையைவிட்டுத்
தொட்டியிலாடித் தூங்கிமுழித்திடுந் தோழர்களே
எட்டிப்பிடிக்கு மதுக்குவந்தாலப்போ யேதுசொல்வீர்
கட்டிலுங்கூட கொண்டுபோவதுண்டோ கபுருக்குள்ளே ௧எ௬

அலங்காரமாகச் சோடிப்பீரிந்த யவனியிலே
[illegible]காதகண்டன் வருவாரொன்றெண்ணங் கடுகில்லையோ
பிலமெல்லாமோடிப் பரந்திடும்றூகைப் பிடித்தவுடன்
தலம்விட்டுப்போகும் போதுதெரியும் சமர்த்துகளே. ௧எ௮

யாரும்நமக்கு யெதிரில்லையென்று வஞ்சாமலேதான்
மாரதில்தட்டிப் பேசுதீர்தேடிடு மாலதனல்
பாருமேயிந்த உலகினில்வாழ்ந்த பணக்காரரெல்லாம்
ஊர்விட்டுமண்ணிற் புகுந்தார்களல்லோ வுடப்பிறப்பே. ௧எ௯

பெரியபெரிய தனமுள்ளோரெல்லாம் பொருளைவிட்டு
உரியானத்தூடே போயிடுஞ்செய்திக ளுங்களுக்குச்
சரியாய்தெரிந்து மாதியேன்சொல்லுஞ் சகோதரரே
அருகினுள்வந்து விடுமென்றுகல்பி லரிந்துகொள்வீர். ௧அ௦

நாளும்ரிசக்கு முடிந்தால்வருவார் நமனொடியில்
வாழ்வுபெரிதல்ல யென்றிருந்தாலு மவுத்துவரும்
ஆளுமிறைமொழி தவிழ்ந்திடினீயவஸ்தையுண்டாம்
மாளும்பொழுதிற் கலிமாவைநீங்கள் மறந்திடுவீர் ௧அ௧

தனத்தால்மறதிகள் வந்திடும்ளை சக்கருத்ததிலே
இனத்தார்கள்வந்து சூழ்வாரெனக்கு வுனக்கெனவே
மனதாலுணர்ந்தக் கலிமாவைநீங்கள் மறந்துவிட்டு
பினத்திப்பினத்தியே போவீர்கபுரில் பிரண்டழுக. ௧அ௨

குதாசனக்காகக் குடுத்தீர்களானால் குவலதிலே
சதக்காவைநீங்க ளீந்திடினாலே சந்தோஷமுண்டாம்
முதலாலனேத் நன்மையுண்டாகிடு மூமீன்களே
கதாவன்றிப்பூவில் தொழுதோனைக்கண்டு கதிபெருவீர். ௩௮௩

இரவிலெழுந்து தொழுதிடுமெங்கள் றசூலுடைய
ஷறகையெடுத்துக் கொள்ளுமெனது சகோதரரே
உறவும்சனமு மக்களுமுங்க ளுடப்பிரப்பும்
பிரகேவருமென் றெண்ணுமறக்கல்பனைப் பேணிடுவீர் ௩௮௪

பேசுமிசுறு அறபெங்கும்பேர்பெற்றுப் பூவதிலே
பூசிடுமெத்தைமேல் கொடிநாட்டிவாழ்ந்துப் புகழ்துலங்க
வாசியிலேறி மதிராசுதன்னிலே மால்மிகுந்த
ஹாஜிபாச்சாவுமே போனார்களல்லோ கபுருக்குள்ளே. ௩௮௫

குத்தினிக்கார ரென்றுபுகழ்பெற்றுக குவலதுவை
நத்தியிருந்து மால்மிச்சந்தேடி நகர்புழ
வெற்றிகள்பேசிய தாதாமியானும் வெறுமணமாய்
சுத்திக்கபனிட்டுப் போனார்கபுரில் துணையன்றியே, ௩௮௬

கோடிமுதலுந் தேடியேவைத்துக் குவலதிலே
தேடிமிசுக்கி னெளியோர்க்குப்பூவிற் செலவுசெய்து
காடியிலேறி திரிந்துவொடுக்கங் கபுரதுக்குள்
சாடியொடைந்திடும் பக்கீர்முகம்மதைத் தானறிவீர். ௩௮௭

பிலமாயுலகில் நபாபென்றுபேர்பெற்ற புரவலனும்
தலமானசென்னைத் தனிலாண்டிருந்திடும் சர்க்குணரும்
நலமாயிருந்து வாழ்ந்திடும்னாளில் நமன்பிடித்து
ஒநவலாம்ஹெளசுஹானும் போனார்கபுரின் குழியதர்க்கே. ௩௮௮

சபுரும்பொருதி யுள்ளோன்மறையைத் தானெடுத்தே
கபூருக்கைவென்ற நபியும்மத்தாகிய சர்க்குணனும்
ஹபூர்றகீம்தான் குடுத்திடும்செல்வக் கனைகம்விட்டு
யிபுறுமுசாயிபும் போனார்கபுரி லிருப்பதர்க்கே. ௩௮௯

குடையிலதிகப் பேர்பெற்றுலந்தக் குபேந்திரனும்
புடைவியிற்புலவ மார்கட்குமிக்கப் பொருட்குடுத்தோன்
விடைபெற்றக்கிழக் கரையிலிருந்திடும் வேந்தனுமே
கடையன்றிமண்ணில் புகுந்திந்தசெய்தக் காதியுமே. ௩௯௰

நபியுட[..]னிற் பிறந்தாரனேகர் நட்சத்திரம்போற்
கபீபுமுகம்மது மறைக்காறெனச்சொல்லுங் காலையுமே
அபிமானத்துடே யனேகர்க்குபகார ரவனிவிட்டுக்
கபுரிற்புகுந்ததைக் கண்டில்லையோயிந்தக் காசினியில் ௩௬௧

உமறொ[..]ஞ்சியப் புலவோர்க்குப்பூவி லுவாகுடுத்த
அமரரியற்றும் பள்ளியிற்சென்றவ ரஞ்சொகத்தும்
சமரதைவென்ற நபியின்ஷறகதைத் தானெடுத்தோர்
இமாம்போலிருந்த சதக்கத்துல்லாவுமே யெங்கேசொல்வீர். ௩௬௨

காசீமுமஹ்லியும் ஷெய்கப்துல்காதிர் களஞ்சியமும்
வாசியுணர்ந்[..]காட்டானெஷெய்கு மஸ்தானொலியும்
பேசி[..]லானபீரு முகம்மதுமே
தூசியெழும்புந[..]க்குட்புகுந்ததும் தோணலையோ. ௩௬௩

எழுதிமுடியுமோ பூவி[..]றந்[..]ந்தவர்கள்
[..]யுந்துனியா வா[..]வென்றுநீங்க ளறிந்திலையோ
ப[..]வந்துச்சூழுமுன் பறுலைந்தும்பேணிடப் பாரதிலே
தெள்ளும்படியாய் நஸிஹத்துல்மூமீனைச் செப்பினன்காண். ௩௬௪

பித்துப்பிடித்துப் பினத்திறனென்றுமே பூவில்விட்டால்
செத்திடில்னாளை யறிவீர்பயல்சொன்னச் செய்தியெல்லாம்
நித்தமும்நீங்கள் பறுலைந்தும்பேணி நியாசுசெய்தால்
சுத்தன்றிதாரும் நபியின்ஷபாயத்துங் கண்டுகொள்வீர் ௩௬௫

பொய்யென்றுநீங்கள் தள்ளாமல்பூவதிற் பேணிக்கொண்டால்
வையகம்விட்டுப் போனாலும்நாளை மகிமையுண்டாம்
ஐயமென்றெண்ணிக் கொள்ளாமல்கல்பி லனுசரிப்பீர்
செய்யதிறசூல் கலிமாமொழிந்திடுந் தீனவரோ. ௩௬௬

எங்கள்முகம்மதர் பேரர்குலத்தினி லிவ்வுலகில்
வங்கங்கடலி லழைத்தமுகியித்தீன் வங்கிடத்தார்
தங்களபூபக்கர் பம்மதுவீன்றிடும் சையதுசைன்
திங்கள்வதனமுடையோரும் பூவிட்டுச் சென்றனர்காண். ௩௬௭

தனத்தின்பெருமையி னாலேபூவிற் சா[..]னிடம்போய்
இனத்தைக்கெடுக்குங் கள்ளைக்குடித்து [..]ருக்குகிறீர்
சினங்கொண்டுவந்து பிடிப்பார்மலக்கு தேகமதை
அனைத்தும்படைத்தோன் நரகதிலிட்டு அதாபுசெய்வான். ௩௬௮

கள்ளைக்குடித்து மஜீதுக்குட்போகுங் கசடர்களே
எள்ளும்பயங்களு மில்லையேயுங்க ளிருதயத்தில்
வள்ளல்நபிதன் மொழியைமறந்தால் மஃஷரிலே
சுள்ளைபோலாகு நரகதிலிட்டுமே சுட்டிடுவான். ௱௯௯

வல்லோனுரைத்த மறைமொழிதட்டி மதுக்குடித்து
அல்லாவினில்லிற் புகுதுரீரனுவும் பயமன்றியே
பொல்லாபலாயி லகப்பட்டுநாளைப் புதைக்குழியில்
அல்லல்வருமென் றறிந்திடுவீர்க ளாகிறிலே. ௨௱

இம்பிஷுறுந்தின்றால்நாற்பதுநாட்செய் யிபாதத்தெல்லாம்
கம்மியாய்போய்விடு மென்றுமேசொன்னர் ஹபீபிறசூல்
பம்மிப்பதுங்கிப் போதீர்கள்நித்தம் பனையடிக்கி
விம்மியழுது விடுவீர்வெறியைக் குடித்தவரே. ௨௱௧

வெங்காயந்தின்று மஜீதிற்புகுதவேண் டாமென்றே
மங்கைகதீஜா மணவாளர்சொல்லை மறந்துவிட்டு
பங்கப்படுத்திடுங் கள்ளைக்குடிக்கின்றபாயிகளே
சங்கமாய்க்கூடி யிருக்குமஃஷரிற் றானறிவீர். ௨௱௨

சுத்தியாயென்று மிருப்பவன்வீட்டிற் றுணிகரமாய்
சத்தியந்தப்பி மதுவுண்டுச்செல்லுஞ் சகோதரரே
குத்திதனிலே மலக்குயிர்வாங்கி குழிப்புகுந்தால்
பத்திஎரிப்பிற் கிடந்துவழுதுப் பரதவிப்பீர். ௨௱௩

தஞ்சாவூரானு மகாராஜன்வீட்டிற் றடையன்றியே
நெஞ்சமஞ்சாமற் போதீர்விஷானைக் குடித்துக்கொண்டே
அஞ்சியேநாளை கபுறிற்புகுந்திடிற் றய்யவன்றான்
பஞ்சதுபோல வெரிப்பானெனக்கவிப் பாடினனே. ௨௱௪

உருவுமுடலு மில்லாதிருப்பவன் வீட்டுக்குள்ளே
பருவுபனங்கட் குடித்துள்ளேபோதீர் பயமன்றியே
வுருபமுமாறிக் குழிவிட்டெழும்பி வைலதிலே
சருகதுபோல வெரியுமுன்ஹறமைத் தள்ளிடுவீர். ௨௱௫

தசைமூளைதோலு மெலும்பில்லான்வீட்டிற் றடையன்றியே
வசையானகள்ளைக் குடித்துள்ளேசெல்லு மானிடரே
திசையாமுலகி லிருந்துமேநாளை செற்றதற்பின்,
கசையாலடிகள் படுவீர்கபுறில் ஹக்காணைசொன்னேனே. ௨௱௬

அழி[illegible]மலென்று மிருப்பவன்வீட்டி லஞ்சாமலேதான்
புளி[illegible]புள்ளகள்ளேக் குடிக்குள்ளேபோகும் புல்லர்களே
களிக[illegible]ர்ந்துப்பூவிற் றிரிகிறீர்காயஞ் சதமென்றெண்ணி
குழியிற்புகுந்தால் தெரியுமிறைசெய்யுங் கோலங்களே. ௱௭

கதமது[illegible]புவிற் நின்றுதோர்சொன்ன ஹநிஇன்படி
சதமில்[illegible]க்காணு நமக்கிந்ததேகந் தரணியிலே
விதவிதமா[illegible]கப் பேசித்திரிகின்ற வீரர்களே
பதமுமுடி[illegible]யொன்று மில்லான்மொழிந்ததை பார்த்திடுவீர். ௱௮

கொஞ்சமும்[illegible]புவிற் பயமற்றுக்கூடி சதமென்னுநீ
[illegible]ஞ்சாமல்வந்[illegible]ப் பிடிப்பார்மலக்கு வனாகொடியிற்
[illegible]லன்[illegible] மிருந்தவராரு துணியாவதிலே
பஞ்சதுப்போல[illegible]ரியுமுன்ஷரியத்தைப் பற்றிடுவீர். ௱௯

பஞ்சியர்மோக மலேயிலகப்பட்ட மானிடமோ
கொஞ்சமும்புத்தி யில்லாமற்பூவிற் குதிக்குகிறீர்
[illegible]ஞ்சாணுடல மழிந்திடுமென்ற வெண்ணம்வைத்து
கஞ்சா[illegible] மகாராஜன்சொற்படித் தாளடப்பீர். ௱௰

எக்குமோ[illegible]ணை[illegible]வன்சொல்லே யெடாதிருந்தால்
பக்கம்[illegible]ப[illegible]இக் குழியிற்கிடந்துப் பாதவிப்பீர்
அக்கம[illegible]ப் போமென்றுகல்வி லறிந்துகொள்வீர்
எவகள்நபிதன் ஷபாஅத்திற்கானே யீடேறிடுவீர். ௱௰௧

மண்வீட்டிற்குள்ளே புகுந்திடுஞ்செய்கை மறந்துவிட்டுக்
கண்கெட்டுப்பூவிற் றிறிகிறீர்காசு சதமெனவே
பெண்ணும்பொருளும் வாராதுநாளேப் புதைக்குழியில்
எண்ணம்பெரிதா யிருந்தால்கபுரி லிடஞ்சலுண்டாம். ௱௰௨

ஆணுய்ப்பிறந்து புத்தியில்லாம லலேந்தலேந்து
பூணுஞ்செய்துப் பொட்டியில்வைத்தும் புரோசனமோ
வாணுலழிந்துப் போயிடுநாளே மலக்குவந்தால்
வீணுகநீங்கள் போமுன்ஷரீயத்தை வேண்டிக்கொள்வீர். ௱௰௩

மூத்திரத்தகமு மோடிடும்யோனி முவந்தருக்காய்
பார்த்தும்பாராமலும் சிலவுகட்செய்வீர் பணந்தனை
காற்றோடிப்போய்விடு மென்றுமோகல்பிற் பயமில்லேயோ
ஊத்தைப்பிணமான சடலமென்றெண்ணுவீ ருண்மையிதே. ௱௰௪

ஊத்துக்காலோடும் யோனியைநம்பி யுலகதிலே
சேர்த்துமுதலை வைக்குதீர்தெரிவைச் சதமெனவே
நாத்தும்சிபாத்து முள்ளோன்மறைமொழி தட்டிவிட்டே
காற்றகன்றோடினால் கபுரில்தெரியும்யான் கழறினதே ௪௱௰௫

மூத்துமாலாவு முடிமாட்டித்தொங்கல் மூக்குத்தியிட்டு
தொத்திப்பிடித்து சுகங்கொள்ளுமாதர் துனியாவதிலே
எத்தும்பிரட்டும் பொய்சொல்லும்பெண்க ளிடரிற்சிக்கி
செத்ததின்பின்னால் தெரியுங்கபுறில்யான் செப்பினதே ௪௱௰௬

மூத்திபிகழைக் கனியென்றுவெண்ணி முகந்துவித்த
சத்தியின்மாய்கைச் சதமென்றுவெண்ணுஞ் சகோத[ர]ரே
வெற்றியுடைய நபிசொல்லைநீங்கள் விட்டுவிட்டுச்
செத்ததின்பின்னால் தெரியுங்கபுரில்யான் செப்[பி]னதே. ௪௱௰௭

அத்தியிலும்பெரி தாயிடுமல்கு லுடையவ[ளி]ன்
புத்தியைக்கேட்டுப் புலம்பித்தவிக்கிறீர் பூவதிலே
சத்திப்பிலனு முன்னோன்மொழியைத் தள்ளிவிட்டு
செத்தபின்னல்லோ தெரியுங்கபுரில்யான் செப்பினதே ௪௱௰௮

இத்திப்பாய்பேசித் திரியுந்தெரிவையர் சீலையுள்ளே
மத்திதனிலே மலருண்டோசொல்லு மானிடரே
புத்தியாய்ச்சொன்ன புறுகான்மொழிகளிற் பொய்களுண்டோ
செத்ததின்பின்னால் தெரியுங்கபுரில்யான் செப்பினதே. ௪௱௰௯

கத்தாவிலக்குங் கனியூட்டிவைத்த ஹவ்வாவுடைய
பெற்றமகளின் குலமல்லோபூவிற் பெண்களெல்லாம்
வத்தாறலூரும் வழியுள்ளமாதர் வலையிற்சிக்கி
செத்ததின்பின்னாற் றெரியுங்கபுரில்யான் செப்பினதே. ௪௱௨௰

ஊத்திவிழுந்திடுங் கொப்பம்போலுள்ள வனிதையர்கள்
சத்தியஞ்செய்து மொழிவார்தலைகாணி மந்திரத்தை
குத்திதனிலே நிஜமென்றுவெண்ணுங் கூட்டாளிகளே
செத்ததின்பின்னாற் றெரியுங்கபுரில்யான் செப்பினதே. ௪௱௨௰௧

நித்தியம்பொய்கள் சொல்வார்கள்பெண்கள் நிலமதிலே
சத்தியஞ்செய்து விடுவார்களுங்கள் தலையைத்தொட்டு
புத்தியில்லாத பெண்வார்த்தைநம்பிடும் புல்லர்களே
செத்ததின்பின்னாற் றெரியுங்கபுரில்யான் செப்பினதே. ௪௱௨௰௨

தொழுகையில்லாத பெண்கள்சோறு கறிசமைத்தால்
கழுகாதக்கிஞ்ஜீ றிறச்சியைக்கையி லெடுத்ததுவாம்
புழுவாயிருக்கு மவள்தொட்டவன்னம் புசிப்பவர்க்கு
யிழிவாம்பெண்களே தொழும்படிநித்தமு மேவிடுவீர். ௪௨௩

தேசிமேலேறித் திரிகிறீர்செல்வம் பெரிதெனவே
நாசியாலேயிடும் சரமென்றுநீங்கள் நம்பலையோ
பேசிவாய்மூடு முன்னேமலக்குப் பிடித்திடுவார்
ஊசியொன்றுமிலுங் கொடுபோவதில்லை யுடற்பிறப்பே. ௪௨௪

தஞ்சாவூராளு மகராஜன்வீட்டில் தடையன்றியே
அஞ்சாமலுள்ளே புகுதுறீர்நீங்க ளவனியிலே
கஞ்சாவுங்கள்ளு மபினிசாராயமும் ஹறுமருந்தி
அஞ்சாதிருப்பவன் சொல்லைமறந்திடுந் தோழர்களே. ௪௨௫

அப்பாரவானவன் வீட்டுக்குள்நீங்க துணிகரமாய்
இப்பாரதிலே நிசான்கள்ளருந்தி யிடருடனே
ஜப்பாருடைய நிமாசுக்குவாரீர் சகோதரரே
தப்பாமல்ஜன்னத் தனையிற்புகுந்திடில் தானறிவீர் ௪௨௬

அல்லாவுடைய வீட்டினில்நீங்க ளஞ்சாமலேதான்
பொல்லாதக்கெட்ட வேலையைச்செய்துப் புகுதுகிறீர்
எல்லாமழிந்துப் போனாலும்பள்ளி யிருக்குமென்றே
வல்லவன்றூத ருரைத்தார்களல்லவோ மானிடரே. ௪௨௭

அந்தயிடத்திற் போரீர்கள்நீங்க ளறிவன்றியே
சிந்தையிற்சத்தும் பயமற்றுப்போனதேன் றீனவரே
சொந்தமோயிந்த வுலகத்தின்வாழ்வதுந் தோழர்களே
முந்தமயில்வடி வாகியிருந்தோர் மொழியுணர்வீர். ௪௨௮

வாய்நாற்றத்தோடும் போரீர்கள்வல்லோன் மஜீதனிலே
தாய்தந்தையில்லா னிடமென்றுநீங்கள் தானறிவீர்
மாயமதாக வருவார்மலக்குமே மண்ணதிலே
காயமழிந்தால் தெரிந்துகொள்வீர்கள் கபுருக்குள்ளே. ௪௨௯

மதுவைக்குடித்த வாய்நாற்றத்தோடு மஜீதிலே
எதுவிதமாகிய வெண்ணத்துடன்சென் றிருக்குகுறீர். ௪௩௰

புதுமனையான கபுரிற்புகுவதிற் பொய்களுண்டோ
சதுயுகக்கோடி வரும்சரக்கண்டோர்சொல் தள்ளிவிட்டே. ௪௬௰

சித்திரைப்பள்ளியிற் செய்யக்கூடாதென்று திண்ணயமாய்
முத்திலுதித்த முகம்மதர்சொன்ன மொழிமறந்து
சத்தியம்தப்பி நடக்குதீர்பூவைச் சதமெனவே
குத்தியில்லுளைப் புகுந்தாலுணர்வீர் கூட்டாளிகளே. ௪௬௧

குத்துபாவோதும் பள்ளிதனிலே குதாவுடைய
தத்துவமான மலக்குகள்வந்துமே தான்றொழுவார்
சுத்தியாய்நீங்களும் போயிடில்நித்தம் சுகிர்தமுண்டாம்
சத்தியமாக நடப்பீரெனது சகோதரரே. ௪௬௨

அமலுக்குத்துப்பர வாகவேசெய்யு மரன்மனையிற்
ஜமாவாகக்கூடிப் பேசக்கூடாதென்று தாஹாநபிசொல்
இமாம்களுமந்த வாற்சொன்னார்நீங்க ளடுத்தெரிந்து
நமக்குச்சதமென்று வெறியூடுபள்ளியிற் நண்ணுகிறீர். ௪௬௩

மஜ்ஜிதின்பெருமையை யுணராமல்நீங்கள் மதியறந்து
குசியாகப்பேசி டக்காரடிக்குங் கூட்டாளிகளே
பசியுந்தவனமும் யாதொன்றுமில்லான் பள்ளியிலே
சுசிகாமன்றிப் போவீர்தனத்தின் றுகைமிஞ்சியே ௪௬௪

பலஹதீதுப்படலம்

முற்றிற்று.

ஆகப்படலம் ௰௨-க்கு கூடிய பாடல்கள்-௲௬௧.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது,

பெண்டுகளினிடனாக்காட்டிய படலம்.

கீர்த்தனை.

இராகம் சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

க. பெண்ணாலே கெட்டவர் கோடான கோடிகள்
பேசத்துலையா தென் ஞாலே
பொய்கள்மிகுந்திடும் பெண்கள் நடப்பதைப்
பேசுவேன் கொஞ்சம்வா யாலே

சரணங்கள்;

அண்ணல்முஹம்மதர் சொன்ன ஹதீதை
யறிந்திடுங் கள்மன தாலே
ஆயிழை சொல்லதை நம்பினால்நாளை
யழுகுவீர் மண்ணுக்குள் ளாலே
சொன்னாலு மென்னையுந் தூஷணிப்பீர்கள்
தோகையர் மையலி ஞலே
சொர்க்கத்தைவிட்டுமே யேன்வந்தார் முன்னாதம்
சொல்லிடுங்கள் மதி யாலே(பெண்)

உ. ஜக்குப்பந்தியாக வீடுகட்டு மென்று
செப்புவார்வாய் களி ஞலே
சீக்கிரமாக வயல்தோட்டம் வாங்கியே
சேர்த்திடுவென் வசத் தாலே
பக்கத்திலுள்ளவர் செய்திடுங் காரியம்
பார்க்கிலையோ கண்ணி ஞலே
பாவைஹவ்வா சொல்லைக் கேட்டல்லோ ஆதமும்
பாடுபட்டார் மலை மேலே(பெண்)

௩- சுந்துக்கட்டுயில்லங் தோப்பு வாங்கினதுஞ்
சொல்லிடு உன்வாயி ஞலே
தோஷியே யுன்னையான் மாப்பிள்ளையென்று
துடர்ந்துக் கொண்டேன் விதி யாலே;
முத்துச்சரங்களும் மோகன மாலையு
முன்கண்ட துண்டோகண் ணலே
மூதேவியுன்னிட நிக்காஹில்வந்துயான்
மோசம் போனேன்மதி யாலே(பெண்)

௪. கன்றுயெருமைப் பசுமாடுவாங்கியே
கட்டினதுண்டோ கை யாலே
காரியக்காரர்போல் வீரியம் பேசியே
கத்துராயுன்வாயி ஞலே
உண்டுசுகித்து விருக்கலாமென் றெண்ணி
யுட்பட்டேனுன்கைக் குள்ளாலே
ஓரிபோலோடித் திரிகிறாயுந்தன்
னுடம்பு வளையாத தாலே(பெண்)

௫. பட்டிப்பசுக்களும் பால்மோருநெய்யையும்
பார்த்தேனோ வென்கண் ணலே
பாவியெனைப்பெற்ற தாயுந்தகப்பனும்
பாதகஞ் செய்தது ஞலே
மட்டிப்பயலென் றறியாமலுன்னிடம்
வந்தேன்தலைவிதி யாலே
மாப்பிள்ளையென்றுமே சொல்லவும்பூவினில்
வாய்வரவில்லையென் ஞலே(பெண்)

௬. ஜாதிசனங்களுங் கூடியேயென்னையுந்
தாலிகட்டிவைத்த தாலே
சாகாமற்செத்துச் சருகாயுலர்கிறேன்
சாதங்கறியற்ற தாலே
வேதியர் கூடி நிக்காகுமுடித்தே
வீட்டி லனுப்பிய தாலே
வெழ்க்கரோஷம்விட்டு வுன்னிடம்வந்தது
மேலோன்விதி யதி ஞலே(பெண்)

௭. பக்கத்திலுண்டான வான்பெண்பழிக்கிறார்
பார்க்கிலையோ கண்ணி னாலே
பட்டமரம்போற் றிரிகிறாய்நித்தமும்
பாடுபட் டென்னுக தாலே
வெழுக்கக்களுண்டானு வென்னைத்தலாக்குநீ
விட்டிடென்பாள் வாயி னாலே
வேண்டியமட்டு முதாசினஞ்சொல்லியே
வீசியடிப்பாள் கை யாலே(பெண்)

௮. மட்டிப்பயலே யரிசிகறிகளை
வாங்கிவாமுந்தாணி யாலே
மாதாவுக்கன்னங் குடுக்கவகையில்லை
வம்பனேயுன் கையி னாலே
பெட்டிப்பேழைகளில் ரத்தினமாலைகளும்
போட்டது முண்டோமுன் னாலே
போக்கிரியென்று வறியாமலுன்னைப்
புணர்ந்துக்கொண்டேன் விதி யாலே(பெண்

௯. சாறுஞ்சோறுங்கண்டு யெட்டுநாளாச்சுது
சாத்துமோன்பாரு ஜா டாலே
சங்கைகெடுத்து விடுவேனெடியினில்
தள்ளிப்போ நீயுமப் பாலே
ஊர்றுமுறன்முறை யெல்லாஞ்சிரிக்குது
வுந்தன் நடத்தையி னாலே
ஊளியெருதுபோ லூரெங்குஞ்சுத்தியே
வீட்டில் வருவதி னாலே(பெண்)

௰. கஞ்சிக்கிப்போடவு முப்பில்லையுன்னையான்
கட்டியதாத்தி னாலே
காயத்தைமூடத் துணியுங்கிடையாது
கையைப் பிடித்ததி னாலே
வஞ்சியர்கூடி வசையதுபேசிட
வாக்கப்பட்டேன் மதி யாலே
மாப்பிள்ளையென்றுநீ வந்தாயெனக்கொரு
மண்ணில் சனியனைப் போலே(பெண்)

௰௧. கட்டிலுமெத்தை தலகாணிவாங்கிடக்
கண்டிலேனென் கண்ணி ழமேல
காடிகளோட்டிப் பிழைக்கிறபேரைநீ .
கண்டிலேயோ கண்ணி ஞமேல
பட்டுப்போறுக்கால் சுபன்துணிவாங்கப்
பணமுண்டோவுன்கையி ஞமேல
பாதகனென்று வறியாமலுன்னிடம் ।
பட்டேன்பரன் விதி யாமேல(பெண்)

௰௨. மாடிவீடுகட்டி வாழலாமென்றுயான்
வந்தேன் மகிசூழிய தாமேல
மக்களைப்பெற்றும் பலனொன்றுமில்லையே
வம்பனேயுன்மனி யாமேல
ஆடியமுதுமகனைக் குடுவென
றதட்டிவோள் வாயி ஞமேல
அஞ்சிப்பயந்து விருந்தேனி துமுத
லாண்பிள்ளை நீயென்ற தாமேல(பெண்)

௰௩. பாக்குகாசுக்கட்டி வெத்திலைப்புகையிலே
பார்த்தேனோவுன் கையி ஞமேல
பாரிலுனைப்போலே யாண்பிள்ளையாரையும்
பார்த்ததில்லைக் கண்ணி ஞமேல
போக்கத்துப்போயி யலைகிறாய்நீயும்
பிழைக்கமதி யில்லா தாமேல
பெண்கள்கவட்டில் நுழைந்தாலுனக்குமே
புத்திவருகுந்தன் ஞமேல(பெண்)

௰௪. வெள்ளைப்பிடவைகள் வாங்கிக்குடுக்க
விதியில்லையுன் கையி ஞமேல
மீசைமுறுக்கித் திரிகிறாய்நீயொரு
மேட்டுக்குடிகளோ போமேல
கள்ளைக்கிச்சோறு குடுக்கவிதியில்லைச்
சண்டாளா வுன்கையி ஞமேல
தப்பிலியென்றுவறியாமலுன்னைத்
தழுவிக்கொண்டேன் விதி யாமேல(பெண்)

௰௫. படுத்திடப்பாயுங்கிடையாது வுன்னையான்
பத்தாவென்றெண்ணின தாலே
பஞ்சப்பயலென் றறியாமலுன்னையான்
பத்திக்கொண்டேன் மதத் தாலே
கடுப்பாகப்பெண்க ளுரைத்திடும்வார்த்தையைக்
கண்டிலையோ கண்ணி னாலே
காரிகைஹவ்வாசொற் கேட்டல்லோவாதமும்
கண்ணீர்வடித்தார் முன் னாலே(பெண்)

௰௬. கண்டிசரப்பளி கல்கட்டுமோதிரம்
கண்டதுண்டோ கண்ணி னாலே
கள்ளனைப்போலே பிறந்துயெனதுட
கர்ப்பையழித்தாய் முன் னாலே
சண்டிப்பயலென் றறிந்திடில்முன்னமே
தள்ளிப்போடுவேனப் பாலே
தையல்ஹவ்வாசொல்லைக் கேட்டல்லோ ஆதம்
சலித்தழுதார்மலை மேலே(பெண்)

௰௭; வட்டப்பதக்கங்கள் மாலாமணிகளும்
வாங்கினதுண்டோ கை யாலே
மானமழிந்துதிரிகிறோ னுன்னையான்
மாப்பிள்ளை யென்றதி னாலே
குட்டிச்சுவருபோ லுன்னையான்கூடிக்
குழந்தைகள் பெற்றதி னாலே
கோதையர்சொல்லதை நம்பவேண்டாமென்றுங்
கூறினனே ஹதீ தாலே(பெண்)

௰௮. காலுக்குப்பீலி மயிலடிகட்டுவக்
கண்டதுண்டோ கண்ணி னாலே
கச்சவடஞ்செய்து மிச்சமாய்மால்களைக்
காட்டினதுண்டோ கை யாலே
ஞாலத்திலுன்னைப்போ லாண்பிள்ளையானவர்
யான்கண்டதில்லை முன் னாலே
நாரியர்சொல்லதை நம்பவொண்ணாதென்று
நபியுரைத்தார் ஹதீ தாலே

௰௯. பால்பழம்சர்க்கரை கற்கண்டுவுன் கையில்
பார்த்ததுண்டோ கண்ணி — ஞாலே
பாரிலெனைப்போலே பெண்கள்நகைத்திட
பட்டேன்பரன் விதி — யாலே
காலுக்குப்பாடகந் தண்டைக்கொலுசுகள்
கண்டதுண்டோ கண்ணி — ஞாலே
காரிகைசொல்லதை நம்பினால்நாளைக்
கரைவீர்கள் மண்ணுக்குள் — ளாலே (பெண்)

௨௰. பெண்ணுனும்பெற்று வெடுத்தப்புரோசனம்
போதும்போதும் உன் — னாலே
போக்கிரியென்று வறியாமலுன்னிடம்
பெண்டுக்கு வந்தநி — னாலே
கண்ணாலேகாணும லோடிப்போநீயென்றுங்
கத்துவாள் தொண்டையி — னாலே
கன்னியர்சொல்லதை நம்பவேண்டாமென்றுங்
காட்டினேனே கவி — யாலே (பெண்)

௨௧. ஆடொன்றுக்கொன்று மறுத்ததுண்டோசொல்லு
வன்றுமின்று மொன் — னாலே
அஞ்சாறுமக்களைப் பெற்றுக்கிழவியா
யாகிப்போனேன் விதி — யாலே
மாடொன்றுவாங்கியே பாலுகரந்திட
வைத்ததுண்டோ முன் — னாலே
மங்கையர்சொல்லதை நம்பினால்நாளைக்கி
மண்ணுளழுவீர் தன் — னாலே (பெண்)

௨௨. பூட்டுத்துறப்புள்ள பெட்டிகள்வாங்கிநீ
போட்டதுண்டோ முன் — னாலே
பூமியிலென்னையும் பங்கப்படுத்தப்
புறந்தாய்நீயாண் பிள்ளைப் — போலே
வீட்டுக்குள்வந்து நுழையாதேயென்று
வெடுவெடுப்பாள் முகத் — தாலே
பீவிதன்சொல்லதை நம்பினால்நாளைக்கி
வெந்திடுவீர் தணலா — லே (பெண்)

௨௩. பட்டக்கருவாடு வாங்கிடத்துட்டொன்றும்
பார்த்ததில்லை யுன் — றாலே
பாங்கிமாரெல்லாஞ் சிரிக்கிறுருன்னையான்
பத்தாவென் றெண்ணிய — தாலே
வெட்டுங்கிடாய்போல் திரிகிராய்சித்தமும்
வீணுதிவீண னாய் — போலே
பீவிஹறவ்வா சொல்லை கேட்டல்லோ ஆதம்
விஜனப்பட்டார் மலை — மேலே(பெண்)

௨௪. குளத்துமீன்வாங்கென்று தம்பிடியொன்றுக்
குடுத்தாயோயுன் கையி — றாலே
கொள்ளைக்கழிச்சல் வரவில்லையுன்னையுங்
கொண்டுபோக சினத் — தாலே
பிளைத்துயிருந்துமே யென்னபலனென்று
பேசிடுவாள் வாயி — னாலே
பெண்பிள்ளைபேச்சதை நம்பவேண்டாமென்று
பேசினேனென் கவி — யாலே(பெண்)

௨௫. நற்பவழத்திறல் மாலைகள்போட்டிட
நான்வந்தே னாசையி — னாலே
நாட்டினிற்செய்திடு மண்பவழமொன்று
நான்பார்த்ததில்லை கண் — ணாலே
சப்பிறமஞ்சத்திற் றூங்கலாமென்றுமே
தானெண்ணினேன் மன — தாலே
தாலியைக்கட்டிய நாள்முதலாகத்
தரையில்படுத்தேனுன் — னாலே(பெண்)

௨௬. தங்கவரசலை கொப்புமூக்குவாளி
தான்கண்டதுண்டோ வுன் — னாலே
தட்டார்கள்செய்திடும் வெள்ளிவாளியொன்றுத்
தான்தரவில்லை கை — யாலே
அங்கத்தைமூடிடுந் துப்பட்டிவாங்கி
யளந்ததுண்டோ கை — யாலே
ஆண்பிள்ளைபோலவே மீசைமுறுக்கி
யதட்டுராய் வாய்களி — னாலே(பெண்)

உஎ. தங்கச்சவடியும் பொன்மணிக்கோர்வைத்
தந்தாயேயுன்கையி னாலே
சக்களத்தியுடன் சண்டைகள்போட்டிடத்
தான்வந்தனென் விதி யாலே
வெங்கப்பயலுக்குப் பெண்ஜாதிரண்டு
வேணுமோயுன் திறத் தாலே
வேஸ்டியுடுத்தி வெளியில்திரீகிரா
வீராதிவீர னைப் போலே(பெண்)

உஅ. பெற்றப்பிள்ளைகளுஞ் சோத்துக்கழுகுது
பேயனேபாரு கண் ணாலே
பிஞ்சத்துணிதைக்க வூசிகள்வாங்கப்
பிழைப்பில்லையுன் கையி னாலே
சுற்றமில்லாதெனன் றறியாமலுன்னையான்
தொட்டுக்கொண்டேன் விதி யாலே
தோகையர்வாய்களில் பொய்மிகவுண்டென்று
சொன்னார்நபி ஹதீ தாலே(பெண்)

உகூ. நாத்துனார்வந்துமே யென்னையழைத்திட
நான்கண்டதில்லை கண் ணாலே
நாலுபேரைப்போலே நாமிருப்போமென்று
நாடிவந்தேன் விதி யாலே
சாத்துக்குநெத்திலி சூடைகள்வாங்கிடத்
தம்பிடியில்லை கை யாலே
சண்டாளனென்று மறியாமலுன்னைத்
தழுவிக்கொண்டேன் விதி யாலே(பெண்)

௩௰. சட்டிபானைக்கென்று தம்பிடியொன்றுதான்
தந்தாயோயுன் கையி னாலே
தவலையும்செம்பும் படிகமும்வாங்கியே
தந்திடெண்பாள் வாயி னாலே
வெட்டிக்கியுன்னையு மாப்பிள்ளையென்று
வேண்டிக்கொண்டேன் விதி யாலே
மெல்லியர்சொல்லதை நம்பினல்நாளைக்கி
வெந்திடுவீர் தண லாலே(பெண்)

௩.௧ கொங்கையைமூட ரவுக்கையுங்குத்தநீ
கொண்டுவந்தாயோ முன் னாலே
குத்திதனிலுன்னை யாமக்கனென்றுமே
கூடிக்கொண்டேன் கொழுப் பாலே
பங்கமில்லாமலே பேசித்திரிகிராய்
பாரினிலாண் பிள்ளைப் போலே
பாவைஹவ்வாசொல்லை கேட்டல்லோ ஆதமும்
பாரில்வந்தாரோ மு[illegible] னாலே(பெண்)

௩.௨. பின்கொக்கித்தாலியும் வாங்கிதந்ததுண்டோ
பேயனே[illegible]யுன் கையி னாலே
பெர்திடும்பிள்ளைக்கி மாலாவ[illegible]சங்கிலி
போட்டதுமுண்டோ முன் னாலே
வன்னச்சேலைகளும் பட்டுரவுக்கைகள்
வாங்கித்தந்தாயே கை யாலே
மங்கையர்சொல்லதை நம்பவேண்டாமென்று
[illegible] யாலே(பெண்)

௩.௩. தலைக்கெண்ணைவாங்கொ[illegible] தம்பிடியொன்றுமே
தந்ததுண்டோ கை யாலே
சாதிசனங்கள் சலிப்பாறவுன்னிடந்
தான்தின்னதுண்டோ வா யாலே
கலைகளுடுத்திக் களித்துநடந்திடக்
கண்டதுண்டோ கண்ணி னாலே
கன்னியர்சொல்லதை நம்பவேண்டாமென்றுன்
காங்டினனே கவி யாலே(பெண்)

௩.௪. குளங்கரையருகிடில் தம்பிடியொன்றுக்
குடுத்தாயோயுன் கையி னாலே
செ[illegible]யதிலே வந்துமேசட்டியே
[illegible]டியிருந்ததி னாலே
பிறந்தபருவத்தில் வந்தயான்செட்டது
ஏகனெழுத்ததி னாலே
ஏந்திழைசொல்லதை யேர்க்கவேண்டாமென்
றியம்பினேனென் கவி யாலே(பெண்

௩௫. நாறத் தங்காய்வாங்கி யுப்புப்போட்டுத்தின்ன
நான்கண்டதில்லை நா — வாலே
நாலுபேரைப்போல் நடத்தியகாரணம்
நாடறியாதோ வுன் — ருலே
சிருசிறப்பன்றி வந்தனேவுன்னிடஞ்
செப்பிடுவுன் வாயி — ருலே
தேவியர்சொல்லதை நம்பினுல்நா[illegible]க்கி
சேர்வீர்நரகத்துள் — ளாலே(பெண்)

௩௬. தொட்டிலுக்கட்டத் துணியதுவாங்கிட
துட்டுண்டோயுன் கையி — ருலே
தோசையிடியப்பம் வாங்கித்[illegible]ன்னென்றுநீ
சொன்னதுண்டோ வாயி — ருலே
வட்டிலும்சொம்புகள் தூக்குவிளக்குமே
வாங்கவுங்காணேன் கண் — ருலே
மட்டிப்பயலென் றறியாமலுன்னை
மணந்துகொண்டேன் மதத் — காலே(பெண்)

௩௭. குமஞ்சானைவாங்கித் தயிலமிறக்[illegible]ன்று
கொண்டுவந்தாயோ கை — யாலே
கொட்டுக்குளுவையுங் குத்துவிளக்குகள்
கொண்டதுண்டோ முன் — ருலே
சம்சாத்தவலையுஞ் சட்டிகள்வாங்கியே
தந்தாயோவுங் கையி — ருலே
தையலர்சொல்லதை நம்பொண்ணுதென்றுமே
சாத்தினனே கவி — யாலே(பெண்)

௩௮. கொட்டணக்குத்திட வெனக்குப்பிலனில்லைக்
கொண்டபழிக் கார — ருலே
குத்துக்கட்டைப்போலே யுன்னையான்கூடிக்
குழந்தைகள் பெற்றதி — ரு[illegible]
பொட்டுப்பொடிக்கென்றுநீ செத்தாலென்றுயிர்
போய்விடுமே தன் — ருலே
பொன்னைப்பயலுக்குப் பெண்டாட்டிரன்றென்று
பேசுராய்பெண்கள் முன் — ருலே(பெண்)

௩௯. கட்டியகார்ளா யுலக்கைப்பிடித்துமே
கைசேர்ந்துப்போனே னுன் — றலே
கறிசோறுந்தேடியே வூரெங்குமோடுருய்க்
கட்குடிகாய்களைப் — போலே
பொட்டியெடுத்திடும் பக்கிரிலும்கெட்டப்
போக்கிரியென்பாள் வா — யாலே
பெண்பேச்சைக்கேட்டல்லோ ஆதமழுதுப்
புலம்பினுரோ பெண் — மேலே (பெண்)

௪௰. அந்தஹவ்வாபெற்றப் பெண்களிவரென்று
அறிந்திலேயோ மன — தாலே
அழுதுபுலம்பியே பொய்யைக்சொல்வார்க
ளருவயர்வாய் களி — றலே
கந்தகமழும் நபிதமுறைத்த
ஹதீதகதைப்பாருங் கண் — ணலே
கஞ்சிக்குடித்தும் பலனொன்றுமில்லையே
காகைக் கைபது — றலே (பெண்)

௪௧. பண்டிகள்வைத்துமே வர்த்தகஞ்செய்ய
மதியுண்டோயுன் கையி — றலே
கஞ்சியவர்போலே வளையலுடுத்திட
வந்தாய்மனி தனைப் — போலே
தெண்டித்துத்தின்னத் திறமில்லையென்றுமே
சிச்சியென்பாள் வா — யாலே
சேலைகட்டிடு மாதனா நம்பினல்
சேரமிவீர் யிறை — யாலே (பெண்)

௪௨. பெண்ஜாதிபேச்சதை நம்பினல்நாளைக்கிப்
போவீர்ஜஹன்னத் துள் — ளாலே
பூவைஹவ்வாசொல்லைக் கேட்டல்லோ ஆதம்
புலம்பியழுதார் முன் — றலே
மண்டாட்டஞ்செய்திடு வள்ளல்முஹம்மதர்
வாஸ்தமாய்ச்சொன் னதி — றலே
மங்கையர்சொல்லதை நம்பவேண்டாமென்று
வாழ்த்தினனே கவி — யாலே (பெண்)

௬௩. என்னகுடுத்தாலு மில்லையில்லையென்
 றியம்புவார் வாய்களி ளாலே
ஏந்திழைசொல்லதைக் கேட்டுமடிந்தவ
 ரெண்ணமுடியா தென் னாலே
வின்னமாயுங்கள் ளுயிரதைவாங்கிட
 வீற்றுளமனது போலே
மங்கையின்மையலிற் சிக்கினல் ஒளைக்[illegible]
 வந்திடுந்துன்பம் பின் னாலே(பெண்)

௬௪. கட்டுக்கட்டாக விறகுகள்வாங்கிடக்
 கண்டனோவென் கண்மணி னாலே
கண்டமீன்வாங்கிப் பொரித்து[illegible]தின்றிடக்
 கண்டதுண்டோ வுன் னாலே
தொட்டுத்தின்னச்சுன்னம் வாங்கென்றுச்சொல்லியே
 துட்டுத்தந்தாயே கை யாலே
தெம்மாடிவெங்கப் பயலென்றறியாமற்
 தேடிக்கொண்டேன் விதி யாலே(பெண்)

௬௫, காய்கறிவாங்கென்று தம்பிடியொன்றுக்
 கிடைத்ததுண்டோ வுன் னாலே
கேட்டிடும்பெண்கள் சிரித்திடவுன்னையான்
 கட்டிக்கொண்டேன் மதி யாலே
நாய்போலேசுத்தியே வீட்டில்வருகிறாய்
 நல்லச்சோ றில்லாத தாலே
நாட்டிலுனைப்போலே ஆண்பிள்ளையெல்லாம்
 நகைக்கிறாருன் செய லாலே(பெண்)

௬௬. மாமியொருத்திக் கழுதைபோல்கத்துறாள்
 வாசலில்நின்று வா யாலே
மட்டிப்பயலே யவளையடக்கவும்
 வல்லமையுண்டோ வுன் னாலே
சேமியாஞ்செய்துமே தின்றனோவுன்னையான்
 சேர்ந்திடும்நாள் முத லாலே
சேயிழைசொல்லதை நம்பினல்நாளைக்கிச்
 சிரழிவீரிறை யாலே(பெண்)

௪௭. பிள்ளையின்ருத்தனைக் கிள்ளுவாளுங்களைப்
பேசிப்பேசி வாயி னாலே
பிச்சைக்காரனிடம் வந்ததினாலே
பெருமைக்குலைந்தே னுன் னாலே
கள்ளியுறவந்தை நம்பினால்நாளைக்கி
காண்பீர்நரகம் கண் ணாலே
காரிகைசொல்லதை நம்பொண்ணாதென்றுமே
கண்டில்லையோ ஊதி தாலே(பெண்)

௪௮. குப்பியொருத்தி ந[illegible]வேயிருந்துக்
குடியைக்கெடுத்தாள் மூன் னாலே
கோலம்வருமென்று யெண்ணாமலுன்னையுங்
கூடினேன்பெண் மதி யாலே
செப்பிடும்வார்த்[illegible] நீ[illegible]ான்மறந்துமே
சின்னங்கட்செ[illegible]தது னாலே
சீசியுனைப்போலே யாண்பிள்ளையாருமே
சிக்குமோவென்கைக் குள் ளாலே(பெண்)

௪௯. இளையக்குடியாளை வீட்டிலேவைத்து
யெடுக்குறாய்வேலை யென் னாலே
இறைவனிடத்திலே நாளைமனுஷறி
லென்னசொல்லுவாய் வா யாலே
பிளைகளைசெய்திடில் நாளைநரகத்திற்
போடுவானுன்னை மூன் னாலே
பெண்பாவம்வந்து தலையில்விடிந்திடும்
பேசாதேயென்றன் மூன் னாலே(பெண்)

௫௰. தாடிபிடித்துத் தவடையிற்போடுவேன்
றள்ளிப்போனீயு மப் பாலே
சக்களத்தியுட னென்னையுமன்றாய்ச்
சரியாகவை யாத் தாலே
பேடிப்பயலுக்குப் பெண்டாட்டிரண்டென்றுப்
பேசுறாய்வா யது வாலே
பெண்பாவம்வந்து தலையில்விடிந்திடுமே
பேசாதேயென்றன் மூன் னாலே(பெண்)

௫௧. சுள்ளிமுறித்துமே-தோளெல்லாம்நோகுது
துஷ்டனைக்கட் டிய தாலே
தோகையொல்லாரு மென்னைப்பழிக்கிறார்
சொல்லமுடியா தென் னாலே
கள்ளிச்சுழலதை நம்பவேண்டாமென்றுக்
கண்டில்லையோ ஹாதி தாலே
கன்னியர்சொல்லதைக் கருதவேண்டாமென்று
காட்டினனேனென் கவி யாலே(பெண்)

௫௨. என்னசொன்னாலுமே புத்தியில்லையென்
றியம்புவார் வாயி னாலே
எச்சிப்பயலுக் கிரண்டுசமுசார
மேனெடுத்தானே முன் னாலே
பொன்னும்பணங்களும் சிந்[illegible]கோ[illegible]று
பெண்களைக்கொண்டான் முன்[illegible] னாலே
பெண்சொல்லைக்கேட்டல்லோ ஜென்னத்தைவிட்டுப்
பிறப்பட்டாராத முன் னாலே(பெண்)

௫௩. நெல்லுக்குத்திக்குத்தி நெஞ்செல்லாநோகுது
நீச்சனைக்கட் டிய தாலே
நீருகாரீர்க்கு மூப்புக்கிடையாது
நீதேடும் தேட்டத்தி னாலே
அல்லும்பகலுமே கூளமரித்து
வடுப்பையெரித்தே னுன் னாலே
ஹவ்வாசொல்கேட்டல்லோ முன்னூர்வருட
மழுதாரோஆக முன் னாலே(பெண்)

௫௪. வல்லோனுரைத்தமறை மொழிபேசினால்
வம்புபேசு வாள் வாயாலே
மட்டிப்பயலேநீ யாமக்கனேவென்று
வைதடிப்பாள் முறத் தாலே
சொல்லாதசொல்லெல்லாம் சொல்லிமுகத்திலே
துப்பிடுவாளெச்சி யாலே
தோகைஹவ்வாசொல்லைக் கேட்டல்லோ ஆதம்
துன்பப்பட்டார் மலை மேலே(பெண்)

௫௫. கட்டியவீடுங் கழுத்துநகைகளுங்
கண்டதுண்டோ வுன் னாலே
கஞ்சிக்கிலாப்படும் பாடுகள்சொல்லிக்
கணக்கிடக்கூடா தென் னாலே
கட்டியருத்திடும் பெண்போலிருப்பதைக்
கண்டிலேயோ கண்ணி னாலே
காரிகைச்சொல்லதைக் கேட்டல்லோ ஆதம்
கண்ணீர்வடித்தார் முன் னாலே(பெண்)

௫௬. பட்டுரவுக்கையும் தாவணிலங்காவும்
பார்த்ததுண்டோ வுன் னாலே
பாவிப்பயலென் றறியாமலுன்னுடன்
பட்டேன்பாவி விதி யாலே
தடியாலடித்துத் து[illegible]னோடிப்போ
சங்கையிருந்[illegible] முன் னாலே
தையல்சொல்லதை நம்பவேண்டாமென்று
சாத்தி[illegible] கவி யாலே(பெண்)

௫௭. கையில்வளையலுங் கங்கண்பொவுஞ்சியுங்
கண்டதுண்டோ வுன் னாலே
கட்டையைப்போலே திரிகிறேனுன்னையான்
கைபிடித் ததி னாலே
வையகந்தன்னிலே யுன்னைப்போல்மாப்பிள்ளை
வாய்க்குமோவென்கைக் குள் ளாலே
மங்கையர்சொல்லதை நம்பினால்நாளை
மண்ணிலழிவீர் தன் னாலே(பெண்)

௫௮. செட்டுகள்செய்து திரவியந்தேடத்
திறமுண்டோவுன் கையி னாலே
சீறிச்சினந்துமே நித்தமுஞ்சொல்லியே
சீக்கொட்டுவாள் கையி னாலே
பட்டுப்போவானே யெனக்காகமுன்னைப்
படைத்தானோமண் ணதி னாலே
பாவையர்சொல்லதை நம்பினபேரெல்லாம்
பாடுபடுவார்பின் னாலே(பெண்)

௫௯. நகைநட்டுகளாக்குந் தங்கநகைகளும்
நான்கண்டோ துண்டோ வுன் றலே
காட்டிலிருந்திடு மாண்பெண்களெல்லாம்
நகைக்கிறா ருன்னடப் பாலே
செத்துப்போனாலும் விளக்கெண்ணெயில்லையே
சிச்சீயென்பாள் வாயி னாலே
தேவியர்சொல்லதை நம்பினால்நாளுங்கி
சோழிவீ ரிறை பாலே(பெண்)

௬௰. சட்டியெடுத்துத் தலையிலுடைக்குமுன்
றள்ளிப்போநீயு மப் பாலே
சங்கைகள்வேண்டினு லென்பேச்சுப்பேசாதே..
தப்பிப்போநீயு மப் மாலே
பொட்டியெடுத்து யிரந்துப்பிழைத்திட
புத்திகளுண்டோ வுன் றலே
ஹவ்வாசொல்லைக் கேட்டல்லோ ஆதமும்
பொன்னகர்விட்டார் முன் றலே(பெண்

௬௧. கூளதுகாச்சிட ராகியைவாங்கியே
கொண்டுவந்தாயோ கை யாலே
கொண்டபழிகார வண்டப்பயலென்றுக்
கூறிடுவாள் வாயி னாலே
ஆளொருசேருமே வாங்கிவந்துசோறு
ஆக்கினதுண்டோ வுன் றலே
அன்னைஹவ்வாபெற்ற மக்களிவரென்
றறிந்துக்கொள்வீர் மன யாலே(பெண்)

பெண்டுகளி னிடளைக் காட்டிய படலம்

முற்றிற்று.

ஆகப்படலம் ௩௨-க்கு கூடிய பாடல்கள்-௬௱௫௨.

99

பி[illegible]மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இ ஃ தி,

பெண்டுகளின் நன்மை தின்மை[illegible]

காட்டிய படலம்.

கீர்த்தனை.

இராகம் ச[illegible]கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

புருஷ[illegible]த்திட்டி[illegible] பூவைமாரெல்லோரும்
போவார்ஜஹன்[illegible] ளாலே
பொய்யில்லையான்சொ[illegible]னேன் முன்னல்மூஹம்மதர்
பேசினுரோ ஹதீ[illegible] தாலே

சரணங்கள்.

க, அறுஷினிலேறி யிறையிடம்பேசிடு
மண்ணல்சொன்னுர்கள் முன் னுலே
ஆயிழையோர்கட்கு சொர்க்கமிருக்கு
தரசனடியினுள் ளாலே
வரிசைகள்பெற்றுமே வாழ்வீர்களென்றுயான்
வாழ்த்தினேனென் கவி யாலே
வண்டத்தனமாகப் பேசிடுமங்கையர்
மண்ணிலமுவார் தன் னுலே (புரு)

உ. தொழுதுகணவரின் சொல்லைத்தட்டாதிடிற்
றுன்பம்வராது பின் னுலே
தூஷணிப்பாகவே பேசிடுமங்கையர்
தோஷக்கில்போவார் பின் னுலே
பழுதிவாராமலே பேணிக்கொள்ளுமென்றுப்
பாடினேனென் கவி யாலே
பாவைமாருக்கெல்லாம் சொர்க்கமிருக்குது
பத்தாவடியி னுள் ளாலே (புரு)

௩. பொய்களைநித்தம் புகலுநீர்கொண்டப்
புருடனிடத்தின் முன் னாலே
பூவைஹவ்வாசொல்லைக்கேட்டாதம்பட்டவகைப்
பேசமுடியா தென் னாலே
வையகந்தன்னிலே பெண்ணென்று நீங்கள்தான்
வந்துபிறந் ததி னாலே
மாப்பிள்ளைமார்களைத் திட்டிடிற்நாளை
வைவிலெரிவீர் தன் னாலே (புரு)

௪. வெறுமையென்றெண்ணிக் கணவரைத்திட்டினால்
வெந்திடுவீர் தண லாலே
பீவிறஹமத்துக் கூலிகட்செய்தது
மெய்யில்லையோ முன் னாலே
பொறுமையுடைய நபிமகள்ப[illegible]தைப்
பேசமுடியா தென் னாலே
பெண்புத்தியாலே மதிகெட்டுப்போயிடிற்
போவீர்ஜஹன்னத் துள் ளாலே (புரு)

௫. வையகத்தில்நபி ஐயூபுக்குப்பிணி
வந்துதுடர்ந் ததி னாலே
மங்கைறஹ்மத்தும் வேலைகட்செய்தது
மண்ணிலறிவார் முன் னாலே
ஐயமதாகவவரைத் தூக்கிக்கொண்
டலைந்தாரரசர் பின் னாலே
அந்தஹிஸ்ஸாக்களைக் கேட்டில்லையோசொல்லு
மன்னையரோ காதி னாலே (புரு)

௬. தூதர்நபிமகள் பாத்திமாபட்டதுந்
தோணலையோ மன தாலே
சொர்க்ககனியுண்ட ஹஸன்ஹுஸைனுமே
துன்பப்பட்டார் பசி யாலே
மாதர்க்கரசி குவைலிதுபெற்ற
மகளும் வறுமையி னாலே
மங்கைகதீஜா பசியோடிருந்ததும்
வாஸ்தமல்லோ முன் னாலே (புரு)

ஏ. வண்ணமயீன யிருந்தநபியும்
வறுமைகள் வந்ததி ஞலே
மண்ணிற்பசிவா யிருந்த தறியீரோ
மங்கையரே ஹதீ தாலே
அண்ணல்முஹம்மதர்தேவியாராகிய
ஆயிஷாபீவி முன் ஞலே
ஐந்தாறு ஞ சமூற்செய்யவில்லையோ
வவர்கட்பசி யதி ஞலே (புரு)

அ. மன்னன்குடிக்கும் நபங்காவுஞ்சேலையும்
வாங்கிக்கொண் மன் மேலே
மானங்குலைய்வும் பேசுநீருங்கள்
மணவாளனை வாயி ஞலே
அன்னங்குடுத்திடும் பிள்ளைவைநீங்க
ளலங்கோலஞ்செய் வதி ஞலே
அன்னையாம்பாத்திமா கோபத்திற்சிக்கி
யழுவீர்ஜஹன்னத் துள் ளாலே (புரு)

கூ பாத்திமாநாயகம் செய்தகிசுமத்தும்
பார்க்கில்லையோ ஹதீ தாலே
பட்டுப்போகுமுன்னே பத்தாபதத்திற்
பணிந்திடுங்கள் தலை யாலே
யாத்தாலுயர்ந்திடும் ஜஹன்னத்திற்சென்றுமே
வாழ்ந்திடுவீர் பின் ஞலே
மங்கைமாரொல்லா மெனைப்பெற்றதாயென்று
வாழ்த்தினேனென் கவி யாலே (புரு)

ம. கோபங்கள்வந்தால் மஹறைக்குடுவென்றுக்
கூத்தாடுவீர் முன் ஞலே
கொண்டபுருடன் மனமுமேநொந்திடில்
கோலப்படுவீர் பின் ஞலே
சாபங்குடுத்துத் தலாக்கைவிடுமென்று
சண்டைபோடுவீர் வா யாலே
தையலரொல்லா மெனைப்பெற்றதாயென்று
சாற்றினேனென் கவி யாலே (புரு

௰௧. பத்தாவைப்பூவிற் பஸீஹத்துச்செய்திடிற்
பார்ப்பீர்நரகம் பின் ஞாலே
பார்மீதிலுங்கட் கணவனைப்பேணிடிற்
பாலகர்களோடுந் தன் ஞாலே
செத்தாலுஞ்ஜன்னத்திற் போவீர்களென்றுயான்
செப்பினேனென் வாயி ஞாலே
செய்யிதிறசூல் மகள்பாத்திமாவுடன்
சேர்ந்திடுவீர் பின் ஞாலே (புரு)

௰௨. ஒருவர்க்கொருவர் பணிந்திடலாமென்று
வோதினர்நம் மிரு ஞாலே
உங்கள்கணவனைப் பூவிற்பேணிஞா
லோடிடும்பாவந் தன் ஞாலே
புருவஞ்சுழித்து மனம்நோகதிட்டிடிற்
போவீர்ஜஹன்னத் தின் னாலே
பெண்களுக்கெல்லாம் சுவனமிருக்குதுப்
புருடனடியி னுள் ளாலே (புரு)

௰௩. ஜினவதுசெய்திடுந் தையலர்ஞளை
ஜஹன்னத்திற்போவார் தன் ஞாலே
சங்கைகெட்டு விடுமென்றுநானிதைச்
சாற்றினனே புவி மேலே
கனவதுபோலே யறியுஞ்சடமென்று
கன்றில்லையோ ஹதீ தாலே
கன்னியொல்லா மெனைப்பெற்ற
தாயெனக் காட்டினனே கவி யாலே (புரு)

௰௪. துன்யாவின்வாழ்வைப் பெரிதென்றுவெண்ணியே
தூஷணிப்பீர் வாயி ஞாலே
தோகையர்தங்கட்குச் சொர்க்கமிருக்குது
தோழனடியி னுள் ளாலே
அனியாயமாகவே தூஷணித்தோர்க
ளழுவார்கள்மண்ணுக் குள் ளாலே
அண்ணல்முஹம்மதர் சொன்னஹதீதை
யறிந்திடுங்கள் மன தாலே

௰௫. கணவன் கனக்கு நமே கைகருமம்செய்தால்
      காண்பீர் சுவனம் கண்   ணாலே
   கத்தாமஹ்மத்துப் பெத்திடுவீரொன்றுக்கழறினே
      னென் வாயி   னாலே
   மணமது செய்திடு மாப்பிள்ளைமார்களை
      வாழ்த்திடுங்கள் மன   தாலே
   மங்கைக்கரசியர் பாத்திமாகூட்டத்திற்
      வாழ்ந்திடுவீர்கள் பின்   னாலே (புரு

௰௬. தலைவிதியெழுத்தோ விதியோவெனச்சொல்லி
      சண்டையிட்டால்தரை   மேலே
   தன் கணவன் மனம் நொந்திடிற்நாளை
      ஜஹன்னமடைவீர் தன்   னாலே
   மலைபோலெரியுந் தணலினிற்செல்லாமல்
      வாய்களைப்பேணு மண்   மேலே
   மங்கைகதீஜா மகள்ஷபாஅத்திலே
      வந்திடுவீர்கள் பின்   னாலே (புரு)

௰௭. சுன்னத்துநோம்பைத் தடைசெய்யலாமென்று
      சொன்னாநபி ஹதீ   தாலே
   தோழன்பெருமையைப் பார்க்கில்லையோநபி
      சொன்னமொழி யதி   னாலே
   வன்னப்பிடவையுந் தங்கநகைக்கேட்டு
      வைதிடுவீர் வாயி   னாலே
   மாப்பிள்ளைமார்கள் மனமதுநொந்திடில்
      வைவில்லெரிவீர் பின்   னாதே (புரு)

௰௮ கணவனுடைமையி லெள்ளளவேனும்
      களவாய்க்குடுத்தால் கை   யாலே
   கன்னிப்படும்பாடு நாளைநரகத்திற்
      கண்டிடுவீர்கள் கண்   ணாலே
   பிணம்போலேநாறி யெரிவாரெனச்சொல்லிப்
      பேசினனே ஹதீ   தாலே
   பீருசாவும்மா மகள்பட்டபாடதுப்
      பேசமுடியாதென்   னாலே (புரு)

௰௯. மங்கைறஹ்மத்து மன்னர்பிணிக்கி
வருத்தங்கள்பட்டதி னாலே
வல்லோன்றஹ்மத்தைப் பெற்றுக்கொண்டாரென்று
வந்தில்லையோ ஹதீ தாலே
சங்கைகட்பெற்றுத் தரணியில்வாழ்ந்தது
சாற்றில்லையோ முன் னாலே
தையலரெல்லா மெனைப்பெற்றதாயென்று
சாற்றினேனென் கவி யாலே

௨௰. எங்கெந்தப்பெண்ணும் புருடர்வறுமைக் (புரு)
கிணங்கியிருந்தால் மண் மேலே
ஏகனுக்காக வறுபதுவாண்டு
யிபாதத்துச்செய் தது போலே
முந்தமயில்வடிவாகவிருந்தோர்
மொழிந்தார் ஹதீ தி னாலே
மூவந்தர்களெல்லா மெனைப்பெற்றதாயென்று
மொழிந்தனேனென் வாயி னாலே (புரு)

௨௰௧. தாம்புலம்புகயிலை யெண்ணையில்லையெனறுச்
சண்டையிடுவீர் மண் மேலே
தன்தன்புருடன் மனமதுநொந்திடிற்
றாழ்வீர்நரகத் துள் ளாலே
பாம்பதுதேளுங் குடியாயிருப்பிடம்
பார்த்திடுவீர்கள் பின் னாலே
பாவைமாரெல்லா மெனைப்பெற்ற
தாயென்றுப் பாடினனே கவி யாலே (புரு)

௨௰௨. பிள்ளையைச்சாட்டியே சண்டையெடுப்பீர்கள்
பேசிப்பேசி வாயி னாலே
பூவதைநம்பி புருடனைத்திட்டினால்
போவீர்ஜஹன்னத் துள் ளாலே
சுள்ளிநெருப்பிற் புகுந்திடுவீரென்றுஞ்
சொன்னேனேயென் கவி யாலே
தோழனைப்பேசின நாவதைநாளைக்கிச்
சுட்டிடுவான் தனா லாலே (புரு)

௨௧. பாவைமாரெல்லோரும் வாயதைப்பேணிஞல்
பார்ப்பீர்சுவனங் கண் — ஞலே
பட்டிபோலுங்கள் புருடனைப்பற்றிஞல்
பாவந்துடரும் பின் — ஞலே
சாவதைநீங்கள் மறந்தல்லோநித்தமும்
சண்டையிடுவீர் மண் — மேலே
சர்ப்பமுந்தேளும் பிடுங்கிடுமென்றுயான்
சாற்றினனே கவி — யாலே (புரு)

௨௪ மவுத்துவருமென்று வெண்ணுமல்நீங்களும்
வம்புபேசுவீர் மண் — மேலே
மாடிமனைகளு மக்களும்வாராது
மண்ணுக்குட்போன பின் — ஞலே
சவுத்துங்குரலு மொடிங்கிடுமுன்னே
ஷரீஅத்தைப்பேணு மண் — மேலே
சந்தூக்கிலேறி நடந்தாலறிவீர்கள்
சையலரோ பின் — ஞலே (புரு)

௨௫. பூவதின்வாழ்வைச் சதமென்றுவெண்ணியே
பேசுறீர் வாய்களி — ஞலே
பெண்கட்குபுத்திக் குறவென்றுமேநபி
பேசிஞரோ ஹதீ — தாலே
நாவதைப்பேணி யிருந்திடிலுங்கட்கு
நன்மைகிடைக்கும் பின் — ஞலே
ஞான்சொன்னசொல்லதை நம்பிஞல்நாளை
நடப்பீர்சுவனத் தாள் — ளாலே (புரு)

௨௬. கொஞ்சவயதைப் பெரிதென்றுவெண்ணிக்
குதிப்பீர்புருடர் முன் — ஞலே
கூடழிந்தால்நாளை மோசம்வருமென்றுக்
கூறினனே கவி — யாலே
அஞ்சாமல்நித்தமு முங்கள்புருடனை
யதட்டுறீர் வாயதி — ஞலே
அருவையரெல்லா மெனைப்பெற்றதாயென்
றருளினேன்முன் ஹதீ — தாலே (புரு)

௨௭. பருவவயதிற் பெண்கள்மடிவதைப்
பார்க்கிலேயோ கண் ணாலே
பாரைச்சதமென்று பத்தாவைத்திட்டுதீர்
பாவையரே மன் மேலே
குருவதைப்போலே புருடனைப்பேணினால்
கூடலாம்சொர்க்கத் துள் ளாலே
கொண்டகணவனைத் திட்டினவாயைக்
குதாயெரிப்பான் தண லாலே (புரு)

௨௮. மாடிவீடுகட்டி வைக்கவில்லையென்று
வம்புபேசுதீர் வா யாலே
மான்கலையென்றிடு மூச்சத்துப்போனால்
வைவிலெரிவீர் பின் னாலே
கோடிப்பாம்புபோலே சீறிச்சீறித்தம்
கோவிப்பீர் கண்களி னாலே
கொண்டவந்தன்னை நீ திட்டினநாவைக்
குதாவெரிப்பான் தண லாலே (புரு)

௨௯. ஜாடிஜாடியாக யெண்ணையைவாங்கென்று
சாத்துவீர்வாய் களி னாலே
சாத்துக்குக்கறி யில்லையென்றுசொல்லி
சண்டையிடுவீர் முன் னாலே
தாடியைப்பிச்சுப் போட்டிடுவேனென்று
சாற்றுவீர்வாய் களி னாலே
தன்தன்கணவனைப் பேசினவாய்களைச்
சர்ப்பம்பிடுங்கும் பின் னாலே (புரு)

௩௰. கள்ளைக்குடித்தல்லோ யென்முன்னேவந்துநீ
கத்துராய்வாய் களி னாலே
கதவையடைத்து வெளியில்கிடவென்றுக்
கத்துவீர் தொண்டையி னாலே
பள்ளுப்பறச்சிகள் சொல்வதுபோல்நித்தம்
பாடுவீர்வாய்களி னாலே
பத்தாவைத்திட்டின பெண்களைநாளைப்
பரனெரிப்பான் தண லாலே (புரு)

௩௧ கூடியிருவரும் பிள்ளைகளைப்பெற்றுக்
கொஞ்சிக்கொள்வீர்க மண் மேலே
கோபங்கள்வந்திடில் தாறுமாறாகவே
கூத்தாடுவீர்கள் முன் னாலே
பேடிப்பயலென்று முன்னாலேநின்றுதான்
பேசுநீர்வாய் களி னாலே
புருஷனைத்திட்டின பூவையரெல்லாம்
போவார்ஜஹன்னத் துள் ளாலே (புரு)

௩௨. நாளைகபுறி லறிந்திடுவீரென்று
நான்சொன்னனே ஹதி தாலே
நன்றாகவுங்கட் புருஷரைப்பேணினால்
கஷ்டம்வராது பின் னாலே
காளைமனம்நோக திட்டிடில்நாளைக்கி
காண்பீர்நரகங் கண் ணாலே
கன்னிகளெல்லா மெனைப்பெற்றதாயென்றுங்
காட்டினனே ஹதி தாலே (புரு)

௩௩. பெண்கள்வரலாறு மிச்சமிருக்குதுப்
பேசமுடியாதென் னாலே
பின்னால்வருத்தம் வருமென்றுச்சொல்லியே
பேசினனேஹதி தாலே
எங்கள்முஹம்மதர் சொன்னமொழியை
யியம்பினே னென்னாவி னாலே
ஏந்திழைபாத்திமா கூட்டத்திற்சேர்ந்திட
வெண்ணம்வைப்பீர் மன தாலே (புரு)

௩௪. இங்கைப்பிரித்த முஹம்மதர்பேசினா
ரெங்களுக்கே ஹதி தாலே
எல்லாமெழும்பியே கேட்டிடும்போதங்கே
வென்னசொல்வீர்கள் வா யாலே
முந்தவேபிருசா மீவிமகள்போனை
மோசம்வருமே பின் னாலே
முவந்தர்களெல்லா மெனைப்பெற்றதாயென்று
மொழிந்தனேமுன் ஹதி தாலே (புரு)

௧௫. பெண்ணாய்ப்பிறந்தோர்க்குப் புத்திக்குறவென்றுப்
பேசினனே ஹதி தாலே
பூவைஹவ்வாசொல்லைக் கேட்டாதம்பட்டது
பேசமுடியாதென் னாலே
மண்ணாதிலுங்களின் வாயதைப்பேணினால்
வாழ்வீர்சுவனத் துள் ளாலே
மா[illegible]களெல்லா மெனைப்பெற்றதாயென்று
வாழ்த்தினேனென் கவி யாலே (புரு)

௧௬. பல்காமெனுபாவி ஈமானிழந்ததும்
பாவையர்சொல் லதி னாலே
மாணிலந்தன்னிற் சுலுத்தான்கள்கெட்டதும்
வாஸ்தமல்லோ பெண்ணணி னாலே
கலகம்வருமென்று வெண்ணாமற்கேழ்க்கிறீர்
காரிகைசொல்லைக் கா தாலே
கன்னியர்சொல்லதை நம்பவேண்டாமென்றுக்
கண்டில்லையோ ஹதி தாலே (புரு)

௧௭. கோவாயிருந்த மனுவோர்கள்கெட்டதுங்
கோதையர்சொல் லதி னாலே
கூச்சங்களன்றியே பேசிடுவாளென்றுக்
கூறினேனென் கவி யாலே.
சாகுவேனென்று மொழிந்திடுவார்நித்தம்
ஜாலங்கட்பேசித் தன் னாலே
தாயாம்ஹவ்வாசொல்லைக் கேட்டல்லோ ஆதமும்
தான்வந்தாரே புவி மேலே (புரு)

௧௮. என்றைக்கும்பெண்மொழி கேழ்க்கவேண்டாமென்
றியம்பினார்நம்பிற னாலே
எத்துந்திருட்டுமெதிகமிருக்குதா
யேந்திழைவாயினுள் ளாலே
கண்டதுபோலே நித்தமுஞ்சொல்லுவார்
காரிகைவாய்களி னாலே
கடினமதாகவே சத்தியஞ்செய்குவார்
கன்னிகளுங் கண் மேலே (புரு)

௫௯. பெண்டுகள்சாக்ஷியை நம்பவேண்டாமென்று
பேசினுரோ ஹுதி தாலே
பேச்சிலுறுதிக ளில்லையென்றுச்சொல்லிப்
பேசினேனென் கவி யாலே
குண்டணிக்கோள்களு மிச்சமிருக்குது
கோதையர்வாயி னுள் ளாலே
கோவெண்டமுதுக் குழந்தையைக்கிள்ளுவார்
குப்பறப்போட்டுக் கை யாலே (புரு)

௬0. சண்டைகள்வந்தால் முறுகத்தைப்போலவே
சத்தம்போடுவாள் வா யாலே
கொண்டையவிழ்த்துத் தலையைவிரித்து
கூத்தாடுவாள் முன் னாலே
குண்டதுபோலவே மார்பைத்திறந்துமே
குதித்திடுவாள் மண் மேலே
கோதையர்சொல்லதை நம்பவேண்டாமென்றுக்
கூறினேனே கவி யாலே (புரு)

௬௧. கள்ளவழுகைகள் மிச்சமிருக்குதுக்
காரிகைகண் ணுக்குள் ளாலே
கட்டுமுட்டாகவே பொய்சொல்லுவாளென்றுக்
காட்டினனே கவி யாலே
வள்ளல்முஹம்மதர் முன்னுலுறைத்தது
வாஸ்தமல்லோ வா யாலே
மாப்பிள்ளைமார்களைப் பங்கப்படுத்திட
வந்தார்சனி யனைப் போலே (புரு)

௬௨. வறுமையறியாமல் கொண்டவன்முன்னாலே
வம்புபேசுவாள் வா யாலே
வஞ்சியர்சொல்லதை நஞ்சென்றுவெண்ணுங்கள்
வாஸ்தமாயான் சொன்ன தாலே
உருமையாயெண்ணியே யுண்மைகள்வைத்திடில்
விழுவீர்கிடங்குக் குள் ளாலே
உங்கள்மனைவியை நம்பிடில்நாளைக்கி
வோடையிற்போவீர் பின் னாலே (புரு)

௬௩. சிங்கப்புலியலி மாதுலர்சொல்லிடும்
செய்தியைப்பார் மறை யாலே
தேவிஹவ்வாசொல்லைக் கேட்டல்லோ ஆதமும்
ஜன்னத்தைவிட்டார் முன் னாலே
மங்கையர்சொல்லதை நம்பாதபேரெல்லாம்
வாழ்வார்சுவனத் துள் ளாலே
வ..ஸ்தமாய்ப்பெண்சொல்லைக் கேட்டுநடந்தவர்
..வைவிலெரிவார் பின் னாலே (புரு

௬௪. உயிரதைவாங்க யெமன்வரவேணுமோ
..ங்களுக்கு ..ன் மேலே
ஒருபெண் ..ணிருந்திடில் போதுமென்றுச்சொல்லி
யோதினே னென்கவி யாலே
தைரியமெல்லாம் பறந்திடும்யான்சொன்னேன்
தையலர்கள் கைக்குள் ளாலே
தங்கள்மனைவியும் பிள்ளைகளும்போதும்
சத்தியாய்யான் சொன்ன தாலே (புரு

௬௫. தம்பிடிசேவென்றும் பிள்ளைக்கிச்சொல்லியே
சாற்றிடெண்பாள் வாயி னாலே
சற்றும்வறுமை யறியா திருந்திடும்
சண்டாளியுண்டு மண் மேலே
வம்படிபேசரா யென்றுநீசொல்லிடில்
வைதிடுவாள் வசை யாலே
மங்கையர்சொல்லதை நம்பினபேரெல்லா
மானங்குலைவார் மண் மேலே (பு

௬௬. பிள்ளைக்கிப்போத்தத் துணியில்லையென்றுமே
பேசுவாளுங்கள் முன் னாலே
பொருமிப்பொருமி யழுதிடுவாளென்றும்
பேசினேனென் கவி யாலே
கொள்ளையிட்டாவதுக் கொண்டுவாவென்றுமே
கூறுவாள்வாய் களி னாலே
கோதையர்சொல்லதை நம்பினால்பூவினில்
கூனிக்குள்ளாவீர் மண் மேலே (

௬௭. நேரொன்றுமே பேசுவாள்சித்தமும்
நேராகின்று மு[illegible] ஞாலே
நீலியவள்சொல்லை நம்[illegible]ஞல்மண்ணுக்குள்
நீங்களழிவீர் தன் ஞாலே
வாயில்வருகாத வார்த்தையெல்லாஞ்சொல்லி
வைதிடுவாள் வாயி ஞாலே
மங்கையர்சொல்லதை நம்பிஞல்நாளை
வருத்தமடைவீர் பின் ஞாலே (புரு)

௬௮. என்னேரமுந்தின்னத் தினிகளில்லையெ[illegible]
றியம்புவாள் வாய்களி [illegible]
இட்டநகைகளை விற்றுப்போடென[illegible]
மியம்பிடுவாள் முன் ஞாலே
[illegible]ன்னிடம்வந்து யெடுத்தபுரோசன
முண்டோவென்பாள் வாயி ஞாலே
ஒத்தைக்குரலீட்டு சித்தம்புலம்புவா
ளுந்தன்மனையிக்குள் ளாலே (புரு)

௬௯. பெண்களில்நீலி யதிகமிருக்கிறார்
பூவதிற்பாருங் கண் ணாலே
பெட்டைப்பலாய்சொல்லை நம்பினபேரெல்லாம்
போவார்ஜஹன்னத் துள் ளாலே
மண்ணதிலுங்களின் வாணுலவாட்டிட்
வந்தார்களல்லோ பின் ஞாலே
மங்கையர்பேச்சி லுறுதியில்லையென்று
வள்ளல்நபிசொன்ன தாலே (புரு)

௭௦. நகைத்துநகைத்துமே பேசிடுவாள்சொன்னேன்
நாரியர்வாய்களி ஞாலே
நாகத்திநஞ்சதை நம்பலாம்பெண்சொல்லை
நம்பக்கூடாது மண் மேலே
வகைவகையாகவே ஒப்புகள்சொல்லியே
வைதிடுவாள் வாயி ஞாலே
மாதாபிதாவையும் வீட்டில்வராமலே
வைதிடுவாள் சினத் தாலே (புரு)

௫௧. ஆசையினாலல்லோ ஆதங்கனியுண்
டவஸ்தைகள்பட்டார் முன் னாலே
அந்தஹறிதை யறியிலையோபூவி
லண்ணமாரே காதி னாலே
வேசைக்குணங்க ளதிகமிருக்குது
பீவிகள்சொல்லுக் குள் ளாலே
வெட்கங்கெடுத்து விடுவார்களென்றுயான்
மெய்சொன்னே னென்கவி யாலே (புரு)

௫௨. பிள்ளைக்குந்தாயார்க்குந் தேடிவைத்தபொருள்
[illegible]ம்போ[illegible]கையி னாலே
போட்டுக்கழுத்தவும் பொன்னகைச்செய்ததுப்
பூவறியாகோ முன் னாலே
வெள்ளைத்தலைப்பாகை சட்டையுமிட்டுமே
வீசுராய் வாய்களி னாலே
வெறுங்குண்டியம்மணம் போட்டுக்கோசம்மண
மென்றுசொல்வாள் வாயி னாலே (புரு)

௫௩. பிள்ளைத்தாச்சியென்று யென்னேரம்பேசிப்
புலம்பிடுவாள் வாயி னாலே
பிள்ளைகளுக்குக் கறிமீனும்வாங்கப்
பிளைப்பில்லையுன் கையி னாலே
கூளைகள்போலவே பேசிடுவாளென்றுச்
சொன்னனே யென்கவி யாலே
தோகையர்பேச்சதை நம்பிடில்நாளைக்கித்
துன்பந்துடரும் பின் னாலே (புரு)

௫௪. வெள்ளையாய்ச்சோறுக் கிடையாதுவுன்றனின்
வீட்டிக்குள்வந் தது னாலே
வெள்ளைச்சிகப்புள்ளக் குத்துனிலங்காநீ
வாங்கினதுண்டோ கை யாலே
சள்ளையிலுன்னுடன் நான்படும்பாட்டைச்
சாற்றமுடியா தென் னாலே
தையலர்சொல்லெல்லா மோசமென்றுச்சொல்லிச்
சாற்றினனே னென்கவி யாலே (புரு)

௫௫. அறுசினிலேறி நரகதைக்கண்டுடு
மண்ணால்சொன்னர்கள் மூன் ஞலே
அந்தஜஹன்னத்திற் பெண்கள்படும்பாடு
யார்சொல்லுவார் வாயி ஞலே
புருஷனையேசின நாவதில்தூண்டிகள்
போட்டிடக்கண்டேன் கண் ஞலே
பூவதிலென்சொல்லைக் கேட்டுஷறஹறதைப்
பேணியேகொள்ளு மண் மேலே (புரு)

௫௬. கள்ளப்புருஷனைத் தேடிஜினச்செய்கத்
கள்ளியைக்கண்டேன் கண் ஞலே
கனலிலெரிந்துக் கரிந்துமேகத்துசாள்
காரிகைவாய் களி ஞலே
பள்ளும்பறைகளுங் கூடுஞ்ஜஹன்னத்திற்
பார்த்தனேயென் திஷ்டி யாலே
பாவைஜினச்செய்தால் நாளைநரகத்தைப்
பார்த்திடுவீர்கள் கண் ஞலே (புரு)

௫௭. பிள்ளைஹறுத்திலேவாங்கியேகொண்டுப்
புருடனபேர் சொன்னதி ஞலே
பொக்கும்நெரிப்பிலே பிங்கட்டாய்க்கட்டியே
போடவுங் கண்டேன்கண் ஞலே
வள்ளல்நபியுமே கண்டுவந்தேனென்று
வாயால்மொழிந்ததி ஞலே
மங்கைமதத்தினுஞ் செய்திடும்பாவத்தை
வாழ்த்தினேன் வாயதி ஞலே (புரு)

௫௮. பிள்ளைத்தடக்கும் ஹலதைப்பேணுத
பெண்களைக்கண்டேன் கண் ஞலே
பூவில்முழுக்கதை விட்டதினுலல்லோ
போனுர்நரகத் துள் ளாலே
விள்ளத்துலையா வருத்தத்துடனவர்
வேகுராரென்று முன் ஞலே
மெய்யாமுஹம்மதர் சொன்னஹதீதை
விளம்பினேனென் கவி யாலே (புரு)

௫௯. பெண்கள் லாறு மிச்சமிருக்குதுப்
பேசத்துலேயாதென் ஞாலே
பொன்னகர்விட்டுமே மண்ணதில்வந்ததும்
பெண்சொல்லேக் கேட்டதி ஞாலே
மண்ணில்பதங்கோயா வள்ளல்மூஹம்மதர்
வாழ்த்தினரோ ஹதி தாலே
வம்பன்யான்சொன்ன நஸிஹத்தைப்பேணிடில்
வாழ்வீர்சுவனத் துள் ளாலே (புரு)

௬௦. கதாவானநோம்புக ளேழுநாள்விட்டுக்
கடனுயிருப்பதி ஞாலே
கத்தனுரைப்படி விட்டப்புலேக்
கணக்காய்பிடியும் பின் ஞாலே
பிதாவாதமக்களிற் பின்வந்திடுநபி
பேசினரோ ஹதி தாலே
பிருசாபீவி மகட்போலேயாகாமற்
பேணிக்கொள்ளுந் தறை மேலே (புரு)

௬௧. வல்லோன்வணகத்தைப் பின்செய்யலாமென்று
வள்ளல்நபிசொன்ன தாலே
மணவாளன் ஹக்கதை முன்னிருக்கும்படி
வந்ததல்லோ ஹதி தாலே
பொல்லாநரகிற் புகுந்திடுஞ்செய்கையைப்
பேணிக்கொள்ளு மன தாலே
பூவைச்சதமென்று வெண்ணிடிற்றுளக்கிப்
போவீர்ஜஹன்னத் துள் ளாலே (புரு)

௬௨. நற்குணத்தோடும் புருஷனைப்பேணி
நடந்துவந்தால்மண் ணின் மேதே
நாயன்றருமத்துப் பெற்றிடுவீரென்று
நபியுரைத்தார் ஹதீ தாதே
சொர்க்கத்திற்சேரும் வழியதைத்தேடுங்கள்
தோகையரோ மன தாலே
தூஷணமாகவே தோழனைத்திட்டினல்
சுட்டிடுவான் றண லாலே (புரு)

௬௭. ஆமினார்பெற்ற மகன்சொல்லைப்பேணினா
லாள்வீர்சுவனத் துள் — ளாலே
அன்னங்குடுத்திடும் பத்தாவைநீங்க
ளதட்டிடிற் வாய் களி — னாலே
பூமிதனிலே புருஷனைத்திட்டினால்
போவீர்ஜஹன்னத் துள் — ளாலே
பொய்யல்லவோயான்சொன்னேன் முன்னாள்முஹம்மதர்
பேசினாரே ஹதி — தாலே (புரு)

௬௮. என்னை தலாக்குச் சொல்லிவிடுவென்
றியம்பினால் வாய் களி — னாலே
எட்டுச்சுவனத்து வாடைமணங்களு
மேன்தான்கிடைக்கும் பின் — னாலே
அன்னை ஹவ்வாசொல்லைக் கேட்டல்லோ ஆசம்
அவஸ்தைப்பட்டார் மலே — மேலே
ஆண்பிள்ளையென்று வரியாமற்பேசினா
லழுவீர்ஜஹன்னத் துள் — ளாலே (புரு)

௬௯. மனைவிகட்சொல்லதை நம்பவேண்டாமென்று
வள்ளலவி சொன்ன — தாலே
மாபீதிலேறி மிகுறூஜில்சென்றிடும்
வள்ளல்நபி ஹதி — தாலே
மனம்நோகவுங்கள் புருஷனையேசினால்
வையிலிலெறிவீர் பின் — னாலே
மங்கைமாரெல்லா பெண்ணைபெற்றதாயென்று
வாழ்த்தினனே கவி — யாலே (புரு)

௬௬. ஈகையால்முகத்தி லடிக்கவேண்டாமென்று
கத்துவீர்தொண் டையி — னாலே
கள்ளப்புருஷனை நம்பினால்நோக்கி
காண்பீர்நரகைக் கண் — ணாலே
மெய்யாவொருமொழிச் சொல்லுவதுமில்லை
பீவிகள்வாய் களி — னாலே
வீறாவிப்புலிச் சொன்னஹதிதது
மெய்யில்லையோ முன் — னாலே (புரு)

௬௭. அன்பாய்புருஷரின் சொல்லதைத்தட்டி
யகம்விட்டுப்போவதி ஞாலே
அல்லாமுனிவு தலையிலிரங்குமென்
ருலநபி சொன்ன தாலே
இன்பமதாக புருஷர்சொற்போலே
விருந்துமடிந்தால் மண் மேலே
எங்கள்நபிமகள் ஷுபாயத்தும்பெற்று
யீடேறுவீர்கள் பின் ஞாலே (புரு)

௬௮. எங்கள்நபியும் விளக்குத்தியன்றி
யிருந்தார்களல்லோ முன் ஞாலே
ஏழைப்புருஷரைத் திட்டினல்ஞளை
யெறிவீர்நரகத் துள் ளாலே
பங்கம்வருமென்று வெண்ணுமற்பேசுநீர்
பத்தாவைவாய் களி ஞாலே
பாவைமாரெல்லா மெனைப்பெற்றதாயென்றுப்
பாடினனே கவி யாலே (புரு)

௬௯. பத்தாசொற்தட்டியே பேசினல்ஞளைக்கிப்
பார்ப்பீர்நரகங் கண் ணாலே
பங்கம்வருமென்று நாணிதையுங்கட்குப்
பாடினனே தமி ழாலே
செத்தாலுமண்ணி லறிவீர்கள்யான்சொன்னச்
செய்திகளைப் பின் ஞாலே
தேசத்திலுங்கட் புருஷரைப்பேணினல்
சேர்வீர்சுவனத் துள் ளாலே (புரு)

௭௰. கண்டமனிதரின் கையைப்பிடித்திடிற்
காண்பீர்நரகங் கண் ணாலே
கண்டிப்பாய்சொன்ன ஹதீதையறியீரோ
கன்னியரோ மன தாலே
வண்டத்தனமாக வாய்மிச்சம்பேசுநீர்
மன்னவனெதிரின் முன் ஞாலே
மாண்டுக்குழியினிற் போனலறிவீர்கள்
மங்கையரோ மன தாலே (புரு)

௭௧ பொல்லாநடக்கையை விட்டுவிலகிடிற்
போவீர் சுவனத்துள் ளாலே
பொய்யானமாய்கையிற் சிக்கினபேரெல்லாம்
புகுவீர்நரகத் துள் ளாலே
வல்லா னுனாப்படி மண்ணில்நடந்தோர்கள்
வாழ்வாராகுமத்தி னாலே
மங்கையரெல்லாமென் றங்கைதாயென்றே
வழுத்தினேன் வாக்கரு ளாலெ (புரு)

பெண்டுகளின் நன்மையின்மையைக்காட்டிய படல
முற்றிற்று.

ஆகப்படலம்-௰௩-க்கு கூடியபாடல்-௲௨௨௩.

நபுசுக்குபதேசித்த படலம்.

கீர்த்தனம்.

இராகம்-நாதநாமக்கிரியை

பல்லவி.

நபுசேநீ நல்வழியைத்தேடு நாளை
நமன்வந்துபிடித்திடி லுனக்கவகேடு

சரணங்கள்:

௧. கபுருக்குள்ளேமிகு கலக்கங்கள்நேர்ந்திடும்
காலமுழுதுந்தின்மை கணக்கினிலார்ந்திடும்
சபுரையிழந்தவர்க்குச் சதிகேடுவந்திடும்
சண்டாளர்க்கென் றூணுந் தாழ்நரகெய்திடும். (நபுசே)

௨. தொழுகைவிட்டிருந்திடிற் றும்பங்கள்துடர்ந்திடும்
தோசக்கிலேகிடந்து துயராகயெரிந்திடும்
அழுது அழுதுகண்ணீ ராறுகவோடிடும்
ஆதியுடையகேழ்வி யதிகமதாகிடும் (நபு)

௩. றமுலானேம்பினைவிட்டால் நாளைக்கித்தெரிந்திடும்
நாயன்சமுகம்சென்றால் நஷ்ட்டங்கள்நேரிடுந்
திறமைபேசினவுடல் கூிணத்திலேயழிந்திடுஞ்
சேர்த்துவைத்ததனங்கள் சிலவாகப்போய்விடும். (நபு)

௪. ஜக்காத்தியாதிருந்தால் தரைக்குள்ளேதெரிந்திடுந்
தம்பிரானிடஞ்சென்றால் ஜகனத்திற்விழுந்திடும்
வெழ்க்கமன்றித்திரிந்தால் விரகுபோல்வெந்திடும்
வேசையைநம்பினால் காசங்கள்பிடித்திடும். (நபு)

௫. தனம்வைத்துஹச்சதை தவிழ்ந்தால்தனுமையுண்டாந்
தாய்தந்தைமனம்நொந்தால் ஜகனத்திற்புகுந்திடும்
மனம்போல்நடந்துவந்தால் வன்னியிலெரிந்திடும்
வானாலழிந்துப்போனால் வகைமோசம்வந்திடும் (நபு)

௬. எட்டுமனிதர்சொற்றை யெடுத்தாலிடஞ்சல்வருங்
ஹிருசைமனதிற்வைத்தா லீமானிழந்துவிடுந்
துட்டுக்காசைவைத்தால் சொர்க்கந்தூறிடுந்
தனியானைநம்பினால் தும்பங்கள்தொடர்ந்திடும், (நபு)

௭. ஹையர்கொடாதகறங்கள் கனலதில்வெந்திடுங்
ஹறுமானசொத்தெல்லாங் கண்முன்னேபறந்திடும்
மயிர்பாலங்கடக்காமற் வன்னியிற்விழுந்திடும்
மாருசெய்திடிற் மடிக்கனமாகிடும் (நபு)

௮. தவுசிமேலிருந்தாலுந் தரைக்குள்ளேபுகுந்திடுஞ்
ஜாதிஜனங்களெல்லாந் தனைவிட்டுவிலகிடும்
பவுசுபணங்களெல்லாம் பார்விட்டுநடந்திடும்
பலனுள்நன்மைதின்மைப் படுக்கைக்குள்வந்திடும். (நபு)

௯. கச்சவடங்களெல்லாங் கைவிட்டுப்போய்விடுங்
கடசியொடுக்கத்திலே கவலைகள்வந்திடும்
மச்சுமாளிகையெல்லாம் மரந்துமேநடந்திடும்
வாசல்கடந்தநாளை மண்ணுக்குட்புகுந்திடும். (நபு)

௰. மாலுமனையுமக்கட் மண்மேலேயிருந்திடும்
வாசிக்கயாருந்தால் வருத்தங்கள்வந்திடுங்
காலன்பிடித்தவுடன் கபுருக்குட்புகுந்திடுங்.
காற்றோடிப்போய்விட்டால் காக்காய்கழுகின்றிடும். (நபு)

௰௧. வட்டிவாங்கினமுதல் மனையினிலிருந்திடும்
வடிவானபெண்டுக்கு மாதிகள்வந்திடும்
கட்டியேகபனிட்டுக் காட்டுக்குப்போய்விடுங்
கள்ளப்பெண்டுகளுக்குக் கவலைகள்வந்திடும் (நபு)

௰௨. வெட்டிப்புதைத்தமுதல் வீட்டுக்குள்ளிருந்திடும்
வெருங்கையாய்நீபோகும் வேளைகள்வந்திடும்
பட்டுப்பணிகளெல்லாம் பாரினிலிருந்திடும்
பாழுங்குழிக்குள்ளே படுத்திடவந்திடும் (நபு)

௰௩. சோத்தையதிகந்தின்றால் தூக்கங்கள்வந்திடுஞ்
சோம்பலாய்த்திரிந்திடின் மயரங்கள்வந்திடும்
காத்துபோய்விட்டிடில் கட்டைபோலாகிடுங்
காசுபணங்களெல்லாம் கைவிட்டுக்கடந்திடும். (நபு)

௰௪ ஜாடியுடைந்துபோனால் தரைக்குள்ளேபுகுந்திடுஞ்
சந்தோஷம்நாளைக்கித் தனுமையாய்வந்திடும்
பேடியாய்த்திரிந்திடில் பிழைவந்துதுடர்ந்திடும்
பெருத்தயெண்ணங்களெல்லாம் பிசகாகப்போய்விடும் (நபு)

௰௫. பறத்தையைநம்பினால் பாவங்கள்வந்திடும்
பணந்தேடுமுடல்தானே பலிஹுறத்திலாகிடும்
வெருத்துமவுந்துவந்தால் விரகுபோல்வெந்திடும்
வியாக்குலமென்னுளு மிகுதியாய்துடர்ந்திடும். (நபு)

௰௬. வாழுலழிந்துப்போனால் வகைமோசம்வந்திடும்
மாருசெய்தவுடல் மண்ணுக்குட்புகுந்திடும்
ஆணல்தடித்தவுடல் ஆணகவடிந்திடும்
ஒண்டியாய்கபூருக்கு ளொடுக்கும்படிவந்திடும் (நபு)

௰௭. ஆண்டுநூறிருந்தாலு மாவியழிந்துவிடும்
அம்மணமாகமண் ணறைக்குட்புகுந்திடும்
மாண்டுபோனாலுனக்கு வருத்தங்களாகிடும
மாலுமக்களையெல்லா மரந்திடவந்திடும். (நபு)

௰௮. நாளைமவுத்துவந்தால் நகைதனமரந்திடும்
நன்மைதின்மைகள்ரெண்டும் நம்முடன்வந்திடுங்
காளைபோல்திரிந்தாலுங் கபுருக்குட்புகுந்திடுங்
காவினைழுதும்பெண்ணுங் கைவிட்டுக்கடந்திடும் (நபு)

௧௯. பிரியமானதைவிட்டுப் பிறையாணம்வந்திடும்
பிச்சையிடாதமுதல் பெண்பிள்ளைக்காகிடும்
உரியாளுடனேமண்ணி னூட்டுக்குட்புகுந்திடும்
உறமுறைஜனமெல்லா மொனேவிட்டுவிலகிடும். (நபு)

௨௰. கழுவிகபனிட்டுக் கட்டும்படிவந்திடுங்
ஹராமானசியமெல்லாங் கபுருக்குள்தெரிந்திடும்
புழுபூச்சிவந்தொன்னைப் பிடுங்கியேதின்னிடும்
போனல்மலக்குடைய பூசைகள்விழுந்திடும்; (நபு)

௨௧. முன்கர்நக்கீர்வந்தால் மோசங்கள்வந்திடும்
மூடுக்கதிலகப்பட்ட நாய்போலமுழித்திடும்
பங்கிகுடித்ததெல்லாம் பங்கமாய்முடிந்திடும்
பாரதைச்சதமென்றால் பாவங்கள்தொடர்ந்திடும். (நபு)

௨௨. மருமொழிமலக்குக்குச் சொல்லும்முன்வந்திடும்
மலைபோலேநரகேழும் வந்தங்கேவளைந்திடுங்
கருகிவெந்திடும்படி கபுருக்குள்ளாகிடுங்
கண்ணுக்கெதிரேதேளும் பாம்புங்கடித்திடும். (நபு)

௨௩. உலகாண்டிருந்தாலு மொண்டியாய்போய்விடும்
உறமுறைஜனமெல்லா மொனேவிட்டுவிலகிடும்
பலகையுடைந்துதானல் பழுதாகப்போய்விடும்
பாரதைச்சதமென்றால் பாவத்திலாகிடும். (நபு)

௨௪. சக்ராத்துநாளைக்கி சூதணமதில்வந்திடுந்
தனியோன்மலக்குடைய தண்டடிவிழுந்திடும்
இக்ராமைமாறின லிறைகோபமாகிடும்
ஏழைகள்மனம்நொந்தா லிடர்வந்துதொடர்ந்திடும். (நபு)

௨௫. காலன்வந்துபிடித்தால் கபுருக்குட்புகுந்திடுங்
கஞ்சாவபின்றிறதுங் கைக்கிமெய்யாகிடும்
மாலுமக்களுமொன்னை வருந்தாமல்மறந்திடும்
வஞ்சியர்நேசமுழ மனம்விட்டுநீங்கிடும் (நபு)

௨௬. குழிவிட்டபின்பு குடல்கட்டிதூங்கிடுங்
கொடுமைசெய்ததெல்லாங் கூடவேவந்திடும்
பழிப்புபேசினதெல்லாம் படுக்கைகுள்தெரிந்திடும்
பறியேறுமுடல்னுளை பலிஹறத்திலாகிடும். (நபு)

உ௭ கட்டில்மெத்தைவிட்டுக் கபுருக்குள்புகுந்திடுங்
காடிகுதிரை தனங் கைவிட்டுப்போய்விடும்
மட்டிடவொண்ணாத வருத்தங்கள்வந்திடும்
வாசமணிந்தவுடற் வகைகெட்டுப்போய்விடும். (நபு)

உ௮ பெட்டிதனங்களெல்லாம் பூவின்மேலிருந்திடும்
பெண்சாதிபிள்ளையும் புலம்பியேயழுதிடுங்
கட்டையவிழ்த்துமண்ணிற் கடத்தும்படிவந்திடுங்
கால்க்காசுங்கையிலே காணாமற்போய்விடும். (நபு)

உ௯ சருபந்து அக்கிகள் சட்டையுமரந்திடுஞ்
சந்தூக்கிலேறியே தரைக்குள்ளேபுகுந்திடும்
பருவவயதுகளும் பாராமல்பறந்திடும
படுக்கையிற்போனபின் றிடுக்கங்களாகிடும். (நபு)

௩௰. ஏழையையடித்தகை பெரியதிற்புகுந்திடும்
இறைசொல்லைமரந்திடி லிடுக்கங்கள்வந்திடும்
மூளையுருகினுளே மோசங்கள்நேரிடும்
முனைபக்குதனஞ்செய்தால் மூதேவியாகிடும். (நபு)

நபுசுக்குபதேசித்த படலமுற்றிற்று

ஆகபடலம்-௰௬-க்கு-கூடியபாடல்-௲உ௫௫.

நம்மைத்தாழ்த்திப்பேசிய படலம்.

நபிசல்லல்லாகு அலைஹிவசல்லம்
அவர்கள்பேரில் முனாஜாத்து,
கீர்த்தனம்,

இராகம்-நாதநாமக்கிரியை.

பல்லவி.

உடைமகுஷரிற்முனையா ரிக்ஷிக்கவென்றுங்
ஹகத்தைநம்பினேன் யானையா

சரணங்கள்,

க. புடையிலிருந்தநாகத் துடன்பேசும்புனிதரோ
புகழ்இபிலீஸ்க்கிறைதருந் தசையைபெண்ணமைத்தோரோ
படையாம்பதுரைமண்ணுல் வெண்டபயஹூம்பரோ
பட்டமரந்தழைக்துப் பழமுதிரச்செய்தோரோ. (கடை)

உ. தடையாய்நிமாசைவிட்டு ஜகமதிலலைந்தவன்
சக்கோனுரைத்தசொல்லை ஹக்கென்றெண்ணுதவன்
மடையருடனேகூடி கடைகெட்டுத்திரிந்தவன்
மாலுமக்களென்றெண்ணி மவுத்ததை மறந்தவன். (கடை)

ந. பெண்டுபிள்ளைபெரிதாய் பிணத்தியேதிரிந்தவன்
பெரியவீடுகள்கட்டிப் பெருமையாய்நடந்தவன்
குண்டுணிகோளுரைத்துக் குடிகளைக்கெடுத்தவன்
கோபமனதில்வைத்துக் கொடுமைமிகச்செய்தவன். (கடை)

ச. வட்டிமுதலெடுத்து வயறதை வளர்த்தவன்
வம்பாய்தாய்தந்தையை மனநோகச்செய்தவன்
பட்டிபோலுலகெங்கும் பறந்தோடித்திரிந்தவன்
பாவிகளுடன்கூடிப் பனங்கள்ளைக்குடித்தவன். (கடை)

ரு. பொய்புரட்டுகள்செய்து பொருள்தேடிபுதைத்தவன்
பூவைச்சதமென்றெண்ணிப் பிரியம்வைத்திருந்தவன்
கையால்கையிர்கள்செய்யக் கடும்பகிலானவன்
கள்ளவுடமைவந்தால் கரீதுகள்செய்தவன். (கடை)

சா. எத்திமுடையசொத்தை யெடுத்தெதிர்சொன்னவன்
இரப்போரெதிரில்வந்தா லிடும்புகளுரைத்தவன்
சத்தியம்நிதஞ்செய்து தரணியிற்றிரிந்தவன்
சாவைமறந்துபூவிற் சாடிகளுரைத்தவன் (கடை)

எ. கொட்டுமுழக்கங்களுங் கூத்துப்பார்த்தலைந்தவன்
கொண்டபெண்ணிருக்க கொடியசனுச்செய்தவன்
பட்டுப்பணியணிந்துப் பாரதில்நடந்தவன்
பஞ்சபாதகங்களை பயமறச்செய்தவன். (கடை)

அ. மறையின்மொழிமறந்து மனம்போலேநடந்தவன்
மவுத்துவருஞ்செய்[illegible] மனதிலெண்ணுதவன்
கறையேருங்கலிமாவை கல்பிலெண்ணுதவன்
கழுதைகட்போலவே கஞ்சாவபின்தின்றவன். (கடை)

௯. குத்தியைநிஜமென்றுக் குரும்புகட்செய்தவன்
கூத்தியாள்வீட்டுக்கு கூசாமல்நடந்தவன்
புத்தியில்லாமலே பொருள்சேர்த்துப்புதைத்தவன்
பூவைச்சதமென்றெண்ணிப் பிழைமிகச்செய்தவன். (கடை)

௰ கூலிக்காருக்கெல்லாங் கொடுமைகட்செய்தவன்
குறையும்படிதிராசு கடையிற்வைத்திருந்தவன்
ஆலிம்கள்வந்தா லடித்துத்துரத்தினவன்
அடுத்தவீட்டாருக்கு அனியாயஞ்செய்தவன். (கடை)

௰௧. ஓடிவோடிவிருந்து வுண்டுத்திரிந்தவன்
உடற்பிறந்தார்க்கெல்லா மொன்றுங்குடாதவன்
தாடினைத்துங் கெட்ட ஜனுவதுச்செய்தவன்
சண்டைமூட்டிவிடச் சமர்த்தாகத்திரிந்தவன் (கடை)

௰௨. காசும்பிலனிருந்துங் ஹுச்சுசெய்யாதவன்
காபர்களைநம்பிக்கணக்கதைக் குடுத்தவன்
கூசாமலேஹராங் குடிப்பைக்குடித்தவன்
குறிகட்சாஸ்த்திரம்பார்த்துக் குவலதிற்நடந்தவன். (கடை)

௰௩. இமாம்களில்லையென்று யிடும்புகளுரைத்தவன்
வகனொருதலத்திற் யிருக்குரானென்றவன்
அமானம்வைத்தசொற்றை யழிவுகட்செய்தவன்
அவனியில்தீனோர்க்கு ஆகாமற்நடந்தவன். (கடை)

௰௪. மனைவிமக்களென்று மகிழ்வாகயிருந்தவன்
மாருபாடாகவே வழக்கோரஞ்சொன்னவன்
கனவிலுமிறைசொல்லை கருத்திலெண்ணாதவன்
கண்டவிடங்களெல்லாம் பெண்டுக்காய்திரிந்தவன் (கடை)

௰௫. பிரவுனைப்போல்மாடிப் பெரிதாகயெடுத்தவன்
பிச்சைக்காரர்தன்னைப் பிரம்பெடுத்தடித்தவன்
திரம்பேசியுலகினிற் செருப்படிதின்றவன்
சின்னசாதிபெண்களை சினேகிதஞ்செதவன். (கடை)

௰௬. நமுறூதைப்போலவே ஞ[illegible]லாங்களி[illegible]தவன்
நாய்போலோடியோடி நாடெ[illegible]கு[illegible]திரிந்தவன்
குமரிப்பெண்களைக்கண்டுக் கொ[illegible]ழிகியேயலைந்தன்
கூகையைப்போலவே குலைத்[illegible]திரிந்தவன். (கடை)

௰௭. நார்ப்பதுக்கொன்றுறம் லாணிற்கொடாதவன்
நாரியர்சொல்நம்பி நாளெல்லாம்நடந்தவன்
மூப்பானபெண்களை முடுகிசனுச்செய்தவன்
மூதேவியென்றும்பேர் முழுதுமேயெடுத்தவன். (கடை)

௰௮. வாதஞ்செய்வோமென்று மனிதனைக்கெடுத்தவன்
வழியிற்பெண்களைக்கண்டால் மடிபிடித்திழுத்தவன்
மாதறமுலான்பகல் மாடுபோல்தின்னவன்
வரிசையானஷரகை மாறியேநடந்தவன். (கடை)

௰௯. முதல்கொடுத்தோர்களை மோசங்கட்செய்தவன்
மூமினாபிறந்துமே முறைகெட்டுநடந்தவன்
சிதல்தின்னுந்திரேகத்தை தேக்கியேயலைந்தவன்
சின்னப்பயல்களோடு சினேகிதஞ்செய்தவன். (கடை)

௨௰. தனத்தின்பெருமைவைத்து தரணியில்நடந்தவன்
சக்காத்துமுதல்களை தானேதான்தின்றவன்
அனைத்தும்படைத்தோன்சொல்லை யணுவுமெடாதவன்
அடித்துபிடித்துமிச்சம் ஆஸ்திகட்சேர்த்தவன். (கடை)

௨௧. பாங்குசப்தங்கேட்டு வணக்கத்தைமறந்தவன்
வருத்தகம்பெரிதென்று வலுப்பேசித்திரிந்தவன்
வாங்கியகடன்களை மாறிக்கொடாதவன்
வஞ்சனைசூனிய மனிதர்க்குச்செய்தவன். (கடை,

௨௨. பள்ளிதனிலேயெட்டிப் பாராமலிருந்தவன்
பரியாசமாய்தீனைப் பலவிதமொழிந்தவன்
கொள்ளிப்பிசாசைப்போல் குவலதிலலைந்தவன்
கொண்டபெண்டாமனங் கொதித்திடச்செய்தவன். (கடை)

௨௩. தொழுதுவருகுவோரைத் தூஷணித்துரைத்தவன்
துஷ்டருடனேகூடித் துடர்ந்துமேதிரிந்தவன்
பொழுதுவிடியுமட்டும் பிணம்போலுறங்கினவன்
பூவைமார்களைக்கண்டால் பிரியமாயுரைத்தவன். (கடை)

௨௪. பள்ளிக்குட்[illegible]ஒருதரும்பாராதவன்
பஜிருக்தொழுகைவி[illegible]படுத்துத்தூங்கினவன்
வெள்ளிக்கிழமைதனில் வீட்டுக்குள்ளிருந்தவன்
விருந்தாளியைக்கண்டு [illegible]டடைத்திருந்தவன். (கடை)

௨௫. தையூசைப்போலவே ஜாதிகெட்டலைந்தவன்
தமையன்பெண்டிருடன் ஜனுவதுச்செய்தவன்
கையால்கையிற்கொடுக்க கடும்பகிலுடையவன்
கஞ்சினியாளுடன் கருமதுச்செய்தவன். (கடை)

௨௬. சூளைவீடுகள்தேடிச் சுத்தியேயலைந்தவன்
ஜும்மாத்தொழுகைவிட்டுத் தோசிபோல்திரிந்தவன்
ஏழையெளியோர்களை யேசியேயடித்தவன்
ஹிருசைமனதிலெண்ணி யிடர்களைச்செய்தவன். (கடை)

௨௭, கள்ளக்கோழிகிடாவைக் கனமாகத்தின்றவன்
கலிமாபடித் ...பூவிற் கழுதைபோலலைந்தவன்
கொள்ளையெடுக்கசத்துங் கூசாமல்நடந்தவன்
கொண்டமனைவிதன்னை ஹேறாஷாவையாதவன். (கடை)

௨௮ ருஜாங்கம்செய்தாலும் நரகதில்விழுந்திடும்
நாய்போல்தின்றவுடல் நமன்கைக்குள்ளாகிடும்
காசம்பலனேய்வந்துக் கடுமையாய்ப்பிடித்திடும்
கட்டையுயிர்நீங்கினல் கடகெட்டுப்போயிடும் (கடை)

தம்மைத்தாழ்த்திப்பேசியபடல-முற்றிற்று.

—0✻0—

ஆகப்படலம்-௰௪-க்கு-கூடியபாடல்-௩௨௬.

ஹிதுர் அவுலகிஸ்ஸலாயவர்களின்

புகழ்ச்சியின் கண்ணிகள்.

ஏ...ன்மனதி லெண்ணந்தள்ளாடி ஹிதுர்
...ந்தல்வருவாரிந்தத் தினமடி
...ன்தானுடலினுள்ள சறமந் சாத்திக்
...காளிட்டுக் கதவெல்லாம்பூட்டி க

ஆனவாரியிலவ ரரசடி ஆலம்
மழியுமளவு மிருப்பவரடி
வானம்புவியுமத்திப் பிடியடி யெங்கள்
வள்ளல்கிதுரு வருவாரடி. ௨

மூலப்புளியினுள்ளே முடுக்கடி யெங்கள்
மூத்தாளிருக்கிர யிடமடி
நாலாறிலொன்றதை நாடடி ஹிதுர்
நபிவருவா ரிந்தத்தினமடி. ௩

வாசியைவலமாக்க வருமடி. நம்ம
வாயினுள்ளிருக்குது வழியடி
தேசிக்குதிரையேறி செல்லடி ஹிதுர்
தேடிவருவாரே தினமடி ௪

புருவனடுவினுள்ளப் பொருளடி யெட்டிப்
பிறையும்பொழுதையு பிடியடி
தெருவெங்குஞ்சுற்றியே தேடடி ஹிதுர்
க்ஷணம்வருவாரிந்தத் தினமடி. ௫

குச்சிக்குட்சென்றுனீ கும்மடி யவர்
குவலெங்குந் திரிகின்ற குருவடி
பச்சைமரகதப் பதமடி ஹிதுர்
பார்க்கவருவாரிந்தத் தினமடி. ௬

சோத்தைநாளுக்கு நாளாய்சுருக்கடி மிகு
தூக்கம்வாராதந்த துறையடி
காத்தைப்பிடித்தாலல்லோ கருவடி ஹிதுர்
காணவருவாரிந்தத் தினமடி ௭

அப்பாசுதவத்துரு மரசடி யவர்
ஆலமுழுது மலைகுராரடி
ஐப்பானைநீதேடச் சறமடி ஹிது[illegible]
க்ஷணம்வருவாரிந்தத் தினமடி. [illegible]

அஞ்சிலொன்றல்லவோ அதுவடி சிரு
அறைவீட்டிலிருக்குது அறியடி
நெஞ்சிலுறுதிவைத்தால் நிஜமடி ஹிது[illegible]
நேரேவருவாரிந்தத் தினமடி. ௯

மவுத்தைக்கடைசிகாணு மனுவடி கண்ணீர்
மாவுல்ஹயாத்தையுண்ட மணியடி.
பவுத்தறிவுண்டானல் பாரடி ஹிழுர்
பாரில்வருவாரிந்தத் தினமடி. ௰
சபர்செய்தார்நபிமூசா வுடனடி கண்ணீ
தாழுங்கப்பலைகார்த்த குருவடி
ஹபூறஹ மைமத்தேடக் காத்தடி. ஹிழுர்
காணவருவாரிந்தக் தினமடி.. ௰௧
பெண்ணைதலாக்குசொன்னப் பொருளடி குலைப்
பூவிற்பிள்ளையைசெய்தப் பூபடி
என்னெனக் றைமுன்னானைத் தேடடி ஹிழுர்
எதிரிற்வருவாரிந்தத் தினமடி. ௰௨
மஜீதெக்கும வருகின்ற மன்னடி கிழு
வானோன்வரம்பெற்ற மலரடி.
பசிதாகமொன்றிலா பயனடி கிழு
பார்க்கவருவா ரிந்தத்தினமடி. ௰௩
தாவூதுக்குமுந்தும் குருவடி நட
ஜாதிமீசாக்குடைய ஜனமடி
பாவினையாயுத்துப் பாரடி கிழு
பழகிவருவாரிந்தத் தினமடி. ௰௪
தீவதிற்சென்றிடுந் தெளிவடி யிந்
ஜெகமெங்குந் திரிகுவார் தினமடி
ஹாவதை கூட்டுக்குள் கூவடி கிழு
கொழுகிவருவாரிந்தத் தினமடி. ௰௫
அவளைக்கண்டாலொலி யாமடி கிழு
யாக்கும்பொதுவா யுள்ளோ ரவரடி
சுவளமண்ணூல்வைத்த துணையடி கிழு
சுருக்காய்வருவாரிந்தத் தினமடி ௰௬
நபிகளிப்பின்ஹயாத்துள்ள நபியடி கிழு
நாலுகடலி லுற்ற அரசடி
ஷாபிபாகமுன்வந்தக் கருவடி ஹாதி
முகிய்யத்தீன்கல்பதின் கனியடி. ௰௭
ஹிழுர் அலைகிஸ்ஸலாமவர்களின் புகழ்ச்சியின் கண்ணிகள்முற்றிற்று
ஆகபடலம்-௰௫-க்கு-கூடியபாடல்..௲௨௱௭.

முகியித்தீனாண்டவர்கள்பேரில்

முனாஜாத்து.

சேயதாய்வயற்றி லிருந்திடும்பொழுது தேவனைதவனைத்ததீனவனை, வாயதால்மொழிந்த ஷேய்குசங்காவின் வருத்தங்கள்தீர்த்தமாதவனை, ஓய்விலாவருசிற் மணிவிளக்காகி யுலகதில்வந்தவுத்தமனை, காயில்லாக்கனியாய்வருமப்துல்காதிற் கபுசினையென்றுகண்டிடுவேன்.

ஜின்னதுயெடுத்துப்போயிருமயிலை திரும்பவுமழைத்ததீனவனை விண்ணதிலெவ்வகை வரைந்திடுங்கலமாய் விதித்துமுன்னிருந்தவேதியனை, எண்ணவுந்துலைபா வருஷமுன்னுதித்து யிருந்துபின்னுலகில் வந்தவனை, கண்ணினின்மணியாய் வருமப்துல்காதிற்கதந்தையாமென்றுகண்டிடுவேன். ௨

சித்தர்கட்கூடி யருந்துமேசமைத்து தின்றிடுஞ்சேயழைத்தவனை நெய்க்கவொரும் வந்தடிபணிய கௌதெனவந்த மெய்க்குருவை, பத்ததுவான காதிரியாவின் பலம்பெரச்செய்தபாக்கியனை, கத்தவனருளால் வருமப்துல்காதிர் கழலடியென்றுகண்டிடுவேன். ௩

கடலதிலமிழ்ந்தக்கப்பலையழைத்துக் கரையதிற்சேர்த்த காரணனை, உடலதினடுவின்மணிவிளக்காகி யுலகெங்கும்நிறைந்த வுத்தமனை திடற்வெளியெங்கும் நிறைந்திடுமிறையோன் திருநாமங்கொடுத்ததீனவனை, அடலறியெனவே வருமப்துல்காதிரடியினையென்று கண்டிடுவேன். ௪

தரளமதாகியிருந்திடுமிறசூல் தன்வழியுதித்தசற்குணனை, பிரளயமனுப்பி வைத்திடுமிறையோன் பிரியமாய்வளர்த்தயென்பினை, மருளதுபிடித்து புலம்பியபயல்தன் வருத்தங்கடீர்க்குமாதவனை, அருள்தரவெற்றிற்வருமப்துல்காதி ரடியினையென்றுகண்டிடுவேன். ௫

மாவதாயிடிந்துபோயிடுந்தாள மாலையைவாங்குமாதவனை, கோவதுவானோன் கொடுவருந்தனைத்தை குளிர்ந்திடச்சோரிசெய்தவனை, தேவதைப்பிடித்துகசுசதிலடைத்துத்தீவினிற்சென்றதீனவனை, நாவலபோலேவருமப்துல்காதிர் கழலடியென்றுகண்டிடுவேன் ௬

திருமயிலானபாத்திமா தவத்தால் செய்லானியிற்பிரந்த தீன்வனை
உருவுடலில்லானிட மதிற்கிந்தீலொளிவெனவிருந்தவுத்தமனை, பரு
வொன்றுமில்லாமதியதுபோலே பகுதையிற்வந்தவாசகனை, கருவதி
லுருவாய்வருமப்துல்காதிர் கழலடியென்று கண்டிடுவேன், எ

விண்ணதிற்பரக்குஞ்சேனத்தை வதைத்துவிழுந்திடவெழுப்பி
விட்டவனை, பண்ணத்தைனேக்கு மொலிகளுக்கரசாய் பாரதிற்வந்த
பாக்கியனை, வண்ணமாமயிலாஜெயினபுதமையுமாமணம்புரிந்தவாசக
னை,கண்ணெதிராகவருமப்துல்காதிர்கழலடியென்றுகண்டிடுவேன். அ

குணங்குடியதிலேயிருந்திடுமரசை குறைகளையகற்றுங்கொற்றவ
னை, மணமதுகமழுமுகம்மதர்தீனை வலுவதாய்செய்தவாசணனை. இ
னஞ்சனமில்லானேவலின்படியே யெழுந்துமேதீவிற்சென்றவனை,கூ
ணமதிலெதிராயவருமப்துல்காதிர் தாளினையென்றுகண்டிடுவேன். ௯

மாட்டதைப்பிடித்துவோட்டிடத்திரும்பி வாய்மொழிகேட்டவாச
ணனை, பாட்டயினடந்துவந்திடும்பொழுது பதவிகட்கண்டமாமணி
யை, சேட்டைகளகலகுணங்குடியதிலே சேர்ந்திடவந்திடுந்திருவை,
காட்டிடவெதிரின் வ்ருமப்துல்காதிர் கதத்தை யானென்று கண்டிடு ௰
வேன்-

செல்லமேல்குடையாயிடும்நபியிறசூல் திருமகள்குலத்துதித்தவ
னை, எல்லையினொளிபோலுடலதிற்நடுவி னிருளதைநீக்குமேந்தலனை
தொல்லையைபயகத்தி கதிபெறவெனக்குச் சுகுர்தங்கட்செய்யுஞ் சுந்தர
னை, அல்லலையகற்றவருமப்துல்காதி ரடியினையென்றுகன்டிடுவேன்.

அக்ஷறத்தடங்கா னருசினிற்றுயின்றுவவனியிற்வந்த ஆண்டகை
யை, குச்சதுவழிந்துபோயிடுமுன்னே குணங்குடிசேர்க்குமெய்க்குரு
வை, மச்சதுமேலேயேறிடவெனக்கு வழியதைகொடுத்தவாசணனை,
பக்ஷம்வைத்தெதிரில்வருமப்துல்காதிற் பதத்தையானென்றுகண்டிடு ௰௨
வேன்.

மூன்றினிலொன்றுயிலங்கிடுமுதலே முழிநடுவிருக்குமுச்சுடரை
வேண்டும்நற்பதவி பெற்றிடுமரசை பீமதிலுதித்தமெய்ப் பொருளை,
தோன்றிடுஞ்சுழியின் முனையதிலிருந்து சுகிர்தங்கட்செய்யுஞ் சுந்திர
னை, ஆண்டிடவெதிரிற் வருமப்துல்காதிற் கழலடியென்று கண்டிடு ௰௩
வேன்

பண்டுமுன்மறைகளனைத்தையுந்தெரிந்து பாரதிலுரைத்தபாக்கியனை, என்றென்றுமழியானிடத்தினிற்வரங்களேகமாய்பெற்றயேந்தலனை. தொண்டனுக்கிரங்கி மவுத்திற்வந்தெனது துன்பங்கடகற்றுஞ்சுந்தரனை, கண்டியோன்பணியவருமப்துல்காதிர் கழலடியென்றுகண்டிடுவேன். ௰௪

சிந்தையினைடுவி னிலங்கிடுமணியை தீவதிற்றீனழைத்தவனை, சொந்தமாய்சிராத்துல் முஸ்த்தகீம்பாலத்தரப்பைவைத்திருக்குஞ்சுந்தரனை, கம்ந்தெனுமியாவுலகொடிநிழல்சேர்க்க கருணைகட்செய்யுங்காறணனை, சந்திரனொளிபோல்வருமப்துல்காதிர் தாளினையென்றுகண்டிடுவேன். ௰௫

அலிபுக்குள்ளலிபாய்நின்றிடுமரசை யபுசாலிகுவின்றவண்ணலனை. ஒலிகளுக்கதிகமாகிடு மணியை யும்பர்கட்புகழுமுக்தமனை, வலியவனிடத்திற்வரிசைகட்பெற்று பகுதையிற்வந்தவாசனனை, கவலைதையகற்ற வருமப்துல்காதிர் கதத்தையானென்று கண்டிடுவேன் ௰௬

இருபத்துஐந்துயெழுத்தினிலொன்றுயிருந்துபின்னுலகில்வந்தவனை, அருபத்துமூன்றுவயதுள்ளோர்குலத்தி றருமையாய்வந்த ஆண்டகையை சுருபத்திடுவின்றேடிடும்பேர்க்கு சுகுர்தங்கள்குடுக்குஞ்சுந்தரனை, கருமத்தையகற்றவருமப்துல்காதிர் கபுசதையென்றுகண்டிடுவேன். ௰௭

எண்பத்திமூன்று யிலக்கத்திற்கூடி யிருந்திடுமெங்கள்நாயகனை அன்புடைத்தொன்றைப் பிடித்திடும்பேர்க்கு வருள்கொடுத்தாளுமாண்டகையை, துன்பத்தாலிடைந்துவாடியபயல்தன் றுயரொல்லாமகற்றுஞ்சுந்தரனை, கம்பத்தின்முனையினெதிர்வருமபதுல் காதிரையென்றுகண்டிடுவேன். ௰௮

வித்கதிற்வித்தாய்வந்திடுமொலியை விண்ணவர்புகழும்வேதியனை, பத்தனைதெளிந்து பார்த்திடுவோர்க்கு பலன்மிகக்கொடுக்கும்பாக்கியனை, குத்துதுசருதங் ஹாருபதிற்குடியாய் குவலயத்துதித்தமெய்குருவை, கத்தவனருளால்வருமப்துல்காதிர் கதத்தையானென்றுகண்டிடுவேன் ௰௯

பத்தொருனுக்குவழியெலாந்தெளிவாய் பாரதிலுரைத்தபாக்கியனை, மூத்ததாயிருந்த மீமதிற்பிரிந்து மூடிவிலானிடமிருந்தவனை, நற்றவத்துடையகுணகுடியவர்க்கு நல்வழிகாட்டும்நாயகனை, கத்தவனப்பவருமப்துல்காதிர் கபுசையானென்றுகண்டிடுவேன் உ௰

கோலமில்லாதான் வழிபதைத்தேடக் குறிப்பதுசொல்லுங் கொற்றவரை, ஆலமினருவாஞ் ஞானதினுதித்து அறமெலாந்தெளிந்தஆண்டகையை, வாஸதுநீண்டவளைவட்டமான மாவதிலிலங்கு மன்னவனை, காலதுதந்துலெக்ஷிக்குமப்துல் காதிரையென்று கண்டிடுவேன். ௨௧

சத்தியும்பிலனுங்குறைந்து யான்கிடக்குந்தருணத்திலுதவுஞ்சற்குணனை, மத்தியிற்றூண்டா மணிவிளக்கதுபோல் வந்தங்கேயிருக்குமாதவனை, புத்தியால்பார்த்து தெளிந்திடும்வோர்க்கு புரோஜனங்கொடுக்கும்புண்ணியனை, கத்துமென்றுயரம் நீக்கிடுமப்துல் காதிரையென்றுகண்டிடுவேன். ௨௨

கொடியவனுனயிபுலிசையகற்றி குணங்குடிசேர்க்குங் கொற்றவனை, தடியழிந்திடுமுன்றன்னைத்தானரிய சகாயங்கட்செய்யுஞ் சற்குணனை, படியதிலொலிமார் யாவர்க்குமுதலாய் பரிசுற்றமானபாக்கியனை, கடிகமழ்ந்திடவே வருமப்துல்காதிர் கபுசையாளென்றுகண்டிடுவேன் ௨௩

இருட்டறையான கபுறில்வந்தெனது யிடஞ்சலைதீர்க்கு மேந்தலனை, உருட்டியேமலக்குகேட்டிடுமொழிக்கு வுடன்சொலவுதவிசெய்பவனை சுருட்டியகபனைடெழும்பவும்ஞானி துணையதுசெய்யுஞ் சுந்தரனை, மருட்டிடும்பொழுதுவருமப்துல்காதிர் மலரடியென்றுகண்டிடுவேன். ௨௪

பணியாதக்கிளையிற்வந்திடுமொலியை முகம்மதர்மகவழிமகனை, தொனிமொழிசெவியிற்கேட்டியான்மகிழ சொல்லதைவுரைத்தசுந்தரனை, தனியதாய்கபூரிற்கிடந்துயான்மயங்குந் தருணத்திலுதவுஞ் சற்குணனை, கனியினின்கனிந்துவருமப்துல்காதிர் கபுசடியென்றுகண்டிடுவேன். ௨௫

சபுறதுசெய்யும்வழியதிற்றிருடர் தான்வரவுண்மைசொன்னவனை, குபிரினிற்கொடிய பதவிகடிடத்திற் குழந்தையிற்சென்ற மெய்க்குருவை, தபறதுபேசிமிகுரதிலிருந்த சங்காபிழைதீர்த்தசற்குணனை கபுரதிற்புகுமுன்வருமப்துல்காதிர் கத்தையாளென்றுகண்டிடுவேன்

அடிமுடிநடுவின்மலரதின்மேலே அழகொடுமிருக்குமாண்டகையை, பிடிமண்ணல்பதுறை வென்றிடுமிறசூல் பேரரின்குலத்துதித்தவனை, வடிவினிலடக்கானிடமதிற்வெகுனள் வாசகங்கட்செய்தமாதவனை, கடிமணம்வீச வெதிர்வருமப்துல் காதிரையென்றுகண்டிடுவேன்

மானெடுகலையுமெழுந்திடுமனையிற்மரவதாயிருக்குமாதவனை,வான்மலைக்கடலும்வெளியெங்குந்நிறைந்தோன்வரமதுபெற்றவாசனைகொனெனவுலகிற்வந்திடுமொலியை கும்மதிற்குடியிருப்பவனை; தானவனருளாற்வருமப்துல்காதிர் தாளிணையென்று கண்டிடுவேன். ௨௮

பேரதைச்சுமந்து புலம்பிடும்பயல்கள் பிழையெலாமகத்தும்புண்ணியனை,பாறதிலடியேன்செய்பவம்பொறுத்து பறமதிற்சேர்க்கும்பாக்கியனை, மாறனைச்செய்தக்கொடியவன்மவுத்திற்வந்தெனைகார்க்கும்வாசனனை, காறணக்குருவாய்வருமப்துல்காதிர் கழலடியென்றுகண்டிடுவேன். ௨௯

தூதரின்முதலாய்வரும்நபிகதத்தை தோளதிற் தாங்குஞ்சுந்தரனை, மாதரின்பாலைவெருத்துமெநோம்பைவைத்திடக்காட்டும்வாசணனை-காதர்முகிய்யதீன் கடும்பிழையனைத்துங் களையாத்தீர்க்குங்கண்மணியை, ஆதரித்திடவேவருமப்துல்காதிரடிமலரென்றுகண்டிடுவேன்

முகியித்தீனாண்டவர்கள்பேரில் முனாஜாத்து

முற்றிற்று.

ஆகப்படலம்-௰௯-க்கு கூடியபாடல்-௲௨௯௭

முகியித்தீனாண்டவர்கள்பேரில்முனாஜாத்து

இன்னிசை,

பட்டபட்ட பாட்டையெல்லாம் பாழாக்கியென்னுடைய
கட்டையழிவதற்கோ கையைவிட்டீரிவ்வேளை
எட்டாக்கனிபதற்கு யிச்சைவைத்தமானிடர்போல்
கொட்டாவிகொள்வதற்கோ விட்டீர்முகையித்தீனே. ௧

என்றலையிலிட்ட விதியென்னமோ யானறியேன்
சொன்னதெல்லாமுங்கள் திருச்செவியிற்கேழ்க்கிலையோ
அண்ணலாய்வந்த யருளேமனமிரங்கி
மன்னன்பதம்சேர்ந்திடவே வாருமுகையித்தீனே. ௨

கூத்தன்வருமுன்னே கூட்டுக்குள்ளேநின்னடியை
பார்த்துமகிழ்ந்திடவே பாரினில்வந்தானையா
தோத்திரங்கள்செய்யுந் துஷ்டன்றுயரதனை
யாற்றிவிடவேவருவீ ரண்ணல்முகையித்தீனே. ௩

உன்னையன்றிவேறே யொருவருகதியில்லை
என்னையிக்கோலஞ்செய்து மிரங்காததெவ்விதமே
அன்னைதந்தைசெய்த வரும்பிழைகட்காகவென்னை
மண்ணறையிற்போகுமுன்னே வருவீர்முகியித்தீனே. ௪

இந்தவிதஞ்செய்துமிரங்காதிருந்தாக்கால்
சொந்தப்பயலென்றுயனைச்சொல்வேனினியாரிடமே
கந்தமதுவீசுங் ஹபீபிறசூல்போரசே
பந்தமதுதீரமுக்கம் பாருமுகையித்தீனே. ௫

கோடானகோடிக் குலைபாவஞ்செய்தபயல்
தேடாமல்தேடித் திகைக்குஞ்சிறியவனை
வாடாமலென்னிதைய மலராசனந்தனிலே
பாடாமற்பாடிடவும் பாருமுகையித்தீனே. ௬

கொடியவன்யான்செய்த குரும்பெல்லாம்விட்டொழிய
அடியிணையைக்கெஞ்சி யழுதுமிகவாடுகிறேன்
படிமீதில்யாரிடத்திற் பகர்வேனெனதுபிழை
சடுதியில்வந்தென்கவலை தவிர்ப்பீர்முகையித்தீனே. ௭

முடிமீதில்நின்பதத்தை முழுதுஞ்சுமந்தவனை
குடிகேடனாகாமற் குணமிரங்கியிவ்வேளை
தடியழியுமுன்னே தமியேன்பிழைபொறுத்து
அடியிணையிற்சேர்த்திடுவீ ரண்ணல்முகையித்தீனே. ௮

வஞ்சகமும்பொய்யு மடிவுமறவாமல்
நெஞ்சமதிலேகுடியாய் நினைத்திருந்தபாதகன்யான்
தஞ்சமென்றுநம்பி யிருக்குந்தமியேனை
அஞ்சலிலேவந்தென்னை யாளுமுகையித்தீனே. ௯

எல்லாமறிந்திருந்து மிவ்வேளைகையைவிட்டால்
சொல்லவேவேறெனக்குத் துணையாருங்காணேனே
அல்லல்வருத்தாம லடியேன்கவலைபசல
இல்லதுக்குள்வந்து யிருப்பீர்முகையித்தீனே. ௰

பலவிதமாயென்னைப் பழுதுசெய்துமின்னமெனம்
விலகிவிட்டால்யானும் வீண்பாவியாகிடுவேன்
வுலைவாய்மெழுகதுபோ லுருகுமடியேனை
மலைவன்றியேகார்க்க வருவீர்முகையித்தீனே. ௰௧

மண்ணைநம்பியேயிருந்து மதிமோசமாகையிலே
பெண்ணைப்பிரியம்வைத்து பேய்கொண்டப்பாவியென்னை
அன்னைதங்கைபோலிரங்கி அடியேன்றுயர்தீர்க்க
உன்னையன்றிவேறுதவி யுண்டோமுகையித்தீனே. ௰௨

என்னகுற்றஞ்செய்தாலு மென்பிழையைநீர்பொறுத்து
தன்னடியிற்சேர்த்து தற்காத்துக்கொள்ளுமையா
விண்ணுமண்ணுமேநிறைந்த மேலோன்பொருட்டாலே
கண்ணுணையுண்மைசொன்னேன் கௌதுமுகையித்தீனே. ௰௩

ஆதியறுஷின்னமுகுமணி தொட்டிலின்மேல்
சோதிவடிவாயிருந்த துய்யோன்வலியேநீர்
ஓதிப்புகழ்வதர்க்கு யுன்னையன்றிவேறுண்டோ
காதிர்முகையிதீனைக் காருங்கருணைவைத்தே. ௰௪

தீனைநிலைநிறுத்துந் திருவேயுமதுநாமந்
தானேப்பிடித்திருந்துந் தடுமாறக்காரியமேன்
கோனையறியாமல் கூடழியும்பாவியெனைக்
கானதுணையும்மையன்றிக் காணேன்முகிய்யத்தீனே. ௰௫

சத்தியமாய்ச்சொன்னேன் தருணமிதுவாகுமையா
மத்திதனில்வந்திடுவீர் மனமிரங்கியிவ்வேளை
யத்தியதில்வங்க மழைத்திர்மிசுராதிலே
வெத்திதருவீரெனக்கு மீராமுகையித்தீனே. ௰௬

என்னைமவுத்தாக்க யிஜ்றுயில்வந்திடுமுன்
தன்னைதெரிசித்து தாட்பணிவதென்றுளோ
ஜின்னைப்பிடித்துச் சிறுகூஜிலேயடைத்தீர்
பெண்ணதுவைமீட்டிவைத்த பீருமுகையித்தீனே. ௰௭

இன்னிசைப்படல - முற்றிற்று.

—*—

ஆகப்படலம்-௰௭-க்கு கூடியபாடல்-௲௩௱௰௪,

என்னாட் கண்ணிகள்.

ஜெகமும்வெளிநிறைந்த திருவாமொருபொருளை
யகமதிலேதேடிடவெ ஆதியேநீகாப்பு. க

ஓங்காரமாகி யுலவுஞ்சுடரொளியை
நீங்காமலுள்ளே நினைப்பதினியென்னாளோ. உ

வேதாந்தமான மெய்ப்பொருளையென்னுளத்திற்
சாந்தகமாய்க்கண்[illegible]ள்பணிவதென்னாளோ. ங

மூச்சுடரிலொன்றை முனையதிலேகண்டுமெனம்
அச்சருவந்தேடி யடிபணிவதென்னாளோ. ச

மேலோந்திருவடியை மேனியதிலேதெளிந்து
கா[illegible]கண்டுகூடி கதி[illegible]தென்னாளோ. ரு

எங்குமானவா யிருக்கும்பரம்பொருளை
யங்கமதில்தேடி யருள்பெறுவதென்னாளோ. சு

தீபவொளிதேடித் தியங்காச்சுழிமுனையைக்
கோபுரத்திலேத்திக் கூடுவதுமென்னாளோ. எ

வானத்திலேறும் வழியறிந்துவென்னாளுந்
தானமதைக்கண்டுத் தனித்திருப்பதென்னாளோ. அ

மண்டலத்திற்சென்று மாராதியானமதால்
தெண்டனிட்டுக்கூடித் தெரிசிப்பதென்னாளோ. கூ

கூட்டமெல்லாம்விட்டுக் குருமொழியைத்தான்பாடி
வாட்டமில்லாதோடு மகிழ்ந்திருப்பதென்னாளோ. ௰

உன்னியுன்னியேறு முயர்ந்தமலைமேலே
கன்னிபதங்கண்டுக் கருதிடுவதென்னாளோ. ௰க

எட்டாக்கனியதுவை யென்னிதயத்தில்தேடி
நட்டநடுவதிலே நானறிவதென்னாளோ. ௰உ

சென்னிநடுவிற் திருப்பதியிற்சென்றுநிதம்
பன்னிருகால்கொண்டுப் பார்த்திருப்பதென்னாளோ. ௰ங

அம்பலத்திற்சென்று அரனடியைத்தான்போற்றி
கும்பத்துக்குள்ளே குடியிருப்பதென்னாளோ. ௰௪

ஜோடுபிரியுமுன்னே சுருபத்திலேதெளிந்து
தேடும்பொருளைத் தெரிந்துக்கொள்வதென்னாளோ ௰௫

சந்திரசூரியனுந்தான் ரண்டுமொன்றாகும்
மந்திரத்தையான்பிடித்து மகிழ்ந்திருப்பதென்னாளோ. ௰௬

மான்கலையுங்கண்டு வத்தாதபொய்கையிலே
தேனதனையுண்டுத் தேறுவதுமென்னாளோ. ௰௭

சுழிமுனையிற்றோன்றுந் தூண்டாமணிவிளக்கை
அழியுமுன்னேதேடி யருள்பெறுவதென்னாளோ. ௰௮

சத்தமுழக்குந் தலமதனையானறிந்து
குத்தமெல்லாந்தீரக் கூடிடுவதென்னாளோ. ௰௯

அஞ்சிலொன்றைக்கண்டு ஆசையகலும்படி
நெஞ்சகத்திற்றேடி நின்[illegible]ளோ. ௨[illegible]

அட்சரமில்லா ஆதியவன்வடிவை
உட்சரத்திற்கண்டு வுகந்திருப்பதென்னாளோ. ௨௧

என்னகத்தினுள்ளே யிருக்குமணிச்சுடர்தான்
கண்ணாடியில்வந்து கலந்திடுவதென்னாளோ. ௨௨

நடனமதுவாடும் நடுசபையையானறிந்து
சடலமதுபொய்யென்று தள்ளிடுவதென்னாளோ. ௨௩

மூலத்தின் தீயை மூட்டிமுனைமீதில்
ஜாலத்தைக்கண்டு தனையறிவதென்னாளோ. ௨௪

என்றைக்கும்வாடா திருக்குமலரதனை
தொண்டைக்குங்கீழ்தேடி சுகித்திருப்பதென்னாளோ. ௨௫

வாய்பேசாவூமையனை மனமகிழ்ந்துயான்கூடி
காயாக்கனியதனைக் கண்டுகொள்வதென்னாளோ. ௨௬

நாவிக்கமல நடுவிருக்கும்பொருளை
கூவித்திரியாமற் கூடுவதுமென்னாளோ. ௨௭

உத்துணர்ந்துதேடா யுலுத்தனைப்போல்யானிருந்து
செத்தழிந்துபோகுமுன்னே தெளிந்திடுவதென்னாளோ. ௨௮

பூவைச்சதமென்றப் புல்லரைப்போலாகாமல்
பாவமெல்லாம்போக்கிப் பதியடைவதென்னாளோ. ௨௯

கூடுசதமென்னுங் குலைக்குகின்றகுக்கலைப்போல்
நாடெங்குஞ்சுத்தாமல் நானறிவதென்னாளோ. ௩௰

தேடிப்பொருள்புதைக்குந் திருடரைப்போலாகாமல்
கூடியேகொஞ்சிக் குலாவிடுவதென்னாளோ. ௩௧

வேதமுறையறியா வீணர்கள்போலாகாமல்
பாதம்நடுமுடியைப் பார்த்திருப்பதென்னாளோ. ௩௨

ஆசையதுவைத்து அலையுமசடரைப்போல்
வேசைமயல்தீர்ந்து [illegible]றிவதென்னாளோ. ௩௩

காசைச்சதமென்றக் கசடரைப்போலாகாமல்
பீசைமுறிக்கி மெய்யறிவதென்னாளோ. ௩௪

மனைவிமக்களென்று மகிழுகின்றமானிடர்போல்
நினைவிற்சற்று[illegible]தென்னாளோ. ௩௫

குணங்குடியில்வாழுங் குருவைப்பணிந்துநிதம்
மணம்பெறவேகண்டுமகிழ்ந்திருப்பதென்னாளோ. ௩௬

நிச்சயங்களில்லா நீர்மேல்குமிழியென்று
அச்சமதுவந்து அடைந்திடுவதென்னாளோ. ௩௭

ஊரெங்குஞ்சுத்தி யுலாவும்பதர்போலே
பாரிலலையாமல் பதம்பெறுவதென்னாளோ. ௩௮

வேடிக்கைபார்த்து விளம்புகின்றவீணரைப்போல்
ஓடித்திரியாம லுள்ளறிவதென்னாளோ. ௩௯

கள்வதுபோல்பூவைக் கருத்திலேவையாமல்
நினைவைநிலைநிறுத்தி நின்றிடுவதென்னாளோ. ௪௰

பசப்பிப்பணம்பறிக்கும் பாதகரைச்சேராமல்
நிசப்படுத்தியொன்றை நிறுத்துவதுமென்னாளோ. ௪௧

புவியில்பொருள்தேடும் புல்லருடஞ்சேராமல்
செவியில்தொனிகேட்டு ஜெயம்பெறுவதென்னாளோ. ௪௨

ஒன்பதுவாசலு மோடாமலுள்ளத்திலே
கம்பத்துக்குள்ளிருக்கக் கண்டிடுவதென்னாளோ. ௪௩

கூட்டைத் துறக்கும் பொருளறியாப்புல்லரைப்போல்
ஏட்டைப்படியாம லிருந்திடுவதென்றுளோ. ௪௪

வெற்பிடித்தநாய்போலே வீட்டைக்குஞ்சுத்தாமல்
பரிபிடித்துயேறி பரமடைவதென்றுளோ ௪௫

குருவறியாமூடரைப்போல் குருவேஷங்கொள்ளாமல்
சரியானபாதைகண்டு சார்ந்திருப்பதென்றுளோ. ௪௬

கஞ்சாக்குடியரைப்போல் காடுசுத்தியோடாமல்
எண்ஜாண்பனைக்கள் ளிறக்கியுண்பதென்றுளோ. ௪௭

போதைகுடிக்கின்ற புல்லருடன்கூடாமல்
மாதவங்கள்பெத்து மகிழ்ந்திருப்பதென்றுளோ. ௪௮

இணைவைத்துப்பேசு மிடும்பரைப்போலாகாமல்
துணையதுவைத்தேடிச் சுகம்பெறுவதென்றுளோ. ௪௯

வலமிடமுந்தேடறியா மடையர்கள்போலாகாமல்
தலமதையான்கண்டுக் [illegible] ௫௰

பஜனைகளைப்பாடும் பாவியுடன்கூடாமல்
விஜனங்களைத்தவிர்த்து விடுவதினியென்றுளோ. ௫௧

தம்பூரைக்கொட்டித் தான்பாடும்புல்லரைப்போல்
கெம்பீரம்விட்டுக் கிடந்திடுவதென்றுளோ. ௫௨

பிட்டுலைத்தேய்க்கும் பேயருடன்கூடாமல்
மட்டிலடங்கானுடனே மகிழ்ந்திருப்பதென்றுளோ. ௫௩

செம்புகல்லைதெய்வமென்றுச் சேவிக்கிறபுல்லரைப்போல்
[illegible]க்கியென்னைத்தான் வாழ்விப்பதென்றுளோ. ௫௪

குழித்துநீற்பூசுங்குருடரைப்போலாகாமல்
விழிநடுவிற்றேடி மேவிடுவதென்றுளோ. ௫௫

எண்ணம்பலது மிதையமதிலேநினைந்து
விண்ணமணுகாமல் மெய்தருவதென்றுளோ. ௫௬

பஞ்சாலைவைத்துப் பணிந்திடும்பாவிகள்போல்
வஞ்சமறவென்னை வாழ்விப்பதென்றுளோ. ௫௭

குடலைவிலேபூவெடுக்குங் குருடரைப்போலாகாமல்
உடலைச்சுத்திசெய்து யுகந்திருப்பதென்றுளோ. ௫௮

கோலங்கள்கட்டிக் கூத்தாடுஞ்செய்கைவிட்டு
ஆலம்நிறைந்தவனை யடுத்திருப்பதென்னாளோ. ௫௯

தோற்ச்சதைவீடு சுறுக்காயழியுமுன்னே
பாலதுவைத்தேடிப் பருகிடுவதென்னாளோ. ௬௰

காலெட்டுக்குள்ளிருக்கும் நடப்பதுவையானறிந்து
மேல்வீட்டிலேந்தியென்னை விட்டிடுவதென்னாளோ. ௬௧

இரவுபகலையென்று ஒளிகையமதிற்றெளிந்து
உறவுக்கிளையைவிட்டு வொடுங்கிடுவதென்னாளோ. ௬௨

காலன்பிடித்துக் கைசேதம்வந்திடுமுன்
நாலாம்பதவியிலே கூடிடுவதென்னாளோ. ௬௩

ஏணிப்படிகடந்து யென்குருவின்சொல்லதினால்
மாணிக்கத்தைக்கண்டு மகிழ்ந்திருப்பதென்னாளோ. ௬௪

பாணிக்கவொண்ணா பரம்பொருளின்பாதமதிற்
காணிக்கைவைத்துக் கண்டிடுவதென்னாளோ. ௬௫

உருவுமுடனுமோர் வடிவுமில்லானை
கருவூதிற்கண்டு கைதொழுவதென்னாளோ. ௬௬

பருவந்தவறுமுன்னே பத்தெழுத்தின்வீடதிலே
திருவதுவைத்தேடி ஜெயம்பெறுவதென்னாளோ. ௬௭

இருபத்தியஞ்சிலொன்று யிருக்குமிடந்தேடி
புருவத்தின்மத்தியிலே பொருந்திடுதென்னாளோ. ௬௮

தஞ்சவூரானுந் தனியோன்பதந்தேடி
அஞ்சாமற்கண்டு அடுத்திடுவதென்னாளோ. ௬௯

பவழமதுமுத்துப் பச்சையதைத்தேடியுள்ளே
குழலில்தொனிகேட்டு குறியறிவதென்னாளோ. ௭௰

அண்டமதிற்கருவை யறிந்தோர்பதமதிலே
தெண்டனிட்டுக்கூடி ஜெயம்பெருவதென்னாளோ. ௭௧

புழுவெடுத்துக்கூட்டில் பொருந்தியுருச்செய்வதுபோல்
வழுவறவேசிந்தைதன்னில் மகிழ்ந்திருப்பதென்னாளோ. ௭௨

கட்டாப்பரியதுவைக்காலரிந்துயான்கூடி
மட்டமதுகையில்வந்து வசப்படுவதென்னாளோ. ௭௩

ஆவியழியுமுன்னே ஆரன்பதத்தில்யான்கூடி
பாவிதுயர்தீர்ந்து பலம்பெறுவதென்றோ. ௭௪

இடுக்கமதுதீர்ந்து யிறையடியைப்போற்றிசெய்து
நடுக்கமதுதவிர்ந்து நானறிவதென்றோ. ௭௫

எலும்புதோலுள்ள விருட்டறையில்யான்புகுந்து
ஜஉலும்பதுவைவிட்டு துடர்ந்திடுவதென்றோ, ௭௬

கட்டமரக்கொப்பேறிக் காயாக்கனியதுவை
இஷ்டமுடன்தேடி யெடுத்திடுவதென்றோ. ௭௭

பத்தெழுத்தான பதியிற்புகுந்துமங்கே
குத்தெழுத்தைக்கண்டு குறியறிவதென்றோ. ௭௮

குழியில்புகுதுமுன்னே குதாவினடிபணிந்து
அழியாப்பதவியிலே யாயிடுவதென்றோ. ௭௯

பேச்சைவிட்டுநீங்கி பெரியோனுடன்கூடி
காட்சியதுபெத்து கலந்திடுவதென்றோ. ௮௰

சூக்ஷமுள்ளவாசல் துறந்துப்படியேறி
பாச்சக்கயற்சுருக்கிப் பார்த்திடுவதென்றோ. ௮௧

முத்திதரும்வீட்டின் முனையதிலேயான்கூடி
வெத்தியதைப்பெற்று வீற்றிருப்பதென்றோ. ௮௨

ஜன்னல்க்கதவுகளைத் தாளிட்டுப்பூட்டிமெள்ள
முன்றலைகண்டு முழித்திருப்பதென்றோ. ௮௩

[illegible]றென்றுமுள்ளே யிருக்கும்பரம்பொருளை
கண்டுமனக்கேறி கழித்திடுவதென்றோ, ௮௪

நிராக்னவலையதைத் தீர்த்துவிடுஞ்சித்தனவை
நேராகக்கண்டு நிலைத்திடுவதென்றோ. ௮௫

வித்தொன்றுமில்லா வேதாந்தமெய்ப்பொருளை
வுத்துயான்தேடி யுகந்திருப்பதென்றோ. ௮௬

செத்தாரைப்போலே தினந்தினமும்யான்திரிந்து
கர்த்தாதிருவடியைக் கண்டிடுவதென்றோ. ௮௭

அஞ்சாமலென்றனு மறிவையுருவாக்கி
துஞ்சாவகையறிந்து சுகம்பெறுவதென்றோ. ௮௮

நினைவுநிலையாக நெஞ்சமதிலேநிறுத்தி
உணவையொழித்து வுகந்திருப்பதென்னாளோ. ௮௯

காணாதகாக்ஷியதைக் கண்டுமனமகிழ்ந்து
வாணாளழியுமுன்னே வரம்பெறுவதென்னாளோ. ௯௰.

செப்பத்துலையாத் திருவடியைக்கண்டுவுள்ளே
நற்பவளஆசனத்தில் நான்தரிப்பதென்னாளோ. ௯௧

கும்பக்கோணத்திற் குடியிருக்குங்கோவதுவை
அம்புவைத்துத்தேடி யருள்பெறுவதென்னாளோ. ௯௨

தஞ்சவூராளுந் தனியோன்திருவடியை
நெஞ்சதுவிற்றேடி நிலைத்திடுவதென்னாளோ. ௯௩

அறுகோணமான வறன்மனையில்யான்புகுந்து
பருவவயதில்லானைப் பாத்திடுவதென்னாளோ. ௯௪

குச்சழிந்துயானுங் குழியிற்புகுதுமுன்னே
வச்சுப்பொருள்கண்டு மகிழ்ந்திடுவதென்னாளோ. ௯௫

எழுத்திலடங்காத யேகாந்தமெய்ப்பொருளை
கழுத்துக்குமேலேறிக் கண்டிடுவதென்னாளோ. ௯௬.

அறுபத்திநாலு மடங்குமொருவக்ஷரத்தை
புருவநடுவிற்கண்டு புகுந்திடுவதென்னாளோ, ௯௭

கத்திரிக்கோல்போலக் கலந்திருக்குங்காரணனை
உத்தறிந்துபார்த்து வுகந்திடுவதென்னாளோ. ௯௮

பட்டமதுபோலே பறக்கும்பரம்பொருளை
இஷ்டமுடன்றேடி யிசைந்திருப்பதென்னாளோ. ௯௯

குணங்குடியார்சொன்ன குறிப்பதுவையான்றேடி
க்ஷணமதிலேகூடிச் சார்ந்திடுவதென்னாளோ. ௱

வெற்றியுடன்யானும் மேல்வழியில்சேர்வதற்கு
முற்றியுருமேலவன்றான் முன்னிப்பதென்னாளோ. ௱௧

என்னுடைய கண்ணிகள் - முற்றிற்று.

ஆகப்படலம்-௰௪-க்கு கூடியபாடல்-௲௪௱௰௩.

மெய்ஞ்ஞானக் குறவஞ்சி

ஆவென்றும்ஊவென்றும் யார்சொன்னசொல்லடி சிங்கி யது
ஆதியனாதியு மொன்றாயிருந்ததே சிங்கா. ௧

ஒன்றாயிருந்த வுயிரெழுத்தென்னடி சிங்கி யது
ஓங்காரமாகிய வட்டமதல்லவோ சிங்கா. ௨

வட்டமதான வகையதைச்சொல்லடி சிங்கி யது
வாக்குமனதுக்கு மெட்டாப்பொருளடா சிங்கா. ௩

எட்டாப்பொருளென்றுயென்னத்தைச்சொல்லலாம் சிங்கி யது
எங்குநிறைந்து இருக்குந்திருவடா சிங்கா ௪

திருவதைக்கண்டுநாம் தேடுவதெப்படி சிங்கி யதைச்
சிந்தையிலெண்ணித் தினமுருப்போடடா சிங்கா. ௫

உருவதுபோட வுபாயமதெப்படி சிங்கி யது
ஒன்றைப்பிடித்து வுடலுக்குளுதடா சிங்கா. ௬

ஊதினாலுள்ளே வருவாமோசொல்லடி சிங்கி யதை
உண்மையென்றெண்ணியே யுத்துநீபாரடா சிங்கா. ௭

உருவதுபோட்டிடி லோடிப்போகாதடி சிங்கி யந்த
ஓட்டைகள்மூடு முபாயத்தைத்தேடடா சிங்கா. ௮

ஓட்டைகளெத்தனை யுள்ளதுசொல்லடி சிங்கி யது
ஒன்பதுமூன்றும் பனிரண்டுவல்லவோ சிங்கா. ௯

பனிரண்டுவாசல் விபரமதெப்படி சிங்கி யந்தப்
பத்தெழுத்தாகியவீட்டி லேழோட்டையாம் சிங்கா. ௰

மிச்சமிருக்கு மிடமதைச்சொல்லடி சிங்கி யது
முன்னாலேயொன்று யறுத்துயடைத்ததே சிங்கா. ௰௧

இன்னஞ்சிலயிட மெங்கேயிருக்குது சிங்கி நா
மேந்துகுழந்தையி லெங்கேயமுதுண்டோம் சிங்கா. ௰௨

பத்தும்போகாண்டு வாசலைச்சொல்லடி சிங்கி யது
பள்ளையின்கீழே யிருக்குதுபாரடா சிங்கா ௰௩

பள்ளியினுள்ளொரு பட்டணமுண்டோடி சிங்கி யது
பச்சைநிறமா யிருக்குதுபாரடா சிங்கா; ௰௪

பச்சைக்குமுன்னே பவழமதென்னடி சிங்கி யதைப்
பார்த்தல்லோமுத்தங்கே பாய்ந்ததுபாரடா சிங்கா. ௰௫

முத்ததுமுன்னே யிருந்ததைச்சொல்லடி சிங்கி யது
மூளையுருகியே நாதமதல்லவோ சிங்கா. ௰௬

நாதத்தினால்சட மானவிதஞ்சொல்லு சிங்கி யது
நாலாறிருபத்தி னாலெழுத்தாமடா சிங்கா. ௰௭

இருபத்தினாலுக்கு மினமதுசொல்லடி சிங்கி யது
எணாறும்பிரியா வெழுத்து யீராறடா சிங்கா. ௰௮

ஈராறுபோகமைத் தெட்டுநாலாரடி சிங்கி யது
என்றென்றுமுள்ளவன் றாதரின்பேரடா சிங்கா. ௰௯

றாதராய்வந்த துறையதைச்சொல்லடி சிங்கி யது
சொல்லத்தொலையாத இருளில்வெளிச்சமே சிங்கா. ௨௰

இருளாயிருந்தது யிப்படியாவதேன் சிங்கி யது
என்றுந்துணையாயிருக்கசெய்தானடா சிங்கா. ௨௧

அவனுக்கிதுதுணை யானதுமெப்படி சிங்கி முன்
ஆகத்தைமண்ணாலே யேன்படைத்தானடா சிங்கா, ௨௨

மண்ணால்சமைந்தது மாளிகையாமோடி சிங்கி யது
மஃஷூக்குமாஷூக்குங்கூடுமிடமடா சிங்கா ௨௩

ஆஷூக்குமஃஷூக்குமாணும்பெண்ணுமோடி சிங்கி யது
அங்கம்நடுவதிலாடுதுபாரடா சிங்கா. ௨௪

ஆட்டத்தைக்கண்டு அறிவதுயெப்படி சிங்கி யதை
ஆவென்றும்ஈயென்றும் ஊவென்றுமோதடா சிங்கா. ௨௫

ஓதினாலென்ன வுனக்குக்கிடைப்பது சிங்கி யந்த
ஊமையனோடு வுறவாகலாமடா சிங்கா. ௨௬

ஊமையனுக்கு வுபாயந்தெரியுமோ சிங்கி யதை
யுத்துப்பாராம லுரைப்பது ஏனடா சிங்கா. ௨௭

உத்துநீபார்த்திடி லுருவதுதோன்றுமோ சிங்கி யது
ஒன்றிலுமேயடங்காதப்பொருளடா சிங்கா. ௨௮

அடங்காப்பொருளை யறிவதுவெப்படி சிங்கி யறு
நாங்குக்குமேலே யெழுத்தொன்றைப்பாரடா சிங்கா, ௨௯

பார்த்துப்பிடிக்கிறப் பாதையைச்சொல்லடி சிங்கி யதைப்
பத்தெழுத்தாகிய் வீட்டுக்குள்பாரடா சிங்கா. ௩௰

பத்தெழுத்தான பதியதைச்சொல்லடி சிங்கி யதைப்
பாரொக்குமுள்ளோன் படைத்துவைத்தானடா சிங்கா. ௩௧

எங்குநிறைந்தவ னொண்டுசொல்லடி சிங்கி யது
எல்லோர்க்குமுன்னே யிருளாயிருந்தது சிங்கா, ௩௨

இருளிலிருப்பதை யெப்படிக்காணலாஞ் சிங்கி யதை
ஈராறைக்கொண்டுநீ யேத்தியிறக்கடா சிங்கா. ௩௩

ஏத்துவதென்ன விறக்குவதென்னடி சிங்கி யது
ஏத்துவதுசட லிறக்கினலாதாயம் சிங்கா, ௩௪

இந்தபறுல்சுன்னத் தெப்படியாச்சுது சிங்கி யது
எட்டதுரண்டி லிருக்குதுபாரடா சிங்கா ௩௫

எட்டென்றுசொன்ன வெழுத்தென்னசொல்லடி சிங்கி யது
எடுத்ததைக்குத்தச் சறுகினதாமடா சிங்கா. ௩௬

வித்திலேமூன்று விதமானதென்னடி சிங்கி யது
மேலானபச்சைப் பவழமுத்தாமடா சிங்கா. ௩௭

முச்சுடரொன்று மொழிவதுமென்னடி சிங்கி யது
முன்னவன் ஆதம் முஹம்மதுமூன்றடா சிங்கா. ௩௮

மூன்றுமிருக்கு மிடம்மதைச்சொல்லடி சிங்கி யதை
மூலையுமத்தி யடியதைப்பாரடா சிங்கா. ௩௯

அடியிலிருந்து யெழும்புவதென்னடி சிங்கி யது
ஆவென்றுசொல்வது ஆதமதாமடா சிங்கா. ௪௰

ஆதத்துக்குவுயி ரானதுமெப்படி சிங்கி யது
ஆணும்பெண்ணுமொன்றாய்க் கூடினபோதடா சிங்கா ௪௧

ஆணென்றுசொல்லிநீ யாரைமொழிகிறாய் சிங்கி யது
அவ்வலிலேயிரு ளாகவிருந்ததே சிங்கா. ௪௨

இருளாயிருந்தது யிப்படியானதேன் சிங்கி யது
என்றென்றுமுள்ளா னிருக்குமிடமடா சிங்கா. ௪௩

இருப்பிட மென்று மவனுக்குயேனடி சிங்கி யது
அல்லாமல்வேறே யுருவுண்டோசொல்லடா சிங்கா. ௪௪

உடலுக்குள்ளேவுயி ரானதுமெப்படி சிங்கி யது
ஓர்குடையார்நின்ற ஹூவதுவாமடா சிங்கா ௪௫

ஹூவதிலங்கமீம் கூடினதெப்படி சிங்கி யது
கோலமில்லாத குறித்தமுத்தல்லவோ சிங்கா. ௪௬

முத்திலுதித்தது யெத்தனைமீமடி சிங்கி யதில்
முஹம்மதுமுகிமித்தி ஞானதுரண்டடா சிங்கா. ௪௭

இரண்டிலேயொன்றுதானெங்கேயிருந்தது சிங்கி யது
என்றுமுள்ளான்றன் னிடத்திலிருந்ததே சிங்கா. ௪௮

மைத்தவெழுத்தின் வடிவதுவென்னடி சிங்கி யது
மஃதைக்காய்வந்திடும் ஆதமுமாமடா சிங்கா. ௪௯

மாதாபிதாவு மனைக்குள்ளேயுண்டோடி சிங்கி யதை
வாக்குமனைதொத்து நோக்கியேபாரடா சிங்கா. ௫௰

நோக்கியேபார்த்திடும் நோட்டத்தைச்சொல்லடி சிங்கி யது
வாய்க்கிமேலுள்ளொரு வாசலைப்பாரடா சிங்கா. ௫௧

ஜவரிருக்கு மரண்மனையென்னடி சிங்கி யந்த
மஞ்ஞீரஸ்ஜிப்ரீ லிருக்குமிடமடா சிங்கா. ௫௨

மீக்காயிலிருக்குர மார்க்கமதென்னடி சிங்கி யது
மிச்சமதான கருப்பீரலாமடா சிங்கா. ௫௩

இஸ்ராபீலிருக்கு மிடமதைச்சொல்லடி சிங்கி யது
ஏகாந்தமான நுரையீரலாமடா சிங்கா. ௫௪

இஜ்ராயீலிருக்கு மிடமெங்கேசொல்லடி சிங்கி யது
ஈரலும்பித்துமாய்க் கூடியிருக்கடா சிங்கா. ௫௫

மன்னர்முஹம்மது வாழுமிடமெங்கே சிங்கி யது
வர்ணிப்பிலேயடங் காதமலரடா சிங்கா. ௫௬

இராஜவிருக்கு மிடமதைச்சொல்லடி சிங்கி யனைத
நாசிக்குங்கெத்திக்கு மத்தியில்பாரடா சிங்கா. ௫௭

மாலுங்கலையென்று வந்ததுவென்னடி சிங்கி யது
மானதுபெண்ணுக் கிலையதுவாணடா சிங்கா. ௫௮

ஆணுக்குள்பெண்வந் தமைந்ததுவென்னடி சிங்கி ய து
வாணும்பெண்ணல்லாமல் வேறுருவேதடா சிங்கா. ௫௯

சந்திரசூரியனென்னத்தைச் சொல்லலாம் சிங்கி ய து
தன்னையறியுஞ் சரமதுவாமடா சிங்கா. ௬௰

நாற்பதுமுப்பது யெட்டுநாலொன்றென்ன சிங்கி ய து
நாலுயிருபது மூன்றுமதாமடா சிங்கா. ௬௧

இந்தயிலக்கங்க ளெங்கேயிருக்குது சிங்கி ய து
எல்லோர்க்குமுன்னாலே யாதமுனைத்தசொல் சிங்கா. ௬௨

அந்தவெழுத்தின் விபரமதென்னடி சிங்கி ய து
அல்ஹம்துக்குள்ளே யிருக்குதுபாரடா சிங்கா. ௬௩

ஐயஞ்சிருபத்தஞ் சானதுவெப்படி சிங்கி ய து
ஆலிபஞ்சுலாமஞ்சு ஹேயஞ்சுமீமஞ்சுதாலஞ்சதாமடா சிங்கா. ௬௪

ஒன்றுஆதிக மிருப்பதுயேனடி சிங்கி யதை
உத்துமேபார்த்து வுணருமற்சொல்வதேன் சிங்கா. ௬௫

உம்முல்குரானென்று ஓதுவதென்னடி சிங்கி யதை
உன்றன்னுடலுக்கு ளுத்ததைப்பாரடா சிங்கா. ௬௬

பார்த்தால்கிடைக்கும் பலனதைச்சொல்லடி சிங்கி யுன்
பாவந்துலைந்துப் பதிசேருவாயடா சிங்கா. ௬௭

பதிசேர்த்துவைத்திடும் பாதையைச்சொல்லடி சிங்கி யதை
பத்ததிற்கூட்டியே பாணத்திற்போடடா சிங்கா. ௬௮

பாணமென்றேநீ சொல்லுவதென்னடி சிங்கி ய து
பகலுமிரவுமாய் பாயிதுபாரடா சிங்கா ௬௯

பாச்சக்குதிரை பழகுவதெப்படி சிங்கி யதை
பத்தனைகூட்டிப் படித்துநீயாரடா சிங்கா. ௭௰

பத்தனையென்றுநீ பாடினதென்னடி சிங்கி ய து
பஞ்சாக்ஷரமென்று பார்த்துநீகொள்ளடா சிங்கா. ௭௧

அக்ஷரமுண்டோ அவனுக்குசொல்லடி சிங்கி யதை
அங்கமழியுமுன் ஆராய்ந்துபாரடா சிங்கா. ௭௨

ஆராய்ந்துதேடு மறிவதைச்சொல்லடி சிங்கி யதை
ஆமினார்பெற்ற மகனார்சொல்பாரடா சிங்கா ௭௩

றகசியமானசொல் நாட்டில்வருவதேதென் சிங்கி நம்ம
நாயகமானோர் அலிக்குரைத்தரடா சிங்கா. ௭௪

பஞ்சத்தனென்று பகருவதென்னடி சிங்கி யது
பாரில்நபிஅலி பாத்திமாஹசன்ஹுசைன் சிங்கா. ௭௫

அஞ்சுபேரெங்கே யமைந்திருந்தாரடி சிங்கி யதை
ஆதிகுதுபினி லாக்கிவைத்தானடா சிங்கா. ௭௬

அந்தகுதுபைஅமைத்தநாள் சொல்லடி சிங்கி யது
ஆதியறிவானல்லா லாருஞ்சொல்லாரடா சிங்கா. ௭௭

அந்தகுதுபின் அடையாளஞ்சொல்லடி சிங்கி யது
ஆலநபியின் சிரஞ்செவிமார்படா சிங்கா. ௭௮

மார்பிலிருந்திடு மாணிக்கமென்னடி சிங்கி யது
மங்கைக்கரசியாம் பாத்திமாதாமடா சிங்கா. ௭௯

சிரசிலிருந்திடுந் தாஜதுவென்னடி சிங்கி யது
சிங்கமதானப் புலியலியாமடா சிங்கா- ௮௰

குழலதிற்றாங்குந் தாளமதாரடி சிங்கி யது
[illegible]ர்பாத்திமா ஈன்றஹசன்ஹுசைன் சிங்கா ௮௧

அஞ்சிலேமுன்னதா யாலத்தில்வந்ததார் சிங்கி யவர்
ஆதிஒளிவிற்பிரிந்த முஹம்மதாம் சிங்கா. ௮௨

பின்னாகவந்துப் பிறந்தவராரடி சிங்கி யவர்
பேரபீதாலியின் பிள்ளை அலியடா சிங்கா. ௮௩

மூன்றாவதாக முளைத்ததுயாரடி சிங்கி யது
முஹம்மதர்பெற்ற மகள்பாத்திமாவடா சிங்கா. ௮௪

[illegible]ங்காவதாக வுதித்தவராரடி சிங்கி நம்ம
[illegible]யமான ஹஸனவராமடா சிங்கா. ௮௫

ஐந்தாவதாகவே யார்வந்தார்சொல்லடி சிங்கி யவர்
அன்னலிமாம்ஹுசை னென்றறியாயோடா சிங்கா.. ௮௬

சென்னியிலேயுமி கரித்தவராரடி சிங்கி யவர்
செருப்போடறுசினிற் சென்றவராமடா சிங்கா. ௮௭

அறுபத்திமூன்றுண் டரசாண்டிருந்ததார் சிங்கி யவர்
ஆகிற்நபியான அஹமதர்தாமடா சிங்கா. ௮௮

ஆகிறிநாளை யறிவதுயெப்படி சிங்கி யது
ஹக்கறிவானல்லா லாருஞ்சொல்லாரடா சிங்கா. அகூ

துஞ்சினல்நாளை யெழும்புவதேனடி சிங்கி நம்ம
தொல்பாவநன்மையுஞ் சோதிக்கவல்லவோ சிங்கா. கூய

சோதித்துப்பார்க்குந் துறையென்னசொல்லடி சிங்கி யது
சொர்க்கநரகமு மேன்படைத்தானடா சிங்கா. கூக

சொர்க்கம்புகுந்திடு மானிடராரடி சிங்கி யவர்
சுன்னத்ததான ஜமாத்ததின்கூட்டமே சிங்கா. கூஉ

சுன்னத்ததான ஜமாத்ததுவாரடி சிங்கி யவர்
தூதர்முஹம்மதர் சொற்பிடித்தோரடா சிங்கா. கூங

எழுபத்திமூன்றாக யேன்பிரிப்பானடி சிங்கி யது
எங்கள்நபியு மெடுத்துரைத்தாரடா சிங்கா, கூச

எழுபத்திரண்டது யெங்கேதான்போமடி சிங்கி யது
ஏழென்றுசொல்லு மிடம்புகுவாரடா சிங்கா. கூரு

கலிமா,மொழிந்தவர் கனலிற்போவதேன் சிங்கி யவர்
ஹக்கிறசூலை ஹஸதுவைத்தோரடா சிங்கா. கூசா

ஹஸதுகள்வைத்திடக் காரியமென்னடி சிங்கி யது
ஹதீதின்படியுள்ள நாளிதுவாமடா சிங்கா. கூஎ

நாளென்றுநீயும் நவிலுவதென்னடி சிங்கி இந்த
நானிலந்தன்னிலே தேர்வீசித்தியடா சிங்கா. கூஅ

தேர்வீசித்தியென்று செப்புவதென்னடி சிங்கி யது
தேசநட்படிப் பார்த்தறியாயோடா சிங்கா. கூகூ

பாருநீயென்று பகர்வதுவென்னடி சிங்கி
பலபலகோலமாய் சொல்குராரல்லவோ சிங்கா.

சொல்லும்படிக்காக வந்ததுயெப்படி சிங்கி யது
தூதர்நபிமுன்னால் சொன்னதைப்பாரடா சிங்கா. ௱உ

பார்மீதிலிக்கவி பாடினதாரடி சிங்கி யது
பாவம்மிகுந்திடுங் காதிர்முகையித்தீன் சிங்கா. ௱ங

மெஞ்ஞானக்குறவஞ்சிப்படலம் முற்றிற்று.

—0*0—

ஆகப்படலம்-௰கூ-க்கு-கூடியபாடல்-கூருளஅ௰.

மெஞ்ஞானக்குறவஞ்சிகீர்த்தனம்.

இராகம்-குறச்சிந்து-ஆதிதாளம்.

பல்லவி

சிங்கியைக்கண்டேனையே குகைக்குள்ளே
சிங்கியைக்கண்டேனையே

சரணங்கள்

சிங்கியைக்கண்[illegible]ன் தெருவெல்லாஞ்சுற்றியே
தேவரம்பையபோல[illegible] திருவடிவாகியே
மங்காதொளிரு ம்ணிவடஞ்சூட்டியே
வார்குழல்பின்னி மயிர்ச்சுட்டிகட்டியே. சிங்கியை

அங்கமுழுது மலங்காரமாக்கியே
அடியினிற்றண்டை சிலம்பதுபூட்டியே
எங்குந்துலங்கு மதிபோலுலாவியே
ஏகாந்தமாகிய முச்சந்திவீதியில். சிங்கியை

காடுவனமெல்லாஞ் சுட்டுக்கருக்கியே
கழனியைநன்றாய் வரம்புவுயர்த்தியே
மாடொன்றுகட்டி யுழுதுவிதைத்தூவி
வம்பாய்[illegible]ளைத்த களையைப்பிடுங்கியே. சிங்கியை

கூடத்த[illegible]ள்ளே குளவிபோலூதியே
கும்பகோணத்[illegible]திலூமன்முன்னேபாடியே
ம[illegible]கண் டிருந்திடும்போதிலே
தெய்வசபையில் விளையாடும்வீதியில். சிங்கியை

௫. அண்டர்கள்வந்து அடியில்பணிந்திட
ஆகாசம்பூமியு மெங்குநிறைந்திட
தொண்டர்கள்வந்து தொழுதுபுகழ்ந்திட
சூரியசந்திரர் வொன்றாய்க்கலந்திட. சிங்கியை

மண்டலமெல்லா மகிழ்ச்சிப்பிறந்திட
வச்சிரமாம்ணி மண்டபமேறிட
கண்டவரெல்லாங் களிப்புக்கொண்டாடிட
காலனுமேங்கிக் கடந்தகன்றோடிட. சிங்கியை

எ. பத்தெழுத்தான பதியினிலேறியே
பச்சையுமுத்துப் பவளமுங்கூடியே
வித்தகனைக்கண்டு விபரமாய்த்தேடியே
மேலத்தெருவின் விலாசத்திலோடியே. சிங்கியை

அ குத்துவிளக்கிலே தீபத்தையேத்தியே
கோபுரவாசலுஞ் சந்நதிதேடியே
புற்றினில்பாம்பைப் பிடித்துப்பழக்கியே
பூணங்கொண்டுகைத் தாலங்கள்தட்டியே. சிங்கியை

சு. ஏங்கியேங்கிமேலே யேறியபோதிலே
யெட்டடியாகியவுச்சி மலையிலே
வாங்கியமிர்தம் வடிந்தவழியிலே
வாசலில்காவை மடக்கியபோதிலே. சிங்கியை

௰. தூங்காமற்றூங்கியீ ராறுகலையிலே
துட்டரதாகிய மேலத்தெருவிலே
பாங்கிவந்து பதங்கள்பாடியிலே
பச்சைநிறமுள்ள பட்டணந்தன்னிலே. சிங்கியை

௰க. ஒட்டைப்பிடாரத்தி ஒரிகடுவிலே
ஹம்மதைக்கொண்டு வருவேற்றும்போதிலே
கூட்டங்களில்லாத கோவிலினுள்ளிலே
கோபுரவாசலே தாண்டியேவீட்டிலே. சிங்கியை

௰உ. மாடப்புறுவந்து வாழும்பதியிலே
வச்சிரமாமணி மண்டபக்கூட்டிலே
தேடக்கிடையாத செம்பொன்னகரிலே
தெய்வரம்பைவந் தாடுஞ்சபையிலே. சிங்கியை

குறச்சிந்து முற்றிற்று.

—*—

ஆகப்பாடல்-௩௫௨ள,

மெய்ஞ்ஞானக் கீர்த்தனை.

இராகம்-காம்போதி-அடதாளம்.

பல்லவி.

பழகிக்கொண்டதையே பச்சைப்புரு
பழகிக்கொண்டதையே

சரணங்கள்.

௧ பழகிக்கொ[illegible]து பாச்சக்கயிற்றிலே
பத்தனைக்[illegible]ட்டிப் படுத்திடுநாளிலே
குழவிபோல்பார்த்து ஆடிடும்போதிலே
கும்பகோணத்துற்ற மேலைத்தெருவிலே, பழகிக்

௨. வேலூராகிய வெட்டவெளியிலே
வேடிக்கைப்பார்த்து மகிழ்ந்திடுங்காலத்தில்
காலுந்தலைகண்டு மாறிடும்நாளிலே
கண்டத்தின்மேலேமூச் சந்திநடுவிலே பழகிக்

௩. எட்டொருபீத்த விருக்கிறவீட்டிலே
ஏணிப்படியினி லேறிடும்போதிலே
வட்டதும்போல விருக்கும்பலையிலே
வச்சிரமா[illegible]மண்ட பத்துக்குள்ளே. பழகிக்

[illegible]ப வம்பாவீட்டிலே
ஆருமறியா திருக்குந்தலத்திலே
புருவமத்திகண்டுப் புகழ்ந்திடும்போதிலே
பூரணமான பொழுதுநிலவிலே பழகிக்

௫. தூங்காமல்தூங்கி சுகமுறும்போதிலே
சுற்றிப்பார்த்தால் நாடும்வெட்டவெளியிலெ
சாங்காலம்தன்னில் தரிக்காதுகிட்சயம்
சாதிக்குலமில்லா தாபரனிடத்தில். பழகிக்

கீர்த்தனை முற்றிற்று.

—✳—

ஆகப்பாடல் - ௩௫௩௨.

மெஞ்ஞானக் கீர்த்தனை.

இராகம்-எதுகுலகாம்போதி-அடதாளம்-பல்லவி

சிக்கிக்கொண்டதையே புருவந்து
சிக்கிக்கொண்டதையே கண்ணியிலே

அநுபல்லவி.

சிக்கிக்கொண்டது தேகத்துக்குள்சென்று
சொக்கிப்போகாத சுருவப்புருவந்து — சிக்கிக்

க ஈராறுக்குள்ளதை யேற்றியிறக்கியே
எட்டொருபீத்தவி லேகாமல்மூடியே
பேராயிரத்திலே யொன்றதைத்தேடியே
பேணியேபார்த்துள் ளிருந்திடும்போதிலே — சிக்கிக்

உ. ஐவர்களொன்று யிருக்குஞ்சபையிலே
ஆவென்றும் ஊவென்று ஈயென்றுங்கூவியே
ஐவகாரத்தில் கண்டதைத்தேடியே
ஆடியிருக்கிற பாசக்கயிற்றிலே. — சிக்கிக்

௩. அக்கினிதன்னை மடியினில்மூட்டியே
அம்பினைவில்லிலே அன்பாகப்பூட்டியே
முக்கியமாகிய மோட்டுத்தெருவிலே
மூன்றுபேரொன்று யிருக்குஞ்சபையிலே. — சிக்கிக்

௪. வம்பதுசெய்யுங் குரங்கைப்பிடித்துள்ளே
மாட்டியடித்து வெளியில்துரத்தியே
கும்பகோணத்திலேயூமன்முன்னேசென்று
கூடியேபேசி யிருந்திடும்போதிலே. — சிக்கிக

௫. கோபுரவாசல் கடந்துமேலேறியே
குள்ளன்சமுகத்தி லுத்திடும்போதிலே
திவரமாகப்பறந்து மேலுச்சியில்
சென்றிடும்போதங்கே வைத்திடுங்கண்ணியில். — சிக்கிக்

௬. மத்தளங்கைமணி வீணைகள்கம்பூரு
மாருதசங்கதி நாதங்கள் கேட்டுள்ளே
உத்தமபாதத்தை புண்மையாயெண்ணியே
நம்மனைக்கொண்டுவுருப்போடும் போதிலே. — சிக்கித்

கீர்த்தனை முற்றிற்று.

ஆகப்பாடல்:- ௲௩௰௮,

மெஞ்ஞானக் கீர்த்தனை.

இராகம்-தன்னியாசி-ஆதிதாளம்.

பல்லவி.

பட்டுக்கொண்டதையே வட்டக்கிளி
பட்டுக்கொண்டதையே

அநுபல்லவி.

பட்டுக்கொண்டதவ் வெட்டுசாண்வீட்டிலே
திட்டமுட்டான திரிகோணவீதியில். பட்டுக்

சரணங்கள்,

௧. பத்தெழுத்தான் பதியின்மேலேறியே
பத்தினியா[illegible] கூத்தைப் பார்த்திடும்போதிலே
குத்துவி[illegible]க்கினிற் றீபத்தையேற்றியே
[illegible]ணறனுட்டங் கொழுகியயாதிலே பட்டுக்

௨. கட்டைப்பனைமரத் தூச்சிமீதேறியே
கள்ளினைக்கண்டு குடித்திடும்வேளையில்
விட்டக்குறையென் றெண்ணிடுநாளிலே
மேலைத்தெருவி லிரங்கிடுங்கண்ணியில் பட்டுக்

௩. ஒன்றைப்பிடித்து வொடுங்குமவ்வேளையில்
ஊமையனோடு வுறவானநாளையில்
தொண்டைக்குமேலே யிருந்திடும்வீட்டிலே
சுற்றிவைத்திட்ட சுருக்குவலையிலே பட்டுக்

௪. அஞ்சாமல்கிட்ட அடுத்திடுநாளிலே
ஆதியைக்கண்டுப் பணிந்திடும்போதிலே
என்சேய்வோமென்றே யிருந்திடுங்காலத்தில்
எட்டுமிரண்டையும் பூட்டுங்கயிற்றிலே பட்டுக்

௫. தத்துவக்குப்பையைத் தள்ளிகொளுத்தியே
சண்டிக்குரங்கை வெளியில்துரத்தியே
சத்துசித்தானமா வட்டாங்கயோகத்தில்
சார்ந்திருக்கின்ற சமயத்திலேவந்து. பட்டுக்

௬. அண்டபிண்டம்வெளி யெங்குநிறைந்திடும்
ஆனந்தமாகிய வட்டக்கிளியது
கொண்டலுக்குள்ளே யிருந்துகூத்தாடியே
கோணங்கள்சுற்றி வருகிறபோதிலே பட்டுக்

கீர்த்தனை முற்றிற்று.

ஆகப்பாடல்-௯௫௮.

ஆனந்தக்களிப்பு.

கூட்டுக்குள்ளேகுருவீடு அதைக்
கூடிவிளையாடி யேபதம் பாடு

க. வாட்டையைக்கண்டுநீ யோடு ஒரு
வட்டவெழுத்துண்டு வண்மையாய்த் தேடு
சேட்டையைநீ விட்டுப்போடு உடல்
செத்துப்போனலங்கே தான்வரும் கேடு (கூட்)

தஞ்சனிருப்பிடந்தேடு ஒரு
சாணொ[..] சாணுந்தரித்திடுங் கூடு
[..]க்[..]நீ விட்டுப்போடு கொடு
வலையிலக[..]பட்ட மான்போலே வாடு (கூட்)

ங, நெஞ்சிலிருப்பதைத்தேடு இது
நிசமானகாயமல்ல வென்று போடு
பஞ்சபூதமுள்ள நாடு அதைப்
பார்த்தால்பற்றிக்கொள்ளும் பரகுரு வீடு (கூட்)

ச. கட்டைமரத்துக்குள்தேடு அங்கே
காய்பூகனியுங் கலந்திடும் நாடு
வெட்டவெளியிலே ஓடு போய்
மேவாதபேருக்கு மெத்தவாம் கேடு (கூட்)

ரு, வாசிகயிற்றைநீநாடு மண்
வளிகனல்புனல்வெளி யானதைத் தேடு
நாசிக்குமேலதைநாடு அப்போ
நங்கையொருத்தி யெதிரிடப் பாடு (கூட்)

சா ஊசிமுனைகண்டுகூடு இது
ஊற்றைப்பிணமென் றுளத்திலே நாடு
காசைப்பணத்தைநீ போடு அந்த
காற்றுப்போகாமுன்னங் கண்டதைப் பாடு (கூட்)

எ. அச்சுமடடமேரியோடு ஒரு
அரிவையிருந்துப்படிப்பதைப் பாரு
குச்சுக்குள்ளே தேனின்கூடு நீ
கூடிவளவுக்குள் ஹம்ஸமீமைப் பாடு (கூட்)

அ எட்டடிதிவானநாடு அங்கு
இருக்குதுமோக்ஷ மெனும்பர வீடு
மட்டற்றமவுனத்தைக்கூடு உனக்கு
வையத்திலில்லை வாராதந்தக் கேடு (கூட்)

ஆனந்தக்களிப்பு-முற்றிற்று.

ஆகப்பாடல்-௬௰௬௬.

ஆனந்தக் களிப்பு.

கூட்டுக்குள்ளே பிடித்தாட்டு குணங்க
கொண்டாலருகில் வருமந்தத் தேட்டு

க. ஆட்டமெல்லாமவனாட்டு வுமக்
கானந்தமாகவெளிப்படும் பூட்டு
மாட்டைப்பிடித்தழு கோட்டு உன்
வாசினையமேல்நோக்கி வளரவே நாட்டு (கூட்)

உ. காற்றைப்பிடித்துக்கொண்டோட்டு கயி
றற்றிடுமுன்னே கலந்திடுங் கேட்டு
மாற்றிப்பிடித்தோர்க்குப்பாட்டு அந்த
வாத்தியார்சொல்லைமனதினில் நாட்டு (கூட்)

௩. எட்டுமிரண்டையுகாட்டு அதை
யேற்றிநீயுள்ளே புடைநகிட வோட்டு
கட்டுப்படுமந்தப்பாட்டு அப்போ
கதவெல்லாந்தாள்போட்டுசிக்கெனப் பூட்டு (கூட்)

௪. ஆவென்றும்ஊவென்றுகாட்டு — அஞ்
ஞானங்களோடியகன்றிடும் — நீட்டு
சாவென்றும்வாராத தேட்டு — அதை
சார்ந்துகொள்ளெந்தன் தனிச்சொல்லைக் — கேட்டு (கூட்)

௫. வெட்டவெளியந்தப்பாட்டு — அதை
மேவாதபேர்க்கு விளக்கானல் — லாட்டு
பட்டம்பகல்கூட்டி யோட்டு — நம்
பாவத்தைப்போக்கிடும் பாரந்தத் — தேட்டு (கூட்)

௬. வாசிக்குள்ளே விளையாட்டு — ரச
வாதத்திற்குமிக நல்லதா — மீட்டு
காசுபணமென்ன தேட்டு — [illegible]ள்
காற்றுபோய்விடுமுன்னே கண்மத்தி — நாட்டு (கூட்)

௭. வாய்கொண்டுசொல்லாதபாட்டு — அது
மௌன[illegible]யிருக்கிற — தேட்டு
பாணயச்சுருட்டியேபோட்டு — அதைப்
பாரடிநான்சொன்ன சொல்லினைக் — கேட்டு (கூட்)

௮. சந்திரசூரியராட்டு — அதைச்
சார்ந்துக்கொண்டால்தரு மேவினை — யாட்டு
மந்திரமாகியபாட்டு — அது
வாய்த்திடுமென்சொல் மனதினில் — நாட்டு (கூட்)

முற்றிற்று

—*—

ஆகப்பாடல் - ௧௫௬௭.

ஆனந்தக்களிப்பு.

என்காண் உனக்கிந்தப்பாடு வளர்
என்சாணுடைய நல்லோவிந்தக் கூடு

க. நான்சொன்ன சொல்லைக்கொண்டாடு நீ
நாடியுற்றுப்பார்த்தா லேன்வரும் கேடு (என்)

உ. ஊமையெழுத்தைநீபாடு பாடி
யுன்னுள்ளேகண்டால் வருஞ்சொர்ண வீடு (என்)

ங. எலும்புநரம்புள்ளகூடு அதில்
எட்டொன்றுமாங்கெட்ட பித்தலை மூடு (என்)

ச. குறும்பெல்லாம்நீவிட்டுப்போடு சுத்த
குணமானவெட்ட வெளிச்சமே தேடு (என்)

ரு. அடியுமுடியுநீநாடு அந்த
ஆசான்சொல்லைக்கெட்டி யாய்பிடித் தாடு (என்)

சு. அருவமாம்பெண்ணைநீகூடு அவள்
அண்டிவந்தால்சுகமாய்வரும் வீடு (என்)

எ. கதிர்மதியிரண்டையுந்தேடு உந்தன்
காயமழியாதமுன்னநீ பாடு (என்)

அ. வினையிருந்தால்விட்டும்வீடு அதை
விட்டுவிட்டா லூ[illegible]வருங் கேடு (என்)

கூ. கலையைப்பிடித்துக்கொண்டோடு கெட்ட
காட்டையெல்லாம்வெட்டிப்போட்டுநீ தேடு (என்)

௰. கிரிமேல்விளக்கிடநாடு அதின்
கீழேயிருக்குமவுனநல் வீடு (என்)

௰க. பற்றிப்பார்த்தால்பாவீடு அதைப்
பாராமல்விட்டால்படுவீடு காடு (என்)

௰உ. செத்தால்கிடையாதுதேடு சொன்னேன்
சின்னவீட்டில்நீசீமானையுந் தேடு (என்)

௰௩. ஈராறுக்குள்ளதைத்தேடு அதில்
ஏறிக்கொண்டால்தோதீறுமோக்ஷமாம் வீடு (என்)

௰௪. பார்க்காதபேர்க்கெல்லாங்கேடு நல்ல
பலன்வந்துகிட்டவேகிட்டாது ஓடு (என்)

௰௫. கும்பகோணத்தொருவீடு அதைக்
கூடாதபேர்க்குத்துடர்ந்திடுங் கேடு (என்)

௰௬. தனக்குள்ளிருப்பதைப்பாடு அது
தாண்டிகுதித்திடில்சாருமே கேடு (என்)

முற்றிற்று.

ஆகப்பாடல்-௧௫௯.

ஆனந்தக்களிப்பு.

கடவுளைமறவாதேமனமே மோக்ஷ
கதிவந்துகிட்டிடும் யான்சொன்னேன் தினமே

௧. உடலுக்குளுயிரால்லோபாமே அதை
உற்றுநீபார்த்திடில் தெரிந்திடும் தனமே
திடமாகயான்சொன்னே னிசமே கெட்ட
தேகம்அழியுமுன் தேடிக்கொள் தனமே (கடவு)

௨. அஞ்சுபேர்வாழுமோர் கோட்டை அது
அழிந்திடிலலங்கோல மாகிடுங் கூட்டை
பிஞ்சிப்போகும்முன்னே வீட்டை நீ
பிடித்துக்கொண்டாலல்லோ பேரின்ப தேட்டை (கடவு)

௩. ஒன்பதுபீக்கலேமூடு உள்ளே
யிருக்கிதுகுருபீடம் அறிந்ததைத் தேடு
அன்புவைத்தொன்றதைப் பாடு அரா
னிருக்கிறஇடங்கண்டால் ஆனந்த வீடு (கடவு)

௪. ஆசைவலைத்துஞானம் பாடு — என்றும்
அழியாதவொருராஜன் யிருக்கிறான் — தேடு
ஓசைக்கண்டிட மனம் நாடு — நன்றாய்
ஓங்கிப்பார்தெரிந்திடும் மோக்ஷத்தின் — வீடு (கடவு)

௫. வீடுவாசலென்னப்போடு — நாளை
விதிவந்தாலொருநொடி யில்லாத — கூடு
இடுகாடுநமக்குள்ளநாடு — இதை
எண்ணாமல்திரிகிறபேர்க் கெல்லாம் — கேடு (கடவு)

௬. சந்தைக்கிவருவாரெல்லோரே — பொழுது
சாய்ந்திடிலூர்தேடிப் போவார்கள் — பாரோ
சொந்தமோநமக் கிந்தவூரே — நல்ல
துணையிருந்தால்நம்பு முலகத்துள் — ளோரே (கடவு)

௭. காற்றிருக்குமட்டும் வீடு — அந்த
காற்றற்றுபோனா லுதவாது — கூடு
பார்த்தாலிரண்டுக்கால் வீடு — உந்தன்
பரன்மேலிருக்கிது மோக்ஷத்தின் — வீடு (கடவு)

௮. உலகைநம்பினால் வருங்கேடு — மூச்
சொடுங்கினாலொன்றுக்கு முதவாது — கூடு
அலகைபோல்திரியு முன்தேடு — உள்ள
மறிந்திடில்வாய்த்திடு மானந்த — வீடு (கடவு)

முற்றிற்று.

—o*o—

ஆகபாடல்-தருஅஅ

மெஞ்ஞானக் கீர்த்தனை.

இராகம்-புன்னாவராளி-அடதாளம்.

பல்லவி.

கனவுகண்டேனையே மெய்யாயொரு
கனவுகண்டேனையே

சரணங்கள்

௧. கனவுகண்டேனென் கண்களைமூடியே
காற்றுப்போகாமல் கதவெல்லாம்பூட்டியே
நினைவைக்கொண்டு நிலையாகக்காட்டியே
நேசங்களைவைத்துயான் தூங்காமல் தூங்கியே. கன

௨. தொண்ணூற்றாறையுஞ் சுட்டுக்கருக்கியே
துப்புரவாகவதிலொன்றை நாட்டியே
என்றும்பிரியாப் பொருளொன்றையெண்ணியே
எந்தனிருவிழி தூங்காமல் தூங்கியே. கன

௩. பொட்டிக்குளந்தப் பொருள்வைத்துப்பூட்டியே
பொல்லாக்குரங்கை வெளியில்துரத்தியே
கெட்டியாய்வாசிக் குதிரைமேலேறியே
கீழ்மேலும்பார்த்துயான் தூங்காமல்தூங்கியே. கன

௪. துர்க்குணமானதை தூரத்துரத்தியே
துன்பக்கடலைக் கடந்துமேலேறியே
சற்குருசொல்லைச் சதமென்றுவெண்ணியே
சந்தேகமற்றுயான் தூங்காமல்தூங்கியே. கன

௫. ஈராறைக்கொண்டதை யேற்றியிறக்கியே
எட்டேச்சாணுள்ள விடமெல்லாந்தேடியே
ஊராருறவின் முறைகளைத்தள்ளியே
உள்ளமறிந்துயான் தூங்காமல்தூங்கியே. கன

௬. ஏமன்பிடித்தே யிழுப்பானென்றெண்ணியே
இச்சையிழந்துயான் மச்சிமேலேறியே
மோனவுடைய இருப்பிடந்தேடியே
சென்னிநடுவினில் தூங்காமல் தூங்கியே. கன

௭. ஆவென்றும்ஊவென்று ஈயென்றும்பாடியே
அந்தரமானவெளிதன்னில் நாடியே
சாவென்றுமில்லா விருப்பிடந்தேடியே
சாஷ்டாங்கஞ்செய்துயான் தூங்காமல்தூங்கியே. கன

௮. ஆக்கைக்கடந்து அரன்மனைத்தேடியே
அஞ்சாமல்நானொரு கிள்ளையிலேறியே

௯. பூத்தகமலப் பரிமளந்தன்னிலே
புத்தியைவைத்துயான் தூங்காமல்தூங்கியே. கன

முற்றிற்று.

ஆகப்பாடல்-௲௫௯௯,

மெஞ்ஞானக்கீர்த்தனை.

இராகம்-சுருட்டி தாளம்-ஆதி.

பல்லவி,

சூட்சமிருக்குமிடம் சொன்னேன் சுழி
முனையைப்பாரடிப் பெண்ணே

சரணங்கள்,

௧. பேச்சினால்கிட்டுமோ பேரின்பந்தானடி
பேயர்க்குச்சொல்லிடில் கோபம்வருமடி
சச்சிதானந்தப் பொருளினைதேடடி
சற்றுப்போகாம லிருக்கலாகாதடி. சூட்ச

௨. வாசியிலேறி வழியதைத்தேடடி
வானத்தின்வாசல் திறந்திடுந்தானடி
நாசிமுனைமேல் நெற்றிக்குக்கீழடி
நாதன்றிருநடனம்புரிவானடி. சூட்ச

௩. காயில்லாதகனி கண்டிடலாமடி
கட்டைப்பனையி லிருக்குது கள்ளடி
வாயுங்கையுமில்லா வூமையன்றானடி
மதியிலேயவன் தூங்குறான்பாரடி. சூட்ச

௪. மானுங்கலையு மிருக்கிறவீடடி
வச்சிரமாமணி மண்டபந்தானடி
கோவென்றொருவ னிருப்பிடங்காணடி
௬௯ வென்றநீ கோட்டைப்பிடியடி. சூட்ச

ரு. முள்ளுமுடலுஞ் செடிகளுமுண்டடி
முட்டித்திரும்பு முடுக்குண்டு ஆமடி
பள்ளயத்துள்ளே கிடக்குதுபாரடி
பார்த்ததைமேலாய்த் திருப்பிவையடி. சூட்ச

சா. ஊத்தைநிரம்பி யிருக்குங் குழியடி
உற்றுப்பார்த்தாலங்கே வெட்டவெளியடி
காற்றைநிறைக்குந் துருத்தியதாமடி
காலனுமங்கே யிருக்கிறான்பாரடி. சூட்ச

எ. ஐந்துபேரொன்று யிருக்கிறதடி
அன்புவைத்தோருக் ககப்படுமடி
பஞ்சசரத்திலே யொன்றைப்பிடியடி
பாச்சக்கயிற்றில் பழக்கியேகொள்ளடி. சூட்ச

அ கோட்டைக்கு வாசற் படியொன்பதாமடி
கும்பகோணமென்ற ஊர்தானடி
சேட்டையைவிட்டுநீ தேடியேபாரடி
தெப்பக்குளத்தி னடுவிலதுவடி. சூட்ச

முற்றிற்று,

ஆகப்பாடல்-தசுாசு.

மெஞ்ஞானக் கீர்த்தனை.

இராகம்-அடாணா-தாளமாதி.

பல்லவி,

விதியென்று யெண்ணாதே மயிலே
விட்டகுறைவந்தால் கிட்டிடுங் குயிலே

சரணங்கள்

க. பதியிலிருந்துகொண்டு பணங்காசுசதமென்று
மரியாதியிதுவென்று வாணாலேநிசமென்று (விதி)

உ. சரீரத்தைசதமென்று தன்வாழ்வுபெரிதென்று
பிரியமாயதில்நின்று பெண்மேற்பிரியங்கொண்டு. (விதி)

ந. வீடுவாசலென்று வெள்ளாமைச்சதமென்று
மாடுகன்றுகளென்று மனையாட்டிச்சதமென்று (விதி)

௪ அன்னை தந்தையென்று மருமைக்குழந்தையென்று
பண்ணைப்பவுசைக்கண்டும் பாராதேநிசமென்று (விதி)

முற்றிற்று.

---*---

ஆகப்பாடல் - தரு ௮௪.

மெய்ஞ்ஞானக் கீர்த்தனை.

இராகம் - பைரவி - அடதாளம்.

பல்லவி.

ஆவியழிந்திடுமுன்னே அன்
அடியைத்தேடடி சொன்னேன்

சரணங்கள்.

௧. கோவஞ்செய்யில் குணமில்லைத்தள்ளடி
கும்பக்கோணத்தி லிருக்குதுபாரடி
சர்வல்லான் வீட்டைக் கடிக்குள்ளேதேடடி
சார்ந்துக்கொண்டானுனக் கென்னகுறையடி. ஆவி

௨. பூட்டைத்துறந்துள்ளே போயதைப்பாரடி
பொய்யுங்களவுங் குலையதுத்தள்ளடி
மாட்டைப்பிடித்து வுழுதுவிதையடி
வாய்த்துக்கொண்டால்நமக் கென்னகுறையடி ஆவி

௩. காணாதகாக்ஷிகள் கண்டிடலாமடி
காலன்வந்தால்நம்மை யென்னசெய்வானடி
பூணாரம்பூண்டிடும் பெண்ணவள்தானடி
பொய்யதைவிட்டுப் பொருளதைத்தேடடி. ஆவி

௪. தூக்கத்தைவிட்டுத் துறையதைப்பாரடி
துப்பரவாகிய மேலத்தெருவடி
நாக்குக்குமேலே வழியொன்றுண்டடி
நான்சொன்னசொல்லு நிஜமென்றுயெண்ணடி. ஆவி

௫. பூவும்நிசமில்லைப் பொய்யென்றுதள்ளடி
பூவுக்குள்வாச மிருக்குதுதேடடி
ஓசைமணிமண்ட பத்தினிலேறடி
ஊவென்றும் ஆவென்றும் ஹூம்மென்னும்பாடடி ஆவி

௬. சோத்தைக்குறைத்தால் சுகம்வரும்பாரடி
சொக்கிப்போகுமுன்னே சுக்கானைத்தேடடி
காத்தைப்பிடித்துக் கருவதில்கூட்டடி
கண்டத்தின்மேலே கவனமாய்நோக்கடி. ஆவி

௭. கூச்சமில்லாமலே கூட்டுக்குள்பாரடி
கோபுரவாசலுஞ் சந்நிதித்தேடடி
பேச்சினுலென்னப் புரோஜனமாமடி
பேரின்பமானப் பெருமைமயைத்தேடடி. ஆவி

௮ காலன்வருமுன் கயத்தைச்சுருக்கடி
காடுகளாயெங்குஞ் சுத்துவதேனடி
மூலத்தின்தீயதை மூட்டியெறியடி
முத்தியடையலாஞ் சொன்னேனிஜமடி. ஆவி

முற்றிற்று.

—*—

ஆகப்பாடல்-௲௯௱௰௨.

மெய்ஞ்ஞானக்கீர்த்தனை.

இராகம்-சுருட்டி-அடதாளம்.

பல்லவி.

என்னசெய்வாளே யிறையெனக்
கேதுசெய்வாளே

சரணங்கள்.

௧. மண்ணாசைவைத்து மடிந்திடச்செய்வானே
வம்பனைக்கண்டால் பணிந்திடச்செய்வானே
பெண்ணாசைவிட்டுப் பிரிந்திடச்செய்வானே
பேரின்பமுத்திகள் பெத்திடச்செய்வானே. என்ன

௨. மட்டிகள்போலே மடிந்திடச்செய்வானே
மண்டலஞ்சுத்தி யலைந்திடச்செய்வானே
சட்டியெடுத்து வீரந்திடச்செய்வானே
சற்குருபாதத்திற் சார்ந்திடச்செய்வானே. என்ன

௩. வீணரைப்போலே விளையாடச்செய்வானே
வேசையைத்தேடி விரும்பிடச்செய்வானே
ஆணுவமெல்லா மகத்திடச்செய்வானே
அஞ்சிலேயொன்றை யறிந்திடச்செய்வானே. என்ன

௪. ஆசைகள்வைத்து அலைந்திடச்செய்வானே
அம்பரவீட்டி லழைத்திடச்செய்வானே
காசாசைவைத்துக் கலங்கிடச்செய்வானே
கர்த்தன்றிருவருட் பெற்றிடச்செய்வானே. என்ன

முற்றிற்று.

—*—

ஆகப்பாடல்-தசுளயசு.

மெஞ்ஞானக் கீர்த்தனை.

இராகம்-தேசிகதோடி-அடதாளம்.

பல்லவி.

என்னசெய்திடுமோ யெந்தன்விதி
ஏதுசெய்திடுமோ

சரணங்கள்.

௧. தன்னையறிந்து சுவம்பெறச் செய்யுமோ
சாகாவரம்பெற்று ஆளாகச் செய்யுமோ
பின்னையுலகிற் பொருள்தேடச்செய்யுமோ
பேரின்பமுத்தி கிடைத்திடச் செய்யுமோ. என்ன

௨. பொன்னகர்தன்னிலே போயிடச் செய்யுமோ
பொல்லாநரகிற் புகுந்திடச் செய்யுமோ
மண்ணதிலென்னை மடிந்திடச் செய்யுமோ
வாசிக்குதிரை வசப்படச் செய்யுமோ. என்ன

௩. பேரின்பந்தேடி ப்பிழைத்திடச் செய்யுமோ
பேயனைப்போலே பினத்திடச் செய்யுமோ
நாரியர்கையில் நகைப்படச் செய்யுமோ
ஞானிகள்கூட்டத்தி லாகிடச் செய்யுமோ என்ன

௪. காசூதிகள்கண்டு கரையேறச் செய்யுமோ
காலனிடத்திலே காட்டிடச் செய்யுமோ
ஏச்சுப்பணங்தேடிச் சேர்த்திடச் செய்யுமோ
ஏகன்றிருவரு ளெய்திடச் செய்யுமோ என்ன

௫. சித்தர்கள்கூட்டதிற் சேர்ந்திடச் செய்யுமோ
திருவார்மொழிகளில் சார்ந்திடச் செய்யுமோ
பித்தனைப்போலே புலம்பிடச் செய்யுமோ
பேசாமந்திரம் வாய்த்திடச்செய்யுமோ. என்ன

௬. கூட்டைத்துறந்துள்ளே போயிடச் செய்யுமோ
பொய்யர்கள்கூட்டத்திற் புகுந்திடச் செய்யுமோ
மாட்டைப்போல்நின்று மயங்கிடச்செய்யுமோ
வானத்திலேறி மகிழ்ந்திடச் செய்யுமோ என்ன

௭. ஓசையைக்கண்டு வுகந்திடச் செய்யுமோ
ஓடித்திரிந்து அலைந்திடச்செய்யுமோ
வேசையாரசையில் மேவிடச் செய்யுமோ
மேலோந்திருப்பதஞ் சார்ந்திடச்செய்யுமோ. என்ன

௮ ஊமையனோடே யுறவாகச் செய்யுமோ
ஊரெங்குநாய்போ லுலாவிடச் செய்யுமோ
சமைகளோடித் தனந்தேடச் செய்யுமோ
சீமானிடத்திலே சார்ந்திடச் செய்யுமோ. என்ன

௯. பாலதைக்கண்டுப் பருகிடச் செய்யுமோ
பாலென்றுகள்ளைக் குடித்திடச் செய்யுமோ
நாலஞ்சுபீத்தலி லோடிடச் செய்யுமோ
நாதன்றிருவருள் பெற்றிடச் செய்யுமோ. என்ன

௰ ஜாதியில்லானொடு சார்ந்திடச்செய்யுமோ
சட்டியெடுத்து யிரந்திடச் செய்யுமோ
வீதிகள்தோறுந் திரிந்திடச் செய்யுமோ
வேதாந்தவீட்டில் விளையாடச் செய்யுமோ என்ன

௰க. ஆத்தாளைக்கண்டுநான் ஆசிக்கச் செய்யுமோ
அஞ்ஞானிபோலே அலைந்திடச் செய்யுமோ
மூத்தாளைறும்பரி போலென்னைச் செய்யுமோ
முத்திபெரும்வழி பெற்றிடச் செய்யுமோ என்ன

௰உ. நிஷ்டையில்நின்று நிலைத்திடச் செய்யுமோ
நெஞ்சம்புழுங்கி யழுதிடச் செய்யுமோ
பட்டமரம்போலே கெட்டிடச் செய்யுமோ
பாதையைக்காட்டிப் பலன்பெறச் செய்யுமோ என்ன

௰௩. தேசியிலே திடப்படச் செய்யுமோ
செத்தபிணத்தோடுஞ் சேர்ந்திடச் செய்யுமோ
தோசிகளாலின்றல் தொடர்ந்திடச் செய்யுமோ
தோண்டுஞ்சுழியில் துலங்கிடச் செய்யுமோ என்ன

௰௪. ஏணிப்படிமீதி லேறிடச் செய்யுமோ
எட்டாக்கனி யென்றுவிட்டிடச் செய்யுமோ
ஆணிப்பொன்தேடி யலைந்திடச் செய்யுமோ
ஐயன்றிருவருள் பெற்றிடச் செய்யுமோ என்ன

௰௫. வாசிக்குதிரை வசப்படச் செய்யுமோ
வாஞ்ஞைலழிந்து வதைப்படச் செய்யுமோ
வேசிகள்வீட்டில் விளையாடச் செய்யுமோ
மெஞ்ஞானம்வந்து விளங்கிடச் செய்யுமோ என்ன

௰௬ ஆணிப்பொன்னம்பலங் கண்டிடச் செய்யுமோ
ஆயிழையார்கூடக் கொஞ்சிடச் செய்யுமோ
சாணிப்புழுப்போல் மடிந்திடச் செய்யுமோ
சற்குருபாதத்திற் சார்ந்திடச் செய்யுமோ என்ன

௰௭. பொழுதுநிலவும் பிடிபடச் செய்யுமோ
பொய்யானவாழ்விற் புகுந்திடச் செய்யுமோ
எழுதும்விதியென் றிருந்திடச் செய்யுமோ
எந்தன்பிரானரு ளெய்திடச் செய்யுமோ என்ன

௰௮. ஆதிபதத்தி லணுகிடச் செய்யுமோ
ஆங்காரம்பேசி யலைந்திடச் செய்யுமோ
வீதிகள்தோறும் விரண்டோடச் செய்யுமோ
மெஞ்ஞானவீடு திறந்திடச் செய்யுமோ என்ன

௧௯. காகூதியைத்தந்துக் கரையேறச் செய்யுமோ
கள்ளனைப்போலே கலங்கிடச் செய்யுமோ
தாசிசள்வீட்டில் தரித்திடச் செய்யுமோ
தாய்பதஞ்சென்னியிற் சார்ந்திடச் செய்யுமோ என்ன

௨௰ ஐயன்பதத்தி லணுகிடச் செய்யுமோ
ஆரியக்கூத்தாடிடச் செய்யுமோ
பொய்யான்ஞானம் புலம்பிடச் செய்யுமோ
புவில்வாசம்போல் பொருந்திடச் செய்யுமோ. என்ன

முற்றிற்று.

—*—

ஆகப்பாடல்-௩௲௯௱௯.

மெஞ்ஞானக் கீர்த்தனை.

இராகம்-சுருட்டி-அடதாளம்.

பல்லவி

சித்த மிரங்கானே ஏழைமுகந்
திரும்பிப்பாரானே

சரணங்கள்.

௧. சூத்ததுவான நகத்ததிலுள்ளவன்
ஹூவதுக்குள்ளே குடியாயிருப்பவன்
பத்தர்க்கிரங்கிடுஞ் சித்தமுடையவன்
பாரெங்குமோர்குடை யாளும்பராபரன். சித்தம்

௨. அண்ணல்முஹம்மதைத் முன்னேபடைத்தவன்
ஆர்க்குங்கிருபைக் கடலதுவானவன்
என்னேரமூனு முறக்கமில்லாதவன்
எங்குந்நிறைந்திடு மேகபராபரன். சித்த

௩. விண்ணிலுமண்ணிலு மெங்குநிறைந்தவன்
வேதம்சுஹபை யிறக்கியமேலவன்

பெண்ணுமேயாணும் பிறப்பொன்றில்லாதவன்
பூலோகமெங்கும் புகழும்பராபரன், சித்த

௪. அன்னையுந்தந்தையு மாருமில்லாதவன்
ஆர்க்கும்பொதுவா யிருக்குமிறையவன்
தன்னைப்போலொன்றையுந் தான்படையாதவன்
ஜாதிஜனங்களுந் தாரமில்லாதவன். சித்த

௫. முன்னுமேபின்னு முடிவுமில்லாதவன்
மூச்சடங்கிவிட்டி லிருக்குமுதலவன்
கன்மத்திதன்னில் கலந்திடுங்காரணன்
காட்சிகொடுத்தென்னைக் காத்திடுங்காவலன். சித்த

௬. வானுலுயிரும் வடிவுமில்லாதவன்
வல்லவனாகிய இல்லல்லாவானவன்
தோணுமவென்றும் சொரூபத்திலுள்ளவன்
சோதித்தபேர்க்குத் துலங்குமிறையவன். சித்த

௭. வீறுந்தகுதியு மேன்மையுமுள்ளவன்
வீட்டுக்குள்ளே விளக்கொளிவானவன்
பேறும்பெருமை யிலங்குறையாதவன்
பேச்சிலடங்காதப் பேரின்பமுள்ளவன். சித்த

௮ கோலம்பலதிலுங் கூடவிருப்பவன்
கோபம்பெருமைக் குறையொன்றில்லாதவன்
ஆலமுழுதுக் கரசதுவானவன்
அன்பர்க்கருட்செய்யு மாதிமுதலவன். சித்த

முற்றிற்று.

——*——

ஆகப்பாடல்-௩௬௪௪,

மெஞ்ஞானக் கீர்த்தனை.

இராகம்-சுருட்டி-அடதாளம்.

பல்லவி.

என்னசெய்வானோ இன்னுமென்னை
எதுசெய் வானோ

சரணங்கள்.

௧. சின்னப்படுத்திச் சிரித்திடச்செய்வானோ
சேயிழையார்கையிற் சிக்கிடச்செய்வானோ
பொன்னம்பலத்தினி லேறிடச்செய்வானோ
பேய்கொண்டுயென்னைப் புலம்பிடச்செய்வானோ என்ன

௨. நாய்போலவெங்கும் நடந்திடச்செய்வானோ
நாரியர்சொல்லதை நம்பிடச்செய்வானோ
காயில்லாதக்கனி கண்டிடச்செய்வானோ
கட்கஞ்சாத்தேடிக் குடித்திடச்செய்வானோ என்ன

௩. மண்மனைதேடி மயங்கிடச்செய்வானோ
மங்கையர்மையலிற் சிக்கிடச்செய்வானோ
என்னைப்பரமதிற் சேர்த்திடச்செய்வானோ
எச்சிலிலைகள் பொருக்கிடச்செய்வானோ. என்ன

௪. காடெங்குமாடுபோ லோடிடச்செய்வானோ
கள்ளர்கள்கூடக் கலந்திடச்செய்வானோ
தேடும்பொருள்கண்டு சித்திக்கச்செய்வானோ
சிநாயேயோடென்றுச் செப்பிடச்செய்வானோ என்ன

முற்றிற்று.

—*—

ஆகப்பாடல்-௲௬௱௫.

ஆனந்தக் களிப்பு.

அவனை நீ மறவாதே மனமே — மன்னே
ஆகத்தை மனுவாகச் சமைத்து வைத்தவனே (அவனை)

௧. [illegible]வனமும் பசியுமற்றவனே — உந்தன்
தாயார் வயத்தில் வைத்துக் காத்தது[illegible] — மவனே
மவுனமாயிருக்கச் சொன்னானே — அவனே
மறந்திடிலுனை நாளை விதனஞ்செய் — வானே (அவ)

௨. தன்னினை வருவாய்ச் செய்தானே — நிசை
யாகவிருந்ததைச் சடமாக்கி — யவனே
கண்மணியானது மவனே — அவன்
கற்பினை தவறிடில் விதனஞ்செய் — வானே (அவ)

௩. நன்றாகயுனை வகுத்தவனே — எல்லா
நாளுமேயூட்டியே யுணவளித் — தானே
மண்மனையுனக்கு தந்தவனே — அவன்
வாக்கியமறந்திடில் விதனஞ்செய் — வானே (அவ)

௪. வெற்றிவிருதளித்தவனே — வெகு
வாகவுபகாரஞ் செய்துனைக் — தானே
மத்தியிலிருந்துக் கொண்டானே — அவனை
மறந்திடிலுனை நாளை வதைகள்செய் — வானே (அவ)

௫. வீடுக்குள்ளிருந்துக் கொண்டானே — வெகு
வாகியவேடிக்கை செய்குரான — வனே
நாடெங்கு மவன் கைக்குள்தானே — நானோ
நம்மையெழுப்பி விதனஞ்செய் — வானே (அவ)

௬. கோலங்கள் மிகவுஞ் செய்பவனே — வுன்
கூட்டுக்குள்ளென்றுங் குடியிருப் — பவனே
ஆலமெங்கும் நிறைந்தவனே — அவ
னருளைமறந்திடில் விதனஞ்செய் — வானே (அவ)

௭. அஞ்சிலேயொன்றாகு மவனே — சின்ன
அனாவீட்டிலிருக்கிறானறிந்திடு — தானே

தஞ்சிறைல்ப் போய்விடுவானே அவன்
சொலலைமறந்துவிட்டால் விதனஞ்செய் வானே (அவ

அ. சொல்லாமற் போய்விடுவானே பூவை
சுகமென்றுயென்னினைல் சுட்டிடு வானே
பொல்ல[illegible]செய்தானே யிது
பொய்யில்லைகா[illegible]திர் முஹ்யித்தீன்தான் சொன்னேனே (அவ)

[illegible]ற்று.

—*—

ஆகப்பாடல் - தசுஙிசு.

ஆனந்தக்களிப்பு.

மனமே நான்சொல்வது நிஜமே வாறு
வழியுமுன்தேடிறைல் வாய்த்திடும்பாமே. (மனமே)

க. இனஞ்ஜனமொன்று மில்லானே அவ
னென்றுமழியா திருப்பவந் தானே
குணமதிற் குடியிருப்பவனே அவனைக்
கூடிறைலுனக்கென்ன குறையடி மானே (மனமே)

உ. ஓட்டையொன்பது மூடித்தேடு வுள்ளே
யுணர்ந்துவோமூத்ததைக் கண்டுமே பாடு
சேட்டைகள் நீவிட்டுப்போடு உடல்
செத்துபோமுன்னே திடமாகத் தேடு (மனமே)

ங. குரங்குசேஷ்டைகள் விட்டுப்போடு ஒளி
குத்துவிளக்கில் தீபமேத்திட நாடு
அறனபதம் கண்டிடப்பாடு யிது
அழிந்திடி லனைக்காசுக்குககாதிக் கூடு (மனமே)

ச. சண்டித்தனத்தை விட்டுப்போடு என்றுஞ்
சாகாமலிருக்கவே சரமுறைக் கூடு
தெண்டித்தால் கிட்டிடும்வீடு யிந்த
தேகத்தைநிஜமென்றுல வருமவ கேடு (மனமே)

௫. எட்டிரண் டெதுவென்றுதேடு அது
எத்திக்கொன்றல்லோ மோக்ஷத்தின் வீடு
கொட்டு மொருதேனைக்கூடு அதைக்
கூடிக்கொண்டாலல்லோ குணங்குடி வீடு (மனமே)

௬. சூக்ஷமாம் வாலையின் வீடு சொல்லத்
துலையாத அவளுட சுருபத்தைத் தேடு
முச்சினால் நவிபிடித்தோடு நீ
முத்தியடையலா மிவ்வழிக் கூடு (மனமே)

௭. ஆவென்றும் ஊவென்றும்பாடு அங்க
மழியாமலிருக்கலாம் ஓமென்று தேடு
வாமழ்னைவத்துப் பூசைபோடு வுந்தன்
மனங்கொண்டுபார்த்து நல்வழியதைக் கூடு (மனமே)

௮ ஆத்தானைக் கண்டிடத்தேடு யெழுத்
தஞ்சிலொன்றைப்பிடித் தப்பனைக் கூடு
பூக்ககமலத்தை நாடு யிது
பொய்யல்லக்காதிர் முகியித்தீன்சொன்ன வீடு (மனமே)

முற்றிற்று

—0✱0—

ஆகப்பாடல்-௩௬௭௪.

ஆனந்தக் களிப்பு.

கவலைப்படுவதென்னமனமே கர்த்த
னழியாமலிருக்கையிலுனக்கென்ன பயமே
தவமதுக்குரியவனவனே யென்றுந்
தனியாகயிருந்திடுந் தானவன் தானே (கவலை)

௨. உயிரெல்லாம்நிறைந் திருப்பவனே அவ
னென்றிலுமடங்காத வுடையவன் தானே

பயில்மறையிர[...]கிடுமவனே வானில்
பருதிமதிமுதல் படைத்திடுங் கோனே (கவலை)

௩. எட்டுமேழும்படைத்தவனே எங்கு
மோர்குறைபாடின்றியிறையவன் தானே
மட்டும்உவமை யில்லானே மறை
வழிகளின்சகலமும் வகுத்தவல் லானே (கவலை)

௪. தலையும்அடியுமில்லானே யவன்
றன்னைப்போலொருவஸ்துஞ்சமைத்திடா தவனே
மலைகடல்மனு வகுத்தவனே மாசி
மறுவொன்றுமில்லாத மணியொளி தானே (கவலை)

௫. இறப்புமிறப்புமில்லானே என்று
மேகாந்தப்பொருளாக யிருப்பவன் தானே
சிறப்பினிலடங்கிடாதவனே மனந்
தெளியாமற்றேடினால் கிட்டிடா தவனே (கவலை)

௬. நினைக்குள்நினைவாகுமவனே நிலை
நின்றிடும்பேர்களை ரக்ஷிப்ப தவனே
கனவுபோல்தோன்றிடாதவனே ஓடுங்
கலையிடவலமாகக்கலந்திருப் பவனே (கவலை)

௭. பேச்சுமூச்சொன்றில்லாதவனே பேறு
பெற்றிடும்பேர்க்கெல்லாம்பேரின்பந் தானே
காக்ஷிகளனைத்துமுள்ளவனே வழி
காணாதபேர்களைக்கழிவுசெய் பவனே (கவலை)

௮. ஜாதிஜனமுமொன்றில்லானே தன்னைச்
சார்ந்திடுமவருக்குதயவுள் ளானவனே
ஆதியந்தமுமில்லானே அதை
யறியச்சொன்னேன்காதிர்முகையித்தீன் தானே (கவலை)

முற்றிற்று.

ஆகப்பாடல் - ௲௯௨.

137

மெஞ்ஞானக் கீர்த்தனை

இராகம்-காபி ஆதிதாளம்.

பல்லவி.

என்றைக்கி கிட்டிடுமோ யிறையருள்
என்றைக்கி கிட்டிடுமோ

அநுபல்லவி.

க. ஒன்றைப்பிடித்து வுருதியாய்நின்றிட
ஆமையடுத்து வுரவாகச்சென்றிட என்

சரணங்கள்,

உ. வண்டனிபுலீசு மாய்கையகற்றிட
மத்தியிற்சென்று மணிவிளக்கேற்றிட
தொண்டைக்கிமேலே தொனியதைககேட்டிட
துப்பரவாகக் கனையைப்பிடுங்கிட. என்

ந. வட்டயெழுத்தின் வகையையறிந்திட
வாசிக்குதிரைமேல் வையாளிபோட்டிட
எட்டிரெண்டான யெழுத்தைப்பிடித்திட
இச்சையைவிட்டுயான் மச்சுமேலேறிட. என்

ச. ஹம்ஸவைப்பிடித்துக் குணமதிற்கூடிட
குச்சுக்குட்சென்றுமே அச்சந்தெளிந்திட
ஆவென்றும்ஊவென்று ஊவென்றும்பாடிட
அன்புவைத்தொன்றி லடங்கியிருந்திட. என்

ரு. எட்டுசாண்வீட்டி லிடம்வலமோடிட
எரிப்பனைமீதிற் கள்ளைக்குடித்திட
தட்டுமேலேறியே ஜாலகையைத்தேடிட
தஞ்சாவூர்மன்னன் சமுகத்திற்சென்றிட. என்

சா. பூட்டைத்திறக்கும் பொருளையுணர்ந்திட
புத்தகின்பாம்பைப் பிடித்துப்பழகிட
ஓட்டைகள்மூடி முபாயங்கள்தேடிட
வுச்சிக்குணக்குடி குச்சிலிருந்திட என்

எ. ஜாட்டையில்லாதொரு பம்பரமாட்டிட
சற்குருசொல்லைச் சதமென்றுவெண்ணிட
கோட்டைக்குட்சென்றுக் கொடியதைபோட்டிட
கும்பகோணத்திலே பூமைமுன்சென்றிட. என்

அ தூத்திப்பதரெல்லாந் துப்பரவாக்கிட
தோப்பினிற்காயாக் கனியைத் தொடர்ந்திட
மாத்திப்பிடிக்கும் வகையையுணர்ந்திட
வாத்தியார்சொன்ன வழியதிற்சென்றிட. என்

௯. காடெல்லாம்வெட்டிக் கனலிற்கொளுத்திட
கட்டையழியுமுன் னிஷ்டையிற்நின்றிட
ஜோடுபிரியுமுன் சுக்கான்பிடித்திட
துட்டனுன்காதிர் முகியித்தீனைத்திட. என்

முற்றிற்று.

—※—

ஆகப்பாடல்-௧௯௬௬.

பெண்ஞானக் கீர்த்தனை.

இராகம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி,

குணங்குடியென்பது நினைவடி தோல்
கூட்டுக்குள்ளிருக்குது மணமடி.

சரணங்கள்.

க. பணந்தேடிச்சேர்த்தென்னப் பலனடி-பாச்சக்
கயறத்தால் பழுதாகுமுடலடி
க்ஷணம்வருவார்சொன்னேனெமனடி-வுடல்
தகர்ந்திடுமுன்கண்டால் திறமடி குணங்

உ. வாசமுள்ளமட்டு மலரடி-யது
வாடினுலெதுக்காகுஞ் சொல்லடி
மோசம்வந்திடுஞ்சொன்னேன் யானடி-வரு
மூச்சைப்பிடித்தால் முத்திதருமடி. குணங்

௩. பழுதாகப்போகுமுன் பாரடி-அங்கே
பத்துக்குள்ளிருக்குது பரமடி.
முழுதுமுண்மைசொன்னேன் கேளடி-நீதான்
முச்சந்தியிற்கண்டு தேடடி. குணங்

௪. எழுத்திலடங்காதப் பொருளடி-என்று
மிருப்பதுமதுகானே நிஜமடி
கழுத்துக்குமேலொரு யிடமடி-யதைக்
கண்டிடில் கதிபெறலாமடி. குணங்

௫. போனால்வருவது நிஜமோடி-யதைப்
பொய்யென்று நீவிட்டுப்போடடி
ஆனாலும்யான்சொன்னேன் கேளடி-நினை
வழிந்துகொண்டால்கிட்டும் பரமடி. குணங்

௬. உருவுக்குளுருவான பொருளடி-உட
லுடைந்தாலதுபோ இ விடுமடி
புருவமத்தியிற்சென்றுத் தேடடி-யிது
பொய்யல்லோயான்சொன்னே நிஜமடி. குணங்

௭. நாலுக்குமதுவல்லோ பலமடி-அது
நடந்தாலிதுசெத்த பிணமடி
தோல்க்கூட்டிலிருக்குது சுடரடி-யிதில்
சுத்திப்பார்த்தாலுண்டுச் சுகமடி. குணங்

௮ என்னைக்குமிருக்கலாம் நிஜமடி-இதை
எடுக்காதபேர்க்கென்ன பலனடி
ஒன்றைப்பிடித்துநீ யோதடி-யுனக்
கொன்றும்வருகாது தீதடி. குணங்

முற்றிற்று.

—*—

ஆகப்பாடல்-௧௯௯௯,

(இன்னிசை)

அஞ்சாமல்நீங்க ளவனிகனிலேதிரிந்தால்
நஞ்சதுபோலாகிவிடும் நம்பாதபேர்களுக்கே
பஞ்சதுபோல்நாளைப் பற்றியெரியுமுன்னே
கஞ்சாவுங்கள்ளுங் காமமெல்லாம்விட்டிடுவீர். க

இதுவுமது,

கண்டதெல்லாம்விட்டுக் கனவாமொருமொழியை
விண்டுசெவியில் விழுவதெந்தநாளறியேன்
தொண்டருடன்கூடித் துயரமெல்லாந்தீரவென்னை
என்றுவந்துநீயுதவி செய்வாயிறையவனே. உ

மெய்ஞ்ஞானக்கீர்த்தனை.

இராகம்-சுருட்டி-அடதாளம்.

பல்லவி.

என்றைக்குக்கண்டிடுவேன் கனவையான்
என்றைக்குக் கண்டிடுவேன்

க. தொண்டைக்குமேலே துடர்ந்ததைக்கூடவுஞ்
சொக்கிப்போகாத வழியதைத்தேடவுங்
குண்டுமேலேறியே ஹூவதைப்பாடவுங்
கோட்டையிற்சென்றந்தப் பாட்டையைமூடவும். என்

உ. மெத்தைமீதேறி விடமதைத்தேடவும்
மெய்ப்பொருளானதைக் கண்டுயான்கூடவுங்
குத்தம்வராமற் குருமொழிபாடவுங்
கொஞ்சிக்குதிரைமேல் வையாளிபோடவும். என்

ங. அம்பரஞ்சென்று அரனுடன்கூடவும்
அஞ்சிலேயொன்றை யறிந்துயாள்பாடவுஞ்
செம்பொன்னகரின் றெருச்சென்றுதேடவுந்
தேகமழியுமுன் யோகத்தைநாடவும். என்

௪. எட்டுச்சாணுள்ளே யிடம்வலமோடவும்
ஏகாந்தமாக விருந்துயான்பாடவுங்
கட்டைப்பனையினிற் கள்ளதைக்கட்டவுங்
காயமழியுமுன் கண்டுகுடிக்கவும். என்

௫ சாட்டையில்லாமலே பம்பரமாட்டவுந்
தஞ்சாவூரான்தன் சபையதிற்கூடவும்
பேட்டைக்குப்போற வழிகண்டுஓடவும்
பேசாதவூமைய னேடுறவாடவும். என்

௬. மாடிமேலேறி மகிழ்ச்சியாய்ப்பாடவும்
மாருமலூர மதுவைக்குடிக்கவும்
பாடிப்பாடிபர மானந்தந்தேடவும்
பத்தினிபாதம் பணிந்துயான்கூடவும் என்

௭. பன்னிருகால்வழி மானுடங்கூடவும்
பச்சையுமுத்துப் பவழத்தைநாடவும்
சென்னிநடுவிற் றிருவருள்தேடவுந்
தேனைக்குடித்துத் தினந்தினம்பாடவும். என்

௮ பொட்டிக்குள்வைத்தப் பொருளதைத்தேடவும்
பூத்தகனத்தைப் பொசிக்கியேபோடவும்
கெட்டியாய்வாசிக் குதிரைகொண்டோடவுங்
கெம்பீரமாகவே சங்கீதம்பாடவும். என்

௯. பட்டப்பகல்போ லருள்வந்துமூடவும்
பார்த்ததிற்சென்று பரமதைத்தேடவும்
எட்டிக்கயிற்று விருக்கியேகட்டவும்
எந்தனிருவிழி மத்தியிற்கூடவும். என்

௰. சூக்ஷமதான துறைகண்டுஓடவுஞ்
சொல்லற்றுலேயாப் பொருள்வந்துகூடவும்
ஆலயைக்கண்டுஆ னந்தம்பாடவும்
அன்புவைத்தொன்றதை யகத்திற்றேடவும். என்

௰௧ ஐம்பத்தைந்துபடி கடந்தோடவும்
அறுகோணமான வரன்மனைத்தேடவும்
கம்பத்தின்மேலே களித்துகூத்தாடவும்.
காலைப்பிடித்துக் கதியதிற்கூடவும். என்

௰௨ சந்திரசூரியன் றன்னுக்குள் தேடவும்
தாண்டிசுழிமுனை யூன்றியுள்ளோடவும்
மந்திரமில்லாத பாட்டதைப்பாடவும்
மாற்றிப்பிடித்து மடியினுற் கூடவும். என்

௰௩ கம்பத்துக்குள்ளே கவியதைப்பாடவும்
சாக்ஷிகள்கண்டு களையேறநாடவும்
துன்பங்களெல்லாந் துலைத்துமேயோடவும்
சூக்ஷக்கயற்றைச் சுருட்டியுள்போடவும். என்

௰௪ சித்த ருக்குந் தெருவதைத்தேடவும்
சின்மயமானப் பொருள்கண்டுகூடவும்
கர்த்தன்திருக்காட்சிப் பெற்றிடநாடவும்
காயமழியுமுன் காற்றைப்பிடிக்கவும் என்

௰௫ அசையாமல்நின்று அரன்மனை தேடவும்
அம்பிகைபாதம் பணிந்துயான்கூடவும்
திசையெங்குஞ்சுற்றியே சென்னியிலோடவும்
தேறிக்குணங்குடி வாயலடுக்கவும். என்

௰௬ பட்டணம்சென்றுப் புருவதைத்தேடவும்
பச்சைநிறமான கோட்டைப்பிடிக்கவும்
அஷ்டாங்கயோக மறிந்துமேகூடவும்
அம்பரவீட்டினிற் கெம்பீரம்பாடவும். என்

௰௭ ஓங்காரமான எழுத்தைநாடவும்
ஒன்பதுவாசலுங் கெட்டியாய்மூடவும்
தூங்காமற்றூங்கிச் சுகமதிற்கூடவும்
தோப்பினிற்காயாக் கனியதைத்தேடவும் என்

௰௮ வானத்தின்வாசல் வழிதுறந்தோடவும்
வாக்குமனமு மகிழ்ச்சியாய்ப்பாடவும்
ஆனந்தக்கோனையா னன்பாகத்தேடவும்
ஆடெல்லாஞ்சேர்த்து அடைத்துள்ளேஓட்டவும் என்

௰௯ ஆணிப்பொன்னம்பலங் கண்டதிற்கூடவும்
அந்தரகம்பத்தின் மீதேறியாடவும்
மாணிக்கமுத்து மரகதந்தேடவும்
மத்திவிளக்கதில் வத்திகள்போடவும். என்

உ௯ நெய்யையுருக்கி நிறப்பியேயோடவும்
நிர்மலமான சுரூபத்தைத்தேடவும்
செய்வினையானது சீக்கிரமோடவும்
தேறித்தெளிந்து திருவையடையவும் என்

முற்றிற்று,

—*—

ஆகப்பாடல்-தளஉக.

ஆனந்தக்களிப்பு.

எல்லாமவன்செயல்மானே அதை
எண்ணிறைக்கிட்டும்பாகதி தானே

க. கல்லுக்குள்தேரைக்குந்தானே கரு
வாகியமுட்டையுங் காத்தளிப் பானே
எல்லாவுயிரி லுள்ளானே ஆதி
யிருக்கவுனக்கு பயமென்ன மானே (எல்லா)

உ. அன்னைவயற்றில் வைத்தானே அனு
வாகியநீரையுருச்சமைத் தானே
மனைவிட்டுப்போகச்சொன்றுனே யிந்த
மண்ணிற்பிறந்தபின் வளர்த்தது மவனே (எல்லா)

௩. மனுவு[illegible]ள்மறைந்திருப்பவனே வான
மலைகட[illegible]லெங்கும் வருத்தவன் றனே
நினை[illegible]க்குள் நி[illegible]ருப்பவனே யெங்கும்
நீதியாய்ராஜாங்கம் செய்வது மவனே (எல்லா)

[illegible]. பெண்பிள்ளைபொருளுந் தந்தவனே அதில்
பிரியமாய்சிலகாளாய் வைத்திருந் தானே
கண்ணுக்குள்மணியானதவனே யுன்னைக்
காக்கவுங்கடமைக ளுள்ளவ னவனே (எல்லா)

௫. கொடுப்பதுமளிப்பது மவனே கோலம்
பலதாகவொருகொடியாக்கிடு மவனே
படுக்கையுஞ் சயனமில்லானே நாம்
பார்த்தவிடமெல்லாம் நிறப்பமுள் ளவனே எல்லா

௬. ஒருக்காலுமறதி யில்லானே யூரும்
மெறும்புயானைமுதல் யுணவழிப் பானே
வெறுப்புச்சலிப்பொன் றில்லானே மிகு
வேண்டும்படைப்புக் கார்க்கு மேலவனே (எல்லா)

முற்றிற்று.

ஆகபாடல்-௧௭௨௭.

மெய்ஞ்ஞானக் கீர்த்தனை.

இராகம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி,

முடிவில்லான் வாரானே. ஏழையென்னை
முத்தியிற் சேரானே

சரணங்கள்.

௧. முடிவில்லாவென்னை முனிந்திடச்செய்வானே
முச்சந்திமேலே முழங்கிடச்செய்வானே
வடிவில்லானோடு மகிழ்ந்திடச்செய்வானே
வஞ்சியனைமுத்திக் கொஞ்சிடச்செய்வானே. முடி

௨. படிமீதிலென்னைப் பழுதாகச்செய்வானே
பக்கம்வைத்தென்முகம் பார்த்திடச்செய்வானே
அடியனுதந்து வருள்பெறச்செய்வானே
ஆயிழையைமுத்திக் கொஞ்சிடச்செயவானே. முடி

௩. வெட்டவெளியிலே விட்டிடச்செய்வானே
வேதாந்தவாக்கியம் பாடிடச்செய்வானே

கட்டாபரிமீதி லேறிடச்செய்வானே
கன்னியரைமுத்திக் கொஞ்சிடச்செய்வானே. முடி

௨. பட்டமரம்போலே கெட்டிடச்செய்வானே
பாசக்கயற்றில் பழகிடச்செய்வானே
நட்டநடுவதை நாடிடச்செய்வானே
நாரியரைமுத்திக் கொஞ்சிடச்செய்வானே. முடி

இதுவுமது.

இராகம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

கூட்டுக்குள்வாரானே குணமதிற்
கூடிடச் செய்யானே

சரணங்கள்.

௧. கூட்டுக்குள்வந்துக் குடியேறச்செய்வானே
கோ[illegible]த்தியே விட்டிடச்செய்வானே
காட்டுக்குள்ளோடிக் கலங்கிடச்செய்வானே
காட்சியிலென்னைக் கலந்திடச்செய்வானே. கூட்டு

௨. சேஷ்டையைவிட்டென்னைத் தேறிடச்செய்வானே
செத்தபிணத்தோடுஞ் சேர்த்திடச்செய்வானே
வாட்டமில்லாமல் மகிழ்ந்திடச்செய்வானே
மன்னன்மலரடி வாய்த்திடச்செய்வானே. கூட்டு

௩. தஞ்சநகர்தன்னிற் சார்ந்திடச்செய்வானே
தன்குருசொல்லதைத் தள்ளிடச்செய்வானே
அஞ்சாமற்பாவத்தி லாகிடச்செய்வானே
ஐயன்திருவருள் பெற்றிடச்செய்வானே. கூட்டு

௪. மாயன்வருமுன்னே வந்திடச்செய்வானே
மானிடர்கூட மகிழ்[illegible]செய்வானே
தாயமுஞ்சூதுஞ் சதுராடச்செய்வானே
தன்னையறிந்து தவம்பெறச்செய்வானே கூட்டு

முற்றிற்று.

ஆகப்பாடல்-௲௱௩௫,

ஆனந்தக்களிப்பு.

அவன்செய்கை நயமல்லோமனமே யதை
யறியாமல்விசனங்கள் படுகிராய்தினமே

௧. இனம்ஜனமிருந்தென்ன மனமே நீ
இறந்திடிற்குழியினிற் போடுவார் க்ஷணமே
[illegible]காசுபொருட்டென்ன பிணமே பாதை
யறிந்திடலதனாலே யுனக்குண்டுக் குணமே (அவன்)

௨. சொன்னாலு மறிவில்லாமனமே சொக்கிப்
போயிடில் தனங்கூடவருமோசொல் பிணமே
உன்னெண்ண மழிந்திடுஞ்க்ஷணமே ஒன்றைப்
பிடித்துநீயறிந்திடி லுனக்குண்டுக் குணமே (அவன்)

௩. பேடிபோற் றிரியாதே பிணமே [illegible]
லொன்பதுமூடினால் வாய்த்திடு மனமே
ஜாடியுடையுஞ் சொன்னேன் க்ஷணமே தன்னை
யறிந்துநீ தலைவனைத் தேடினாற் குணமே. (அவன்)

௪. கோடிகோடிவெகு ஜனமே ஹு[illegible]வை
யறியாமற்குழியிலே புகுந்தார்கள் மனமே
[illegible]பாருனக்குள்ளே தினமே உண்மை
யிருக்கிறானவனுட னுறவானாற் குணமே (அவன்)

௫. எட்டுசாண் வீடல்லோமனமே என்றைக்
கிருந்தாலுமிடைகூறு வந்திடுஞ் க்ஷணமே
துட்டொன்றும் வாராதுபிணமே தூய்யோன்
மொழிகொண்டு துடர்ந்திடலதனாலே குணமே (அவன்)

௬. ஜோடுபிரியுஞ்சொன்னேன் மனமே [illegible]ம்
வருடு[illegible]யதைகண்டு து[illegible] க்ஷணமே
காடெங்குஞ்சுத்தாதே பிணமே நாலு
மூழத்துக்குள் தேடினால்நமக்கல்லோ குணமே (அவன்)

முற்றிற்று.

ஆகப்பாடல்-௲௭௱௪௰௪,

ஆனந்தக் களிப்பு.

நினைவினு லுருவதைப்போடு நின்ற
நிலைகண்டுப் பிடித்திடில்குணங்குடி வீடு

கனாவுபோ லழிந்திடுங்கூடு காயஞ்
சதமென்றுவெண்ணினு லுனக்கட கேடு
நினைவல்லோ யழிவில்லா வீடு நெஞ்[illegible]
மூக்குக்குநடுவிலே பார்த்ததைத் தேடு (நினை)

காடெங்குந் திரிவோர்கள் மாடு கட்டைப்
பனைக்குள்ளே யிருக்குது கருத்தாகத் தேடு
சோடுபிரிந்திடிற் கேடு சொல்லை
நம்பினபேர்க்கல்லோ குணங்குடி வீடு (நினை)

பாடு[illegible]டாற்கட்டும் வீடு பாச்சக்
கடறத்தால் பழுதாகப்போய்விடுங் கூடு
மாடுபோற்றிரிந்திடிற் கேடு மச்சு
வீட்டுக்குளிருக்குற மவுனத்தைத் தேடு (நினை)

பிதகலொன்பதைப் பார்த்துமூடு பிஞ்சு
போமுன்னேதேடினல் பேரின்ப வீடு
[illegible]
காத்தைப்பிடித்துள்ளே தேடு.
முனையித்தின்சொல்லதைப் பிசகென்ருல் கேடு (நினை)

ஆகப்பாடல்-தளசரு.

—*—

முற்றிற்று.

ஆனந்தக் களிப்பு.

—✻—

என்றைக்கு மழிவில்லாதவனே எல்லா
வுயிரையுமழித்துப்பின்னெழுப்பவல் லவனே

௧. தொண்டர்க்குக் கிருபைசெய்பவனே சொல்லத்
துலையாதசுரூபத்தின் வடிவுடை யவனே
[illegible]ன்றியாய்த் தரித்திருப்பவனே யுன்னை
ய[illegible]யாமலிருக்கிடி லென்செய்கு வேனே (என்)

௨. பெண்டுபிள்ளை யொன்றில்லானே யுன்
பெருமையைப் புணராமற் பினத்துரோ யானே
என்றைக்குக் கண்டிடுவேனே நீ
இரக்காமலிருந்திடி லென்ச்செய்கு வேனே (என்)

௩. மண்மனையொன்று மில்லானே ஒரு
வஸ்திலுமடங்காத மன்னவ னீனே
என்றென்று மழிவில்லாதவனே எனக்
கிரக்காமலிருந்திடி லென்செய்கு வேனே (என்)

௪. தாய்தந்தையொன்றுமில்லானே என்றுந்
தனியாகவிருந்திடும் சர்க்குண நீனே
காட்டாமற்காய்த்திடுங் கோனே காதர்
[illegible]க்கிரங்கிடும் நீயிறை யோனே (என்)

முற்றிற்று.

—✻—

ஆகப்பாடல்-௧௪௬௯.

மெஞ்ஞானக் கீர்த்தனை.

இராகம்-தேசிகதோடி-அடதாளம்.

பல்லவி.

பயமென்னச்சொல்லடி மானே நம்மைப்
படைத்தவ னிருக்கையிற்றானே

அநுபல்லவி.

ஐயமாயெவ்வுயிரையென் னாளுமேகாப்பவன்
நாட்டந்தவறாத நற்றவமேற்பவன்

சரணங்கள்.

௧. காயமும்ரூபமுங் கடுகுமில்லானடி.
கடல்மலைவெளியெங்கும் நிறைந்திடுங்கருவடி.
வாய்செவிகண் மூக்கு வகையொன் றில்லானடி.
மறையெல்லாம்நாவன்றி வகுத்தவல்லோனடி. பய

௨. உலகுவிண் ணோரிட முள்ளவனல்லடி.
ஒன்றியாய்த்தனித்திடும் ரூபமில்லானடி.
பலமுந்தகுதியுள்ளப் பெரியவனுமடி.
பெத்ததாய்தந்தையும் பிறப்புமில்லானடி. பய

௩. அழியாமலென்றென்று மிருப்பதுமவனடி.
ஆலமுழுதுக்கெல்லா மரசனவனுமடி.
விழிஜபத்தில்லாத மேலவன்றானடி.
வெள்ளைசிகப்புப்பச்சை மேனியில்லானடி. பய

௪. கோலங்குறியுமில்லாக் கொற்றவனவனடி.
பெண்டீர்குழந்தைகளுங் குடும்பமில்லானடி.
காலகாலமெல்லா மழியாதக்கருவடி.
காதர்முகையித்தீன் சொன்னதைக்கருசடி. பய

முற்றிற்று.

—*—

ஆகப்பாடல்-௧௭௬.

மெய்ஞ்ஞானக் கீர்த்தனை.

இராகம்-பைரவி-அடதாளம்.

பல்லவி.

ஹக்காவென்று மறிவில்லானுமடி. நம்மள்
குறையெல்லாம் பொறுத்திடுங்கோனடி.

சரணங்கள்.

க. சதைதோலுமெலும்புகள் ஜடலமில்லானடி.
சகலபடைப்புக்குமுன் தனித்திருந்தோனடி.
விதைவித்துலன்றில்லா மெய்ப்பொருளாமடி.
வேணபடைப்புகளை படைத்தழிப்போனடி. ஹு-தா

உ. பெண்ணும்பிள்ளையில்லாத பெரியவனுமடி
பி[illegible]சுபூமலரன்றிப் பெருமையுள்ளானடி
[illegible]னுமனைகளன்றி மறைந்திருப்போனடி.
மாசிமறுவொன்றில்லா வல்லவன்றானடி. ஹு-தா

ங. ஜாதிஜனமொன்றில்லாத் தம்பிரானவனடி.
ஜகமெல்லாமோர்குடை யாண்டிடுந்திருவடி
நீதியாயாசானும் நிராமயந்தானடி
நிசூயமாயென்று மிருப்பதேயவனடி. ஹு-தா

ச. எழுத்தினிலடங்காத யென்றுமுள்ளோனடி.
இரவிமதியைக்கொண்டு எத்தியேபாரடி.
கழுத்துக்குமேற்சென்றால் காணலாம்கருவடி.
காதிர்முகையித்தீன் சொன்னசொல்கருதடி. ஹு-தா

ஆகப்பாடல்-௲௭௫௱,

---*---

முற்றிற்று.

ஆனந்தக் களிப்பு.

எதிர்பேசவெனக்குமுன்வாடி எட்டு
மிரண்டுணராமல் புலத்துராய் பேடி.

க. பதியில்சேருவாயதை நாடி யங்கே
பலனையநுவிப்பார் பாருள்ளோர் கோடி
கதிரொளிப் பிறகாசந்தேடி யதை
கண்டிடிலாண்பிள்ளை யாகலாம் போடி (எதிர்)

உ. மறுமொழிபேசாதே போடி மச்சு
மாளிகையிலிருக்குது பரன்சொன்ன மோடி
பெருமையேன்பேசுராய் போடி பித்தம்
பிடித்தவர்போலே புலம்பாதே போடி (எதிர்)

௩. சிறுமைப்படுவாய் சொன்னேன் வாடி யுந்தன்
சிரசின்மேலிருக்குது பரன்சொன்ன மோடி
அருமையாயதைக்கண்டுத் தேடி [illegible]ரு
[illegible]னந்தமடைந்திடயான் சொன்னே [illegible]டி (எதிர்)

௪. உன்னைப்போலாயிரங் கோடி யதை
யுத்துப்பாராமலே பேசுரார் போடி
அன்னையையறியாத பேடி யெழுத்
தஞ்சிலொன்றுகுமே யான்சொன்ன மோடி (எதிர்)

௫. கருபத்திலறியாதபேடி யதை
துடராமல்திரிந்திடில் கிட்டாது போடி
கருத்தேடாபாதகர் கோடி பூவில்
காதிர்முகையித்தின் கழறினேன் பாடி (எதிர்)

முற்றிற்று.

—*—

ஆகப்பாடல்-௬௭௬௨.

மெஞ்ஞானக் கீர்த்தவனை.

இராகம்-நாதநாமக்கிரியை-சாப்புதாளம்.

பல்லவி.

அக்கினியாத்திலே ரோமத்தின்பாலத்தை
யறிந்துதேடுங்கள் சொன்னேன்-நம்ம
ளங்கமழிந்திடிலும் பங்கமில்லாமலே
யாண்பிள்ளை யாகலா மண்ணே.

சரணங்கள்,

க. முக்கியமாகிய மோட்டுத்தெருவுமேல்
முச்சந்தியென்று நீயெண்ணே யங்கே
மூன்றுபேரொன்று யிருக்குஞ்சபையிலே
முத்தியிருக்குது சொன்னேன்
சொக்கிப்போனுக்கால் சுகங்கிடையாமலே
தோ[illegible]லிகள்வந்திடு முன்னே ...ங்கே
[illegible]ன்றுஞ்சுழிமூனை தன்னையறிந்திடில்
துன்பம்வாராதுகா ணண்ணே அக்கினி

உ. தோல்க்கூட்டுக்குள்ளே யிருக்குது சூஸ்த்திரம்
சொல்லைநிஜமென்று யெண்ணே யந்தத்
தோப்பிலேகாயாக் கனியதைத்தேடிடச்
சூக்ஷத்தலமது சொன்னேன்
காலதுகண்டுக் கருத்தாகத்தேடுங்கள்
காலன்பிடித்திடுமுன்னே யந்தக்
காக்ஷியைக்கண்டாற் கரையேறிப்போகலாம்
ஹக்காணையாஞ்சொன்னே னண்ணே அக்கினி

ங. மாச்திப்பிடித்துமனைக்குள்ளேதேடி ஞல்
வாய்த்திடுமென்று நீயெண்ணே யந்த
மச்சுமேலேற வழியொன்றிருக்குது
வாசிக்குள்ளேயர்ன சொன்னேன்
வாத்தியார்சொல்லைமறந்து கடைசியில்
மண்ணிற்புகுந்திடு முன்னே யெங்கள்
வள்ளல்முகம்மதர்சொல்லைப் பிடித்திடில்
மார்க்கமறியலா மண்ணே அக்கினி

ச. எட்டுச்சாண்வீட்டுக்குள் தேடறியாமலே
யெங்குந்திரிகிரீர் சொன்னேன் யது
எங்குநிறைந்தப் பொருளென்றுசொல்லியே
யிச்சைமணந்திரிலெண்ணே
மட்டுப்படுத்த வகையறியாமலே
மாண்டுவேவதைப்படு முன்னே மக்கா

வாழுமுஹம்மதர்சொல்லுதை நம்பினல்
வாழலாஞ்சொர்க்கத்தி லண்ணே. அக்கினி

முற்றிற்று.

ஆகப்பாடல்-கஎசுகூ.

மெஞ்ஞானக் கீர்த்தனே.

இராகம்-புன்னுகவராளி-தாளம்ரூபகம்.

பல்லவி,

கருணைவைத்து யென்னைக்காரையா ஒடுக்கத்தில்
கலிமாவைத்தந்தென்னை யாளையா

அநுபல்லவி.

க. தருணம்சக்ராத்தாகும் போதிலே வந்து
தயவுசெய்வீரந்த நாளிலே கருணை

சரணங்கள்,

உ. இணையொன்றுமில்லாத யிறையவன்றூதரே
ஈரேழுலகுவெளி யெங்கும்பிரகாசரே
பிணைக்கிப்பிணையதாகப் பூவதில்நின்றேரே
பிந்தியாதம்வழியில் வந்தபிரகாசரே கருணை

ங. தலையினுஜஹும்தரித்த சற்குணலோலரே
தாயாமினுர்பெற்ற சர்வதையாளரே
வலையனை தினிலே வரவழைத்திட்டோரே
வஞ்சிக்கொடிகதிஜா மாமணவாளரே கருணை

ச. தசையைப்பெண்ணுக்கிய சகலசற்குருநேரே
தஞ்சமிறையருகில் தனியாகச்சென்றேரே
திசையெங்கும்புகழ்த்திடுந் தினவர்க்காசரே
ஜெயினபுதமைமயீன்ற செல்வசிங்காரரே கருணை

ரு. தனாமீதிலடிதொடா சாய்கையில்லாதோரே
தாயாயிஷாவினின் றன்மணவாளரே
வனைமீதில்நபிபட்டம் வாங்கிவந்தவாசரே
வல்லோன்கருணைபெற்ற மக்காமஹமூதரே. கருணை

சா. நவ்விபின்சென்றுமே நதிகடந்தவர்நீரே
நாமுசுகிதமொழி நவிலக்கேழ்க்கும்நாதரே
புவியின்னும்போற்றிய பொன்னகர்க்கரசரே
பெண்கட்கரசிபாத்து மாதந்தையானோரே. கருணை

எ. அலிமாமுலையருந்து மன்னனானவர்நீரே
ஆகிர்நபியாய்வந்த ஆதியின்றூதரே
கலிமாவைக்கொடுவந்தக் காரணக்குருநீரே
கறியேரியேபவனி களிக்குமுல்லாசரே. கருணை

அ. ஆதியிடத்திற்சென்று வதிகவரம்பெற்றோரே
அவனியில்வரும்நபி மார்களுக்கரசரே
ஜாதியாங்குரஷிகள் தவத்தினாலுதித்தோரே
தனைமீதிற்றீன்பயிர் தழைத்திடவந்தோரே. கருணை

முற்றிற்று.

ஆகப்பாடல் - ஆஎஎச

சக்கராத்து நாமா.

இராகம்-சௌராஷ்டகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அடிமைக்கிறங்கிவந்து ஆளும் சக்ருத்திலே
அவஸ்தைவராமல் முகம்பாரும்

சரணங்கள்.

க. முடிமீதிலேனுஜூமை முன்தரித்திருந்தோரே
முத்துப்பவழம்பச்சை மூன்றிலொன்றானோரே

படிமீதிலடி தீண்டா பரிமளவாசனே
பாவைஜனபுனை பார்தனில்மணந்தோனே. அடி

௨. இடிபோல்மலக்குவந்து யிழுக்கிடும்போதிலே
இடஞ்சல்கண்டுமனங்கள் இடுக்கிடும்நாளிலே
துடித்துப்பதைத்தழுதுக் கிடந்திடும்ஹாலிலே
துயில்குணாயினி விட்டுயிழுத்திடும்நாளிலே. அடி

௩. சிலேஸ்டுமம்வந்தடைத்துச் செருமிடும்போதிலே
சிரிமேல்மூச்சிழுத்து இடுக்கிடும்நாளிலே
நலமெல்லாமொடுங்கியே நடுக்கிடுங்ஹாலிலே
நாடிநரம்புகளும் தளர்ந்திடும்நாளிலே. அடி

௪. சத்திலன்குறைந்துத் தள்ளாடும்போதிலே
சண்டிபிசீசடுத்து சாத்திடும்நாளிலே
புத்திகளெல்லாம்போயி புலம்பிடுங்ஹாலிலே
பூவிருசையைவிட்டுப் பிறையாணநாளிலே. அடி

௫. விழிகள்விண்ணைநோக்கி மேவிடும்போதிலே
மிச்சங்கவலையொடு கிடந்திடும்நாளிலே
மொழியகாகத்தில்லாமற் முழித்திடுங்ஹாலிலே
மோசஞ்செய்யஹன்னாசு முடுகிடும்நாளிலே. அடி

௬. ஆயுகத்தோடுவந்து அடுத்திடும்போதிலே
அச்சமதிகமாகி விடுமந்நாளிலே
வாய்மைக்குழரினுவு வழங்காதஹாலிலே
வாரீனோர்கள்வந்துசுத்தி வளைந்திடும்நாளிலே. அடி

௭. கோலப்படுத்தியுயிர்க் கொடுபோகும்போதிலே
கோடையிடிபோலடி குமுறிடும்நாளிலே
காலமுடிவுவந்து கரைந்திடுங்ஹாலிலே
கைகாலுமுசும்பாமற் கிடந்திடும்நாளிலே. அடி

௮ தாகமதிகமாகித் தவித்திடும்போதிலே
தண்ணீர்க்கேழ்க்கத்தாகத் தில்லாதநாளிலே
ஆகமெல்லாமறந்து அசந்திடுங்ஹாலிலே
ஆதியவன்திரு நாமம்வரணுமிலே. அடி

௬. அல்லல்படுத்திவந்து அதட்டிடும்போதிலே
அல்ஹம்திலொன்றதைத் தருவிரென்னுவிலே
கல்பினில்திடுக்கிட்டுக் கலக்கிடும்பொழுதிலே
காதிர்முகியித்தீனைக் காருமண்ணுளிலே, அடி

முற்றிற்று.

—o✱o—

ஏகப்பாடல்-௲௯௱அகூ.

முனுஜாத்துக்கீர்த்தனை.

இராகம்-சௌராஷ்டகம்--ஆதிதாளம்.

பல்லவி.

அடியேன்றுயரைவந்துதீரும் நாளை
யடக்குக்கபுரில் முகம்பாரும்

சரணங்கள்.

௧. படியினிலடிதீண்டாப் பவனியுல்லாசரே
பாவையெனுங்கதிஜா பாக்கரானவர்நீரே
வடிவினிலடக்கிடா வல்லவன்றாதரே
மண்ணுல்பதுரைவென்று மானிலத்திருந்தோரே. அடி.

௨. நெடியோன்மறையைனுவில் நிலமதிலுரைத்தோரே
நிலத்தில்வலையில்பட்ட பிணைக்கிப்பிணைநின்றோரே
கொடியகாபர்குலத்தை குவலதிலருத்தோரே
கொஞ்சுக்கிளியாயிஷா வஞ்சிமணவாளரே. அடி.

௩. துஞ்சியுலகிலுயிர் போயிடும்போதிலே
துணியிற்சுத்தியேமண்ணிற் போட்டிடும்நாளிலே
அஞ்சிப்பயந்துவுள்ள மடங்கிடும்பொழுதிலே
அப்போமலக்குவந்து அதட்டிடும்நாளிலே. அடி.

௪. எழுப்பிக்கபுரில்வைத்து யெனைக்கேழ்க்கும்போதிலே
எதிர்மொழிசொலநாவு தடுமாறும்நாளிலே

ஒழியவிடமில்லாம லொடுங்கிடுங்ஹாலிலே
ஓங்கித்தண்டமெடுத்து வுருக்கிடும்நாளிலே. அடி

௫. நாவில்மொழிவராமல் நானழும்போதிலே
நக்கீர்முன்கீருடைய சினம்வரும்நாளிலே
பாவியென்றுக்கடித மெழுதிடுங்காலிலே
கையல்நடுநடுங்கிப் பதறிடும்நாளிலே. அடி

௬. மண்வீட்டிலேகிடந்து மயங்கிடும்போதிலே
வானவர்வந்துபூசை மாட்டிடும்நாளிலே
என்னைக்கவலையுட னிருந்திடுங்ஹாலிலே
ஏழைமுகத்தைப்பார்த்து யிரங்குமன்னுளிலே அடி

௭. குழிதான்விலாவெலும்பைக் கூட்டிடும்போதிலே
கொதிக்கும்நரகவாசல் திறந்திடும்நாளிலே
புலிபோலடித்துயென்னைப் போட்டிடுங்ஹாலிலே
புல்லன்முகத்தைப்பார்த்து யிரங்குமன்னுலே. அடி

௮. வெருவீட்டிலேகிடந்து வெருவிடும்போதிலே
வெளிச்சமொன்றில்லாம லிருண்டிடுநாளிலே
இருக்குமிடஞ்சல்கண்டு யேங்கிடுங்ஹாலிலே
ஏழைமுகத்தைப்பார்த்து யிரங்குமன்னுளிலே. அடி

௯. அண்ணலப்துல்லாதீனற அழகொளிவாசரே
அவனிதனிலேதீனை யழைத்திடுமரசரே
முன்னேமயில்வடிவா யிருந்தமஹமூதரே
முதியக்கிழவியைப்பெண் ணாக்கிடும்நாதரே. அடி

௰. சின்குலத்தாரை தீனிலழைத்திடுந்தீரரே
செருப்போடரசின்மேலே சென்றிடும்போதரே
கனமேகக்குடையிடுங் காசினிக்கரசரே
காதிர்முகியித்தீனை காக்குங்கருணைசரே. அடி

முற்றிற்று.

ஆகப்பாடல்-௩௱௬௧.

ஹசனுஹுஸைனிரளியல்லாஹு.

கீர்த்தனை.

இராகம்-புன்னாகவராளி-ரூபகந்தாளம்.

பல்லவி.

அலியுடலாதவத்துரு மாசடி ஹசன்
ஹுஸைனைக்கடிமறவாதே தினமடி

சரணங்கள்.

க. புலியவதாரமுள்ளோ ரவாடிபெற்ற
பிள்ளைகளிருவர்க ளாமடி
வலியொன்றுதர் மகள்மகவடி வள்ள
லசனுசைனென்னுங்கண் மணியடி. அலி

உ. தன்னைபாத்துமாபெற்ற தருவடி யிந்த
ஜகமும்விண்ணோர்க்கு மிமாமடி
வளையிற்பாம்பழைத்தோர் வங்கிஷமடி வள்ள
லசனுசைனென்னுங் கண்மணியடி. அலி

ங. குளையில்லாக்குறஷியின் குலமடி குரு
முஹம்மதர்மகள்குலக் கொழுந்தடி
மழைமேகக் குடையோர்வங்கிஷமடி வள்ள
லசனுசைனென்னுங்கண் மணியடி. அலி

ச. ஜென்னத்தின் கனியுண்டதெளிவடி செய்யி
திறகுல்புயத்திலேறுந் திருவடி
வண்ணமயில்பாத்திமா மகவடி வள்ள
லசனுசைனென்னுங்கண் மணியடி. அலி

ஆகப்பாடல்-தளகூஎ.

----*----

முற்றிற்று.

ஹசனுருசைஞரினது.

கீ ர் த் த வன்ன.

இராகம்-முகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

மவுலா அலிபயின்ற மணியடி
மாதர்க்கரசிபாத்துமாபெற்ற மகவடி

சரணங்கள்.

௧. புவியெங்கும் [illegible] பொருளடி
பெண்ணகற்கரசா... பூவடி
அவுலாதிறகுலும் வழியடி
அன்னை ஹதிஜாபோ ரவரடி (மவுலா

௨. ஹாசிம்சிரியதந்தை யுசனடி
கருபலாஷஹீதா ரவரடி
ஆஷிக்குலத்திற் பிறந்தவரடி
அன்னை ஆயிஷா போரவரடி (மவுலா

௩. பாத்துமாபயின்ற பாலகரடி
பாவ்யெஜீதுபழிகள் செய்தான் பாரடி
ஹாத்திமுல் லன்பியா குலமடி
கன்னிஜைனபு போரா மவரடி (மவுலா

௪. ஆமினுர்மகனால ...
அவர்மகள்பெற்ற ஹசனுசை னரடி
மூமீன்களுக்கெல்லா மிமாமடி
உம்மிசல்மாபீவிபோ ராமடி (மவுலா

ஆகப்பாடல்-௧௮௯ாக.

முற்றிற்று.

ஆனந்தக் களிப்பு.

தானவன்சதிகள் செய்தானே தஞ்சா
வூரதிற்சே[illegible]யவுசெய் வானே

க. [illegible]ான்கலையுடன்வருவானே மட்டிப்
போலவே[illegible]ண்ணிற் மடியச்செய் வானே
கோன்வர்துகக்குறைகள் தீர்ப்பானே குணங்
குடிதன்னிலென்னையுங் கூட்டிவைப் பானே, (தான)

உ. கலைமதிக்கழ்ட்டி வைப்பானே கழுதைப்
போலவேயென்னைக் கதரச்செய் வானே
உலைவாய்மெழுகு செய்வானே ஓரி
போலவேயோடி யுலாவச்செய் வானே (தான)

௩. பரிகாட்டிப்பலன்கள் செய்வானே பட்ட
மரம்போலேயாக்கிப் [illegible]செய் வானே
ஷரிஹக்கைதந்திடுவானே தன்னை
யரிந்துருண்க்குடி சாரச்செய் வானே (தான)

௪. ரவியிந்துக்கூடச் செய்வானே நாய்
போலவேசுத்தி நடக்கச்செய் வானே
செவிதொனிகேழ்க்கச் செய்வானே செத்துப்
போயிடுனூனெ.ச் சிருமைசெய் வானே (தான)

௫. [illegible]மையோடுறவு செய்வானே ஹூற்றப்
பிணம்போலேயாக்கி யுலாவச்செய் வானே
சீமையிற்சேர்த்து வைப்பனே சின்னப்
படித்தியுலகிற் சிரிக்கச்செய் வானே (தான)

௬ படியோப்பலன்குடுப்பானே பாச்சக்
கயரத்தால்நெரிப்பிட்டு பஸ்பம்செய் வானே
அடிதந்து ஆதரிப் பானே அங்க
மழிந்திடினாளை யதாபுசெய் வானே (தான)

௭. ஓட்டைகள்மூடச் செய்வானே ஓணய்
போலவேயோடிச் யுலாவச்செய் வானே

பாட்டையைக் காட்டிவைப்பானே — வானு
வழிந்தபின் மண்ணில் வதைகள்செய் — வானே (தான)

முடிமீதில் வந்திடுவானே — மூத்கா
ளேறும்பரிபோல் முழிக்கச்செய் — வானே
கொடிதந்துக் குறைகள் தீர்ப்பானே — குணக்
குடியாருடனேயென்னைக் கூட்டிவைப் — பானே (தான)

முற்றிற்று,

—*—

ஆகப்பாடல்-௩௮௯.

மெஞ்ஞானக் கீர்த்தனை.

இராகம்-புன்னாகவராளி-தாளம்-ரூபகம்.

பல்லவி,

அ[illegible]ல்லோ ஆவு[illegible]க்கு தாமடி அதை
[illegible]ரிந்து கொண்டாலல்லோ குணங்குடி.

சரணங்கள்.

கலிமாவைப் பிடித்துத் தக்கருவடி காமி
லானஷேய்கின் கையைப் பிடியடி
வலியோன் றாதர்சொன்ன வழியடி வாகி-
வலமானுல்வாய்த்திடும் குணங்குடி — அலி

பீர்சொல்லைப் பிலனுகப்பிடியடி பிஞ்சுப்
போயிடில்பிழைகள் வந்திடுமடி
பருவம்போயிடுமுன்னே பாரடி பாச்சக்
கயற்றுக்குள் ளிருக்குது குணங்குடி — அலி

தெருவெங்குந்திரிகுரூர் ஷேய்கடி சிந்தை
தெளியாதபேர்க் கென்னத் திரமடி

குருமுஹம்மதர் சொல்லைக் கூட்டடி — ஹா
மீமுக்குள் ளிருக்குது குணங்குடி — அலி

ச. மருவொன்றுமில்லாத மலாடி மச்சு
வீட்டுக்குள்ளிருக்குது மணமடி
கருவூர்வழியிற்சென்றுக் காணடி கௌது
முகிய்யத்தீன் கதம்கண்டால் குணங்குடி — அலி

முற்றிற்று.

ஆகபாடல்-தஅ௱௯௩.

மெஞ்ஞானக் கீர்த்தனை.

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

ஆருடை ... சொலலுவன்றுயர் நானே யென்னை
யாள்பவரெவர் சொல்லுங்கோனே

சரணங்கள்.

க. பாரெங்கும்புகழ்ந்திடும் பாத்துஷாவானோரோ
பள்ளமதிற்கிட்டந்த மையத்தெழுப்பினோரோ
ஊருமனையுமில்லா துதவிகள்பெற்றோரோ
உங்கள்குலமைவந்து ஈர்ப்பதெவர்சொல்வீரோ — ஆரு

உ. மதியையழைத்தநபி மகள்மகன்குலத்தோரோ
வாரிகடந்துமகுல தீவில்வந்தவர்நீரோ
பதியிலொலிமார்க்கெல்லாம் பார்த்திபரானோரோ
பாவிக்கிரங்கிவந்துப் பார்ப்பதெவர்சொல்வீரோ — ஆரு

ஈ. வள்ளலபுசாலீகு வரத்தில்வந்தவர்நீரோ
மாட்டையடித்தவுடன் வாய்மொழிகேட்டோரோ
எள்ளளவிரக்கமில்லா திருப்பதேனென்பீரோ
ஏழைக்கிரங்கிவந்து ஆள்வதெவர்சொல்வீரோ — ஆரு

௪. தன்னைமொழிதட்டாமல் தரணியில்நடந்தோரே
ஜாதியாம்குரஷதின் குலத்தினிலுதித்தோரே
கள்ளப்பதவிகளை கலிமாவிலழைத்தோரே
காதிர்முகியத்தீனைக் காக்குங்கருணைசரே ஆரு

முற்றிற்று.

—*—

ஆகப்பாடல்-௧௮௱௰௭.

ஹசனுருசைனாரின் [illegible]

கீர்த்தனை.

—*—

இராகம்-புன்னாகவராளி-தாளம்ரூபகம்.

பல்லவி.

அரசிற்புலியலியார் சேயடி
ஆலநபியேபா ரசனுசைனமடி

சரணங்கள்.

௧. புரிசைசூழ்மதினாவின் பூபடி
பொன்னகர்க்கா சானவரங்ரடி
வரிசைபெற்றிடும் வள்ளல்நபியடி
மகள்வயற்றிற்பிறந்த ரெத்னமணியடி (ஆர)

௨. சொர்க்ககனிபருக்குந் தலைரயடி
சொல்லத்தலையுமோ வவர்களின்புகழடி
மக்கத்திற்பிறந்திடும் நபியடி
மகள்வயிற்றில்பிறந்த ரெத்னமணியடி (ஆர)

௩. ஆஷீக்குலத்துதித்த அரசடி
அன்னைல்முஹம்மதர் பேரர்களாமடி
மாசிமலரொன்றில்லா மலரடி
மங்கைபாத்துமா பெற்றிடுமணியடி (ஆர)

௯. சையதுலழிக்கெல்லாம் சிரசடி
ஜெகமுழுதுமே புகழ்க்கிடுந்திருவடி
வையகந்தனில்வந்த நபியடி
மகள்வயத்திற்பிறந்த ரெத்னமணியடி (அர)

௰. வித்திற்பிரிந்து வந்தமீமடி
வேந்தர்முகம்மதர்மகள்விழி மணியடி
கற்றன்றாதர் பேரராமடி
காதிர்முகியித்தீன் கல்பதின்கனியடி (அர)

முற்றிற்று.

ஆக பாடல்-௲௮௨௨.

முனாஜாத்துகீர்த்தனை.

இராகம்-புன்னாகவராளி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வம்பன்றானைப்பிடிக்கும் போதிலே வுங்கள்
வரிசைக்கலிமா வரனுவிலே

சரணங்கள்.

௧. ஐம்பத்தைந்தாண்டடைந்து அரசேரிமீண்டோரே
ஐம்பதொருத்தைக்கையெந்தா யாக்கிவைக்கவர்நீரே
செம்பொன்னகர்க்கரசாய் ஜெகமதிலுதித்தோரே
ஜெயினபுதலைமமணம் செய்யவந்தசெல்வரே. வம்பன்

௨. வானேணைகந்திபோல் மண்ணதிலமைத்தோரே
வள்ளலுமருஹத்தாய் மருகரானவர்நீரே
கோமனையப்புத்திரராய் குவலதிலுதித்தோரே
கொஞ்சுகிளிசல்மா வுமமின்மணவாளரே- வம்பன்

௩. ஒட்டையுடனேபேச வுலகதிலுதித்தோரே
உதயானலிபுலிக்கி யாதலரானேரே

வட்டமதியையம்மா வாசியிலழைத்தோரே
வஞ்சிக்கொடிகதிஜா மாமணவாளரே. வம்பன்

௪. பாத்துமாதனையீன்ற பாக்யசாலிநீரோ
ப்ரியாம்புராக்கிலேரி படைத்தோனிடம்சென்றோரே
ஆத்தைநக்கடக்கப்பின்னை யழைத்திடுந்தூதரே
அடிமைகாதிர்முகியித்தீனை யாளுவர்நீரே. வம்பன்

முற்றிற்று.

—*—

ஆகப்பாடல்-௩௮௨௫,

முனாஜாத்துகீர்த்தனை.

இராகம்-புன்னாகவராளி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மலக்கல்மவுத்துவரும் போதையா வுங்கள்
மலர்ப்பதந் தந்தருள் வீரையா

சரணங்கள்.

௧. இலக்கத்திலடங்கிடா இறையவன்றூதரே
ஈரேழுலகவெளி யெங்கும்பிரகாசரே
கலக்கமன்றியேனை காக்குங்கருணேசரே
கறிமேலேரிப்பவனி களிக்குமுல்லாசரே. மல

௨. ஹாலிக்குஅருசினில் கபுசோடேறினோரே
கன்னியராமினார் கருவாகவுதித்தோரே
ஆலியாதுலராக வவனியில்வந்தோரே
ஆணிமுத்தாய்கடலி லனேகநாளிருந்தோரே. மல

௩. மாலிக்குஹபீபுக்காய் மதிவரவழைத்தோரே
வஞ்சியாய்தசையினை வடிவுசெய்தவர்நீரே
கூலிக்காகவேதண்ணீர்க் குவலயிலிலாத்தோரே
கொடியோனபுஜகலை பதறினிரம்பித்தோரே. மல

௪ ஆகம்வழியில்வந்த அரசர்க்குஅரசரே
ஹசன்ஹுசைனைப்பயின்ற அன்னைதமையீன்றோரே

காதவழிகஸ்தூரி கமழுங்காரணர்நீரே
காதிர்முகியித்தீனைக் காக்குங்கருணைசரே. மல

முற்றிற்று.

ஆகப்பாடல்-கூஅகடு,

மெஞ்ஞானக் கீர்த்தனை.

இராகம்-புன்னாகவராளி: தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆரு[illegible]சொல்வேனினி யானையா வுங்க
ளடியைநம்பினேன்வந்து ஆளையா

சரணங்கள்.

ஊருமனையுமில்லா துடையவன்றாதரே
ஒண்டியாயரசேரி யுடனேவந்தவர்நீரே
மாருசெய்யுங்குபிரை மன்னூலேவென்றோரே
மக்கநகர்பிறந்த வள்ளல்யஹமூதரே. ஆரு

உ. உடுவைச்சிரசில்வைத் துலகிலுதித்தோரே
உடையவன்றாதரில் லுயர்த்தியானவர்நீரே
மடுவில்நதியழைத்து வரகூலிகள்தீர்த்தோரே
மன்னனபுஜகலின் மகனைதீனழைத்தோரே. ஆரு

ங. திங்களிரவுதன்னிற் ஜெகமதிலுதித்தோரே
தீன்பயிர்தழைக்கிடச் செய்யுங்காரணர்நீரே
அங்கம்நிழலில்லாத அதிஜயமுடையோரே
ஆலமடங்கலுக்கு மாசராகவந்தோரே. ஆரு

ச முடிவில்லாவொளிவினிற் முன்னமேயிருந்தோரே
முகத்தப்பவழம்பச்சை மூன்றிலொன்றானோரே
கடிவிஷத்தையகற்றி காத்தகபீபானோரே
காதிர்முளயித்தீனைக் கருணைவைத்தாள்வீரே. ஆரு

முற்றிற்று.

ஆகப்பாடல்-கூஅகச.

முனாஜாத்துக்கீர்த்தனை.

இராகம்-சுருட்டி-அடதாளம்

பல்லவி.

தாமிதமேதுசொல்லையா சரணந்தர
தாமிதமேது சொல்லையா

சரணங்கள்.

௧. நாமிதமேதுசொல்லும் னியோன்றிருத்தூதரே
நேமிதமாகவே நிமுஷம்வந்திடவேணும்
பூமிதனிலிருந்துப் புலம்பும்பையலைக்காக்க
ஆமினாரீன்றிடுஞ் செல்வராலநபியேவர. தாமி

௨. வன்னமயில்வடிவாய் வானதிலிருந்தோரே
வலையிலிருந்தபாம்பை வரவழைத்தவர்நீரே
மன்னர்மன்னர்புகழு மதினத்திலமைந்தோரே
மறையைவிளங்கவைத்த வள்ளலானவர்நீரே தாமி

௩. விண்ணோர்தினம்புகழு மெய்க்மழ்வாசரே
விட்டக்கரம்பொருத்தி விளங்கவைத்தவர்நீரே
அண்ணலப்துல்லாதரு மழகுப்ரகாசரே
அவனிதனிலுதித்த ஆலநபியேவர தாமி

௪. சுரத்திற்பாணியழைத்து தும்பங்கள்தீர்த்தோரே
துட்டன்றவுசுகூலை'வெட்டிடுந்துரைநீரே.
காத்தினிண்ர்யழைத்துக் காட்டுங்காரணர்நீரே
காதிர்முஇய்யத்தீனைக் காக்குங்கருணேசரே. தாமி

முற்றிற்று.

—0*0—

ஆகப்பாடல்-௲௮௬௮.

மூனுஜாத்துக் கீர்த்தனை.

இராகம்-தேசிகதோடி-அடதாளம்.

பல்லவி.

கருணை வைத்[illegible]ப் பையலைக்காரும் ஹிடாயத்திலே
கலங்காமலெனை முகம்பாரும்

சரணங்கள்.

க. மருமலர்கமழ்ந்திடும் வல்லவன் றூதரே
மண்ணிற்பதந்தீண்டாத வளருங்கைகளுகரே
தருவாகவுலகினிற் றழைத்தசர்க்குருநீரே
தங்களடிமையென்று சரணந்தந்திடுவீரே — கருணை

உ. அம்பியாமார்களெல்லா மழுதிடும்போதிலே
அணலாய்ரவியின்சூடு [illegible]க்கும்நாளிலே
கம்பியின்மயிற்பாலம் கடந்திடுங்ஹாலிலே
கால்கள்சறுகிடாமற் காருமன்னுளிலே. — கருணை

ங. மலைபோல்நரகவன்னி வளர்ந்திடும்போதிலே
வானவர்வந்துசுத்தி வளைந்திடும்நாளிலே
துலையாக்கவலையிலுல் சுழண்டிடுங்ஹாலிலே
தும்பம்வராமலென்னைக் காருமன்னுளிலே. — கருணை

ச. பட்டோலைக்காம்வாங்கப் பயந்திடும்போதிலே
பாவிகணக்கெடுத்துப் பார்த்திடும்நாளிலே
கஸ்ட்டமாமஹுஜின்னுங் கரைந்திடுங்ஹாலிலே
கண்ணையுச்சியில்வைத்துக் கலங்கிடும்நாளிலே — கருணை

ரு. ஆதிசமுகக்கேழ்வி யாகிடும்போதிலே
ஐம்பதாயிரமாண்டு ஆகுமன்னுளிலே
நீதியாகஅரசு செலுத்திடும்போதிலே
திருத்துங்கொடிநிழலிற் சேருமன்னுளிலே — கருணை

சு. எழுபத்திரண்டுசெப்பா யெடுத்திடும்போதிலே
என்னைநரகத்திற்கு யிழுத்திடுங்ஹாலிலே

கொழுப்போல்தனத்தைக்காச்சிக் கொண்டுசெடும்போதிலே
கொஞ்சக்கருணைவைத்துக் காருமன்னுளிலே கருணை

எ. கொடுமைவெயிலில்மூளைக் கொதித்திடும்போதிலே
கூவியழுதயானுஞ் சூலைத்திடுக்ஹாலிலே
உடுமானமில்லாம லொடுங்கிடும்னுளிலே
உங்களடிமையென்று யிரங்குமன்னுளிலே கருணை

அ. அன்னையாயினுர்பெற்ற அழகுப்பிரகாசமே
ஆனையேறிப்பவனி யாகுமுல்லாசமே
கன்னியெனுங்கதிஜா கணவரானவர்நீரோ
காதிர்முகியத்தீனைக் காக்குங்கருணைசரோ கருணை

முற்றிற்று.

—*—

ஆகப்பாடல்-கஅசசு,

முனாஜாத்துக்கீர்த்தனை.

இராகம்-சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி,

ஏழைக்கிரங்கி முகம்பாரும் யிபாவுல்ஹமீத்து
வென்னுக்கொடிநிழலிற்சேரும்

அநுபல்லவி.

ஞானமகுஷரிலே நாயனிடமண்டாடி
மூளையுருகிடாமல் முழுதாங்கார்த்துரக்ஷியும்

சரணங்கள்,

க ரவிதான்சதுர்வான் விட்டுவருமே நபிகளெல்லாம்
நடுநடுசென்றழுக்தலமே
புவிதான்சிவந்த செம்புநிரமே பொழுதின்குட்டாக
புலம்பியழுவார் மனுக்குலமே

அவியும்பிற்காலத்தி லாதியுடன்மன்றுமெம்
அண்ணல்முகம்மதுற்ற சூல்முஸ்தபாவே ஏழை

௨. கோட்டையிடுவானிறையோனே கொதித்தழுமே
குதிகால்வழியா யோடுந்தானே
ஏட்டைகாத்திற் கொடுப்பானே யெழுநரக
மெழுந்து அருகில்வருந்தானே
கட்டைப்பிடித்திழுத்துக் கோலம்செய்திடுமுன்னே
குருவாமுகம்மதுற்ற சூல்முஸ்தபாவேயிந்த ஏழை

௩. பாலங்கடந்துவிடயானே மையல்முகம்
பார்த்துக்கருணைவைப்பீர் தானே
நாலுமூன்றிடஞ் ஜகனந்தானே யதிற்புகாமல்
நம்பினேனுங்கள் கதம்நானே
ஆலமுழுதுக்குடை யாள்பவன்றூதரே
அண்ணல்முகம்மதுற்ற சூல்முஸ்தபாவே ஏழை

௪. ஐந்துபத்தாயிரம்ஆண்டாமே அன்றுனையிலே
ஆதிக்கோப மதிகமாமே
சிந்தைக்கமொரியே போமே செய்வினையால்
தீயிற்புகுதயிடமாமே
முந்தமயில்வடிவாய்வந்த மருமுகரே
முத்திலும்கார்த்துவுங்கள் சித்தமிரங்குமீரோ ஏழை

முற்றிற்று.

-----※-----

ஆகப்பாடல்-௩௮௰.

முனுஜாத்துக் கீர்த்தனை.

இராகம்-தேசிகத்தோடி.-அடதாளம்.

பல்லவி.

பாவிக்கிரங்கி முகம்பாரும் யிபாலில்ஹம்ந்து
பரக்குங்கொடிநிழலிற் சேரும்

அநுபல்லவி.

௧. சாவில்லானிடத்தினிற் தனியாகச்சென்றோரோ
தாயாமினார்பெற்ற தருமதையாளரோ. (பாவி)

சரணங்கள்,

௨. சூரியன்கிட்டேவந்து சுட்டிடும்போதிலே
துயரமதிகமாகிச் சுழன்றிடும்நாளிலே
வாரிபோலண்டர்கள் வளைந்திடுங்ஹாலிலே
மனதுங்கருணைவைத்துக் காருமைதானிலே. (பாவி)

௩. நரகேழைக்கண்டுமனம் நடுங்கிடும்போதிலே
நபிமாரெல்லாங்கரைந்து நபுசெனும்நாளிலே
அரவுதேளுகள்வந்து அடுத்திடுங்ஹாலிலே
அடிமைக்கிரங்கிமுகம் பாருமைதானிலே, பாவி

௪. சதிரத்தினுருப்பெல்லாம் சாக்ஷிசொல்லும்போதிலே
சப்புசப்பாகிருத்தி தான்கேழ்க்கும்நாளிலே
உதிரமன்றியேவிழி யுச்சிவைக்குங்ஹாலிலே
ஒங்கள்குலாமென்றெண்ணி யுதவுமைதானிலே. பாவி

௫. பாலத்தினமேலேசெல்லப் பயந்திடும்போதிலே
பாதாளங்கண்ணிற்கண்டுப் பதரிடும்நாளிலே
கோலஞ்செய்துமலக்கு கொடுபோகுங்ஹாலிலே
கொஞ்சங்கருணைவைத்துக்காருமைதானிலே. பாவி

௬. ஓலைவலக்கைவாங்க வுதகாதப்போதிலே
உரியானுடனேநின்று வுழரிடும்நாளிலே
காலுங்கரமுங்கட்டிக் காவல்செய்யுங்ஹாலிலே
கருணைவைத்தெந்தனைக் காருமைதானிலே. பாவி

௭. அமல்நாமாத்திராசினி லாக்கிடும்போதிலே
அஞ்சிப்பயந்துநின்று அழுதிடும்னாளிலே
நிமையாமல்மனுஜின்னும் நின்றிடுங்ஹாவிலே
நேசம்வைத்துப்பயலைக் காருமைதானிலே. பாவி

௮. சேழ்விகணக்குகளை கேட்டிடும்போதிலே
கிடுகிடெனநடுங்கிக் கெஞ்சிடும்நாளிலே
தாழ்மையாய்நின்றுமனக் தயங்கிடுங்ஹாவிலே
தமியேன்காதிர்முகிய்ய தீனைத்தாங்குமைதானிலே பாவி

ஆகப்பாடல்-௧௮௰௮.

முற்றிற்று.

முனாஜாத்துக் கீர்த்தனை.

இராகம்-புன்னுவராளி-ரூபகம்தாளம்.

பல்லவி.

ஹாஷ்ருமைதானிற்று[illegible] ஏழைக்கிரங்கி
ஆள்பவரெவர் சொல்லையா

அநுபல்லவி.

விசையாயர்ஷிற்சென்று விடியுமுன்வந்தோரோ
வேந்தர்வேந்தர்புகழு மேய்கமழ்வாசரோ ஹாஷ்ரு

சரணங்கள்.

௧. குராஷித்திலர்தமென்னுங் கோனிறசூல்நீரோ
[illegible]டியசாபார்குலத்தைக் குவலதில்வெண்டோரோ
பரல்செரிசுரத்தினில் பாணியையழைத்தோரோ
பாரெங்கும்புகழ்ந்திடும் பயஹாம்பரானோரோ. ஹாஷ்ரு

௨. கதிரின்சுடரினாலே கலங்கிடும்போதிலே
கண்ணால்விண்ணைநோக்கிக் கதறிடுங்ஹாவிலே

சதிராய்மனுஜின்னின்றுத் தயங்கிடும்நாளிலே
ஷபாயத்துச்செய்யதங்க ளல்லாதுவேறில்லை. ஹஷரு

௩. உரியானுடனேமனு வொடுக்கிடும்போதிலே
ஓலைகரத்தில்வாங்க வுதகாதஹாலிலே
சரியாய்மொழிகள்சொல்லத் தவறிடும்நாளிலே
ஷபாயத்துச்செய்யத்தங்க ளல்லா துவேறில்லை. ஹஷரு

௪. பதியெல்லாந்தாம்பரம்போல் பதத்தைச்சுடும்போதிலே
பயந்தோடிடவும்பாதை யற்றிடுங்ஹாலிலே
சதுராய்நன்மைதின்மைகள் தான்பார்க்கும்நாளிலே
ஷபாயத்துச்செய்யத்தாங்க ளல்லா துவேறில்லை. ஹஷரு

௫. அம்பியாமார்களெல்லா மழுதிடும்போதிலே
ஜம்பதா[illegible]ரமாண்டு ஆகுமன்றுளிலே
தம்பிரான்முன்னே[illegible]நின்று ஜடுத்தியாகுங்ஹாலிலே
ஷபாயத்துச்செய்யத்தங்க ளல்லா துவேறில்லை. ஹஷரு

[illegible] வ[illegible]வைத்திடும்போதிலே
வா[illegible]ர்த்தனைகளிட வ[illegible]மநா[illegible]ளிலே
தாய்தந்தையுதகாத தருணமானஹாலிலே
ஷபாயத்துச்செய்யத்தங்க ளல்லா துவேறில்லை, ஹஷரு

௭. பயித்தில்முஹத்திவில் வந்துகூடும்போதிலே
வானமெல்லாமசுருட்டி மடக்கிவைக்கும்நாளிலே
சயமதிலேபவனிக் களித்திடுங்ஹாலிலே
காதிர்முகியித்தீனை காருமன்றுளிலே. ஹஷரு

முற்றிற்று.

ஆகப்பாடல்-௧௮௯௫.

ஆனந்தக் களிப்பு.

ஆதிசெய்வ துஹயிர் தானே   யென்றும்
அளிவில்லா னமக்குண்டும்   பயமென்னமானே

௧. ஜாதிஜனமொன்றில்லானே   யென்றுந்
தனியாகயிருந்திடுந்   தஞ்சாவூரானே
நீதியாயரசாளுவோனே   யெங்கும்
நிராமயமாகயிருந்திடுங்   கோனே (ஆதி)

௨. மதிரவிவெளியமைத்தோனே   விண்ணு
மண்ணெனக்கும்விளங்கிடு   மேலவன்[illegible]னே
பதியானவீடொன்றில்லானே   பல
உயிரிலுங்கூடியே பார்[illegible]திருப்   போனே (ஆதி)

௩. ஆதியளிவில்லாதவனே   [illegible]னே
நம்பினுலுனக்[illegible]   குரவடிம[illegible]
ஓதிப்புகழவுமவனே   ஆ
ணூரக்கங்களில்லாத வுடையவன்   ரூனே (ஆதி)

௪. ஆதத்தைசரந்தீவி[illegible]லெரிந்தான்   அவர்
பெண்ணுனஹவ்வாவை அரபதிற்   போட்டான்
[illegible]கத்தை[illegible]வுருசெய்தான்   பின்பு
பலபலயிசு[illegible]ல்லாம் பாடமாய்   கொடுத்தான் (ஆதி)

௫. காதங்கமுழும்நபியிறசூல்   [illegible]கள்
கண்மணிபெயர்சொல்ல வவர்பிழை   பொருத்தான்
சேதமணுவில்லாமற் கார்த்தான்   யிருவரை
ஜிக்காவெனுங்கலத்திற் சேர்த்தல்லோ   வைத்தான் (ஆதி)

௬. நெருப்பிலெரியும்படிசெய்தான்   யிபுரு[illegible]ம
நேர்வழிகாட்டியே நபிபட்டங்   கொடுத்தான்
சிரிப்பானநமுறுதின் மகளை   நிக்கா
செய்திடமனைவியாய் சேர்தல்லோ   கொடுத்தான் (ஆதி)

௭. வெருப்பாகயிசுமாயீல் நபியை கழுத்
தருத்திடவெனச்சொல்லி யேவலிட் டானும்
பொருப்பாகவவர்கிளை யோர்கள் பூவில்
கணக்கில்லையென்றவர் சுகயிஸ்சொன் னானும் (ஆதி)

௮. திருநபியூசுபைபடைத்தான் தமையமார்கள்
சேதப் படுத்திடவே விடுத்தான்
பெருகுங்கிணத்திற்தள்ளி யெடுத்தான் பின்னும்
விலையாய்மிசுறதிற் கொடுபோய் வித்தான் (ஆதி)

௯. அருமைமனைவிலாசைக் கொடுத்தான் அஞ்சு
மூன்றுவருடம்சிறை சாலையி லடைத்தான்
வரிசையாய்நபிபட்டங்கொடுத்தான்சுலையுஹா தம்மை
[illegible]புதைக்குறைத்து சிக்கா முடித்தான் (ஆதி)

௰. பதினெட்டுவருடத்மயூபை நோவில்
பங்கப்படுத்தியல்லோ பார்தனில் வைத்தான்
விதிவிட்டுவிலகும்போது அம்ப மகத்தி
வெகுவாய்வரிசைகளை யிகக்கொடுத் தானும் (ஆதி)

௰௧ மதிகெட்டயிபுனீசு மொழிபால் யூனூசை
வாரியில்மீன்வயத் தாக்கிவைத் தானும்
கதிபெரும் யிசுமொன்றதாலே அவரை
கலாசாக்கிமனவினைக் காட்டி வைத்தானும் (ஆதி)

௰௨. மூசாவையொளித்தோடச் செய்தான் பின்னால்
முருசலீனநபிபட்ட மவர்க்கல்லோ கொடுத்தான்
ஆசாவைப்பாம்பாக்கி விடுத்தான் ஹாறூனை
நபியையுமவர்க்காக வுதவியா யெடுத்தான் (ஆதி)

௰௩. தாஜையும்சட்டையு மளித்தான் வளர்த்த
தாயாராயிஷாவை யீமானி லெடுத்தான்
ஈசாமலவரோடு முனைத்தான் குரு
முஹம்மதர்சலவாத்தை ஹதியாவாய் குடுத்தான் (ஆதி)

௰௪. ஜபூர்வேதம்தாவூதுக் களித்தான் ஒரு
சபபுஞலவனையும் சலித்திட வைத்தான்

ஹபூ ஹுரைறும் வாழ்வைக் கொடுத்தான் சுலையு
மானெக்கடற்கரையோரத்தி லெறிந்தான் (ஆதி)

௰௫ மருதரமரசாள வைத்தான் மட்டி
லடங்காத வாழ்வதை யவர்கல்லோ கொடுத்தான்
செரிசலம் தனிற்போக விடுத்தான் பள்ளி
செய்துமுடியுமுன்னே றாகதைப் பிடித்தான் (ஆதி)

௰௬. மாத்திலொர்ரிக்கயிடக் கொடுத்தான் ஜக்கிரியாவை
வாளால் பிளந்தல்லவோ றாகதைப் பிடித்தான்
சுரத்தை விட்டு நபியையழைத்தான் உமரு
ஹத்தாசுதனை யடியினால் வதைத்தான் (ஆதி)

௰௭ உறத்தையபித்மக்குக் கொடுத்தான் பையலைக்
கொண்டுவுருசெய்து றாகதை யெடுத்தான்
இறத்தை யெஜிதுகையில் கொடுத்தான் ஹுசை
னுசைனைச்சேதப்படுத்தி ஜென்னத்தி லழைத்தான் (ஆதி)

முற்றிற்று.

—*—

ஆகபாடல் - ௲௮௮

சலவாத்துப்பாட்டு,

கோடிகோடி வருடம்குகாயிடக் கூடிக்கூடிப்பிரிந்திருந்ததுமே, நாடிநாடியே நாளெல்லாஞ் சென்றபின் நானிலந்தனிலாகியே நீதமோ, கேடிகேடி பிதம்விதம் கெஞ்சுமோ சித்தம்வைத்தெனை யாளுமுஹம்மதே, சடியோ லுண்டாமல் வந்தாளுநீர் சல்லாகு அலைகிவசல்லமே ௧

முத்துப்பச்சை பவழமதாகியமூன்றிலொன்றாய் முதலிலெழுந்துமே, கத்திகத்திமயில் குயிலாகவுங் கடிகைத்தின் றப்புருவன்னமாகவே பற்றியேயொளிவீசும் பதுமைபோல் பங்குகாலிற்படைத்த முஹம்மதே, சத்தியாயுமைநம்பினோ ரெண்ணுமே சல்லல்லாகு அலைகிவசல்லமே ௨

பொன்னகமொ னும்வாயலிலோர்வரி புதுமைகண்டுடியாதங்கேட்டிட, மன்னனேதிஞனபின்வருநாளினில் வள்ளலானமுஹம்மதர்நின்மகன், முன்னமேமகியையப்படைத்தில்லையால் முழுதுமுன்னைப்படையேனென்றுணிறை, தன்னையோதினேன் ஆருமுஹம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமே. ௩

முன்னேயாதமுனைத்தனர்னுக்கிட முதலேயென்றன்மஹர்கொடுப்பாயென, சொன்னுஞரியிறையுமப்போதினிற் றூதர்மீதிற்சொலுஞ்சலவாத்தென்றே, மன்னரோதஹவ்வாவுமஹர்பெற்று வாழ்ந்திருந்தனர்வானகந்தன்னிலே, தன்னையோதினேனருமுஹம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமே ௪

ஆதிசொன்னுன்மறையிலறியவே யானுமென்றன்மலக்குகள்யாருமே, சோதியானமுஹம்மதர்பேரினிற் சொன்னேன்யானுஞ் சலவாத்தைநாளுமே ஓதிஞலுங்கள்கொன்றுக்குபத்துயா னுரைப்பேனென்றிறையோதினதாலுமே, சாதினையாகஓதினேனருமே சல்லல்லாகு அலைகிவசல்லமே. ௫

சுருதிதன்னிலிறைக்கிஞன் ஆயத்து தூதர்மீதிற்சொலுஞ்சலவாத்தென்றே, அருதிநாளையொடுக்கக்கியாமத்தி லானதாகத்தைத்தீர்க்குமென்றுணிறை, கருதியேமதிபூவில்நைத்திடும் ஹபீபேயுங்கள்சலவாத்தையான்றும், தருணமீதௌ ஓதினேனருமே சல்லல்லாகுஅலைகிவசல்லமே. ௬

வானேர்கோன்வந்துமைக்கூட்டிச்செல்லவே வரிசையாகஅறுசினிலேறியே „கோனேன்முன்சென்றனேகரகசியங் கூறக்கேட்டுகுறைத்திரும்மத்துக்காய், மான்பணியுடும் போடுனைபேசிய வள்ளலானமுஹம்மதேயுண்மையாய், தானிதந்தானே நம்பினேனருமேசல்லல்லாகு அலைகிவசல்லமே ௭

வள்ளலானமுஹம்மதரோதிஞர் பகிலருன்றெனவென்னும்மத்தோர்களில், என்னலொன்றனுகாத அபூபக்க ரொழுந்துகேட்டன ரொன்றவராமொனும், புள்விலங்கினம்போற்றுமென்பெயருகேட் பூவினிறசலவாத்தைமறந்தவர், தள்ளாமலென்றுமோதினேனருமே சல்லல்லாகு அலைகிவசல்லமே. ௮

வேட்டுலன்பினை மீட்டுமெப்போதினில் வேதனைப்பமோனுமொழிந்ததாம், போட்டகன்றுக்குப் பால்கொடுத்திப்போது போகிநீன்

வேராதிடிலுங்கள்பேர், கேட்டோனுஞ் சலவாத்தையோதிடார் கேட்டிலாகிடுவேனென, ஆணையாம்தாட்டோளிற் கபூறில்வந்தானுவீர் சல்லல்லாகு அலைகிவசல்லமே. ௬

மண்ணைக்கொன்று பதறனைதவென்றிடும் வள்ளலானமுஹம்மதேயும்மையான், கண்ணிற்கண்டிட வேணுமென்றெண்ணியே கத்திகத்தி யேகெஞ்சுரேன் நாளெல்லாம், விண்ணிற்சென்று யிறைவிடம் பேசிடும் வேந்தரேயுங்கள் தாளிணைநம்பினேன், தன்னைக்கண்டோனேதுவதெந்தநாள் சல்லல்லாகு அலைகிவசல்லமே. ௭

முற்றிற்று.

—*—

ஆகப்பாடல்-௲௮௮௮.

இன்னிசை.

குணங்குடியார்சொன்னதுபோல் கூருவரோயிவ்வுலகிற்
பணங்காசும்வீடும் பவுசும்பரந்திடவே
க்ஷணம்வந்துயேமன் றிடனுப்பிடித்திறந்துப்
பிணமாகப்போகுமுன்னே பொருள்தேடும்பூவதிலே. ௧

தான்தானுடலிலுள்ளச் சரத்தால்தனையுணர்ந்தால்
ஏன்தானமதுயிரை யேமன்வந்துயென்னசெய்வான்
கோன்தானிருப்பிடத்தைக் குணங்குடியிற்கண்டிட்டவே
மான்கலையைக்கொண்டு வசப்படுத்துமானிடரே. ௨

மோசம்வருஞ்சொன்னேன் முழியிருந்தும் அந்தகர்போல்
பாசவலையிற்சிக்கிப் பட்டுழலுமானிடரே.
தோஷமகன்றுவிடும் சுழியாமுனையதிலே
நேசம்வைத்துக்கொண்டிடிலோ நீங்கள்பலன்பெறுவீர். ௩

தந்திரங்களெல்லாம் சரத்திலிருக்குதுகாண்
மந்திரங்களொன்றுமில்லை வாஸ்த்தமிதுச்சொன்னேனே

சந்திரசூரியனைத் தானுணர்ந்துக்கொண்டவர்க்கு
பக்கமதுபோல்வெளிச்சம் பார்ப்பீர்களும்மையிதே. ௪

காற்றுடனே கூடிக் கலந்திருக்குமுண்மைகண்டால்
நேத்திரத்தின்மத்தியிலே நின்றுல்நிலையுணர்வீர்
ஆத்திரங்களில்லாம லடியேனுரைத்ததுவை
பார்த்துணர்ந்துக்கொண்டால் பரகதிக்கி[illegible]மை யிதே. ௫

என்னைப்போல்புத்தியில்லா ரிவ்வுலகிலாருமில்லை
மண்ணுக்கிறையாயிருந்து வாயால்புலம்புகிறேன்
கண்ணுக்குள்ளேமணியாய் கலந்திருக்குங்கர்ப்பகத்தை
விண்ணுக்குள்ளேகண்டவர்க்கு மெய்யாகுமென்மொழியே. ௬

தூராதிதூரமென்றுச் சொல்வதெல்லாந்தோஷமல்லோ
பாராமல்விட்டவர்க்கு பரமதுதான்கிட்டுமோசொல்
பேராயிரமுடைய பிரப்பிரப்பொன்றில்லானை
ஆராய்ந்துஉள்ளமதி லறிவாலுணர்ந்துகொள்வீர். ௭

கூடுவிட்டுஆவிக் குடிபோகுமுன்னாலே
பாடுபட்டுக்கொண்டால் பரமதுதான்கிட்டாதோ
சோடுவிட்டாலோர்நொடியிற் சொக்குமுடலென்றெண்ணி
வீடுவிட்டுப்போகுமுன்னே மெஞ்ஞானந்தேடுவீர். ௮

நாடெங்குந்தேடி நடந்தால்பரம்கிட்டுமோ
வீடதுக்குள்பார்த்து விளக்கைப்பொருத்திடுவீர்
மாடுமக்கள்சுற்றமனையாளு மாளிகையும்
கூடுவிட்டுப்போம்பொழுதுக் கூடவராதுசொன்னேன். ௯

தேசமெங்குமோடித் திரிந்துதனந்தேடியுமே
பாசமதிற்சிக்கிப்பட்டுழலும் பாவிகளே
காசம்பலநோய்பிடித்துக் கட்டையழிந்துவிட்டால்
மோசம்வரும்சொன்னேன் முத்திவழித்தேடுவீர். ௰

எழுத்திலடங்காத யேகாந்தமெய்ப்பொருளை
கழுத்துக்குமேலேறிக் கண்டால்கதியடைவீர்
பழுத்திருந்துமொரங்கள்புத்திப் பாழாகப்போனதென்ன
முழித்துப்பசியுடனே முத்திபெரத்தேடுவீர். ௰௧

ஆசைவைத்துநீங்கள் அரங்கேடிக்கொண்டிடீரோ
மீசைகள்தான்வைத்திருக்கும் வீரனொன்றுஞ்சொல்வேனே
காசைச்சதமென்றிருந்தால் கரையேறமாட்டீர்கள்
ஓசைதருமந்திரத்தை யுச்சரிப்பீருள்ளத்திலே. ௰௨

மனுப்பிரவியாயிருந்து மதிமோசமாகிடீரோ
இனிப்பிறந்துப்பூவி லிருப்போமென்றேயெண்ணுகுநீர்
தனிப்பொருளாயென்றுமுள்ள சற்குருவைவிட்டுவிட்டால்
அனியாயமாய்நரகி லழுவீரதுநிஜமே. ௰௩

அழியாப்பதவியதை யங்கமதில்தேடாதார்
புழியாதவராகிப் பாழ்நரகிற்சேர்ந்திடுவீர்
வெளியாகியொலி விட்டுஅழியுமுன்னே
சுழிமுனையைக்கண்டுத் தொடர்ந்தால்சுகிர்தமுண்டாம். ௰௪

கோலம்புனைந்திருக்குங் குருவுரைத்தமந்திரத்தால்
ஆலயங்கிட்டாது அஞ்செழுத்துஆகுமது
கால்தலையுங்கண்டக் காரணத்தார்சொற்கேட்டு
பாலதுவும்வெண்ணெய்நெய்யிற் பார்த்தால்முகந்தெரியும். ௰௫

சத்தியமாச்சொன்னேன் தரணியுள்ளமானிடரே
புத்தியுள்ளபேர்களுக்குப் போதும்பொருளரிய
சுத்திசெய்துவுங்களுக்குள் சூக்ஷமுணர்ந்திடீரோ
முத்திப்பெற்றுக்கொள்வீர் முழுதுமுண்மைசொல்லிவிட்டேன்

இன்னிசை-முற்றிற்று.

ஆகபாடல்-௧௯௪.

மெஞ்ஞானக் கீர்த்தனை.

கட்டளைக் கலித்துறை.

சிங்கியைக்கண்டுத் தேடரியாத திருடனைப்போல்
அங்கியிஜாரும் தலைப்பாகையிட்டு வலஞ்சியிலே

மூக்கித்திரிந்துப் புலம்பிடும்பாவி மோகத்தினிடை
தங்கியிருந்துப் பார்க்கவுதவிசெய் ஞானவனே.

—*—

இராகம்-சுருட்டி-அட்டதாளம்.

பல்லவி.

சிங்கியைக்கண்டேனேயே மலைக்குற
சிங்கியைக்கண்டேனேயே

சரணங்கள்.

அங்கமதிலே யனுதின மோடியே
ஆராரைக்கொண்டியா னென்பர்கப் பாடியே
பங்கம்வருமுன்னே பாதையைத் தேடியே
பத்தைப்பிடித்துப் பரமனை நாடியே (சிங்)

உ. தூங்காமற்றூங்கிச் சுழிமுனைக் கூடியே
சொக்கிப்போகாத வழியதைத் தேடியே
வங்குசிங்கென்று மவுனத்தில் நாடியே
வாசிப்பிடித்துயான் றூங்காமற் றூங்கியே (சிங்)

௩. பொய்யதைவிட்டுப் பொருளதைத் தேடியே
யோங்குந்திருவருள் தங்கிட நாடியே
செய்கையைவிட்டிந்த தேகத்தி லோடியோ
சிந்தைமகிழ்ந்துயான் றூங்காமற் றூங்கியே (சிங்)

௪. மட்டுப்படா தொரு வாசியி லேறியே
மான்கலைக்கொண்டு மனையதிற் றேடியே
கட்டுக்கதைகளை விட்டுத் துரத்தியே
கண்மத்தியிற்சென்றுத் தூங்காமற் றூங்கியே (சிங்)

௫. அக்கினிதன்னை யடியினிற் மூட்டியே
அம்பரவீட்டை யடுத்துயான் கூடியே
சொக்கிப்போமுன்னம் சுரூபத்திற் தேடியே
சூக்ஷமுணர்ந்துயான் றூங்காமற் றூங்கியே (சிங்)

௬. சூக்ஷமதான திருச்சியை யூதியே
தோன்றுஞ்சுழிமுனை மத்தியி லோடியே
பாசக்கயற்றைப் பழக்கியான் பாடியே
பத்தைப்பிடித்துயான் றூங்காமற் றூங்கியே (சிங்)

௭. எட்டடிவீடு அழியுமென் றெண்ணியே
னரிக்குதிரையிற் சாரியா யோடியே
துஷ்டமிர்கங்களைச் சூறாக ளாடியே
சுத்திகட்செய்துயான் றூங்காமற் றூங்கியே(சிங்)

௮ வத்தாமனூரு மதுவையான் றேடியே
வாசலைக்கண்டு வலமாக வோடியே
குத்துச்சருகு மெழுத்ததிற் கூடியே
ஹவ்வைப்பிடித்துயான் றூங்காமற் றூங்கியே(சிங்)

௯. பத்தைப்பிடித்துப் பதியெங்குந் தேடியே
பட்டணமெல்லா திரிந்துயா னோடியே
முத்துப்பவழமும் பச்சையுங் கூடியே
முச்சந்திசென்றுயான் றூங்காமற் றூங்கியே(சிங்)

௰. கொஞ்சவயதிலே கூமீமைப் பாடியே
கும்பகோணமென்னு மூருக்குள் தேடியே
பஞ்சாக்ஷரத்திலே யொன்றதைக் கூட்டியே
பார்த்துமகிழ்ந்துயான் றூங்காமற் றூங்கியே(சிங்)

௰௧ ஓசைமுழங்கிடும் வீட்டுக்குள் ளோடியே
ஊமையைக்கண்டு வுரலத்து ஆடியே
ஆசைகள்வைத்து அரணடித் தேடியே
அஞ்சாமல்நின்றுயான் றூங்காற் றூங்கியே(சிங்)

௰௨.. வேடிக்கையாடும் விடமதைத் தேடியே
மேலத்தெருவின் விலாசத்தி லோடியே
கோடிகோடிபேர்கள் கூட்டத்தை றூடியே
ஹஉம்மைப்பிடித்துயான் றூங்காமற் றூங்கியே(சிங்)

௰௩. காற்றைப்பிடித்துக் கடலுக்குள் ளோடியே
கப்பலுடையுமுன் சுக்கானைத் தேடியே
சாற்றுக்காகாதச் சடலமென் றெண்ணியே
சந்தேகமற்றுயான் றூங்காமற் றூங்கியே (சிங்)

௰௪. ஓங்காரமான வெழுத்ததைத் தேடியே
ஒம்பதுவாசலி லோடாமல் மூடியே
பாங்கியுடையப் பதமதிற் கூடியே
பாச்சக்கயர்கொண்டுத் தூங்காமற் றூங்கியே(சிங்)

௰௫. ஆடெல்லாமொன்று யடைத்துள்ளே வோட்டியே
அம்பலம்சென்று அரனடித் தேடியே
தேடும்பொருளைத் தெளிந்ததிற் கூடியே
தேகத்திற்சென்றுயான் றூங்காமற் றூங்கியே(சிவ்)

௰௬ சந்திரச்சூரியன் தன்னுக்குள் தேடியே
சச்சுதானந்தப் பொருள்தன்னிற் கூடியே
மந்திரமில்லா யெழுத்தைப் பாடியே
மாத்திப்பிடித்துயான் றூங்காமற் றூங்கியே சிவ்)

௰௭. சித்தன்பதத்தைத் தினந்தினந் தேடியே
தேகமழியுமுன் யோகத்தை நாடியே
பத்தனாக்கொண்டு பலன்பெறக் கூடியே
பாரதைப்பொய்யென்றுத் தூங்காமற் றூங்கியே(சிவ்)

௰௮. அஞ்சையுமொன்றாக அம்புபோல் பூட்டியே
ஆராறுகொண்டு அகத்துக்குள் ளோடியே
பிஞ்சுப்போகுமுன்னே பேரின்பந் தேடியே
பேசாதிருந்துயான் றூங்காமற் றூங்கியே(சிவ்)

௰௯. சித்தனிருப்பிடந் தேகத்திற் றேடியே
சென்னியினுள்ளே இருப்பதி னாடியே
கத்தன்திருவருள் பெற்றிட வோடியே
கண்ணை [illegible] யான் றூங்காமற் றூங்கியே(சிவ்)

௨௰. பச்சைசக்க[illegible] லுக்கு[illegible]ப்பலே யோட்டியே
பாமா[illegible]னுள்ளப் படங்கைச் சுருட்டியே
கச்சை[illegible]கயர்கொண்டுக் கட்டி யிருக்கியே
கால்மூ[illegible] றங்கண்டுயான் றூங்காமற் தூங்கியே(சிவ்)

௨௧. ஓட்டைப்பிடாரத்தின் னூருக்குள் ளோடியே
ஒப்புமுகமை யில்லா னுடன் கூடியே
ஜாட்டையில்லாதொரு பம்பர மாட்டியே
சத்தியமாசயான் றூங்காமற் றூங்கியே(சிவ்)

முற்றிற்று.

—*—

ஆகப்பாடல்-௲௬௨௫.

மெஞ்ஞானக் கீர்த்தனை.

கட்டளைக் கலித்துறை.

எட்டாக்கனியதைத் தேடாமல்மண்ணி லிறந்துவிட்டால்
முட்டாள்கள்போலே அலைவீர்கடசியில் மோசம்வரும்
அட்டாங்கயோக வழியதைத்தேடி யறிந்துகொண்டால்
பட்டாலும்வெற்றி யடையலாமுள் ளூன்றிப் பார்த்திடுவீர்.

இராகம்-சுருட்டி-அடதாளம்

பல்லவி,

சிங்கிவந்தாளே வழிகாட்டும்
சிங்கிவந்தாளே

சரணங்கள்,

க. சிங்கியும்வந்தாள் திருவருள் காட்டிட
தேகத்தினுள்ளே சிரஞ்சீவி யாகிட
மங்களமாக மணிவிளக் கேற்றிட
வச்சிரமாமணி மண்டப மேறிட (சிங்கி)

உ. துரியாதுரிதம் தொடர்ந்துப் பிடித்திட
சுருக்கமதான வழியதைக் காட்டிட
வெளியொன்றுமில்லதக் கள்ளைக் குடித்திட
வீட்டைத்துறந்தென்னை மெத்தைமே லேற்றிட (சிங்கி)

ங. நடனசபையி னடுவினிற் றேடிட
நாவையடக்கியே நாளத்தி லேற்றிட
திடனுகவாசித் திருப்பியே லோட்டிட
சின்னமுத்திரை வைத்து பொன்மனந் தேற்றிட (சிங்கி)

ச. சங்கீதம்பாடுந் தலமதைக் காட்டிட
சாலைவழிகண்டுச் சாரிகள் விட்டிட
இங்கிதமான தொனியதுக் கேட்டிட
என்னுமழியா னிருப்பிடம் சேர்த்திட (சிங்கி)

௫ எல்லைகிகரத்த [illegible]லை யுடுத்தியே
இலங்குமாபரண [illegible]னமுகப் பூட்டியே
முல்லையிச்சிப்பல மலர் [illegible]ளைச் சூட்டியே
முழங்கிடுந்தண் [illegible]டைச் சிலம்பொலி கா[illegible]யே (சிங்கி)

௬ தாதிமார்கள்கொடி சாமரம் போட்டிட
தாளங்கின்னரிமேளச் சங்கீத முழங்கிட
வீதிகளெங்குமே கோலம் நிறைந்திட
வேணவிருதுகளுங் கோஷங்கள் சூழ்ந்திட (சிங்கி)

௭ தாய்தந்தையில்லையெனச் சகலரும் சாத்திட
தாளிணை முத்தியான் சாஷ்டாங்கஞ் செய்திட
மாயக்காரியென்றும் வானவ ருரைத்திட
வரம்பெற்றகன்னமணி வாலையிவ ளென்றிட (சிங்கி)

௮ யோகம்பெற்றோரெல்லா மொதுங்கியே யஞ்சிட
[illegible]ருமுறையாமல் சிலபே ரிருந்திட
[illegible]தமா[illegible] சபையதி லாடிட
ஏந்தலிருதயங்கண்டு மகிழ்ந்திட (சிங்கி)

முற்றிற்று.

—*—

ஆகப்பாடல்-௩௱௩௪.

மெய்ஞ்ஞானக் கீர்த்தனை.

இராகம்-சுருட்டி-அட்டதாளம்.

பல்லவி.

கம்பத்துக்குள்ளொரு சிங்கியைக் கண்டியான்
காக்ஷிப்பெற்றேனடி யென்னம்மா

சரணங்கள்.

௧. ஐம்பத்தோரக்ஷர மங்கத்திற் றேடியே
அந்தரமான வழிகண்டு வோடியே
கும்பத்துக்குள்ளே குழவிபோ லூதியே
கோலமில்லாவெளிதிற் சென்றியான் கூடியே (கம்ப)

௨. ...ம்பரமாட்டிப் பதியதைத் — தேடியே
பார்த்துச்சுழிமுனை மத்தியி — லோடியே
செம்பொன்னகரிற் றெருச்...ன்று — கூடியே
தேவனிருக்கும் சபையதை — நாடியே (கம்ப)

௩. எட்டுமிரண்டு மிருப்பிடந் — தேடியே
ஏணிப்படியதைத் தாண்டியே — லேறியே
மட்டுப்படாதொரு மாவதைக் — கூட்டியே
மண்டலஞ்சென்றுயான் மத்தியி — லோடியே (கம்ப)

... பாலதைக்காச்சிப் பதமா — யிறக்கியே
பானையிலிட்டு ...ரைதயி — ராக்கியே
வால்நீண்ட மத்தால் கடைந்திடும் — வெண்ணையைய்
வாங்கியுருக்கி வதனத்தை — நோக்கியே (கம்ப)

முற்றிற்று.
ஆகப்பாடல்-௧௬௩௫.

மெஞ்ஞானக் கீர்த்தனை.

இராகம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.
பல்லவி.

வேடிக்கையாடுவாள் பெண்ணே யவள்
மேன்மையைக் கேளடிக்கண்ணே

சரணங்கள்.

௧. ஆடியாடியவ ளம்பரமோடு — ...ள்
ஆனந்தம்பாடியே கைகளைக் — கொட்டுவாள்
ஓடித்திரிந்துமே வூரெங்குஞ் — சுத்துவாள்
ஊமையனோடு வுகந்துமே — பேசுவாள் (வேடிக்

௨. அட்டிகைமாலைச் சரப்பளி — பூண்டவள்
ஆபரணங்க ளதிகமா — யுள்ளவள்
முஸ்டியெடுத்துத் தெரிவி — லலைந்தவள்
முச்சந்திவீட்டின் முடுக்கி — லிருப்பவள் (வேடிக்

௩. எட்டியேபார்த்தால் தலையை — யெடுக்குவாள்
ஏணியிலேறின லோடி — யொழிக்குவாள்

கட்டிப்பிடிக்க ...க்கப்போய் நிக்குறாள்
காம்றைப்பிடித்து லருகில் வருகுறாள் (வேடிக்

௪. மட்டிமனுடனை காலாலுதைக் குறாள்.
மச்சிமேலேறினு லெக்கிப்பே னென்குறாள்
பட்டிப்பசுவதைக் கட்டிக்குடுக் குறாள்
பாலதையூட்டிப் பசியை தணிக்குறாள் (வேடிக்

௫. ஜாதிக்கெட்டோர்களைத் தாங்கியேசொள் கிறாள்
தன்னைமதித்தோனை யெட்டியுதைக் குறாள்
மாதிலியாவெகு வேஷம்பூண்டா டுறாள்
மானமில்லார்களை மாப்பிள்ளையெ குறாள் (வேடிக்

௬. வேடிக்கையாடி வெகுவிகம் பாடுறாள்
மேலத்தெருவிலே யோடியுலா வுறாள்
மாடிமேலேறி மணக்கோலஞ்செய் குறாள்
மாப்பிள்ளையானோைக் கண்டுமேழ் கிறாள் (வேடிக்

௭. மாப்பிளளைமார்தேடி வையகம்சுத் துறாள்
மானங்களில்லாமல் வாய்மொழிபே சுறாள்
கோப்புக்கெட்டாமலே கூத்துகளா டுறாள்
கொஞ்சவயதுக் குமரிபோல் பாடுறாள் (வேடிக்

௮. வேழ்க்கயில்லாமல் வெளியிற்றிரி குறாள்
வேசைகள்போலவே கையலைதக்காட் டுறாள்
செக்குபோல்சுத்தித் திரிந்துமயக் குறாள்
தேகமுணர்ந்தோனைத் தேடியேகொள் கிறாள் (வேடிக்

௯. பாசாங்குசெய்துப் பசப்பியேபோ டுறாள்
பத்தினிப்போலவே கெட்டியாய்பே சுறாள்
ராஜாங்கமெல்லா மெனக்குள்ளதென் குறாள்
ராஜியமெங்குந்தனித்துத்திரி குறாள் (வேடிக்

௰. பச்சைவடத்தினல் பாவாடைகட் டுறாள்
பந்துதனத்தில் ரவுக்கையைப்பூட் டுராள்
அச்சமில்லாமலே ஆடித்திரி குறாள்
அண்டினபேர்க்கு அரன்மனைக்காட் டுறாள் (வேடிக்

௰௧. பச்சைப்பட்டுச்சேலைக் கொய்துவுடுத் துறாள்
பாதத்தில்தண்டைச் சிலம்பதைப்பூட் டுறாள்

கெச்சத்தைக்கையி லெடுத்தக்கே — குரள்
கீழ்மேலும்சுத்தியே ஆடித்திரி குரள் (வேடிக்

௰௨. தந்தையுந்தள்ளை யெனக்கில்லையென் குரள்
ஜாதிக்கெல்லா முதல் ஜாதியானென் குரள்
சுதந்திரம்போல வடிவைத்துலக் குரள்
சொல்லித்துலையாச் சுருபமெடுக் குரள் (வேடிக்

௰௩. முத்தலுகம் கொண்ட முழுவிளக்கேத் குரள்
முக்குத்திபோட்டு முகத்தைப்பகட் குரள்
சித்தரைக்கண்டாட் இணமுமகிழ் கிரள்
தேவடியாள்போல் கேடித்திரி கிரள் (வேடிக்

சுகப்பட்டல்-தருடுக
முற்றிற்று

மெஞ்ஞானக் கீர்த்தவனை.

இராகம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

பல்லவி.

அல்லும்பகலும் ஹூஉம்மடி தஞ்சாலு
ரரசன்சமுக மாமடி.

சரணங்கள்.

௧. சொல்லும்சிபலு மல்லடி கலைமானேயின்று
சுழியிலருளைத் தேடடி
பொல்லாவினைவைத் தள்ளடி மூச்சையிருத்திப்
போக்குவரத்தைப் பாரடி
கல்லுமலையு மல்லடி வுடலிலேவாடிக்
கருவைத்தேடிக் கொள்ளடி
எல்லாமதுதான் மெய்யடி தஞ்சாலு
ரிராமுன்னிட்டன மாட்டடி (அல்லு

௨. கோலம்செய்வதைப் பாரடி ஒம்பதுபீக்கல்
கூட்டிலிதெளிந்துக் கொள்ளடி
ஆலமுழுதுக் கொன்றடி சக்கரவர்த்தி
யாகுன்வன்றன் மெய்யடி

162

மெய்ஞ்ஞானக்கீர்த்தனை, ௩௭௩

மேலுங்கீழும் பாரடி அந்தரமான
விளக்கைப்பொருத்திக் கொள்ளடி
ஜாலஞ்செய்வதுமேனடி ஜவரிருக்கும்
சபையில்நடனமாட்டடி (அல்லும்)

தூத்திப்பதனைப் போக்கடி ஹம்ஸவகைக்கொண்டு
தொட்டுப்பிடித்து ஜேக்கடி
மாத்திப்பிடித்து வூதடி யெங்கும்நிறைந்த
வள்ளலவன்றன் மெய்ப்படி
சாத்திக்கதவைப் பூட்டடி தஞ்சமாகிய
சபையைத்தேடிக் கொள்ளடி
தாத்தியுயர்த்தி யேனடி பொன்னைப்பிடித்து
சாத்தில்தெளிந்துக் கொள்ளடி (அல்லும்)

கட்டாப்பரியி லோடி மேலத்தெரு
கனகசபையி லாடடி
முட்டமுட்ட வூதடி அறுகோண
முடுக்குவீதியிற் செல்லடி
எட்டுமிரண்டும் பத்தடி குருபதத்தி
லொன்றும்நினைவாய் நில்லடி
வட்டவெழுத்தை யோதடி தஞ்சாவூர்
வள்ளல்காயந் தானடி (அல்லும்)

கும்பகோணத்திற் பாரடி வூமையன்சொல்லைக்
கூடிக்குலாவிக் கேளடி
இம்பந்தும்பம் போமடி ரவியதுகொண்
டேத்திமிடத்தைத் தேடடி
செம்பொனுலக மாமடி யெட்டடிவீட்டின்
தெரிவில்திரிந்து பாரடி
வம்பனொருவ னுண்டடி முனிவுபெற்ற
மாத்தானவனை வெல்லடி (அல்லும்)

கருவூர்பாதையில் செல்லடி வெளியனேகக்
கடந்தால்அப்புர மல்லடி
உருவிலேறி யோடடி பாயச்சுருட்டி
புள்ளேசுக்கானைப் போடடி

அருகில்தஞ்சநகரடி — ராஜனிருக்கும்
அருமையதோர் பூரடி
தெருவில்பவனி செய்யடி — தஞ்சாவூர்
தேசம்நமக்கு மெய்யடி — (அல்லும்)

௯. இலக்கமென்பத்தி மூன்றடி — அதிலிருக்கும்
இஸ்முலாலம் தேடடி
கலக்கப்படுவதேனடி — ஹாமில்சொல்லுக்
ஹறுபைபிடித்துக் கொள்ளடி
பிலமாக நீதேடடி — பிஞ்சுப்போனல்
பிழைகள்வந்திடுந் தானடி
சலாகைவிட்டுப் பாரடி — தஞ்சாவூரில்
சார்ந்துக்கொள்ளலா மெய்யடி — (அல்லும்)

௮. அக்ஷரமதுவல்லடி அங்கமதிலே
அரிந்திடிற் குணமாமடி
பச்சைப்புருவொன் றடி — பழகிக்கொண்டால்
பார்க்சலாம் பரமதானடி
நிச்சயமோ சொல்லடி — நமதுவாழ்வு
நீர்மேற்குமுழி யாமடி
கச்சைக்கயத்தால் கட்டடி — காதிர்முகிய்ய
தின்சொல்கருத்தைப் பாரடி — (அல்லும்)

நஸீஹத்துல் மூமினீன் மாலை - முற்றிற்று,

முன் அவையடக்கப் படலம்பாட்டு- ௧௨.

ஆகப்பாடல்-௩௬௯௧.

AHEER MOHIDEEN

பிழை திருத்தல்.

பக்கம்	வரி	பிழை	திருத்தல்.
௯	௨௮	ஹத்தகிசுரூயில்	கத்தகிசுரூயில்
௨௨	௨௮	ஹனியானந யன்	கனியானநாயன்
௨௪	௨௧	குழிலேப்பிடும்	குழிகூப்பிடும்
௨௪	௩௧	ஹகமது	கதமது
௨௫	௨௭	ஹனியாகயென்ரு	கனியாகயென்று
௩௧	௨௰	பின்ஞலனேகர்	பின்ஞலனேக
௩௪	௰௬	ஹனியானவன்	கனியானவன்
௩௪	௨௩	ஹத்தாவுரைத்த	கத்தாவுரைத்த
௩௫	௰௮	ஹத்தாமொழிந்த	கத்தாமொழிந்த
௩௯	௩	ஹத்தாவுரைத்த	கத்தாவுரைத்த
௩௭	௰௫	ஹத்தனொளிவிற்	கத்தனொளிவிற்
௩௮	௰௫	மவுத்தராது	மவுத்தது
௪௧	௮	சொர்க்கும்	சொர்க்கம்
௪௩	௰௮	நிச்சயமென்றே	கிட்சயமென்றே
௫௧	௧	ஹத்தாவுடைய	கத்தாவுடைய
௫௭	௰	ஹரியாமத்திலே	கியாமத்திலே
௯௨	௨௭	ஹாலிக்கிடத்தில்	காலிக்கிடத்தில
௭௪	௰௯	ஹாலிக்கிடத்தினிற்	காலிக்கியிடத்தினிற்
௱௯	௨௫	போகாவிட்டாலும்	போகவிட்டாலும்
௱௮	௰௪	சொன்ளமணி	சொர்னமணி
௱௰௧	௪	ஜெகன்னத்தில்	ஜென்னத்தில்
௱௰௯	௨௰	யெரினறகாழ்ந்து	யெரின[illegible]ந்து
௱௨௰	௩	ஹத்தா	கத்தா
௱௨௩	௨௯	வழியென்ரிக்குது	வழி[illegible]ன்றிக்குது
௱௰௪	௰௭	கட்டுமுட்டாக	கட்டுமட்டாக
௱௩௪	௰௮	வீசைமுருக்கின்ற	மீசைமுருக்கின்ற
௱௪௰	௰௬	வீசையுந்தாடி	மீசையுந்தாடி
௱௪௨	௩௨	மண்ணற்புகுந்த	மண்ணிற்புகுந்த

௱௬௭	௰௨	கயரத்துமட்டே	ஹயாத்துமட்டே
,,	௰௫	மூசர்துவாவாவில்	மூசா துவாவில்
௱௬௯	௨௭	நறகேழிருக்கு	நரகேழிருக்குது
௱௯௫	௩	கஞ்சினமாக	கமிஞ்சினமாக
,,	௯	வருத்ததனசொன்ன	வருத்தவன்சொன்ன
௱௯௯	௨௪	ஹு-ஸாம்ஹெளகஹா ஹும்-ஹுஸாம்கவுசகா ஹும்	
,,	௨௯	தபூநக்கை	தபூக்கை
,,	௨௭	ஹபூர்றஹீம்	கபூர்றஹீம்
,,	௨௮	மனயாலே	மனதாலே
௱௭௯	௨௪	தோஷக்கில்	தோஜக்கில்
௱௮௨	௰௯	சங்கைட்கெட்டு	சங்கைகட்கெட்டு
௱௮௩	௨௪	பின்னுமேதே	பின்னுமேலே
௱௯௪	௨௯	மண்ணின்மேமே	மண்ணின்மேலே
௱௯௯	௩௨	மனத்தானே	மனதாலே
௱௯௮	௰௭	ஹையர்	கயர்
௨௱௧	௨௯	ஹதத்தை	கதத்தை
௨௱௩	௩௧	மலேந்தன்	மலேந்தவன்
௨௱௫	௰௨	ஹெஷாலையாதவன்-கொஷாலையாதவன்	
௨௱௭	௭	ஹபூம்ஹுமை	கபூறஹீமை
,,	௩௧	ஹாதிர்	காதிர்
௨௯௫	௰௨	பரச்சக்	பாச்சக
௨௭௫	௰௬	மன்னுலே	மன்னுளிலே
௨௭௮	௰௧	ஹத்திஜா	கத்திஜா
,,	௰௮	ஹாத்திமுல்	காத்திமுல்
௨௮௨	௰௫	ஒட்டை	ஓட்டை
௨௮௩	௰௯	ஹாக்கு	காலிக்கு
௨௮௯	[illegible]	ஹியாமத்திலே	கியாமத்திலே
௨௮௬	௪	யிபாலில்ஹம்ந்து	யிபாபுல்ஹம்ந்து
௨௯௪	௧	ஹபுரஹிம	கபூர்ரஹீம்

முற்றிற்று.

ஷெ. காதர்பாக்ஷா புலவராலியற்றிய

மெஞ்ஞானக் கீர்த்தனை.

இராகம்-ஆரபி-ரூபகதாளம் - பல்லவி.

வாசியகன்றாலுடல் மரணமென்றுரைப்பது
வழக்கமல்லவோ சொல்வாய் மானே-யிது
புழக்கமல்லவோ சொல்வாய் தேனே

சரணங்கள்.

௧. தேசியிலேரிநிதந் தெருவெங்குஞ்சுத்தினைக்க
நாசிதுனியிற்றிரு நடனம்ப[illegible]யுமந்த வாசி

௨. கத்திரிமறலாகக் கலந்துரவிமதியாய்
நெற்றிவிழிநடுவிற் நேசம[illegible]லா சாடும் வாசி

௩. ஆகூத்துபாகூத்தைபோ [illegible]ளைகதலங்கடந்து
லாகூத்துலாமக்கானில் நவெவ்வையாகநிர்க்கும் வாசி

௪. சாபமொன்றணுகாத தத்துவஞானிகட்கு
காபாஹூவுசைனி கருவாய்கலந்துநிற்கும் வாசி

௫. ஓங்காரப்பீடமதி லோங்கியோசையைத்தரும்
ஆங்காரமாகவுன்னுள் ளோடியோடியுலாவும் வாசி

௬. கோலங்களனைத்திலுங் கூடிக்குலாவிமிந்த
தூலத்திலே[illegible]டியோடித் தொடர்ந்துதொடர்ந்துமீளும் வாசி

௭. பஞ்சபூதங்களாலே படைப்பாயுருவமைத்து
அஞ்செழுத்தினிலொன்று யாடுமம்பலம்விட்டு வாசி

௮. சாறு அக்ஷரத்தா லேறியெட்டியேனுக்கும்
வீரர்தமக்குமுன்னே வேடிக்கையாடுகின்ற வாசி

௯. இன்பக்கடலிற்மூழ்கி யிசைந்துஅமுக்தர்முன்னே
ஐம்பதோரக்ஷரம தாகவெழுந்துநின்ற வாசி

௰ காத்தெழுந்தோடும்வழிக் கதவையடைத்துவிட்டு
மாத்திப்பிடித்தப்போது வசமாகிச்சுடரோங்கும் வாசி

௰௧. இப்பாரினிச்சையதை இழந்தயினியவர்க்கு
முப்பாழுக்கப்பால்சுழி முனையிலொளியாயிர்க்கும், வாசி

௰௪. கோடிசூரியப்ரகாசங் கொழுகியெழுந்தச்சுடர்
வாடாமலராயெங்கும் வாசம்வீசியுலாவும். வாசி

௰௫. தூலத்தினைம்புலனின் கோம்பலகற்றிமீளும்
பாலக்கடந்தும்ம பரமன்பதியைக்காட்டும் வாசி

௬௱௰௨ மெஞ்ஞானக் கீர்த்தனை,

௰௬. பார்த்துணரார்கடம்மை பாவியாய்பலனைரும்
வைத்துவிட்டுஅகன்று யெட்டியோடுமெந்த வாசி

௰௭ [illegible]ப்படாமற்பலவெளி வாயல்கடந்திடாமற்
கட்டுபடுத்திடாதார் காலங்கழிக்கவழிந்த வாசி

௰௮ எட்டிரண்டுங்கூடியே யேகாந்தமெய்ப்பொருளாய்
வட்டெழுத்துள்ளிருந்து வண்ணமிகுந்ததிரு வாசி

கீர்த்தனை - முற்றிற்று.

ஷை காதர்பாஷா புலவசாலியற்றிய

இன்னிசை.

ஆதியருளாலே அருசுகுருசுடனே
நீதிவரிலெவ்குாலம் நீடூழிவாழியதே
சோதியமரர்களும்சொர்க்கத்தின்மாதர்களும்
ஓதிப்புகழுமிறை[illegible] யுன்னருளாவ்வாழியதே. ௧

ஆகமுதலாகைதி மார்களடங்கலுமே
வேதமுறைதவராத் மெய்நெறிகள்வாழியதே
காதங்காதங்கமழுங் ஹக்கனைடுசூல்வாழி
ஓதும்புருக்கான்றனையே யுணர்ந்தோர்களும்வாழி. ௨

அருந்நமபூபக்கருமர் அண்ணலுதுமானவியும்
திருவருளாரசுகாபிகள் தினந்தோறும்வாழியதே
பெருந்நமூலமாக்களிந்த பேருலகினின்வாழி
[illegible]ருணருஞ்வாணாகளும் போதகுருவும்வாழி. ௩

இந்நூல்படித்தோரு மிசையாய்ப்பாருளுரைத்தோர்
உன்னியதைக்கேட்டு வுணர்ந்துநடந்தோரும்
பன்னுமுகஹீன்முமீன் பரபுவியிலென்றுளும்
தன்னினங்களோங்கயிறை தன்னுதவிவாழியதே. ௪

வாழி - இன்னிசை-முற்றிற்று.

ஆகபாரம்-௪௨-க்கு-கூடியபாடல் ௨௧௩௬௪.

காதர்பாஷா புலவராலியற்றிய-ஹக்கன்பேரில் ஆதி

இராகம்-ஜம்பை-அடதாளம்

ஆதியிறையோனேயுந்த னருளுதவிநாளுமுற
நீதிறகுமானே புனனைசித்தமறவேனே
சோதியுறவெங்குநிறைந் துலங்கிடுமெய்ப்பொருளே
காதிரேநீயெம்மையென்றுங் காப்பதுவுந்நீயே. ௧

அன்னமயிலாகவெங்க ளகம்மதுற்றசூல்நபியை
முன்னமமைத்தோனேயெம்மை முழுதிலுங்காப்பதுவே
வன்னமுறுகவிந்திலின்ற வள்ளலிறசூல்நபியை
பன்னவரும்நேசக்கமிகுப் பலனளிக்குமபரனே. ௨

பிதுறத்தெனும்விருக்ஷமதின் பிறந்திலையின்மீதே
விதுவகலசபூவென்றுனா வேதமமைத்தோனே
விழியிதெனவேவிருக்ஷ மீதிலுரும்பூவதிலே
கதியுடனேதவுசேதினை கருமாவகுத்தோனே. ௩

கந்தமுறுமவ்விருக்ஷக் காய்கள்முழுதிலுமே
விந்தையுறும்பிஞ்சிலெலனும் வேதமமைத்தோனே
கொந்தமிகுமவ்விருக்ஷத் துலங்குக்கனிமீதினிலே
பந்தமுடன்புருக்கானை பதித்திடும்பார்த்திபனே. ௪

அஷ்ட்டசுவனங்களினை யழகாகவேயமைத்து
திட்டமுடனல்லவர்க்குத் திகழவளிப்போனே
விட்டெரியுமேழ்நரகை விஸ்தாரமாயமைத்து
பட்டிழலும்பாவியர்க்கு பாங்காகயீபவனே. ௫

எண்ணடங்காதமார்களை யெழிலாகவேயமைத்த
அவ்வலேயா லுந்தனையே யபராமலருளே
விண்ணுங்கதிர்மதியுடுவு மின்னவிடிமால்மழையும்
மண்ணுவரிகடல்மலையை வகுத்திடுமேலவனே. ௬

தனாநிறைந்தபுற்பூடு தருவினங்கள்யாவையுமே
இமதுறம்புள்ளுர்வனைகள் ஜெகத்திலமைத்தோனே
அறிவுறுநல்லாதமுடையவர் திருநெற்றியிலே
குருமுகம்மதரிவொளியைக் குலவவமைத்தோனே, ௭

அமரர்கமையாகத்துக்கு அமர்ந்துசஜுதுசெய்யென
தமதாகவே துயிறை தன்னைப்பணிவேனே

ஹநகன் பேரில் துதி

சமதாகினை[…]னையுந்தன் சாற்றலனைத்தவிழ்ந்தவனே
இமையோ[…]லகத்தியிபி லிசென்றுறைத்தோனே,

ஆதந்தனையமரர்சுமந் தண்டருலகெங்கணுமே
சோதரவேகோலஞ்சுற்றக் கூறினவல்லவனே
நீதமுடன்ஜென்னத்திலே நிலையாகவாழ்கவென
காதலுடன் ஹவ்வாவைக் கலந்திடச்செய்தோனே, ௯

அருந்தவொண்ணுதென்றகனி யருந்திருலச்சுவளம்
பிருந்தவரையிப்புவியி லிழிந்திடவைத்தோனே
பெருந்துயரமாகியழப் பேருலகி[…]நுவரினை
சிறந்த ஆரபாமலையிற் சேர்ந்திடச்செய்தோனே. ௰

ஆதமுடன் ஹவ்வாவு மவனிதனில்வாழ்கையிலே
ஏதுகையாய்ச்சேய்கடனை யீன்றிடச்செய்தவனே
பேதமில்லா தீன்றிடுசேய் பேர்களிலேகபிமானை
நீதமுடனேயமைத்த நித்தனுனைப்பணிவாம். ௰௧

மூசாநபியாமவர்க்கு முதல்சபூராம்வேதமதை
ஆசாரமாயளித்து ஆண்டருள்செய்தோனே
நேசமகல்பிரவூனும் நீலாத்திலேயடுக்க
ஒசையடங்கி[illegible]வுடையவனைப்பணிவாம் ௰௨

இட்டமெய்றியிட்[…]கண்ணனி[…]ப்புருகீம்நன்னபியை
திட்டமுடன்காத்தருளுந் தேசிகனைப்பணிவாம்
விட்டமரக்கலமுடைய விளங்குமொருபலகைதன்னில்
கஷ்டமில்லாசத்தாங்கக் கலந்தவனைத்தொழுவாம். ௰௩

அன்றுநபியூசுபினை ஆழக்கிணற்றினிற்காத்த
என்றுமுள்ளான்றனை நித்த மேற்றிப்பணிவோமே
சென்றவயதுள்ளரசி செல்விசுலையுகாவினையும்
நன்றுமணமுடிக்கச்செய்த நாயனையான்மறவேன். ௰௪

வாசகவே[…]த்தியெனு மாலையினைதினவர்கள்
வாசித்துணர்ந்தேநன்னெறி வழங்கிடச்செய்வாயே
நேசமுகலினவர்கள் நேர்வழியிலா[…]வே
பாசந்தருமிறையவனைப் பலனுனுமறவேன். ௰௫

மோசனிபிலீசவன்றன் முடுகியலக்கழித்தே
பாசவலைசிக்குமெனைப் பார்த்தருள்வாய்பரனே
ஆசையெனுமாழ்கடலி லாழ்ந்தவெனைக்காத்தருள
ஓசையுடையோனையுனை யொருநாளுமறவேன். ௰௬

ஹநகன்பேரில் துதி - முற்றிற்று.